லா.ச.ராமாமிருதம்

# கழுகு



ஐந்திணைப் பதிப்பகம்

# கழுகு

(நாவல்)

லா. ச. ராமாமிருதம்

ஐந்திணைப் பதிப்பகம்
தொலைபேசி: 84 94 10
279, பாரதிசாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

முதற் பதிப்பு : டிசம்பர் 1990

உரிமை ஆசிரியருக்கே

ஐந்திணை—73

விலை ரூ. 20-50

KAZHUKU
By L. S. RAMAMIRUTHAM
Novel
First Edition : December 1990
8+216=224 Pages
10 pt Letters
D/C. White Printing
Box Board Binding

Published by
KUZHA. KATHIRESAN

Phone : 84 94 10
AINTHINAI PATHIPPAGAM
279, Pycrofts Road
Triplicane, Madras - 600 005.

Printed at : Kokila Printers, 8 Thukkaram III-rd Street,
T. Nagar, Madras 600 017.

என் பெற்றோர்களுக்கு

# கருணை

இந்த நாவலை உங்கள் முன் வைக்கையில் தனிப் பெருமிதம் அடைகிறேன். இதை எழுத எனக்குப் பத்து வருடங்கள் பிடித்தன. விட்டுவிட்டுத்தான் எழுதினேன். ஆனால் பத்து வருடங்கள், இதன் 'விண் விண்' தெறிப்பைச் சுமந்திருக்கிறேன்.

எழுத்தும் ஆத்மாவின் யாத்திரைதான். ஆத்மா என்று ஒன்று இருக்கிறதா என்கிற சந்தேகமும் இந்த யாத்ரா மார்க்கத்துள் அடங்கியதுதான். இந்த யாத்திரை யில் சேருமிடம் என்று கிடையாது. அங்கங்கே தங்குமிடங் கள், தங்கியே போய்விடும் இடம் தவிர.

ஆகவே இந்த சிருஷ்டி, பத்து வருஷங்களின் நீளோட் டிய உழைப்பு மட்டுமன்று; இதில் இதுவரை என் வாழ்வின் சத்தே தோய்ந்திருக்கிறது.

எந்த எழுத்துமே, சிறுகதையோ, நெடுங்கதையோ' நாவலோ, கட்டுரையோ, கவிதையோ அப்படித்தான் அந்த சமயம்வரை, எழுதியவனின் வளர்ச்சியை, முதிர்ச்சியைப் பிரதிபலிக்கத்தான் செய்யும். ஆனால் நாவல் என்று வருகையில், அதன் திரைச்சீலை பெரிது. அதனாலேயே இந்த ப்ரயாணத்தின் பாதையும் பெரி தல்லவா? நாவல் என் முழங்கைகள் இடிபடாமல், கால் களைத் தாராளமாக வீசி நடக்க, ஆங்காங்கே என் உள் வானத்தின் வண்ணங்களை, அங்கே இறங்கி விட்ட உயிரின் கோலங்களைத் தங்கித் தயங்கிச்சிந்திக்க,சுவைக்க, பாட, ஓட, ஒளிக்க ஒளிய, எண்ணத்தின் இதழ்களைப் படிப்படியாகப் பிரிக்க — நாவல் விசாலம்தான்.

அங்கீகரிக்கப்பட்ட முறையில் நான் எழுத்தாளன் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. என்னிடம் எண்ணத்தின் மூட்டமும், சிந்தனையின் மந்தாரமும் ஆழமான இருள்களும்தான் கதை அம்சத்தைக் காட்டிலும் அதிகம். என் எண்ணத்தின் நிர்வாணத்தை அவசிய இடங்களில் மூடவோ அல்ல நுட்பங்கள் பிதுங்கவோ தான் எனக்குக் கதை பயன்படுகிறது.

கவிதை என்பது வெறும் வார்த்தை ஜாலமட்டுமன்று. உணர்ச்சியின் எதுக்களிப்பு அன்று. பிறவிபோல், விதி போல் நேர்வது. 'மழையும் பிறப்பும் மகாதேவனுக்கும் தெரியாது'. கவிதையை மூன்றாவதாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். அதன் மொழி—வசனமோ, கவிதையோ— அதுவே அதன் வெளிப்பாட்டைக் கவனித்துக்கொள்ளும். அந்த மாதிரி சமயங்கள் இந்த நாவலில் அடிக்கடி நேர்ந்திருக்கின்றன. அடிக்கடி இதில் கட்டங்கள் தம்மைத் தாமே எழுதிக் கொண்டிருக்கின்றன.

சில நாட்களாக ஒரு இளைஞன் என்னுடன் பேச வருகிறார். தனக்கென்று தனி அபிப்பிராயம் கொண்டவர்தான். மிகமிக. ஆனாலும் பல சமயங்களில் எங்கள் ஸ்ருதிகள் இணைகின்றன. சில சமயங்களில், த்வனிகள் கூட ஒன்று பேசுகின்றன.

பேச்சுவாக்கில் சொன்னார்: Joy and Sorrow are nothing but extended distortions of Compassion (சந்தோஷமும் துயரமும் கருணையின் வக்ர நீட்டல்களன்றி வேறு அல்ல) உங்கள் நாவல் 'புத்ர'வைக் காட்டிலும், இதில் அந்த compassion நிறைய தெரிகிறது, (ஆம், இதன் படிவநிலையில் அவருக்குப் படிக்கக் கொடுத்தேன்)

அவர் கூற்றின் அடிப்படை — அடிப்படைத் தன்மையில் எல்லோரும் நல்லவரே என்பதுதானோ?

இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். இதுவே அதிகம் இதற்குமேல் மார்தட்டல் ஆகிவிடுமோ என்கிற பயம்

சமையலைச் சொல்வது ருசி ஆகாது. உண்டு கண்டு கொள்வதுதான் ருசி.

அவரவர்க்கு அவரவர் ருசி

ஆனால் எல்லோரும் சாப்பிட வாருங்கள்.

இந்தப் புத்தகம் தயாராகுகையில் இதன் படிவங்களைப் பார்த்த நண்பர் நா. சீ. வரதராஜனுக்கு என் வந்தனங்கள்.

புத்தகத்தை வெளிக் கொணர்ந்த ஐந்திணைப் பதிப்பகத்துக்கு நன்றி.

ப்ளாட் 242,
1, கிருஷ்ணன் தெரு
ஞானமூர்த்தி நகர்
அம்பத்தூர்
சென்னை 600 053

**லா. ச. ராமாமிருதம்**
1-12-90

## எங்களிடம் கிடைக்கும் ஆசிரியரின் பிறநூல்கள்.

1. புற்று
2. புத்ர
3. த்வனி
4. கல் சிரிக்கிறது
5. சிந்தாநதி
6. கங்கா
7. பிராயச்சித்தம்

# காமு

"போஸ்ட்!"

மதியம் 12-00/12-30க்குள் ஒரு 'பீட்'

தபால்காரன் வயதானவன். மரியாதையானவன், சைகிள்.

பிறகு மாலை 4/15-5/30க்குள் ஒரு பீட்.

ஒரு இளைஞன். கால் நடை. தலை மயிர் எத்தனை கட்டை! முன் நெற்றியில் சரிந்து சரிந்து ஒரு அடை விழுகையில், அதைப் பின் தள்ளுவதற்காக, தலையை உதறிக் கொள்வது அவனுக்கு இரண்டாம் இயல்பாகப் போய் விட்டது. கொஞ்சம் ஒட்டி வெட்டினால் இந்த அசௌகரியம் இருக்காது. அசௌகரியம் என்று நான் நினைத்துக் கொள்கிறேன். அதுவே 'ஸ்டைலாக' இருந்தாலோ? கேட்க நான் யார்?

( "கேட்டு, விலைக்கு வாங்கிக் கட்டிக் கொள்ளாமல் அப்பாவுக்கு இருக்க முடியாதே!"

மேதாவி நெ. 2.

பேசப் புதிதாகப் பையன்கள் பழக்குகிறான்கள். பேசவா, இவர்களுடன் நமக்கென்ன என்று வாயடைத்துப் போகவா? )

முறைப்படி தபால் நேரங்கள் எத்தனை, எப்பெப்போ?

12 to 12-30;

4 to 5-30

நான் என் கடிதங்களுக்குக் காத்திருக்கும் நேரங்கள்.

ஆனால்

காக்க காக்க

அடை காக்க

முட்டைகூட இல்லை.

வெறும் நேரத்தை

அடை காக்கிறேன்.

எனக்குக் கடிதம் போட யாரிருக்கிறார்கள்?

அது ஒரு பெரும் கேள்வி, அதை நேரிடை சந்திக்க அல்ல,

சுற்றிச் சுற்றி அதைப் பிச்சை வருகிறேன்.

செத்தவர் போக, மறந்தவர் போக ஒண்ணு, அதை என்யுகத்தவர் யாரேனும்...

இதுதான் Senility?

தபாலை எதிர் பார்த்தும் எனக்குப் பொழுது போக்கு அல்ல, பொழுது புழுங்கும் நேரங்கள்.

ஒரு கலியாணப் பத்திரிகை.

ஒரு வரவேற்பு அழைப்பு.

ஒரு மீட்டிங் அறிக்கை.

ஒரு சாவுக் கடிதம்கூடத் தபால்தான்.

தபால் மட்டுமல்ல. அடுத்து என் முறை எப்போ? என்று ஒரு நினைவு மூட்டல்.

ஆனால், நான் இஷ்டப்பட்டாலும் அதுவும் என் கையிலா?

என் ஜாதகப்படி, எனக்கு நிறையத்தான் பிடித்துப் போட்டிருக்கிறதாம். கழுகாய்க் காத்திரு.

வேலையிருந்தவரை தபாலுக்குக் குறைவேது? கற்றை கற்றையாய், மேலிடத்திலிருந்து, கஸ்டமரிடமிருந்து, கத்

திகள், கவணகள், ஊசிகள்- நண்பர்கள், சுற்றத்தாரிட மிருந்து வந்த வண்ணம்தான். உத்தியோகத் தபால்களை வந்தவுடனே பதிவு செய்தபின் அடுத்த வாரத்துக்குள். அதனதன் அடுத்த கட்டத்துக்கு நகர்த்தாவிட்டால், சிலசில அதனதன் தரத்துக்குக்கேற்ப, விசுவரூபமெடுத்து விடும்,

o o o

இது உங்களுக்கு என் கைப்பட எழுதும் நான்காவது D. O. இன்னமும் மேல் குறிப்பிட்ட ஸ்டேட்மெண்ட், உங்கள் ஆபீஸ் அனுப்பிய பாடில்லை. இன்னும் தாமத மானால் கடுமையான நடவடிக்கைக்கு ஆளாவீர் என்று வருத்தத்துடன்......

o o o

நான்கு கடிதங்கள் எழுதியும், என் டிபாஸிட் தொகை மீது வட்டி., குறைவாகத் தப்புக் கணக்குப் பண்ணியிருக் கீங்க; விளக்கமும் தரல்லே. குறைத் தொகையையும் எனக்கு வரவு வெக்கல்லே...மரியாதைக்கு ஒரு வரி பதில் போடாட்டி என்ன அர்த்தம் எங்கறேன். உங்கள் ஹெட்டு ஆபீசுக்குப் புகார் செய்வதுடன் என் கணக்கை வேறி டத்துக்கு மாத்திக்கிட வேண்டியதுதான். ஆனால் எங்கே போனாலும் என்ன வாழுது? அந்தத் துணிச்சல்தானே உங்களுக்கு? கணக்கு வெக்கிற வரைக்கும் எட்டுத்தடவை படியேறி வந்து பிராணனை வாங்கறீங்க. கணக்கு வச்சா இந்தப் பாடுதான்......”

o o o

பையன் BA. பாஸ் பண்ணி விட்டு ஒரு வருடமா சும்மாயிருக்கிறான். II க்ளாஸ்தான். நன்றாய்ப்படிப் பவன்தான். அவனைச் சொல்லிக்குத்தமில்லை. அதுவும் என் ஏப்ராசிதான்: இதைச் சாதிப்பதற்குள் எனக்கு முழி பிதுங்கிப் போயிற்று. அவள் கழுத்தில் வெறும் மஞ்சளைக் கோர்த்துப் போட்டுக் கொண்டிருக்கிறாள். இருபது வருடம் வாழ்ந்தவனுமில்லை. இருபது வருடம்

கெட்டவனுமில்லை. என்கிற பழமொழிகூட என் விஷயத்தில் பொய்த்துப் போயாச்சு. என் நிலையில் துளிக் கூட மாறுதல் இல்லை.

உங்கள் சிபாரிசில் அவனுக்கு விடிந்தால் போதும்-எனக்கு இனி என்ன இருக்கிறது? இனி விடிந்தாலும் எனக்கு வித்தியாசம் தெரியப் போமோ? உடம்பை ஆயிரம் கோளாறு பிடுங்கித் தின்கிறது. நான் போனாலாவது இருப்பவர்களுக்கு விடியுமா? ஆனால் பொன்தாலி காட்டிலும் அவள் கோர்த்திக்கும் மஞ்சள் பலம் கெட்டியாயிருக்கிறது. என்ன செய்வேன்? என்ன செய்வோம்?

அந்த நாள் சிநேகிதத்தின் நம்பிக்கையில் எழுதும் கடிதத்தின் மேல் உன் ஆயிரம் ஜோலி நடுவில் உன் கண் பட்டதன் மூலம் மறுபடியும் நம்பிக்கை ஏற்படுமா?

o o o

சென்று போன நாட்கள்.

செயல் படும் நாட்கள்.

முடிந்த போது, முடிந்தவரை.

உதவி கூட செய்யமுடிந்த நாட்கள்.

ஆனால் கடிதம் எழுதுபவர்கள் என்னைக் கடவுளாக நினைத்துக் கொள்ளும் போது

அவர்கள் எதிர்பார்ப்புக்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

ஆனால் பல நாட்கள், வெறும் நினைவோட்டத்தை, காகிதக்கப்பலை, வாய்க்காலிலோ, நதியிலோ, கடலிலோ ஏற்றி, அவைகளின் மிதப்பை, தத்தளிப்பை, கவிழ்தலை வேடிக்கைபார்க்கும் விதி நாட்கள்.

ஆனால் வெறும் நினைவோட்டமா? அங்குதான் கேள்வி-கேள்வி தூண்டிய நினைவுகள் பாம்பெனக் காலை, கழுத்தைச்சுற்றி, பிளந்த நாக்கு துருவித்துருவி இடம் தேடி நக்குகிறது.

o o o

"நீ இப்போ பதவியில் இருகாய்னு கேள்விப்பட்டேன். எனக்கு எழுத வறதுங்கறதே ஆச்சரியமாயிருக்கா? என்னை என்னன்னு நெனச்சுண்டிருக்கே? ரொம்ப சந்தோஷம். எங்கேனும் ஆயுசோட நன்னாயிருந்தால் சரி. காமுப்பாட்டி வளர்த்த கை வீணாகல்லே. என் வீட்டு மருதாணிமரம் இடிவிழுந்து பட்டுப் போனவரைக்கும் அப்பப்போ பறிச்சு, என்கையாலேயே அரைச்சு, விழுதை உருட்டி. மரச்சீப்பில் வெச்சுண்டு. நீ எனக்குப் பிள்ளைக் குப் பிள்ளையா, பொண்ணுக்குப் பொண்ணா, உனக்கு இட்டதை, நான் இப்போ நினைவுபடுத்தி, நினைப்பு வந்தால் சரி. நான் இட்ட ராசி இன்னும் உன் உள்ளங் கையில் லக்ஷ்மி பட்டா மின்னிண்டு விளையாடறாள். நீ பாங்கு மானேஜராமே; போடுசக்கை. அத்தனை பணமும் நீ தானே புழங்குவாய்? உனக்கு நான் உறவு இல்லே. ஆனால் நான் வளர்த்த பிள்ளைதானே! இருக்கறதைப் போட்டுத் தானே வளக்கமுடியும்? குலோப் ஜாமுக்கும் கோவாவுக்கும் குல்கந்துக்கும் கோகுலத்துக்கு நான் எங்கே போறது? ஆஞ்சு பாத்தா அது வெறும் மைதாவும் பாலும்தான். பேருதான் பெத்தபேரு. நான்போட்ட பழையதையும், பழங்குழம்பையும் காஞ்ச கொளஞ்சிக் காயும் சாப்பிட்டு உருவாகித்தான் நீ இப்போ வாயிலே பேர் நுழையாத விதவிதப் பண்டங்கள், பக்ஷணங்கள் சாப்பிட்டிண்டுருக்கே. நீ சாப்பிடறதெல்லாம் எனக்கு வேண்டாம். யாருக்கு இந்த அனுசாரத் திண்டியெல்லாம் வேண்டிக் கிடக்கு? ஒரு முறுக்கு, சீடை, தட்டை காலில் கட்டி அடிக்கக் காணுமா? தித்திப்பை எடுத்துண்டா ஒக்காரை, திரட்டுப் பால், அதிர்சம், பொருவிளாங்கா உருண்டை—தின்காட்டா என்ன? சொன்னாலை வாயில் தேன் சொட்டல்லே?

—சரி சரி இப்போ நான் உன்னோடே பக்ஷணக் கடை பேசவரல்லே. போனவருசமே ஒரு நூறுரூவா கேட்டு எழுதியிருந்தேனே என்னாச்சு? யோசனைபண்ணினையா?

சீட்டுப்போட்டுக் குலுக்கினையா? ஒரு முடிவுக்கு வந்தையா? இல்லை, என் நாட்டுப் பெண்—அதான் நான் இன்னும் கண்ணால் கண்டிராத, அனேகமாக காணப் போறது மில்லாத உன் பட்டமகிஷி? என் கரதராசு உன் வரைக்கும் எட்டாதபடி அமுக்கிப்பிட்டாளா? நீ தான் ஒருவரிகூட தெரிவிக்காமே கலியாணம் பண்ணிண்டுட்டே, பண்ணிண்டிருப்பே ஆமா, இத்தனை நாளைக்கு பண்ணிக்காமே இருப்பையாக்கும், ஆனால் நீ பத்திரிகை அனுப்பிச்சால் மத்திரம் வந்திருப்பேனா? ரயில் சார்ஜ்? இப்போ நான் உன்னைக் கேக்கற ரூவாயும் கைச்செலவுக் குத்தான். அப்பப்போ என்னைச் சீட்டைக்கேட்டு, ரயில் காரன், கட்டையிலே போவான், அது என்னிடம் இல் லாமை, என்னை அங்கங்கே இறக்கி விட்டாலும், அப்ப டியே காசிவரை போய், கங்கையிலே கட்டையைப் போட றத முடிவு. பண்ணிட்டேன். இத்தனை நாள் கழிச்சு சுங்கம் கேக்கற கிழம் இதுயார்னு திகைப்பாயிருக்கா? என்ளுக்கண் ணைக் கசக்கி முழிச்சுப்பாக்கறியா? உன் கண் பெரிசாயி டுத்தா? பிறவி எங்கேயாறும்? என்னிக்குமே நேர்முழிகிடை யாது. அன்னிக்கே பல்லுகூடபடாமே, முழுசா முழுங்கிட்டு, புத்தா, பூலோகமா, கைலாசமான்னு திறந்த கண்ணுலே மண்ணைப்போடுவே. இப்போ கேக்கணுமா? இன்னும் கத்துண்டிருப்பே இல்லியா? நான்தாண்டா காமுப்பாட்டி. வேறுயார் இவ்வளவு உரிமையா உனக்கு எழுதப்போறா? அதுக்கே நீ எத்தனையோ புண்ணியம் சேஞ்சிருக்கணும். நெனச்சுப் பார்த்துக்கோ. ஆமா நான் ஊருக்கெல்லாம் ஒரே காமுப்பாட்டின்னா, நீ எனக்கு ஒரே ஒரு பேராண்டி...''

காமுப்பாட்டி இன்னும் உசிரோட இருந்தால், வயசு 110. எங்கே இருக்கப்போகிறாள்? ஆனால் சொல்ல முடியாது. கன்னி விதவை வஜ்ரக்கட்டை. தேய்வா? செலவா? யமனே அவள் நாக்குக்கு அஞ்சி அவளிடம்

வரவில்லை என்று சொல்வேன். நாக்கு விஷயத்தில் அவள் தனிச்சிகரம். அந்தக் கடுத்த நாட்களில் என் அவலத்தை எனக்கு அவ்வப்போது நினைவுபடுத்துவதில் ராஜா. புடவை கட்டியிருந்தாளே ஒழிய அவள் பெண்பால் இல்லை. ஆண்பாலும் இல்லை. ஏனெனில் ஆணும் அவளுக்கு அந்தநாளிலேயே அஞ்சும்.

வெளியிடப் பயந்து உள்ளே அமுக்கிவிட்ட எண்ணங் களை மேல்கூட எப்படித்தான் அவளுக்கு ஸெர்ச்லைட் அடிக்குமோ? அதுவும் அவள் வாயிலிருந்து வெளிப் படும் போது, சுவரோரம் உடல் நடுங்கும் எலிபோல், குற்றவாளி பதுங்கவேண்டியதுதான். குற்றவாளி அவளுக்கு அகப்பட்டவன் நான்தான்.

உருளையாய், அசிங்கமாய், பயத்தில் உடல் வெட வெடவென உதறிக்கொண்டு...

எலி.

''என்னடா முகம் சுளிக்கறே? கட்டெறும்பும் கரப்பான் பூச்சியும் மிதந்தால் தள்ளிட்டுக் கொட்டிக் கறது. தவிடுதின்கறத்துலே ஓய்யாரமோ? உனக்கோசம், பழையத்து மூலைக்குத் தனிவிளக்குப் போடமுடியுமா? அதென்ன நாக்கு? நாங்கள் எல்லாம் அப்படித்தான் வளர்ந்தோம் சின்னவயசிலே கடவுள் என்னைத் தலை யைத் தடவிட்டானே தவிர, வயத்திலே அடிச்சுடல்லே. இந்தத் தண்ணியும் சோறுக்கும் 'தறுக்' 'தறுக்'குனு கடிச்சுக்கப் பச்சை மிளாய்க்கும் உப்புக்கல்லுக்கும் என்னிக்கும் பஞ்சமில்லை. நீ ஒண்ணும் கொம்பில் ஏறிக் குதிச்சுட்டமாதிரி நெனச்சுக்காதே. இப்பவே, எறும்பு, கரப்பான், பல்லி விஷத்தைத் தின்னு பழக்கிண்டால், பின்னால் என்ன விஷம் தீண்டினாலும் ஏறாது. உன் வராச் சாப்பாட்டுக்குக் கூட ஏற்பாடு பண்ணாமல்' உன் அப்பனும் ஆயியும் சேர்ந்தாப்போல் காவேரிலே போனாளோ, அந்தி லக்ஷணத்துக்கு, இந்தத் திருடனின்

ராஜமுழிதான் மிச்சம் வேறெத்தையும் நான் காணல்லே.. அம்மாடி!

போனது தான் போனாளே, சேந்தாப்போலே. ஒதுங்கினாளோ? கோவிந்தாக் கொள்ளியிலும் கொம் மாளமா? அவள் சிந்தாமணி, அவன் மூணுமைல்தாண்டி ஒரு வாய்க்காக் கரையோரம், அதிலும் ஒருகால் தொடை வரை காணல்லே. முதலைக்கு வேண்டுதலை. கால் வழுக்கியா, ஒருத்தரையொருத்தர் காப்பாத்தப் போயா, இரண்டு கையைப் பிடிச்சுண்டு ஒரு குறிப்பில் தற்கொலையா, அல்லது உன்னோடு வாழ்ந்த லக்ஷணம் போதும்னு யார் யாரைப் பிடிச்சால் முன்னால் தள்ளி னதுன்னு யார் கண்டது? விசாரணை நடத்தக் கூட வழியில்லே. சாக்ஷியா?சம்மனா?''

''பேச்சென்னவோ சாவிலும் ஒத்துமையைப் பார்னு ஊர் மெச்சிக்கறது. அதிலேயும் ஒரு நல்ல பேர் கட்டிக்க இந்த மகாத்மியம் இங்கேதான் நடந்தது, இங்கேதான் நடக்கமுடியும்னு சிதை நெருப்பிலே, ஊர் தனக்கு சாம் பிராணி போட்டுக்கறது. ஊர்தான் என்ன ஊரோ? செத்தவாதான் என்ன மனுஷாளோ? பிறந்ததுதான் நீ என்ன பிள்ளையோ?"

இப்படியேதான், சம்பந்தமா சம்பந்தமில்லாமல் ஒன்றுக்கொன்று முடிச்சுப் போட்டு, என் அடிவயிற்றில் அவள் மாட்டித் திருகியிழுக்கும் அலகை, நான் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு நெளிவதைப் பார்க்கையில் அவளுக்குத் தனிக் குஷி.

காமுப் பாட்டி இன்னும் எங்கே உயிரோடு இருக்கப் போகிறாள்? வீறாப்பாய் எழுதியிருக்கிறாளே, காசிக்கு எங்கே போவாள்? புண்ணியம் தனியாகத் தேடுவது அவள் சுபாவத்தில் அல்ல. அந்தக் கௌரவம் அவளுக்குக் கொடுத்து விடணும். அது போகிற போக்கில், வீட்டுக் கொல்லைப் புறத்தை வளைக்கும் வாய்க்காலில் குளிக்கும்

போது, அந்த நாளில் வாய் வார்த்தையாக 'கங்கா யமுனா, சரஸ்வதி, நர்மதா, அகண்ட காவேரி, அரிஹி!" என்று எல்லோரையும் போல் தானும் வரவழைப்பாளே அப்போது என்றேனும் ஒரு நாள், அவளுக்கு இரங்கியோ அவள் வாய்க்கு அஞ்சியோ, கங்கை வாய்க்காலில் பொங்கி, அவளைக் கடமையாக காசிக்கு அழைத்துக் கொண்டு போக அவளுக்கும் வேளை வந்திருந்தால் உண்டு.

சரி சரி மனசுக்குள் இதென்ன 70 mm எத்தனை நாழி? ஆனால் எத்தனையோ கடிதங்களை நினைப்புக்குக் கொண்டு வருகையில், அவள் கடிதம் தானாவே வந்து அத்துடன் காட்சிகள் வருகின்றன, போகின்றன, வதைக்கின்றன.

o o o

ஊரின் எல்லை தாண்டாமல், இளமையிலே தன் வாழ்வின் குலைவின் உடல், உள்ளக் கூறின் வேதனைகளை சமுதாயத்தின்மீது பின் எப்படித்தான் பழி தீர்த்துக் கொள்வது? அனாதைப் பையன் நான்தான் அகப்பட்டுக் கொண்டேன். ('அட பயலே, கால் வேறு கைவேறா தனித்தனியாகக் கடந்தவனை ஒண்ணாச் சேர்த்து அள்ளிப் போட்டுண்டுன்னா வந்தேன், உடம்பு ஒண்ணுங் காலுமா ஒட்டிக்குமான்னு தவிக்கற போதே இத்தனை திமிரா?') என்னையும் என் பெற்றோர் வழி போகட்டுமே என்று கைவிட்டிருந்தால் தான் என்ன? விடவில்லை, விடமாட்டாள். அவள் தோபங்களுக்கு வடிகால்தான் பின் எப்படி? அப்பா, ஒரு தடவை அவள் பிடுங்கல் தாங்காமல், வீட்டை விட்டு ஓடி விட்டேன். காரணத்தை நினைத்துக் கொண்டால் இப்பக்கூட வெட்கமாயிருக்கிறது.

திடீரென்று நினைத்துக் கொண்டாள். "நீ எண்ணெய் தேச்சுண்டு எந்த யுகம் ஆறது? இன்னிக்குப்

புதன் கிழமையாயிருக்கு. டிமிக்கிக் கொடுக்கறதில்லே. இன்னிக்குத் தேச்சுண்டே ஆகணும், மிளகு ரஸம் சாப்பிட்டே ஆகணும். பருப்புத் துகையல்லே மொத்தை அடிச்சுட்டு எழுந்திருக்கிறதில்லே.”

“சரி பாட்டி”.

“நான் உனக்குப் பாட்டியில்லே. உன் அப்பனையும் பெக்கல்லே. உன் அம்மையையும் பெக்கல்லே.”

“சரி பாட்டி” எனக்குக் கொஞ்சம் வியப்பாயிருந்தது. அவளுக்கு இன்னிக்கு ‘மூடு’ சரியாயில்லையா? ‘ஆமாம் பூசாரி’ போட்டுத் தப்பிச்சுக்க வேண்டியது தான்.

“எண்ணெயைக் காய்ச்சிண்டு வரேன். கோவ-ணத்தைக் கட்டிண்டு தயாராயிரு” என்று சமையலுள்ளே போய் விட்டாள்.

அப்படியா சமாச்சாரம்? இப்போ புரிஞ்சுது. இப்பவும் புரியல்லே. கடா மாதிரி எனக்குப் பதினஞ்சு வயசாறது முன்னே பின்னே பழக்கமுமில்லை. இன்னிக்கு இதென்ன புது ஸ்டண்ட்? மாட்டேன்னா ரகளை நடக்கும். அதுவும் தெரியும் அவள் ஒண்ணை நெனச்சுண்டாட்டா பிறகு நினைப்புக்கும் செல்லாக் காசுக்கும் இடைக்கோடு கிடையாது.

ஓடி விட்டேன். எவ்வளவு தூரம், எந்த திக்கில் என்று எனக்கு அப்போது தெரியாது.

பகல் பூரா, மாலை பூரா.

பசி. No, அதைப் பற்றி நினைத்தாலே கூடப் பசிக்கும்... பசியைப் பற்றி எனக்குத் தெரியும்.

யாரோ தோளைப் பிடித்து உலுக்குகிறார்கள். மன மிலாது விழிப்பு. பொலபொலவெனப் பொழுது விடிவு.

“என்னடா கண்ணு? எண்ணெய் தேய்ச்சுக்காமலே வந்துட்டியே; கண் பொங்கறதே!”

இதென்ன கனவு கலைக்குக் கனவுள் கனவா? இல்லை இல்லை. நனவேதான். ஜில்லி பில்லி சூன்யமா? இப்படியும் ஒரு மோப்ப சூட்சுமமா? உன்னைத் தப்பிக்கவே முடியாதா?

என்னுள் எல்லாமே கழன்று போனால்? குரங்கு போல் என்கைகள் தாமே கூப்பிக் கொண்டன.

''பாட்டி, பாட்டி!''

அந்த வெள்ளை முழியில் கறுப்பு முழி ஆடற. பள பளப்பு, பார்த்தவனுக்கல்லவா தெரியும்? முழியா அது? என் சகடக்காலைச் சம்ஹரிக்கத்துடிக்கும் விஷ்ணு சக்கரம் அல்லவா? கைகூப்பிக் கொண்டு.

''பாட்டி பாட்டி, இங்கே என்னை ஒண்ணும் பண் ணாதே, உன்னோட பேசாமல் வந்துடறேன்.''

சுற்றுமுற்றும் பார்த்தாள். நான் படுத்திருந்த திண் ணையைத் தாண்டி இன்னும் மூடியிருந்த வாசற் கதவின் மேல் அவள் பார்வை ஒரு கணம் தயங்கி, என்மேல் மீண் டது.

''அப்படியா? அதுக்குள் பக்ஷிக்குப் பஞ்சோடு கட் டிய கூடு அகப்பட்டுடுத்தா? சரி, இப்போ யோசிக்க நேர மில்லை. உம்-கிளம்பு.''

பெரிய ஆளு, ஆள் செத்த பிறகு ஆராய்ச்சிக்கு ஆஸ் பத்திரிக்குக் கொடுக்க வேண்டிய மூளை.

வீட்டுக்கு வந்ததும் என்னை இழுத்துப் பிடிச்சுத் தூணில் கட்டிப் புளியமிலாறினால் வீறுவீறென வீறி. பிறகு கட்டிக் கொண்டு அழுததை இப்போ நினைச்சாக் கூடத் தொண்டையில் அடைக்கிறது,

ஆனால் ஒன்று. அவளும் அதே பழையதைத்தான் சாப்பிடுவாள். பழையது தின்கிற பாட்டிதான்; பலகாரப் பாட்டியல்ல. ஆட்டுக்கல்லும் தோசைக்கல்லும் மட்டும் இருந்தால் போதுமா? மாவும் எண்ணெயும் மிளகாப்

பொடியும் வேண்டாமா? முதலில் சொல்லு, அரிசியும் உளுந்தும் வேண்டாமா? நாளடைவில் அவளும் களைத்துப் போய்விட்டாள். அத்தோடு நான் ஒரு கொசிர். எனக்கும் கால் குளைச்சும் போச்சு. காமுப்பாட்டிக்கு, அவள் வசைமாரிக்கு இரண்டு திட்டு, கூடக் கிடைச்சுப் போச்சு.

"ஏண்டா ஓடுகாலி! திண்ணைத்தூங்கி! இங்கே விட்டு ஓடிப் போனயே! எங்கே போனே? எந்த எச்சிலைக்கிளறித் தின்னே?"

எனக்கு ஏன் இப்போ காமுப்பாட்டி மேலே கோபம் வரமாட்டேன்கறது? அவள் திட்டத்திட்ட அவள்மேல் ஒரு பரிதாபம் தான் ஏற்படுகிறது,

"எலே குழந்தே! போனதெல்லாம் போச்சு. அதான் திரும்பி வந்தாச்சுஒண்ணு சேர்ந்தாச்சு.

"அப்படியா?"

அவள் பேச்சுக்குக் கட்டை கொடுத்தாற் போன்ற அந்தக் கேள்வியில் தடுமாறுவாள்.

"என்னடா சொல்றே? அந்தக் கேள்விக்கென்ன அர்த்தம்?"

எனக்கே புரிந்தால் தானே? காமுப் பாட்டியைப் பார்த்தால் பாவமாயிருக்கே. நயமாகவோ பயமாகவோ என் கதையை நான் கக்கிவிட எதிர்பார்க்கிறாள்.

"என்ன பாட்டி, இதென்ன கதையா சொல்ல? சொல்றதுக்கு என்னஇருக்கு?"

"என்னை என்ன அவ்வளவு மக்குன்னு நெனச்சுட்டியா? உன் பதில் கேள்வியிலேயே உன் மழுப்பல் தெரியறதே! எங்கே கிளம்பிட்டே? இரு இன்னிக்கு உனக்குப் பிடிச்ச பண்டம் ஒண்ணு பண்ணியிருக்கேனே—"

"என்னது ?"

''நான் ஏன் சொல்லணும்? நீயே பார்த்து 'ஆ' ங்கப் போறே. இதோ வந்துட்டேன்."— சமையலறைக்குப் போகிறாள்.

பயமாச்சு.

நயமாச்சு.

இப்போ லஞ்சம்.

அடுத்தது உதை.

எனக்குப் பயமாய்க் கூட இல்லை, அலுப்பாயிருக்கிறது. நானும் இதோ வந்துட்டேன். ஆனால் சொல்லிக் கொள்ளவில்லை. கிளம்பி விடுகிறேன். திருப்பி வந்ததும் பூசை நிச்சயம். ஆனால் கூடவே பண்ணின பண்டம் நைவேத்தியமும் நிச்சயம். நம்மை விட்டு எங்கே ஓடிப் போகிறது? நாய்க்குத் தூக்கிப் போட்டு விடப் போகிறாளா? அந்த அளவுக்குச் சட்டியில் எங்கேயிருக்கு?

ஊர் எல்லையில் ஒரு புளியந்தோப்பு. அதன் நடுவே ஆலமரம். அதன் கிளையில் இரண்டு அகன்ற விழுதுக் களிடையே, சங்கிலிகளில் தொங்கும் குட்டி ஊஞ்சல், சங்கிலியின் உச்சி வளையம் ஒன்றில் குஞ்சம் கட்டிய ஒரு புல்லாங்குழல் கட்டிவைத்திருக்கிறது. பௌர்ணமியன்று முழுநிலா உச்சி மண்டைக்கு நிற்கும்போது புல்லாங் குழலுள்காற்று புகுந்து கொண்டு, குழல் தானே வாசித்துக் கொள்கிறதாம். கேள்வி தானே அன்றி, கேட்டவர்யார்? அதுவும் ஒரு கேள்விதான்.

காதலில் தோல்வியுற்று, தற்கொலை செய்து கொண்ட காதலரின் ஆவி புல்லாக்குழலில்

அல்லது பாம்பு பிடிக்கும் குருவிக்காரன்

அல்லது மாட்டிடையன், வழிவழியாய்த் திரித்தகதை நிஜமாயிருந்தாலும் சிளிமாக்கதை

எப்படியோ விதவிதமாகச் சொல்லி ஒரு வழியாக எல்லோருக்கும்

பழகிப் போன கதை.

ஊஞ்சல் மேல் கவிழ்கிறேன்.

மாலை மாருதத்தில் ஆடும் ஆலம் விழுதுச் சரங்களினூடே, அஸ்தமனத்தின் ஆரஞ்சுத்திட்டு படபடக்கிறது. பிட்டுமாவுபோல் வானத்தில் செந்திட்டு அங்கங்கே விள்ளல்விட்டிருக்கிறது. இன்னும்சரியாகக் கரையாக வெல்லக்கட்டி போல், சூரியன் பாகுவிட்டுக் கொண்டு, கனிந்த சூட்டில் மினுமினுக்கிறான். பட்டாம் பூச்சிப்போல, பழுத்தபுளிய இலைகள் காற்றில் அலைந்து வந்து என்மேல் பெய்கின்றன. அத்துடன் ஒன்றிரண்டு பூக்களும் தலைமயிரில் ஒட்டிக்கொள்கின்றன. ஊஞ்சலில் மாட்டிய புல்லாங் குழல், என் இதயத்தில் விழித்துக் கொண்டு ஏதோ மர்மராகம் ஊதுகிறது. நெஞ்சில் தேன் சொட்டுகிறது. எல்லோரிடமுந் தான் குட்டிச்சாத்தான் ஒளிந்து கொண்டிருக்கிறது. உன்னிடம் இருப்பவனிடமிருந்து நீ எங்கே ஓடிப்போவாய்?

இதய நரம்புகள் ஏதோ சுருதியில் சேர்ந்து, அல்லது சேற முறுக்கேறுகையில் அங்கே ஏதோ நோக்காடு, உள்கவிந்த இன்ப மூட்டத்துக்கு முதுகுகொடுத்து விண் விண் தெறிக்கிறது.

கண்ணைமூடி, இமைகளுள் இமய வியாபகத்தில் ஒரு முகத்தை எழுத முயன்றேன். ஒவ்வொரு சமயம் திட்டுப் படர்கிறது. ஒரொருசமயம் புன்னகையின் ஒளிமட்டும் காட்டி, உருவம் காட்டாது உருகி, விழியோரம் உறுத்தி கன்னத்தில் வழிகிறது. நான் கண்ணீரைத் துடைக்க முயலவில்லை.

ஏ, காமுப்பாட்டி, நீ கெட்டிக்காரிதான். ஆனால் எல்லாத்தையும் என்னிடமிருந்து பிடுங்கிட முடியுமா. பிடுங்கிக்கணுமா? உனக்கு இத்தனை வயதாகியும்? இத்தனை சிறுவன் என்னை உனக்கே இழுத்துப் பிடித்து வைத்துக் கொள்ளணும்னு பாக்கறையே, எனக்கே என்று

ஒன்றும் இருக்கக்கூடாதா ? அதுவும் புத்தம் புதிதாக முதன்முதலாகக் கிடைத்தது.

o o o

நான் ஓடிப் போனேனா? ஓடிக்கொண்டேயிருந்தேன். ஓடவேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டா ஓடினேன் ? காமுப் பாட்டி என்னை உரித்துப் பார்க்க வேணும் என்று திடீரென அவளுக்குத் தோன்றிய ஆசையினின்றல்லவா தப்பித்து ஓடிக்கொண்டிருக்கிறேன்! உண்மையாவே பந்தயத்தில் ஓடுவதுபோல் ஓடிக்கொண் டிருக்கிறேன். எந்த நிமிஷம், எந்த மரத்தின் பின்னா லிருந்து. சப்பாத்திப் புதர் நடுவிலிருந்து காமுப்பாட்டி தோன்றுகிறாளோ எனும் திகில். அத்தனை அசட்டுப் பயம், ஆனால் நிஜபயம்.

சாலையின் குறுக்கே பாலத்தினடியே வாய்க்கால் ஓடியது.

ஆற்றங்கரை மேடு என்னோடு ஓடிவந்தது.

அதன் மேல் பனைகள், வியப்புடன் என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்தன.

என்னைபையா ஓடறே ?

வயற்புறம் நெற்பயிர் சீறிக்கொண்டே என்னை நோக்கித் தலையாட்டிற்று.

வானில் பறவைக் கூட்டம் ஒன்று வரிசை கட்டி என்னைக் கண்காணித்தபடியே பறந்தது.

'எந்த ஊர் பத்திக்கிட்டு எங்கே தம்பி ஓடுறே? மெள்ளத்தான் ஓடேன்?'

ஏற்றப்பாட்டை மெனக்கெட்டு நிறுத்துவிட்டு எனக்குப் பின்னால் கத்துகிறான்.

எல்லோரும் என் எதிரிகள்,

ஊர் எல்லையில் கருப்பண்ணன் கோயில் வாயிலில் ஒருயானையும் ஒருகுதிரையும் சிலைநிற்கின்றன. உயிர் இருந்தால் குதிரைமேல் ஏறித் தட்டிவிடுவேன். தேசிங்கு ராஜா நான்.

ஒரு ஆலமரத்தின் கீழ் ஒரு சுமைதாங்கி அடியில் ஒருத்தி கோணிக்கந்தலை விரித்து அதன்மேல் சுட்ட பனங்கிழங்கும், தோலோடு வறுத்த வேர்க்கடலையையும் கூறுகட்டிவைத்து, எதிரே உட்கார்ந்துகொண்டு இருக்கிறாள் வியாபாரமில்லை. அவளுக்குப் பொழுதும் போகவில்லை. கூறிலிருந்து ஒரொரு கடலையெடுத்து 'ணக்' கென்று பூமியில் நெத்தி, உரித்து வாயுள் எறிந்து கொள்கிறாள் பக்கத்தில் கூடையில் காராமணிச்சுண்டல் மேல் ஒரு ஈக்கூட்டம் 'ரொய்ஞ்ஞ்'—அளந்துபோட, அதிலேயே கிடக்கும் அவ்வளவு குட்டிக் கொட்டாங்கச்சி மழமழ எங்கே பிடித்தாள் ?

பார்த்ததும் பசி முழு நினைப்புடன் எழுந்து வயிற்றைக் கிள்ளுகிறது. துட்டு ?

எல்லாமே என் எதிரிகள்.

காமுப் பாட்டியைத்தவிர.

ஏனெனில் அவளை இதுவரை காணோமே!

இருள் படுதா அவிழ்கிறது.

இலுப்பந் தோப்பு.

தாண்டி ஆற்று மணல்.

நாடா போல் ஜலம் சிறுக ஓடுகிறது.

எதிர்க் கரையில் கத்தாழைப் புதர்களிடையில் ஒரு ஒற்றையடிப் பாதை ஊருக்குள் நுழைகிறது.

ரொம்ப தூரம் ஓடி வந்து விட்டேன். வழி, இடம் தெரியாமல். பின்னால் விசாரித்துத் தெரிந்து கொண்டேன்.

இந்த ஊர் பேர் வாடாவூர்.

கதைப்படி, எங்கு பஞ்சம் வந்தாலும், இந்த ஊருக்கு மட்டும் கறுப்பு கிடையாதாம்.

எவனோ குடியானவன் பசி வேளைக்குப் பங்கிட்டுக் கொண்ட கஞ்சியைக் குடித்துவிட்டு, அவ்வைக் கிழவி ஊருக்கே வரம் பாடி விட்டாள்.

வாடாமல் வாழுங்கள்.

ஓடஓடப் பாதை விரிந்து அக்ர காரத்தில் கலந்தது.

பணக்கார ஊர் போலும்.

உயர்ந்த படிகள்மேல் அகன்ற கொறடுகள். அடுத்துப் பட்டாளம் படுக்கிற மாதிரி நீண்டு, விசாலமான திண்ணைகள். இடையிடையே கோபி அடித்த மாடி வீடுகள். கோட்டைபோல் கனத்த சுவர்கள். கனத்த கதவுகள். தெரு முனையில் பெருமாள் கோயில்.

ஸ்தூபிமேல் ஒரு கருடன் உட்கார்ந்து கொண்டு, சிறகுகளைக் கோதிக் கொண்டிருக்கிறது.

கோயில் வாசலுக்கெதிரே நின்று

ஒருத்தி, தண்ணீர் சேந்திக் கொண்டிருந்தாள்.

ஓடி ஓடி நாக்கு வறண்டு போனது அவள் தண்ணீர் மொள்வதைக் கண்டதும்தான் ஞாபகம் வந்தது.

கிணற்றடியில் தயங்கி நின்றேன்.

குடத்தை லேசாய்க் கிணற்றுச் சுவர்மேல் சாய்த்தபடி அவள் காத்துக் கொண்டிருந்தாள். நான் இரு கை களையும் குழிவு சேர்த்து ஏந்திக் குனிந்தேன்.

குடத்திலிருந்து நூல் ஸ்படிகம் சரிந்து— அம்மாடி! அதன் குளுகுளு உள்ளே உடல் பூரா பரவிற்று. குடத்தையும் குடித்து விட்டேனா? எனக்குத் திடீரெனக்

கூச்சம் கண்டது. நான் தலை நிமிர்ந்தபோது, அவளுக்கு உதட்டோரம் குழிந்ததோ?

மிச்சத்தைக் கொட்டி விட்டு, மறுபடியும் நிரப்பிக் கொண்டு, இடுப்பில் வைத்துக் கொண்டு, கிணறை ஒட்டிய வீட்டுள் சென்று விட்டாள்.

அது சற்றுச் சின்ன வீடுதான். ஓட்டு வீடு. திண்ணையில் உட்கார்ந்தேன். என்னதான் வயிறு புடைக்கக் குடித்தாலும் ஜலம் மட்டும் எவ்வளவு தாங்கும்? ஓடி ஓடி, பகல் பூரா பட்டினி, காலி வயிறு எட்டு ஊருக்குக் கடபுடா— வெட்கமாயிருந்தது.

ஓடிப் போவது, ஓடிப் போனதைப் பற்றிப் பின்னால் பேசுவதுபோல் இல்லை. கஷ்டமாத்தான் இருக்கும்போல இருக்கு. முதல் நாளே இப்படியிருந்தால், இன்னும் இரண்டு நாள் இது போலானால், மூணாம் நாள் என் மேல் புல்.

காமுப் பாட்டிக் கிட்டக்கூடப் பசின்னு கேட்ட நினைப்பு இல்லை.

"சனியனே. உன் மாப்பிள்ளை முறுக்கை உன் மாமனார்கிட்டே வெச்சுக்கோ. தவிடு தின்றத்துலே ஒய்யாரம் வேறே, கோழி, குப்பையைக் கிளர்ற ஒய்யாரம். சீ, வந்து தின்னுட்டுப் போ!"

அடி சோறோ இடி சோறோ
சுடுசோறா வத்தல் குழம்போ
பழையதோ பச்சை மிளகாயோ
பசிக்கு வயிறு எப்படியோ நிரம்பிவிடும்.
வயிறு வயிறு! ஐயோ வயிறே!

உள்ளே பேச்சுக்குரல் கேட்கிறது.

"இப்படி வழியில் போற நாய் காக்காய்க்கெல்லாம் நீ கரைஞ்சுண்டிருந்தேன்னா, நாளடைவில் நாம் கற்பூரமா நமக்கே காணாமல் போயிடுவோம்".

''நாய் காக்கா இல்லேம்மா, பையன்.''

''சரியாப் போச்சு. அயன் விசேஷம் தான் போ. வாசல்லே ஏதாவது உலர்த்திட்டு மறந்துட்டயா பாரு... சுருட்டிண்டு போயிடப் போறான்.''

''உஷ்—'' பேச்சு எட்டப் போய் அடங்கியும் போயிற்று.

என் தொண்டையில் ஏதோ சிரிப்பு மூட்டுவது உணர்ந்தேன். அழுகையே தேவலை. நாதியற்றுப் போனால் ஓயாதபாடம் தான். ஓடிப்போனவன் அப்பப்போ அங்கங்கு கேட்டுக் கொள்ள வேண்டிய பாடத்துக்கு இப்படித்தானே பழக்கிக் கொள்ள வேண்டும். வேறுவழி?

மாலை கருகி இரவாகிவிட்டது, ஊரோசை அடங்கி விட்டது. இங்கு எல்லோரும் சமணர் போலும்!

''யாரது?''

''அதட்டல் கேட்டு, களைப்பின் அரைமயக்கத்தினின்று திடுக்கென விழித்து எழுந்து உட்கார்ந்தேன்.

ஒருகையில் சிக்குத் துணி போட்டு மூடிய ஏனம். தோள்பட்டையில் தொங்கும் பெரிய கோயில் சாவி. பட்டை நாமம் குடுமியுடன், வயதான உருவம், மறுகை லாந்தரை என் முகத்துக்கெதிர் பிடித்து-

''யாரப்பா சின்னப்பையன் இந்த வேளை?''

என் முகத்தைப் பார்த்ததும் அதட்டல் சாந்தமாக மாறிற்று.

''பார்த்த முகமாயில்லேயே! என்னப்பா அழறே?''

''நான் அழல்லே.'' அவரைத்திருப்பி அதட்டி, மூக்கை உறிஞ்சினேன்.

''சரி நீ அழல்லே, உள்ளே வா''

அந்தப் பெண் சமையலறையிலிருந்து வெளியே வந்து பட்டரின் கைப் பொருள்களை வாங்கிக் கொண்டாள். என்னைக் கண்ணெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. நீ யாரோ? நான் யாரோ? ஆனால் உதட்டோரம் புன்னகை லேசாகப் பளிச்சிட்டதோ?

''ஜனா, இலை போடு.''

ஆஹா. உலகத்தின் வேதங்கள், ஞானங்கள், உபதேசங்கள் அனைத்தும் இந்த இரண்டு வார்த்தைகளுக்கெதிரே என் செய்யமுடியும்?

ஆறிப் போன விறைத்த சாதம். கோவில் நைவேத்தியத்துக்குச் சுருக்கவே வடித்து விடுவார்கள் போலும்! எத்தனை சாமிக்கு ஒன்றையே காட்டிக் காட்டி, எத்தனை காற்றில் சில்லிட்டுப் போனதோ?

கறிவேப்பிலைத் துவையலில் அரை உப்புத்தான். படு காரம்.

அடுத்த நேரே மோர் இல்லை, நீரில் மோர். நீரின் நிறத்தை மாற்றி.

துவையலில் மொத்தை அடித்தேன். பாதிதீர்ந்த பின், ஆளுக்கு ஒரு அப்பளம் கொணர்ந்து போட்டாள், சுட்டுச் செவந்து லேசாகத் தொண்டையடியில் கசந்தது. அதனால் என்ன? முதலில் தொட்டுக்கவே அவசியமா என்ன? பசித்தவயிறுக்குத் தான் கருகிய அப்பளத்திலும் கூட அமுதத்தை அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

என்னை ஆட்சேபித்த அம்மாள் கடைசி வரை என் கண்ணில் தென்படவேயில்லை, சமையலறையில் நடமாட்டம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

சாப்பிட்டுக் கையலம்பினம் நான் திண்ணைக்கு வந்து விட்டேன்.

உடனே வாசற்கதவும் மூடிற்று. அவள்தான் சார்த்தினாள். கதவு பூரா மூடிக்கொள்ளுமுன், அவள் விழிகள்

ஒரு முறை முழுதாக என் மேல் தங்கின. தெருவிளக்கின் வெளிச்சத்தின் நிழல் சூதில் அந்தப்பார்வையை, அந்த முகத்தை, நான் என்றும் மறக்க முடியாது.

பதினெட்டு, இருபது இருக்குமா? இருக்கக் கூடாதா? ஆன வயதை எனக்காகத் திருப்பி வைக்க முடியுமா? 'வைத்துக்கொள்ளேன்' அதில் நீ ஒரு திருப்தி கண்டால்! உன்னைவிட வயது கூடினவள் மேல் உனக்கு உணர்ச்சி ஏற்படக் கூடாதா? நெஞ்சோடு இறுக்கச் சேர்த்துத் தழுவிக்கொள்ளும் இந்த நினைவில், அதன் முதன்மையின் தூய்மை, முதல் வியப்பு, இதயத்திற்கு முதல் பாசனம் பாறை மேல் பாயும் அருவி போல் பளபளக்கிறது.

o o o

அவை விழிகள் அன்று. ஆழிகள்
முழு மனதுடன்
என்னை என் முழுமையில்,
விடிகாலைப் பூஜையில்
அர்ச்சனையின் முதல் நாம வளியில்
அம்பாளின் பாதத்தில்
அப்பொத்தான் பறித்த மலரின், இதழின்,
இதழ்களின் நிறத்தின்
மணத்தின்
மலர்ச்சியின்
முழுமையுடன்
அர்ச்சனையின் விரல் நுனிகளிலிருந்து
மெத்தெனக் கழன்று
என்னை ஆவிர்ப்பவித்துக் கொண்டு
ஆழியில்
மூழ்குகிறேன்.
இந்த மன முவந்த தன்னழிவில், ஏதோ விரக்தியான இன்பம் தெள்ளுகின்றது

என் பெயர் இப்பொழு 'ஆவிர்ப்பவன்'
'கந்தர்வன்' போல்.
நாவில் உருட்டிச் சுவைக்கிறேன்.
எனக்கு ஒரு புது வார்த்தை கிடைத்துவிட்டது
கவிதை என்பது இப்படித்தான் பிறக்குமோ?
ஒரு சொல்லிலும் கவிதை உண்டோ?
முழுக்கவிதை.

இதோ இன்று ஆலமரத்தடியில், ஊஞ்சலில் கவிழ்ந்த படி, நானே படகு, நானே அலையாய், அலை தள்ளிய வழி படகை மிதக்கவிட்டுக்கொண்டு, படகில் படுத்தபடி, ஊஞ்சலின் மெத்தெனத் தன்னசைவில் மனதைப் படகாட விடுகையில், அந்த முகத்தை மறக்க முடியாது, மறக்கவும் கூடாதென்றே நினைக்கிறேன். அம்முகத்தை முழு மூர்க்கத்துடன், அன்று கதவுக்கிடுக்கில், அந்த நொடி நேரம் கண்டபடி, நினைவின் புதைவின் அடியிலிருந்து வரவழைக்கிறேன்.

—நேர்வகிடின் கீழ், சிறுவிரல் நகத்தளவுக்குப் பிறை வடு.

சின்ன வயதில் எங்கு விழுந்த காயமோ?
காது, கழுத்தில், நகை பார்த்ததாகத் தெரியவில்லை
மூக்கில் ஒரு பக்கம் மட்டும் பொட்டு?
கண்டேனோ?

o o o

எங்கள் ஊரை வளைத்து ஒரு வாய்க்கால் ஓடுகிறது. வடக்கு. எல்லையில் ஜலம் ஸ்படிகம் உன் நெஞ்சின் பிம்பத்தையே பார்க்கலாம். என் நெஞ்சின்— இல்லை வேண்டாம். தண்ணீர் இங்கேயும் கலங்கணுமா?

ஆனால் மற்ற திக்குகளில் அந்தத் தூய்மை இல்லை. கீழண்டே ஒரே கறைசல். ஏன்? ஒருநாள் வாய்க்காலின் வடக்கு நூலைப் பிடித்துக் கொண்டு, கரையோரம் நடந்துகொண்டே போனேன்! எங்கெங்கோ போயிற்று.

அங்கெல்லாம் நானும் போனேன். அப்போ நானும் பையல் தானே! அன்றையப் போது அப்படிப் போச்சு. அது ஒரு வேடிக்கை. குரங்கு நியாயம் குப்புசாமிப் பிள்ளைப் பண்ணை— ஒரே இடமாய் அத்தனை வயலையும் எப்படித்தான் வளைச்சுப் போட்டானோ? இந்தப் பக்கம் ஆற்றங்கால், அந்தப் பக்கம் ஏரிப் பாய்ச்சல். இடையில், கண்ணுக் கெட்டிய வரையில் கண்ணுக்குக் குளுமையாக பயிர்ப் பச்சை காத்தோட்-டத்தில் ஏதோ ரகசியம் பூத்துக் கிளுகிளுக்குது. அங்கங்கே ஏத்தக் கால் வேறே. ஊரில் கறுப்பு ஓடினாலும் பிள்ளைவாள் காட்டில் என்னிக்கும் வெள்ளம்தான். அதுதான் குரங்கு நியாயம் போலும். இத்தனைக்கும் பிள்ளை குட்டியில்லை. செட்டித் தெருவில் வீடு. மூணடுக்கு மாடி. மூணாவது மாடிக்கு வேலையேயில்லை. காலியாக் கிடக்கு. ஆனால் காரணம், பக்கத்து வீட்டானை விட நம் கட்டடம் ஒரு முழமாட்டியும் ஓசந்திருக்கணும். நாட்டுப்புறத்தில், பிள்ளையென்ன, கொஞ்சம் பசை படைத்தவன், எல்லாருக்கும் இப்படி ஏதேனும் ஒரு வீம்பு. அதை நிலைநாட்ட ஒரு தஸ்தா வேஜுக் கட்டு அழகாப் பட்டுத் துணியில் சுற்றி கோர்ட்டுக்கு அலைச்சல், வாயிதா, வாயிதா காதில் விழவேனும், ஒற்றை மாட்டு வில் வண்டியில், நாலு மைல். 'லொடக், லொடக்'. கோர்ட்டுக்கெதிரே கோகுல் பவனில் 'நாஷ்டா'. "ஐயரே, இன்னும் ஒரு வடை வை. வடையில் தொண்டிதான் இருக்குது. சாம்பாரை யாச்சும் தாராளமா ஊத்தேன். ஓ, முதலாளியே நீ தானா? அதான் இவ்வளவு கஞ்சனாயிருக்கே. விடு ஐயா, அத்தினியும் கஷ்டமர்கிட்ட வசூல், உன் கையை விட்டு என்னத் தட்டுக் கெட்டுப் போவுது? ஊத்து ஐயா! சாம்பாரா இது? வெங்காயம் தானையே காணோம். பருப்பையே காணோம். இலை இலையா என்னவோ, புளித் தண்ணியிலே, உசிரைப் புடிச்சுக்கிட்டு நீஞ்சுது. இதுக்கு சாம்பார்னு பேரு வேறே! மதுரை, நீயும்

ஒரு வடை வெச்சுக்க. சாம்பார் வடை நல்லா யிருக்குதப்பா. இத்தினியும் பின்னால் பிரதிவாதி கிட்டே வசூல் தானே, என்னத்தியோ கணக்குச் சொல்லி, எப்படியானால் நமக்கென்ன. பின்னே சாக்ஷிக்குக் கூப்பிட்டா லேசா? அதனால்தானே நம்ம புளைப்பையே கெடுக்கற மாதிரி சாக்ஷிக்காரன் காலில் விழறதைவிட, சண்டைக்காரன் காலிலேயே விளுன்னு பளமொளியே வந்திடுச்சு. ஆனால் நம்ம மக்கள் இருக்க மாட்டாங்க வெச்சுக்க. சட்டமே சாட்சி வாக்குமூலத்தைத் தானே நம்பியிருக்குது. இவன் அவனைக் கொலை செய்யறதை நீ பாத்தியா? இல்லியா? கேசு தள்ளுபடி. மதுரை. வவுத்துக்கு வஞ்சனை செய்யாதே, நல்லா சாப்பிடு." இத்தனைக்கும் முழங்காலுக்குமேல்தான் கட்டை வேட்டி. சொக்காய் கிடையாது. சுவுக்கம்தான் கஷ்குமுஷ்கு உடம்பு, விண்ணுனு தேங்காய் உடையற மாதிரி கெட்டித் தொந்திமேல் எட்டிப் பார்க்கும் மார்மேல் கைகட்டி, மெய், சாக்ஷி பொய் சாக்ஷி, சாக்ஷிக்காரனுக்கு சாக்ஷி நியாயத்துக்கும் நிஜத்துக்குமா கோர்ட்? சட்டத்தின் அட்டம் ஒழுங்காய்ச் செலுத்தியாறதா அதுக்குத்தானே கோர்ட். சாக்ஷியின் தோள்மேல் தான் கோர்ட் சாஞ்சு திக்கறது. மெய் போலும்மே மெய்போலும்மே. பாம்பைப் பழுதையாக்கு வெள்ளைக் காக்கை கண்டிப்பாய்ப் பார்த்தேனுங்க நான் மாத்திரம் இல்லேங்க சாக்ஷி குப்புசாமிப் புள்ளேங்க. யாரு? குப்புசாமியா? ஐயையோ குரங்கு நியாயம். முன்னாலேயே ஏன்ய்யா சொன்னாமே போனே. அந்தத் தரப்பிலே அந்த ஆள்னா அப்பீலே யில்லே. உன் கப்பலை அடகு வெச்சு நீ அப்பீல் பண்ணினாலும் நீதான் கவிழ்ந்து போவே. என்னா சார்விசு, என்ன சட்ட அறிவு, என்னா கோட்பாடு களஞ்சியம் அத்தினியும் விரல் நுனியில் அத்துப்படி. வக்கீலும் ஜட்ஜூம் அவன் வாக்குமூலத்தை வாயைப் பிளந்து கேட்டுகிட்டு இருப்போம். எங்கள் அத்தனை பேரையும் அவன் முழங்காலில் போட்டு கண்ணுக்கு

எண்ணெய் கட்டி விடுவான் பாரு. வத்தல் மிளகாய் இல்லை, பச்சை மிளகாய் போட்டுக்காய்ச்சின எண்ணெய். நாங்கள் அப்புறம் கண்ணையே திறக்க முடியாது, அந்தக் கேசைப் பொறுத்தவரை அந்தக் கேஸ் அந்தக் கேஸனு அந்தந்தக் கேஸா கடவுள் போட்ட தாயமானாலும், அவரே கண்ணைக் கசக்கிட்டுத்தான் பாக்கணும். தாயம் அவருதா குப்புசாமிப் பிள்ளை போட்டதா, அடப் பைத்தியக்காரா நீ ஆடிக்கிட்டேயிரு. தாயம் போட்டுக் கிட்டேயிரு. பந்தயம் அத்தனாச்சியும் என்னதுதான். குரங்கு நியாயம் குப்புசாமிப் பிள்ளை கஷ்குமுஷ்கு கட்டை உடம்பை தாயக்கட்டான் மேலேயே கவிழ்ந்து படுத்துக் கிட்டு குட்டைக் கையால் கட்டான் கட்டானக், அத்தனை வயலையும் அணைச்சுப் போட்ட சொத்தல் லவா இது?

இப்போ, ஸ்பஷ்டமாக அதற்குரிய பாஷையில் புரிகிறது. ஆனால் அப்போ கண் கண்டதை கண்ணால் பார்த்துக் கொண்டு வாய்க்கால் கரையோரம் அது போகும் வழி வளைந்து ஓடுகிறேன்.

திடீரெனப் புளிச்ச கஞ்சியின் வெடிப்பு நாற்றம் வாடைக் காற்றில் வலுக்கிறது. மூக்கைப் பொசுக்கிறது குடலைக் குமட்டுகிறது. திருப்பத்தில் ஜலத்தைம் பாம்பு தீண்டினாற் போல் கறும் பச்சையாய், மலைப்பாம்பு தடுமனுக்கு ஒரு சாயம் நீளமாய்க் கரையிலிருந்து நெளிந்து வந்து கலக்குகிறது. ஓ, இது தானா கலங்கலுக்கு நான் ஓடி ஓடிக் கண்டு பிடித்த காரணம் ?

இத்தனையும் ஏன், எதற்கு, இத்தனை விஸ்தாரமா மனசில் தோலமோ கிறுக்கலோ போட்டுக் கொண்டு வந்தது, ஆ, ஞாபகம் வந்து விட்டது.

ஒரு நாள்—ரொம்ப ரொம்ப நாளுக்கு முன்னால்,
சொல்கிறேனோ என்னவோ
எனக்கு ஆறு வயசு ஏழு வயசு இருக்குமோ என்னவோ

என்னிக்கோ காமுபாட்டி சொன்னாளே என் தாய்
தகப்பன் செத்ததும்
என்னைக் காலும் கையுமா அள்ளிப் போட்டுக்
கொண்டு வந்ததா அப்பவோ என்னவோ
சே! ஒரு தடவை உடம்பு குலுங்கிட கண்ணிலிருந்து
தூசி உதிர்ந்தது.
வாய்க்கால் மூலம் காணப் போய்
அதன் மூலம் என் மூலம் நினைவுவந்து
கலங்கல் இன்னும் தெளியாமல்—
என்மேல் அனுதாபத்தில் மரக்கள் பெருமூச்
செறிகின்றன.
ஊஞ்சலில் படுத்த நிலையிலிருந்தெழ மனமே
யில்லை.
அடுத்தாற் போல் ஒரு பெருங்காற்று சுழன்று
வந்து புழுதியை இறைத்துவிட்டு
அனுமதியற்ற, அவசர விருந்தாளி
கொல்லைப் புறமாக நுழைந்து வாசல் வழி
விழுந்தடித்து ஓடுவது போல
தெற்கே நுழைந்து மேற்கே வெளியேறிற்று.

ஒரு கழுகு, கழுகா பருந்தா? என்ன வித்யாசம் எனக்கென்ன தெரியும்? ஆனால் ஒரு கன்றுக்குட்டியளவு பெரிதிருக்கும். சிறகடித்துக் கொண்டு தோப்பில் எந்த மரத்திலிருந்தோ கிளம்பிற்று. கிளம்பினபோது, வேர்வரை மரம் அதிர்ந்திருக்கும். சோம்பிய வீச்சு. ஆயினும் என்ன கம்பீரம்! உலகத்தையே அந்த உயரத்தினின்று அணைக்கும் போல.

என் நிழலில், நீங்கள் எல்லோரும் என் குஞ்சுகள்.
(அல்லது இரைகள்?)
அவரவர் முறை வரும் போது
வரட்டும்
எனக்கென்ன இப்போ அவசரம்?

எங்கேவோ போகிறது. அதன் கூடு இங்கே இருக்காது. இந்தக் குட்டை மரங்களுக்கா அந்த லாயக்கு? இவை எங்கே அந்த உயரம், அந்த கனம், அந்த எழுச்சி அந்த திருஷ்டி வீச்சு, தனிமையின் லஷியம், தனிமையிலிருந்து அலக்ஷியம், அந்த ஸார்வபௌமம் தாங்கும்?

அதோ மோகாம்பரி மலையை நோக்கித்தான் போய்க் கொண்டிருக்கிறது. அதன் எந்தப்பாதையில் அதன் கூடோ, கூட்டில் அதன் குஞ்சுகளோ?

மோகாம்பரி மலை இதோ எட்டிப் பிடிக்கற மாதிரி தோன்றுகிறது. ஆனால் இங்கிருந்து பத்துக் கல்லுக்குக் குறையாது.

மலைமேல் மோகாம்பரி, வெள்ளியோடு சேர்ந்த அமாவாசையன்று அங்கு ரொம்ப விசேஷம். உள்ளே ஒளிந்து கிடந்ததெல்லாம் சன்னிதானம் அடைந்ததும் தலைகால் தெரியாது ஆடும். கூந்தல்கள், ஓயாத சாமரங்கள் ஆகிவிடும். நரம்புக்கு நரம்பு, அதனதன் தனித்தனி அடையாளங்களுடன் ஆவேச ஆட்டத்தில் துடிக்கும்

பூசாரிகிடையாது. அவரவர் கொணர்ந்த பலியை அவரவரே கொடுத்து, அவரவரே பூசையிட்டுக் கொள்வதுதான் அந்த இடத்து ஐதீகம். பொங்கல் வேகும் தீக்கள் உடலை ஊடுருவிய தடிக் கம்பியில் அப்படியே திருப்பும் இறைச்சி வேகும் தீக்கள் கசக்கிய கண்கள் போல், மலையுச்சியில், சரிவில், அடிவாரத்தில், படிப்படியாக விழித்துக் கொள்ளும். இரவு பூரா தன்னை சூழச்சிந்தும் குருதியைப் பார்த்துக் கொண்டு, பக்தர் அவ்வப் போது தீற்றும் ரத்ததிலகம், நெற்றியில் பளபளக்க, ஒழுக ஆணும் பெண்ணுமாய் கடிவாளம் அறுந்த இச்சைப்படி வெறியாடும் கூத்தின் நடுவே, மோகாம்பரி தேவி தன் மேட்டு விழிகளில் கருணை பொழிய வீற்றிருப்பள்.

எல்லாம் சொல்லக் கேள்விதான்.

மலைமேல் அவள் பேரைச் சொல்லி ஆளே பலி யானாலும் கேள்வியில்லை.

அவள் பலி அவளுக்கு அர்ப்பணம்.

கொலைகள் நடந்திருக்கின்றன.

சொல்லக் கேள்விதான்.

நான் அவ்வளவு தூரம் போனதில்லை.

ஆசைதான்.

ஆனால் காமுப்பாட்டி, காலை ஒடித்து விடுவாளே!

O O O

ஆனால்—

ஆ! ஆட்சேபணையின் தைரியத்தின் முதல்அறிகுறி. அது ஸ்திரமாக நெஞ்சில் ஊன்றிக் கொள்ளச் சில காலம் அதுகடந்து—

ஆனால் காமுப்பாட்டிக்குப் பயந்துபயந்தே செத்துச் செத்துப் போய்க்கொண்டேயிருக்க எத்தனை உசிர் இருக்கு? ஒரு ஆளுக்கு ஒண்ணுதானே! அதுவும் ஒரு வழியா சாக மாட்டேன்கறதே?

இந்தப் பரந்த உலகம், என் உலகம், இவளுடைய நாலு சுவர்களுக்குள்ளேயே தான் அடங்கிப் போயிடுமா? நான் வாழமாட்டேன், உன்னையும் வாழவிட மாட்டேன். இதுதானே இவளுடைய வீம்புலகம். அதில் எதிரும் புதிருமாய் நாங்கள் இருவர்தானே அதன் உயிர்கள்.

ஒரு தடவை கால் முளைத்த பிறகு அதனால் எத்தனை நாள் காத்திருக்கமுடியும் ?

ஒரு மாதம்: இரண்டு மாதம் ஆறு...ஒரு வருஷம்

அடகடவுளே, அன்றுநான் ஓடிப்போய்

இன்றைக்கு மூன்று வருடங்களேஓடிப்போச்சே ?

ஐயோ எனக்கு வயசு பதினேழா

இன்னும் முதல் முகக்ஷவரம் பண்ணிக்கல்லே. அதற்குக் காமுப்பாட்டியை அல்லவா காசு கேக்கணும்! மீசையில் பொன்னரும்பு பளப்பளக்கிறது.

ஒரு சமயம் யுகம், ஒரு சமயம் நிமிஷம், நிமிஷமா மூணுவருடங்கள். இத்தனை நாள் இங்கே என்னவெட்டி முறிச்சிண்டிருந்தேன் ? ஊஞ்சலாடிக் கொண்டிருந்தேனா? ஊசலாடிக்கொண்டிருந்தேனா ?

உதறிக்கொண்டு எழுந்தேன். ஊஞ்சலை, ஊஞ்சல் சங்கிலியை, சங்கிலி உச்சிமேல் சொருகிய புல்லாங் குழலை ஒருமுறை பார்த்தேன். அது ஏதோ மந்திர கீதத்தை என்னுள் ஊதி என்னை ஒரு மாயத்தூக்கத் திலிருந்து எழுப்பிவிட்டதா ? தோப்பை ஒரு முறை சுற்றிக் கண்ணோட்டம். சட்டையுரிப்பு விடுதலை. பழஞ்சட்டை ஒரு விசனம். எப்படியும் பழகியசட்டை.

வீட்டுள் நுழைந்த போது, காமுப்பாட்டி, கூடத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தாள் அவள் நினைப்பு இங்கு இல்லை. வாயில் குஞ்சிரிப்பு-லேசாக மிதப்பலாகிவிட்ட அந்தமன நிலையில், அந்த முகம் அழகிட்டாற் போலக் கூட எனக்குத் தோன்றியது.

நேரே இருட்டறைக்குப் போய், பானையில் திணித்து வைத்திருந்த சொக்காய், துண்டு, வேட்டி என்கிற பேரில் எனக்கு உள்ள ஒன்றிரண்டு பழந்துணிகளை ஒரு பையில் திணித்துக் கொண்டு புறப்பட்டு விட்டேன்.

காமுப் பாட்டி—
ஏனென்று தெரியல்லே
வெறும் காமுவென்று அழைத்துப்பார்த்துக்
கொண்டால்
அவள் வயதுக்குச் சிறிய வளாய்த்வனிக்கிறாள்
வெறும் பாட்டியென்று நினைத்துக் கொண்டாலும்
பொருந்தவில்லை.

அவ்வளவு வயது அவளுக்கு ஆகவில்லை. ஆகாது.

ஆனால் காமுப்பாட்டி யென்றால் தான் முழு நாம மாய், முழுருபம் கிடைக்கிறது

நிமிர்ந்தாள்—

இருவர் கண்களிலும் வினாவுக்குவினா உராய்ந்தது.
''எங்கேடா பயணம், சொல்லிக்காமே?''
''......''

''அட, ஊமையாப் போற அளவுக்குப் பெரிய மனுஷனா எப்போ ஆனே? காலையிலே கூட சரியா இருந்தையே''

''போறேன். போயிண்டேயிருக்கேன்.''

''விளங்கத்தான் சொல்லேன். நீ சொல்லாமலே அறிஞ்சுக்கற அளவுக்கு உன் புத்தி கூர்மை எனக்கு இருக்குமா?''

''சொல்லிண்டு போனால் திரும்பிவரலாம். சொல்லிக் காமல்போனால்—'' உதட்டைப் பிதுக்கிக் கையை விரித்தேன். டயலாக் ப்ரமாதமா அமைஞ்சுட்டாப்போல எனக்கு அப்பவே தோணித்து ஆனால் அப்பவே துடைப் பம் என் மேல் இறங்கத் தலைப்படுவதை உணர்ந்தேன். அத்தக்கையை அப்படியே பிடித்துக் கொண்டு லேசாய் -ரொம்ப லேசாக முறுக்கியதும் விளக்குமாறு கீழே விழுந்த இசைகேடில் கட்டவிழ்ந்து அத்தனைக் குச்சிகளும் புலுபுலு பஞ்சுமிட்டாய் படர்ந்தாற்போல், துக்கத்துக்கு அவிழ்த்துவிட்ட கூந்தல்போல், பாம்பு படம்விரித்து ஆடி அசதியில் படுத்தாற்போல்—

துவண்டது

''விடுடா, கையை விடுடா நாயே!''

எகிறினாள், தவித்தாள். எகிறித் தவித்தாள். பூ! இவ்வளவு தானா? இத்தனை சோப்ளாங்கியா

இருந்துண்டா இவ்வளவு அமுல் நடத்தியிருக்கே பாட்டி! இரண்டுகைகள் என் ஒரு கையில் மாட்டிக் கொண்டு விட்டன. என்தோளில்லை.

"விடுன்னா விடு! உன்னைப் பலி போட்டுடுவேன்!"

"பலியா, பொலியா, பாட்டி?"

"என்னடா பேத்தறே கழுதே?" அவள் உதட்டில் ரத்தம் கசிந்தது.

"பாட்டி, என்னைப் பெற்றவர்கள் போன வழி, என்னையும் போக நீ பேசாமல் விட்டிருக்கலாம்!"

"உன்னை ஆளாக்கினப்பறம் உன்னிடம் இப்படியெல்லாம் கேட்டு வாங்கிக் கட்டிக்கணுமே, அதுக்குதான்!"

"இல்லே பாட்டி, நீ எவ்வளவோ நல்ல பண்டமா ஆகியிருக்கமுடியும், உனக்கு மறுவிவாகம் ஆகியிருந்தால், பாவம் உன்னை இளவயதிலேயே கோரணி பண்ணி, கோலம் பண்ணி—நம் சமுகம் என்ன சமுகமோ!" நெற்றியில் பளாரென்று மறுகையால் அறைந்து கொண்டேன், "முறை வழியில் வாழ்வை நிறைவு காண விடாத சமுகம்."

அவள் கைகளைச் சட்டெனவிட்டேன். என் உணர்ச்சி எனக்குப் பெரிதாகி விட்டது. இனி என்னைத் தொட மாட்டாள் அப்படியே அடித்தாலும் அடித்துவிட்டுப் போகிறாள். பாவம்! ஆனால் இதென்ன என் பேச்சு, திடீரென நாடக பாணியில் போகிறது? எனக்கே உடல் குறுகுறுத்தது.

வாழ்க்கையில். அப்பட்டமான, தோல்வயண்ட சமயங்களை, நேருக்கு நேர் பேச்சுவாயில் சந்திக்க, சமாளிக்க நேர்கையில், இது மாதிரித்தான், நம்மையறியாமலேயே

அவைகளில் பொம்மை புகுந்து கொள்ளுமோ. அல்ல அது போன்ற சத்தம் எழுமோ?

"எமப்படை!"

அவள் இடது மணிக் கட்டை வலது கையால் தேய்த்துக் கொண்டு நின்றாள். என் மேல் வைத்த விழி இமை கொட்டவில்லை, என் வாயிலிருந்து புறப்பாடுகளை அவள் விழிகள் விழுங்கிக் கொண்டிருந்தன.

இவன் என்ன குட்டுக்களை என்னென்ன கண்டுவிட்டான்?

என்ன உடைக்கப் போகிறான்?

— என்கிற மாதிரி.

அழ்- முக்—க்கு வெள்ளைப்புடவை.

சலவை காணாமலே துவைத்துத் துவைத்துச் செங்காவி யேறிப் போய், அழியாத சமையல் கறைகள் படிந்து போன புடவை.

"பாட்டி!"

"நான் உன் பாட்டியில்லை"

"சரி" இந்த மறுப்பைக் கேட்டுக்கொண்டு எனக்கு அலுத்தே போச்சு. "உன் விஷயத்தில் உன் வீட்டார் இத்தனை கொடுமையாக இருந்திருக்க வேண்டாம். உன் புருஷன் செத்தான். செத்தவன் தலைவிதி செத்தவனுக்குப் போட்ட முழுக்கோடு அவனை மறந்துவிட்டு, உன்னை இன்னொரு இடத்தில் கட்டிக் கொடுத்து, நீ நிறைவு கண்டு, நீயும் நிறைஞ்சு, உன் குழந்தைகளை நீ பெற்றெடுத்துக் கொண்டு, அந்த நிலைமையில் நீ திக்கற்ற என்னைத் தூக்கிண்டு வந்திருந்தாலும் நீயும் இப்படி இருப்பாயா? நானும் இப்படி இருப்பேனா?"

என் கழிவிரக்கத்தில் எனக்கு அழுகை வந்துவிட்டது.

''என்னடா நூத்துக் கிழவா எனக்கு ப்ரசங்கம் பண்ண வந்துட்டே?"

''பாட்டி, உன்னுடைய ஆதங்கங்களுக்கு என்னைப் பயன்படுத்திக் கொள்ளத்தானே என்னைத் தேடிப்பிடிச்சுண்டு வந்தே?"

''எச்சக்கலை என்னடா சொல்றே?"

''சின்னப் பிள்ளைகளுக்கு என்ன தெரியப் போறது ன்னு, உன்னைபபோல, வயசு காலத்தில் வேகம் தணியாத பெரியவாள் நினைச்சுண்டுடறேள். சின்னப் பையனுக்குத் தூக்கக் கலக்கம். கனாவென்று கண்டானா நனவென்று கண்டானா, அதானே உங்கள் நினைப்பு? எதுவாயிருந்தாலும், நாக்கில் பல்லைப் போட்டு, நம்மைத் தைரியமா கேட்டுடுவானா என்கிற துணிச்சல் வேறே. ஆனால் என்னைக் கணக்கு வெச்சிண்டு சொல்றேன். குழந்தைகளுக்கு அதுவும், ரொம்பச் சின்னப் போதிலேயே ஞாபகம் படிஞ்சுடறது. அதுவும் என்னைப்போல் ஆரம்பமே ஏறுமாறாப் போயிட்டா கேட்க வேண்டாம். மனம் புழுங்கிப் புழுங்கி, முதலில் திகைப்பு, பிறகு துரோக உணர்வு, அடுத்தடுத்துக் களங்கம், அதன் விளைவாய் ஆத்திரம், கோபம், புத்திக்கேடு எல்லாத்துக்கும் உங்களாலேயே அஸ்திவாரம் நட்டாறது. இதெல்லாம் பொது. என்னைப் பொறுத்தவரை, ஆறுவயசுல என்னை உன் விளையாட்டுப் பொம்மையாகத் தூக்கிண்டு வந்துட்டே. எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு என் எதிரிலேயே நீ பண்ணினதெல்லாம் பளிச்சுனு சொல்லவா? இதுக்கு மேல் வாய் விட்டுச் சொன்னால், ஒருவருக்கொருவர் முகம் பார்க்கவே வெட்கக் கேடு. ஊற்று ஜலத்தில் சாயக்கால் கலந்த மாதிரி பாட்டி, ஆண்டவன் சித்தம் நம்மிருவரை எங்கானும் கொண்டு போய்விடட்டும். ஆனால் இடையில் ஏன் இப்படி

ஞானோதயத்தைக் கொடுத்து வேதனையை அதிகரிக்கிறான்?"

நான் பேசப்பேச அந்த முகத்தில், வரட்டி போல் கணகணப்பு ஏறிக் கொண்டே போயிற்று. காமுப்பாட்டி சந்தன நிறம். அவளைக் கோலம் பண்ணாமல் இருந்தால், பாலியவயதில் அப்பவும் அவளுக்கு ஆபத்துத்தான். ஆனால் அந்த நியாயமே வேறு. அடுப்பில் காய்ந்த வெறும் சட்டி போல அதே காங்கை, அதன் முழுச்செவப்பு அடுத்து வெண்மையை அடைந்தபின் முகம் படிப்படியாக மங்கத் தலைப்பட்டது. அப்படியே குமுங்கி பஸ்மமாய் உதிர்ந்து விடுவாளோ?

என் கண்ணெதிரே ஒரு அதிசயம் நிகழ்ந்து கொண்டிருந்தது. பயங்கர அதிசயம். காமுப்பாட்டி அவளுள் நேர்ந்து கொண்டிருக்கும் கடையலில், காமுவும் பாட்டியுமாகப் பிரிந்து காமு கருகிப் போய் பாட்டி மட்டும் இன்னும் பாட்டியாகிக் கொண்டு தள்ளாடித் தள்ளாடி தள்—ள்—ளா—ஆ—ஆ

முகத்தைப் பொத்திக் கொண்டு ஓடினேன்.

ஓடிக்கொண்டேயிருந்தேன்.

## நான்

என் கால்கள் வாடாவூருக்குத்தான் இழுத்துச் சென்றன. அங்கு தான் விமோசனம் என்று ஏன் எண்ணமோ? வெய்யலில் மஞ்சள் மாறுமுன்னரே ஊர் போய்ச் சேர்ந்து விட்டேன். கதவு மூடியிருந்தது. தட்டினேன். காமுப்பாட்டியை எதிர்த்த பின் எதற்குமே துணிச்சல் தானே வந்து விடுமோ?

இதோ—

நந்தவனங்கள் காட்டிக் கொண்டு

மன மணங்கள் வீசிக் கொண்டு

ஆழிகளின் அதல பாதாளத்தில்

என் இதயவாயில் திறக்கப் போகிறது.

கதவு ஒருக்களித்தாற்போல் திறந்தது. வாயில் துண்டு பீடி. முதல் அதிர்ச்சி. குறைந்தது ஒரு மாத அழுக்குத் தாடி. சடைத்தலை. இடுப்பில் லுங்கி.

''யாரு வேணும் ?'' இந்த பாஷையே வேறு

''கோவில் குருக்களய்யா இல்லை ?''

கதவு இன்னும் கொஞ்சம் கூடத்திறந்தது.

''பட்டர் காலமாகி பத்து மாத மாச்சே! நீ யாரு ?''

இன்னொரு அதிர்ச்சி.

''அப்போ அவர் குடும்பம் ? பெண்ணும் சம்சாரமும் ?'' தயங்கினேன்.

''பொண்ணும் சம்சாரமுமா ? சம்சாரமும் மாமி யாரும்னு சொல்லு. அவர் காலமான கையோடு அவங்களும்—அம்மாவும் பொண்ணும்—ஊரை விட்டுப் போயிட்டாங்களே ? நீ யாரு ?''

இந்த ஆளின் குரலே பிடிக்கல்லே. இவன் குரலும், பேச்சும், மரியாதையில்லாத 'நீ'யும். ஆளையே பிடிக்கல்லே. என்னத்தை எதிர்பார்த்து வந்தேனோ ஏமாந்து போனேன். அதனால் எதுவுமே பிடிக்கவில்லை.

''எங்கே போனாங்க ?''

''என்னைக் கேட்டால் ?''

அடிமேல் அடி. திண்ணையில் உட்கார்ந்துவிட்டேன். எதிரே கோயில் மதிலோரம் யாரோ ஒருத்தி கூடை சாணியைப் பொத்தெனக் கொட்டினாள், வரட்டி அறைய கோவில் மதில்தான் கிடைத்ததாக்கும். சீ—எதுவுமே பிடிக்கல்லே.

''நீ யாரு ?''

''நான் அவங்களுக்குத் தெரிஞ்சவன். வெளியூர் போயிட்டேன். இங்கே ஓட்டல் ஏதாச்சம் உண்டா ?''

(ஏதோ என்னிடம் காசு கொட்டிக் கிடக்கிற மாதிரி)

''ஓட்டல் கிடையாது ?'' பீடியை எறிந்தான் (அது ஏன் இவன் மீசையைச் சுட்டுப் பொசுக்கல்லே ? ''கோவில்லே மதியத்துக்குப் பட்டை சோறு வழங்கறாங்க. இப்பவே சீட்டு வாங்கணும். ஏதோ பாழாப் போவாமே பசிவயித்துக்குப் போவட்டுமேன்னு வீணாப் போவாமே மக்கலரிசி. உள்ளூரான் எவனும் சீந்தமாட்டான். உனக்குப் போட்டியிருக்காது.'' அவன் சிரித்தான். பற்களிடையே இரண்டு பெரிய ஜன்னல்கள், யாராவது அந்தப் பற்களை உடைத்திருந்தால் எனக்குச் சந்தோஷமாயிருந்திருக்கும்.

சோறு பாதி. கல்பாதி. கூடவே சொன்னவன் சொல் அதிகப்படி.

ஆகவே பட்டைசாதம் மொத்தம் ஒண்ணரைப்பங்கில்
மோர்ப்பஞ்சம். உப்பு எக்கச்சக்கம். ஊறுகாய் இல்லை.
தொண்டையில்
சோறு விக்கிற்று. விழுங்கியது, வயிறு வலித்தது.

இன்று கால் போனவழி மாலை எங்கே போய் விடுமோ ? வயிற்று விசாரம் அங்கு தொடரும். வாழ் நாள் முழுவதும் இதே விசாரம் தானா ? இதிலிருந்து விடுதலையே கிடையாதா ?

ஆனால் ஒன்று. எங்கு போனாலும் பின்னால் யார் துரத்துவாரோ, பயம் வேண்டாம். எது நேர்ந்தாலும் இனி எதிரே சந்திப்புத்தான்.

அப்படியும்—இது இப்போது கேட்கும் கேள்வி—அப்படியும் ஏன் ஓடிக் கொண்டேயிருக்கிறோம் ? உட்கார்ந்து கொண்டு, நின்று கொண்டு, படுத்துக் கொண்டு, தூங்கிக் கொண்டு— ஏன் ஓடிக்கொண்டே யிருக்கிறோம் ஏதோ ஒன்றிலிருந்து.

அது என்ன ?

நேர்வது நேரட்டும்.

o o o

கையெழுத்து மறைந்து கொண்டிருக்கும் அந்த அந்தியிருளிலும், மரத்தடியில் நின்றவன் கையில் அரிவாளின் நெய்க்கூர் பளப்பளத்தது.

''தம்பி, மரியாதையா இறங்கிடு. இறங்கிட்டா ஒண்ணும் செய்ய மாட்டேன்.'' இயற்கையிலேயே சற்று கரகரத்த குரல். ''ஏதானும் 'கட்கட்' பண்ணே, காலை முறிச்சுடதல்லாமல் போலீஸ் வரைக்கும் போயிடும் சொல்லிட்டேன். என் மருமவப் பிள்ளைதான் ஏட்டு. அவன் கிட்டப் போயிட்டால், அப்புறம் உன் ஆத்தாகூட உன்னை அடையாளம் கண்டு கொள்ள முடியாது. உன்னைக் கீரை கடைஞ்சுடுவான். ஆமா, சொல் லிட்டேன்.''

தலைக்குச் சற்று எட்ட இளநீர்க் குலையின் பசுமையே ஒரு முழுச்சிரிப்பாய். கிளர்ந்தது. அந்த உயரத்தில் தென்னை மட்டைகள் மேலேயே நடந்து சென்று, தோப்பையே கடந்து தப்பித்துக் கொள்ள லாமா?

இரு மட்டைகளுக்கிடையே தெரிந்த இடைவெளியில் கற்கண்டுக் கட்டி போல் ஒரு நக்ஷத்ரம், அப்பொத்தான் உதித்துக் கேலியில் சிரித்தது.

உன் நினைப்பு நடவாத காரியம். உனக்கே தெரியும். உன் கனத்தில் மட்டை முறிந்ததும் உன்னை லட்டாட்டம் ஏந்திக் கொள்வான்.

''என்ன, மனசைத் திடம் பண்ணிக்கிட்டையா? ராமுழுதும் உனக்கு நான் காவலா? உம் இறங்கு.''

ஒரு இளநியைப் பறிச்சு இவன் தலையிலேயே போட்டால்...?

கீழிருந்து 'டக்'கென்று டார்ச் என்மேல் அடித்தது, என் மனதில் ஓடும் எண்ண நரம்புகளையே அவனுக்குக் காட்டிக் கொடுப்பதுபோல்.

இறங்கத் தலைப்பட்டேன். எங்கேயோ ரயில் ஊதிற்று.

இறங்க இறங்க ஆங்காங்கே இளநீர் முடிச்சுக்கள். சீச்சீ புளிக்கும்.

சுநீல்!

தணல் கட்டியைச் சாமணையால் தூக்கி வைத்தாற் போல்—

—புறங்கையில் ஏதோ?— வலதா இடதா? விழுந்த இடத்தில் தணல் அப்படியே ஒட்டிக் கொண்டது.

"அம்மா!"

"என்ன? என்ன??" கீழிருந்து எதிர் அலறல்.

ஆயிரம் கொடுக்கரிகள் கையுள் மாறி மாறி வீசிக் கொண்டே மேலேறின.

ஆண்டவனே! என் மானம் இதுதான் உன் முடிவா?

ஆனால் வாய் என்ன அலறியதோ? மரத்தில் கைப்பிடி தானே விட்டது. அதள பாதாளத்தில் விழுந்து கொண்டேயிருந்தேன். அதுதான் கடைசி...

o o o

இப்போப் புரிகிறது. எண்ணம் ஆயிரம் எண்ணலாம். என்னென்னவோ, விதவிதமாய், கம்பீரமாய், கவிதையாய், ஆபாஸமாய், கொடுமையாய், கருணையாய், புண்ணியமாய், பாபமாய், சம்பிரதாயமாய், புரட்சியாய்— என்ன வேணுமானாலும் எண்ணிக்கோ. எண்ண 'லெவலில்' அடுக்கடுக்காய், அதன் தேன்கூடுக் கட்டடத்தில் அறைக்கு அறை எதுவுமே பாந்தமாயிருக்கிறது.

சொல்லாக வெளி வரும் போதுதான் சிதைவு, பாணி, பொய்மை எல்லாம் தாமே தொடர்ந்து வந்து விடுகின்றன. ஏன்? பூராவே எண்ணமாய், பேசாமல் அடங்கத் தெரிவதெப்போ? எண்ணத்துக்கும், பேச்சுக்கும், மோனத்துக்கும், சொல்லுக்கும் உறவின் உண்மையான தன்மை தான் என்ன? இது புரிந்துவிட்டால் உலகத்துடன் உறவின் சிக்கலே பிரிந்து விடுமோ என்னவோ?

ஆண்டவனே!
என் மானம்
இதுதான்
உன் முடிவா?

மரத்திலிருந்து விழுகையில் இப்படிச் சொல்லிக் கொண்டு தான் விழுந்தேனா? வலி, கையைச் குடைந்து கொண்டே கழுத்து நரம்பு வழி மூளைக்கு ஏறுகையில் வாய்க்கு இவ்வளவு நீண்ட வசனம் பேசமுடிந்ததா? அதற்கு நேரம் இருந்ததா? யாரிடம் கேட்டுச் சரி பார்த்துக் கொள்ள முடியும்? அப்படியே பேசியிருந் தாலும், ஆபாஸமாய், செயற்கையாயில்லை? வெட்க கரம்...

ஆனால் சத்யமா, எழுந்த எண்ணம் என்னவோ இது தான்.

("சத்யம் வைக்காதேடா!
தாய்தகப்பனுக்கு ஆவாதுடா!"
"அவங்க எங்கே?"
"இல்லாட்டாலும் ஆகாதடா! விட்டேன்னு சொல்லு."
"விட்டேன்")

ஆண்டவனே என்மானம் இது தான் உன் முடிவா? ஒரு மைல் நீளம், இல்லை இரண்டு மைல். அதுவுமில்லை. எத்தனை எத்தனையோ மைல் கற்கள் திரும்பித்திரும்பி

முகம்தனித்தனிக்காட்டி கனவேகத்தில் எதிர் கடந்து கொண்டிருக்கின்றன, உள்ளங்கைச் சிவப்பில், வெள்ளையில், சுழன்று சுழன்று...

மையிருள் அன்று. சிக்கிரிகலந்த காப்பிப்பொடியிருள். அதில் நீல நெருப்புக் கோடுகளில், வித வித, புதுப்புது ஜியோமிதிக் கோடுகள், கோணங்கள், graph அலைகள்; மிதப்புக்கள், சின்னங்கள், சிற்பங்கள், பிரம்மாண்டமான பல்லிகள், பாம்புகள், பச்சோந்திகள், முதலைகள், புழுக்கள், வண்டுகள், சரித்திரத்துக்கும் பூர்வ விலங்குகள் ராஷதங்கள், ஒரே சமயத்தில் பதினெண் சூரியன்கள், அதே வானில் கூடவே இருபத்திஏழு சந்திரோதயங்கள், அஸிங்கமான கொப்புளங்கள், பொருக்குகள், சீழ்கள், ரசகுண்டுகள், அடுக்கடுக் காய்த் தலைமேலேயே சரியும் நக்ஷத்ரப் பந்தல்கள், இசை கேடல்கள், திசைபின்னங்கள்.

ஓயாமல்கக்கியவண்ணம்
கண்ணைத்திறக்க வொட்டவில்லை.
மூடிய கண்ணுள் விழி அமரவிடவில்லை.
அத்தனையும் வலிஜன்னியில்
தேய்ந்து தீர்ந்த
புலன் நேர்த்திகளின்
ஜ்வர கணிதங்கள்
—கணங்கள்
மண்டையிடி. உள்ளே மதில்கள் தகர்ந்தன.
தகு திமி திமிதக்க தக்க தின
தகு தளாங்கு தருகு தளாங்கு
திருகு வலியின் த்ருகு தாளங்கள்
மெருகு வலியின் ப்ரு கடை முறுக்குகள்.
காடை கவுதாரி
கூகை கோட்டான்
தாரை தப்பட்டை

பாடை சேமங்சலம்
''ஊ-ஊ'' நாயின் ஊளை.
மலர் மாலை.
ஊது வத்தி
ஓலம் ஒப்பாரி
சந்தனம் ஸாமகானம்
கோலம் செம்மண்
ஆரத்தி வேத கோஷம்
கொட்டு மேளம்
''ஊம் ஊம்'' கெட்டிமேளம்
அடையாளமாக சாஸ்திரிகள் ஆள் காட்டி விரலை ஆட்டுகிறார்
''கொட்டு! கொட்டு!''
''பிப் பீ பீபீ''
பச்சைத் தென்னங் கீற்றுப் பந்தலடியில்
எனக்கும் காமுப் பாட்டிக்கும் கலியாணம்
'கௌரி கலியாணம் வைபோ-ஓ ஓ—கமே'
காமுப் பாட்டிக்குத் தலையில் கட்டு முடி
சொந்தமா, சவுரியா ?
ஐய, காமுப் பாட்டி என்கையைப் பிடித்துக்கொண்டு நெளியும் நாணம் கோணலில்
நான் முகம் குனிகிறேன்.

என் மோவாயை அவள் நிமிர்த்துகிறாள்.
மோகாம்பரி அம்மனே நேரில்வந்து எங்களை ஆசீர்வதிக்கிறாள்.
''காரியம் எல்லாம் சுபமா முடிஞ்சபின் எனக்கு ரெண்டு துள்ளுக் குட்டி விடுங்கள்!''
ஹா !
தேவியின்கருணை!

-ஸ்விட்ச் OFF

o o o

நினைவின் மீட்சியில் நீலத்தின் மாட்சி
வானத்தின் சாயங்கள், வர்ணங்கள், வர்ணக் கழுவல்கள்
எத்தனை உண்டோ அத்தனையும் ஆடி ஓய்ந்தபின்
ஒடுங்கலுக்கு எல்லாவற்றுக்கும் தஞ்சம்.
மூலமும் முடிவும் நிராமயத்தின் நிரந்தரம் நீலமயம்தான்.
புவன மாளிகைக்கு நீலபவனம்.
பெயர் எவ்வளவு நன்கு பொருந்தும்!

o o o

கற்கண்டு ஜீராவில் தோய்ந்தெழுந்தாற்போன்று, நாயனம் தேன் சொட்டிக் கொண்டு ஆலாபனையில் (என்ன ராகம் எனக்கு அந்த சமயம் இனம் தெரியாது) செவி வழி புகுந்து, கம்பீரமாய், சந்துஷ்டியாய், நிஷ்கவலையாய், பறவை வட்டம் இரண்டு பெரிதாய் உள்ளே அடித்து, என் கண் இமைகளுள், என் விடிவின் வர்ணம் மெத்து மெத்தென செந்திட்டுத்தான் என் சுய நினைவில் முதல் ஒத்தடம்.

தீட்டிய சித்திரத்துக்கு வைப்பது போன்று கண் திறந்ததும்— என் விழிப்பும் அப்படித்தான் இருந்தது— ஜன்னலுக்கு புறம்பில் வானீலம் துல்லியமாய் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. நான் ஜன்னலோரம் கயிற்றுக் கட்டிலில் கிடக்கிறேன்.

நாயனம் கனவு மயக்கமில்லை. நிஜம்தான். எங்கோ மாடியிலிருந்து வருகிறது. என்மேல்— என்மேல் என்ன, அறையின் மேலேயே, தானே தோரணம் கட்டித் தொங்கி அதில் தொங்கித் தாவி விளையாடுகிறது.

—''ஆ தம்பீ!''

திரும்புகிறேன். யார் இது? கேட்ட குரல். முகம் சற்றே சீன/பர்மா வார்ப்பு. ஆனால் அழகு முகம்தான். ஒரு தினுசான மஞ்சள் சிவப்பு. லேசாய்க் கரகரத்த குரல். மணலைத் தேய்த்தாற்போல்.

''என்ன தம்பி, மூணு நாளா எங்களைப் பம்பரம் ஆட்டிட்டியே!''

''என்ன ஆச்சு?'' ஆனால் என் குரல் எனக்கே கேட்கவில்லை. எழுந்திருக்க முயன்றேன். அந்த ஆள் ஓடிவந்து என்னைக் கையமர்த்தினான்.

''அவசரமில்லே. செந்தாமரை! செந்தா—ஊ—!''

அழைத்தது ஒரு பெயர்தான். ஆனால் திடுதிடுமெனப் பல கால்கள் ஓடிவரும் சப்தம். நிமிஷமாய் நண்டு சுண்டு வண்டு குண்டு சுக்கங்காய்கள் ஒரு சின்னக் கும்பல் கட்டிலைச் சூழ்ந்து கொண்டது. சிரித்த முகங்கள். வியப்பு முகங்கள். வெட்கப்படும் முகங்கள். பார்க்க எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது. பார்க்கப் பார்க்க ஏதேதோ புண்கள் ஆற்றும் முகங்கள்.

அப்போது நாத சுரம், மீன் கொத்தி போல், 'பஹு ஷோக்'காய் ஒரு முறை, பனைமர உயரத்தினின்று தடாலென்று ஒரே வீச்சில் விழுந்து முங்கியெழும்பி மறுபடியும் உச்சி உயரத்துக்கு அதே 'தம்'மில் எழும்பும் வழியில் ஒரு 'அந்தர்' அடித்தது.

மேலே அண்ணாந்து காட்டி, கையை வினாவில் அசைத்தேன்.

''ஓ அதுவா கோமுதி பழகறா. வாத்யம் வீட்டில் இருக்கு. என் பாட்டன் வரைத் தலைமுறை வாத்யம். ஆனால் அதில் அப்புறம் யாருக்கும் நாட்டம் இல்லை. கோமுக்கு வேண்டாத்த வேலை. கோமு மூத்தவ. இதுங்க எல்லாம்— 'அத்தனை பேரையும் அணைத்த ஒரு கை வீச்சு—' இந்த செல்வத்துக்கு ஆண்டவன் குறை வெக்கல்லே. விளையும் பயிர் முளையிலே. படிப்பு வரல்லே. வாத்யமும் வாசிக்காதுங்க. இத்தனைக்கும் நாங்க நாயன ஜாதிதான். நான் வாசிக்கிறேனா? நான் பாங்கிலே ப்யூன் வேலை. மிச்ச நேரத்துக்கு விவசாயம்.

இவர்கள் எப்படியோ? எப்படியானும் இருக்கட்டும். அவள் மூச்சு நாயன ஜாதிதான்.

என் நெஞ்சைப் படித்தாற் போன்று

''மகளிடம்தான் பரம்பரை வித்தை பரிமளிக்குது. பிரயோசனம்? அதன் திமிர் அடக்கி அவ என்ன செய்யப் போறா? மேடை ஏறப் போறாளா? ஆனால் அப்படியும் இப்ப நடக்கு. சினிமாவிலே பாக்கோம். கூந்தல் அவிழ்ந்து கிட்டு பெண்தவில். போன வருடம் பிரம்மோற்சவத்துக்குப் பொம்பளே செட் வரவழைச்சாஹ: கோமு நெனப்பு அப்படியெல்லாம் இருக்கும்னு தோணல்லே. கட்டிக் கொடுத்து எட்டு வருடமாச்சு. இன்னும் வவுத்துலே பூச்சி வெக்கல்லே. அதுவும்தான் ஆண்டவன் சித்தம். மருமவப் பிள்ளை போலீசுலே ஏட்டு. டூட்டி மேலே போயிருக்காப்பிலே. நான் என்னவோ கதை பேசிட்டேயிருக்கேன். ஆள் அகப்பட்டாப் போதும். பேச்சுக்கு முத்தாய்ப்பு மறந்திடுவேன். உன் பேரென்னவோ? முத்தய்யா என்பாங்க என்னை. செந்தாமரை, அம்பிக்குத் தோசை கொண்டு வா. அம்பிக்கு ஊட்டி விடு. கையைத் தூக்க முடியுதோ இல்லியோ?''

''கைக்கு என்ன?'' இருகைகளையும் பார்த்துக்கொண்டேன். என்குரலை முதலாக இங்கு கேட்கிறேன். கிணற்றிலிருந்து வருகிறது.

''என்னவா? தேள், அம்பி, தென்னைமரத்தேள், கருந்தேள்!'' ஆள் காலின்னே நெனைச்சுப்புட்டேன். என்ன வாந்தி என்னாபித்தம், வாயிலே நுரைதள்ளது பினாத்தினா விலாசம் கிடைக்கும் ஆள் விடலாம்னு பார்த்தா, அதுலே எப்படி கெட்டியாயிருந்தே, எனக்கு இன்னும் மலைப்பாயிருக்கு நேரேயே கேக்கலாமின்னா, நெனைப்பிலே கட்டையாக் கிடக்கே. வம்பை விலைக்கி வாங்கறதுக்கு முத்தையா — இப்படி எனக்கு ஒரு பேர் உண்டு. அதை யேன் கேக்கறே போ! அது தேவையில்லே.

நண்டுத் தெறுக்கால்லே பாதிக்கு மேலே 'டார்ச்சு'லே பட்டாட்டம் மின்னுது. அத்தாலேயே அடிச்சேனோ உனக்கு விஷத்திலே பாதி அப்பவே இறங்கியிருக்கணும். செந்தாமரை ஆள்கொண்டாருக்கு வேண்டிக்கிட்டா. மஞ்சாத் துணியிலே முடிஞ்சு வெச்சிருக்கா. 'அவள் கவலை வீடைக் கிரயமாக்கி இன்னும் ஆறுமாதம் ஆவல்லே. உடனே ஆள் காவி இன்னா வீடுமறுபடியும் விலை போவாதே! சரி இந்தப் பேச்சை இப்படியே விட்டுடுவோம். என் பெண்சாதி என்னை முழியாலேயே வெட்டறா உனக்குத் தெரியுதா? அம்பியும் ஒரு தாய்க்கு மவன்தானே, நீ இப்படி நாக்கிலே நரம்பு இல்லாமே பேசினா பெத்த வங்க காதுலே விழுந்திருச்சின்னா எப்படியிருக்கும்னு கண்ணாலேயே சாடறா. புத்தி,புத்தி! அதானே ராவேளை யிலே மரமேறக் கூடாதுன்னு சாத்திரமே வெச்சிருக்காங்க பசின்னா பேசாமே தெருவுல போய்ப் பிச்சை எடுத்துட லாம். பிச்சை கேக்க வெக்கமா இருக்கு? ஒரு வீட்டிலே புகுந்து திருடு.''

''திருடத்தானே ஏறினேன்!''

எங்கள் இருவர் சிரிப்பும் கலந்தது.

''ஓஹோ, நான் இப்ப சொல்றதைத்தான் சேஞ்சியாக் கும்! இடம்தான் மாறிப்போச்சு...இதோ தோசை வந் துட்டுது!''

தோசையா அது? மெத்து மெத்தெனக் குழல்விட்டுக் கொண்டு வட்டவட்ட இதழ்கள். அதற்குப் பதச் சூட்டில் குழம்பாய்ச் சட்டினி. தேங்காயில்லை. குழம்பு இல்லை. சட் டினிதான். ருசி என்பது இது தானா? சட்னியில் தோய்த் துப் பூவைவிண்டு வாயில் போடுகிறாள். ஒரு ஒரு விள்ள லுக்கும் என்வாயுடன் அவள்வாயும், அவள் அறியாது தானும் லேசாய்த் திறந்துக் குவிகிறது.

அம்மா என்பது இதுதானா?

என் விழிகள் வழிகின்றன. கன்னங்கள் குளிர்கின்றன. அதுகண்டு அவள்முகம் சஞ்சலிக்கின்றது. உதடுகள் நடுங்குகின்றன.

''என்ன அம்பி!— ஏய் ஆள் உண்றதை என்ன வேடிக்கை?"

போட்ட அதட்டலில் அத்தனை குருவிகளும் 'கீச்! கீச்!!' — கத்திக்கொண்டு கொக்கரித்துக் கொண்டு, சிரித்துக் கொண்டு சிட்டாய்ப் பறந்தன.

நாலுபேரோடு பிறப்பதென்பது இதுதானா?

குடும்ப குதூகலம் என்பது இதுதானா?

எல்லாமே எனக்குப் புதிதாயிருக்கிறது. ஆனால் புதிதுமில்லை. அத்தனையும் ரத்தத்தில் உறங்கிக் கொண்டு அவ்வப்போது ஏக்கங்களாய் வெளிப்பட்டுக் கொண்டு, ஏக்கங்களாகவே மீண்டும் ரத்தத்திலேயே மறைந்துபோய், எங்கோ, ரத்தத்தில் ஜீரா சுரக்குமிடத்தில் ஊறி ஊறி, இப்போ வேளைக்கு ருசிகளாய் எழுகின்றன.

அப்போ சுவைமட்டும் கண்டேன்.

இப்போ அதன் பாஷை, பாடம், பெயர் புரிந்து கொள்கிறேன்—அவ்வளவுதான் .அவ்வளவுதானா ?

மடையா, எல்லாத்தையும் புரிந்து கொண்டுவிட்டாயா?

மரத்தை மறைத்தது மாமதயானை.

மரத்தில் மறைந்தது மாமதயானை.

அப்போது, கையில் நாயன்த்துடன் கோமு நுழைந்தாள்

# கோமு

அந்த நாட்களை என்னென்று சொல்ல ? என் வாழ்நாளில் ஒரு இடை வேளை என்பேன். அதற்குள்ளேயா

இடை வேளை? ஆமாம், எனக்கு அப்போ இடைவேளை தேவைதான்.

சினிமாவில் இண்டர்வெல் போல் அல்ல. ''வெற்றிலை பாக்கு பீடி சிகரெட்!'' மட்டச் சரக்கை ஒண்ணுக்கு நாலு விலை கொடுத்து வாங்கி, இருட்டில் மென்றுதின்று, இரைச்சலை மகிழ்ச்சியாய் செயற்கையில் கொண்டாடுகிறார்களே, அது அன்று!

அடுத்த நிமிடம் நலுங்கி விடுமோ எனக் கலங்கும் நளினம் மிளிரும் கனவு நாட்களுமில்லை. பட்டுப்போன்ற ஸன்னத்துடன் அதன் உறுதியும் இழைந்த அந்நாட்களைக் கனவு நாட்கள் என்று எப்படிக் கூறுவது?

சந்தோஷ நாட்களா? அப்படித் திட்டவட்டமாக, அவுட்டு வாணக் களிப்பு நாட்களுமில்லை. என் வாழ்க்கையின் வஸந்தமா? ஊஹூம்; அதுவும் ஒத்து வரவில்லை. ஆனால் ஏதோ நீடித்த தருணத்தில் மந்த ஹாஸ வேளையென்று சொல்வேன்.

(அனுபவம் அன்று : பாஷை இன்று)

சுபாவத்தில் நானே கொஞ்சம் வார்த்தை மோகம் கொண்டவன் என்று இப்போது தெரிகிறது. போகப் போகச் சொற்சுவை காணக்காண, அதன் பித்தும் கூடியே வருகிறது, கூடவே வருகிறது.

மாடி அறையில் ரத்னக் கம்பளத்தின் மீது கோமு சப்பளம் கொட்டி உட்கார்ந்திருக்கிறாள். அவளுக்கெதிரே நாயனமும் அதன் குப்பிமேல் உட்கார்ந்திருக்கிறது. அதற்கொரு அமுத்தல் இருக்கிறது.

''அம்பீ, இதை லேசுன்னு நினைக்காதே. இதுக்கே கபடு, சூது ரொம்ப உண்டு. வித்தை தெரிஞ்சவஹ ஏற்கெனவே வாசித்த வாத்யமாச்சுதே! விசயம் தெரிஞ்சவங்களுக்குத்தான் படியும். திருட்டு மாடு. எல்லாருக்கும் கறக்காது. என்னென்ன தன்னுள்ளே அடக்கி வெச்சிருக்கு தெரியுமா?''

''ஏன் கோமு நீ நல்லாத்தானே வாசிக்கறே''

''ஆமா, நீ தான் மெச்சிக்கணும்''

''அதென்னவோ, உன் வாசிப்புக்குத்தான் நான் ஜன்னி தெளிஞ்சேன். முதன்முதலா நினைப்பிலே முளிச்சுண்டேன்.''

அவள் கண்களில் சட்டென்று ஒரு மின்னல் ஓடிற்று.

''ஓ அன்னிக்கா? அன்னிக்கு மத்தநாட்களுக்கு ஒரு மாதிரி தான். உனக்காக விட்டுக் கொடுத்ததோ என்னவோ ?''

இருவரும் சிரித்தோம்.

இல்லே அம்பீ, என்னால் முடிஞ்ச அளவுக்கு இதை நான் தாஜா பண்ணுறேன். சீட்டுக்கட்டி இந்தக்கம்பளத்தைப் பிடிச்சேன். மூணாவது சீட்டே விழுந்திடுச்சி. சரி வாத்தியத்தின் ராசி தான்னு நெனச்சுக்கிட்டேன். இதோ இதுலே ஒரு டாலர் தொங்குது பாத்தியா. அரைச்சவரன். அதுலே மிச்சம் பிடிச்சு, இதுலே மிச்சம் பிடிச்சு-தாலிகட்டினாத்தான் பொம்மனாட்டி, வேலைக்குப் போனாத்தான் புருஷன். வேஷங்கட்டினாத்தான் வாத்தியம்-என்ன சொல்லுறே?''

சர்வ சம்மதத்தில் தலையை பலமாக ஆட்டினேன். அவள் சொல்வதெல்லாம் இல்லாதவன் தானே நான்.

''தாத்தா இருந்தவரை அவரிடம் கத்துக்கிட்டேன். அவர் போனப்புறம் குருவிடம் பாடம் கேக்கல்லே! பெட்டைக்கு யார் சொல்லிக் கொடுப்பா?''

''தோ பார் கோமு. நீ என்னதான் தாளம் போடு. இது ஆண் பிள்ளை வாத்தியம். குழலை நான் ஊதறப்போ கழுத்து எப்பிடி புடைக்குது பாத்தியா? கழுத்து நரம்பைக் கட்டித் தேர் இளுக்கலாம், உங்களால் முடியுமா? நீ ஏன் மீசைக்கு ஆசைப்படறே ?''

(அவர் அப்படிச் சொல்லியிருந்தால், இவள் விஷயத்தில் அது சரியல்ல.

உன்னிப்பாப் பார்த்தால், கோமுவின் மேல் உதட்டில்
லேசான அரும்பு தெரியும்.
போகப்போக எப்படியோ ? இப்போ முகத்தைக்
கெடுக்கல்லே.

''மஞ்சள் தேச்சுக் குளின்னு கழுதையா கத்தறேன். இதை மறுக்கி மறுதரம் சொன்னால், மாற்றாந்தாய்க் கொடுமை!"

ஆமா சித்திக் கென்ன வேலை ? இப்பிடித்தான் ஏதாச்சும் புலம்பிட்டே யிருப்பா!'']

''வேளையிலே ஒரு புள்ளையைப் பெத்துக்க. திருப்பதி உண்டிலே போட்டாப்பிலே அவனை இதுக்கே விட்டுடு. அவன் மூலம் உன் ஆசையைத் தீர்த்துக்க."ன்னு தாத்தா எத்தினியோ சொல்லிப் பாத்தாச்சு. அவர் இருக்கப்பவே எனக்குக் கலியாணம ஆயிட்டுது. அவர் சொன்ன வேளை யொதலுக்கே இன்னும் வழியில்லே. வருடம் எட்டு ஆவுது. இந்தக்குழலோடு மல்லாடி மல்லாடி நானும் பாதி ஆண் புள்ளே ஆயிட்டேன்"

கோமுவுக்கு ஆண்பாவனைகள் தான், எப்பவும் 'சப்பளா'சனம் வாசிக்கையில், குழலைத் தூங்கிப்பிடிச்சு அதற்கு ஏற்றபடி நிமிர்ந்து விறைத்து விட்டமுதுகு. குரல் அந்த நாள் ஸ்டார் Garbo மாதிரி ஆண் குரல் ஒரு மார்னிங் ஷோ பார்த்தேன். குரலில் விந்துக்கள். சொரியும், Garbo Taeks—The World (stems-விளம்பரம் MGM)

கோமு அழகு இல்லை. ஆனால் அவளிடம் ஒரு தோரணை அழகு. அங்க அசைவுகள் ஒரு இசைவழகு— ஓ இதற்கு மேல் எனக்குச் சொல்லத் தெரிய வில்லை... இப்போதைக்கு எனக்கு அவள் வாயிலிருந்து வெளிப்படும் விஷயம்தான் பெரிசு.

"ஆசைவிட மாட்டேன்குதே அம்பீ! மடியில் மான் குட்டியாட்டம் வாத்யம் எப்போ என்னிடம் மனம் விட்டுப் பேசும் ? ஆசைகாட்டுது. ஆனால் ஓடி ஒளியுது. என்ன செய்வேன் ? என்ன செய்வேன் ?"

தொடையில் சீற்றத்தில் அறைந்து கொள்கிறாள். சாமி வந்தாற்போல், உடல் லேசாக மிதப்பலாடுகிறது

இப்படியும் ஒரு தவிப்பு உண்டா ? ஆணாய்ப் பேசுகிறாளா ? பெண்ணாய்ப் பேசுகிறாளா ? என்னோடு பேசுகிறாளா? தன்னோடு பேசுகிறாளா? பாலேஇல்லாமல் வெறும் குரலாய்ப் பேசுகிறாளா ? ஏதோ ஒரு விதபயமாயிருக்கிறது. இவளைக் கண்டு அல்ல. இவள் படும் உண்மையைக் கண்டு. இவள் தவிப்பு ஒரு பெரிய அலையாகத்திரண்டு என் தொண்டையுள் மோதி, உடைந்து, நுரை சொரிநது, அகன்று விரிந்து மீள்கையில் என்னையும் தன்னோடு இழுக்கிறாற் போல்...

"இது எனக்கு வசப்படணும்னு ஒரு பொழுது இருந்து பார்த்தாச்சு. முழுக்கோழி தின்னு பார்த்தாச்சு— ஆமா உனக்காத்தான் இப்போ வீட்டிலே சைவ உணவு நடமாடுது, இன்னும் ஒண்ணு பாக்கி, தண்ணி!" கண்களில் மீண்டும் அந்த மின் வெட்டு. "அதையும் ஒருநாள் போட்டுப் பார்த்துட வேண்டியதுதான். எப்படியேனும் இது எனக்கு வசப்படணும்."

வேடிக்கையாகச் சொல்கிறாளா ? வேணும்னு சொல்றாளா ?

எங்கள் இருவருக்குமிடையே
இருவரையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு
குழல் 'அமுத்தலா' ரத்னகம்பளத்தில் வீற்றிருக்கிறது

o o o

"அம்பீ ! இதுதான் ரீதி கௌளை
—இதுதான் சாமா
—இதுதான் கேதார கௌளம்
இது எல்லாமே உயிரை உருக்கிடும்.

அம்பீ ! எனக்கு ஒரு ஆசை. ரீதி கௌளையில் 'ஜனனீ நினுவினா' வாசிச்சுக்கிட்டே அப்படியே உசிர் 'பொட்டு'னு போயிடணும். கொடுப்பனை வேணும் !

—இதுதான் ஸ்ரீராகம்.

நாணிக் கோணி, தளுக்கி மினுக்கி இடுப்பிலே குடத்தோடு.

உடம்பை ஒடிச்சு ஒடிச்சு ஸ்திரீயின் முழு லக்ஷணத்துடன் சொகுஸா நடை போட்டுக்கிட்டு வருதுபார். 'நாமகுஸும' ஐயோ !" உடம்பை சிலிர்த்துக் கொண்டாள். "நான் பொம்புளை தான். ஆனால் எனக்கு இப்ப இந்தப் பொம்புளை மேலே ஆசை பீறிடுது!"

இவள் இப்படி என்னிடம் லஜ்ஜை கெட்டுப் பேசுகிறாளே என்று தோன்றவில்லை.

இவள் ஏது சொன்னாலும் பாந்தமாயிருக்கிறது.
இவள் பேசும் விஷயத்தின் உக்கிரம்.

ஜன்னலுக்கு வெளியில் ஒரு வெண்மேகம் இவள் பேசுவதை ஒட்டுக் கேட்டுத் தங்கி, பின் நகர்கின்றது. மரங்கள் இலைகளில் அசைவற்று நிற்கின்றன.

நேரத்தையே நிறுத்தி விடுவமோ ?
கோமு நீ என் குரு.
கற்கண்டில் குழைத்து ஊட்டுகிறாய்.
உன்னிடம் கற்றுக் கொண்டது இதுதான்.

ராகங்கள், ராகலக்ஷணங்கள் மட்டுமல்ல. ஸங்கீதத்தின் சாக்கில் ஏதோ ஒரு மண்டலத்தின் வாசலைத் திறந்து விட்டாய். பூமிக்கும் ஆகாயத்துக்கும் நீ கட்டிவிட்ட சூத்திரக்கயிறில் ஏறி சொர்க்கத்துள் எட்டிப்பார்க்கிறேன். ஸங்கீதம், கலை, ஸௌந்தர்யம், ஏதேதோ அலைகள், ஆனந்தங்கள்— இவைகளோடு இழைவுகள்—பேரெல்லாம் அப்போத்தெரியாது. அப்போ புரிந்தது சொர்க்கம் ஒன்று தான்.

சொர்க்கம் என்பது இதுதானா ?

o o o

தென்னந்தோப்பில், கவலையேற்றத்தின் அருகே, கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருக்கிறேன். கட்டிலடியில் முத்தையா, குந்திட்ட வண்ணம் இளநீரைச் சீவிக் கொண்டிருக்கிறான்.

இது மூணாவது இளநி. முகத்திலும் மாரிலும் வழிய இரண்டு இளநி— இரண்டு சொம்பு குடித்தாகி விட்டது. வயிறு வெடித்து விடும்போல் திணர்றது.

''முத்தய்யா போதும் ஆளை விடும் இனிமே முடியல்லே.''

எனக்கு உயிர் கொடுத்தவனை இப்படிப் பேசறேனா, இது நியாயமாவுமா? ஆனால் முத்தையாவே சொல்லி யாச்சு. ''இத பார் அம்பீ, இந்த வாங்கோ போங்கோ எல்லாம் எனக்கு வேணாம். அந்த நாளிலிருந்தே எனக்குப் பழக்கமில்லே அதுக்கு நான் பொறந்தவனுமில்லே. வாய் நிறைஞ்சு பேரைச் சொல்லி அழை. எனக்கு அதுவே சரி. அதுதான் சரி. அப்பத்தான் எனக்கே பதில் குரல் கொடுக்கத் தோணும். இல்லியோ யாரையோ சொல்றாங்கன்னு என் ஜோலியைப் பார்த்திட்டு இருப்பேன், காது கேளாமல்.''

''முடியாதா? ஏன் முடியாது? ரெண்டு தரம் சிறுநீர் கழிச்சா ஓடிப் போவுது அத்தினியும். நீ இப்போ இளநி நிறைய குடிக்கணும். அது தேளா? நெருப்பா? ஒருநாள் விட்டு ஒருநாள் எண்ணெய் தேச்சுத் தலை முழுவணும். ஸ்நானம் பண்ணிறியா இல்லியா? நான் வேலை மேலே போயிடறேன். செந்தாமரை கவனிக்குதா இல்லியா? அவளைச் சொல்லிக் குத்தமில்லே; பசங்களோடே போராடவே சரியாயிருக்குது. எப்பவும் மாரிலே ஒண்ணு, இடுப்புலே ஒண்ணு தொங்குது. அவளாலே மரத்துக்கு மரம் தாவ முடியுமா? ஹா ஹ் ஹா ஹா!''

அணில்கள் மிரள்கின்றன.

இடுப்பு வரை வெறும் உடம்பு. அப்புறம் வங்கி வழங்கிய காக்கி யூனிபாரம் நிஜார், அவன் புஜங்களில், மார்பில், முதுகில், வேர்கள், கரணைகள், உருண்டைகள், முடிச்சுக்கள். அவன் அங்க அசைவுகளில் ஒன்றையொன்று ஓடிப் பிடித்து விளையாடுகின்றன.

''செந்தாமரைக்கு என்மேலே சலிப்புத்தான். நான் என்ன செய்ய? மூத்தா போய் ஒரு மாதத்துக்குள்ளேயே இவளைப் பேசி முடிச்சு கட்டி, வீட்டுக்கும் இட்டாந்துட்டேன். கோமுவுக்கு என்மேலே ஒரே வெறுப்பு. நீயே கண்டிருப்பே. கோமுவும் நானும் சரியாப் பேசிக்கற தில்லே. நான் என்ன செய்ய? கோமுவின் அம்மா என்னிக்குமே சீக்காளி. கடைசி ஒரு வருடம் கட்டிலும் பாயுமாக் கிடந்தா. வீடே நாறிப் போச்சு. பார்க்காத வைத்தியமில்லே. பண்ணாத பூசையில்லே. இது எப்படியும் போற கேசுன்னு எப்பவோ தெரிஞ்சு போச்சு. ஆனா கடைசி மூச்சு பிரியற வரைக்கும் செலவுக்கு அஞ்சினேனா? கோமுவையே கேளு. அவள் ஆத்தாள் மேலே அவளுக்கு ஒண்ணும் பாசம் ஒழுகிடல்லே. ஆத்தா போனப்போ, போனதே மேலாச்சு. கோமுவுக்கே தெரியும். ஆனால் என்மேல் உள் பகை இன்னமும் கொண்டாடிட்டிருக்கா. செந்தாமரை ஏழை வீட்டுப் பொண்ணு இவ மாதிரியா, இவளுக்கென்ன? கொணாந்து போட அப்பனும், ஆக்கிப் போட சித்தியும் இல்லாட்டி, இவ, மாடியிலே குந்திகிட்டு, வேலையத்த வேலை, துருத்தி ஊதிக்கிட்டு இருக்க முடியுமா? கோமு ஒரு துரும்பை நகர்த்த மாட்டா. ஒருநாள் அரைநாள் கோமு அடுப்பண்டை போக நேர்ந்தால், அவள் ஆக்கினது வாயில் வெகக ஆவாது. அன்னிக்கு நான் முஸ்தாபா கஃபேலே பார்த்துக்குவேன். சித்தாத்தா ஆக்கிப் போட்டது ஆவும். சித்தாத்தா ஆவாது. இதென்னய்யா நியாயம்?—கூ!"

அப்போது குரங்கு ஒன்று இளநீரைப் பறித்துவிட்டது. முத்தையா அதன்மேல் கல்லை விட்டு எறிந்தான். கொஞ்ச நேரம் 'கர்ர்ர் புர்ர்ர்'— ஆனால் கையில் கனத்துடன் தன் மேல் கல்லெறியையும் சமாளித்துக் கொண்டு அதனால் இன்னொரு மரத்துக்குத் தாவமுடியவில்லை. இளநீரைக் கீழே போட்டுவிட்டு, வைது கொண்டே ஓடிவிட்டது. "குரங்கு பறிச்ச இளநி பிரமாதமாக்கும்." அதையும் சீவ ஆரம்பித்தான்.

"ஆமாய்யா செந்தாமரை கொளந்தை பெக்கறா. என் கொளந்தையைப் பெக்கறா. கோமுவா காப்பாத்தப் போறா? செந்தாமரையே என் மேல் கஸ்டப்படறா.'' 'உனக்கு மிருகம் தேவலை. அதுக்காவது வேலை உண்டு' ன்னு ஒருதரம் சொல்லியேவிட்டா போயேன். எனக்கே என்னைப் பார்த்தா ஒரொரு சமயம் 'சீன்னு' இருக்கு. ஆனால் நான் என்ன செய்ய' அம்பீ, உன்வயசிலே, நான் என் வயசிலே உன்னோடு பேசற பேச்சா இது? ஆனால் ஏனோ உன்னோடு சொல்லணும்னு தோணுது. அம்பீ—" மாரைக் குத்திக் கொண்டு, "இந்த உடம்பை அடக்கி வெக்க முடியல்லியே! எவ்வளவோ உழைக்கிறேன். டூட்டி மேலே தினம் இருபது கல்லேனும் நடக்கறேன். வெய்யிலிலே திரியறேன். நான் என்ன பியூன்தானே! படுக்கையிலே கட்டை விழுந்த உடனே அசதியிலே தூங்கிடாதா? மறக்க வழிதினம் தேடறேன். இத்தினிக்கும் நான் பெத்ததே அவளைச்சுத்தி படுக்கையிலே காவல் கிடக்கு. அப்பிடியும் —" சிரித்துக் கொண்டே கையை விரித்தான். அவன்முகம் ஆரஞ்சு தட்டுகிறது. முத்தையா, அந்தக் கண் இடுக்கு, வாய்ச் செதுக்கலில் கொஞ்சம் சைனாக் களை. ஆனால் அழகன்.

"அம்பீ, என் குடும்பத்தை எனக்கப்புறம் கோமுவிடம் நம்பிவிட்டுட்டுப் போக முடியுமா என்ன? ரெண்டு இன்ஷூரன்ஸ் பாலிசி இருவது ரூபாய் கொடுத்து செந்தாமரைக்கு எழுதிட்டேன். கோமு என் பொருளுக்கு ஆசைப்

படுவான்னு சொல்லமாட்டேன். பைத்யம் அதுக்கு. அத்தக் கட்டிக்கிட்டு அளுதுண்டிருந்தால் போதும். ஆனால் ஏட்டய்யா என் மருமவப் பிள்ளை இருக்காறே. அவருக்கு எப்பவும் என் சொதது மேலே ஒரு கண்ணுதான்...அவர் ஒண்ணும் செய்துக்க முடியாது. அவருக்கே தெரியும். ஆனால் பீராயறவரைக்கும் பீராயலாம்! களத்து மேட்டுலே போர் அடிச்ச நெல்லுக்கு என்னிக்குமே ஒழுங்கா கணக்குக் கிடைக்காது, கண்ணெதிரிலேயே மடியிலே கட்டிக்குவா அதுமாதிரி அடிச்ச போருக்கடியிலேயே நேக்கா. ரூபாய்க்கு இடுக்கிலேயே ஒளிஞ்சிட்டுருக்கும். மணியை அளந்தால் மரக்காலுக்குக் குறையாது. அதுமாதிரி."

முத்தையாவுக்குப் பேச்சு களைகட்டிப் போச்சு. பேச்சு தடையில்லாமல் தன் பிராசத்தைப் போட்டுக் கொண்டு தண்டவாளத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது.

குரங்கு பறித்த இளநீர் நிசமாவே படா 'டக்கர் அந்தப்பத வழுக்கையில், அந்தப் படு தித்திப்பை அதனால் எப்படி அடையாளம் கண்டுபிடிக்கமுடிகிறதோ?

''ஏட்டு லேசுப்பட்ட ஆளுன்னு நெனைக்காதே. துட்டுலே கெட்டி. யாரோ வேத்து சம்மந்தமில்லே. என் அக்கா மவன்தான். தாயுமில்லே தகப்பனுமில்லே. நான் தான் டிபார்ட் மென்டிலே கொண்டு வெச்சேன். அப்போ அங்கே சொன்னதைக் கேக்கறவங்க இருந்தாங்க. சொல்லுக்கு மதிப்பு இருந்தது. பொண்ணையும் கட்டிக் கொடுத்தேன் கட்டிக் கொடுத்த நாளிலிருந்து இங்கேதான் ரெண்டு பேரும் இருக்காங்க. ஆனால் நான் ஒண்ணும் வீட்டோடு மாப்பிளையா தேடல்லே. சாப்பாட்டுக்கு ஏட்டு ஒண்ணும் கொடுத்ததில்லை. நானும் கேக்கறதில்லே,கொடுக்காட்டிப் போவுது. முத்தையா ஏமாளி. சாப்பிட்டுப் போறாங்க. ஆண்டவன் புண்யத்திலே ஒண்ணும் குறைவில்லே.

அம்பீ, சொத்துப்பத்தி விபரம் ஒண்ணு சொல்லுறேன் கேளு, சேர்க்க ஒருத்தன் அழிக்க ஒருத்தன்.

அதான். கதையே அதான் ஓடி ஓடி, ஊதிஊதி முப்பாட்டன் சம்பாரிச்சதை தாத்தனும் ஆத்தனும் குந்தி ஊதி, குடிச்சு அழிச்சாங்க. அவங்க செத்தாங்க, குழல் தான் மிச்சம். வரவங்க நாலுபேர், நம் செலவில் தோசையும் காப்பியும் தின்னுட்டு, குதப்பிய தாம்பூலத்தைக் குந்திய இடத்திலேயே துப்பிட்டு ''பேஷ்! பேஷ்!!'' ரெண்டுதரம் தலையை ஆட்டிட்டா, பைத்தியங்க, ராப் பூரா ஊதி ரத்தத்தைக் கக்கிட்டிருக்கும் பின் தலைமுறை. இப்படி ஏதுக்குன்னு கேட்டால், மூஞ்சியிலேயே அடி. எதிர் பேசமுடியுமா? என் பாட்டன் தன் பிள்ளைகள் கைக்கொள்ளி வாங்கல்லே. தண்ணி. அதுலே அப்பனுக்கும் பிள்ளைக்கும் போட்டி. புள்ளே உயிரைக்கொடுத்துப் போட்டியிலே ஜெலிச்சுட்டான். பேச்சென்னவோ, ஸங்கீத உலகத்தின் வால் நக்ஷத்ரம். அவதாரம். அவுட்வாணம் உச்சத்துலே வெடிச்சுட்டு' தாம்! வீட்டுலே உள்ளவங்களுக்கல்ல தெரியும் விடிகாலையில் வாந்தியிலேயே உடம்பு ஊறிக்கிட்டுக் கிடந்தது.

அடுத்தவருசம் தாத்தா. அவருக்கப்புறம் குடும்பம் சளைப்புத்தான். குடியிலே குடும்பம் முழுவிப் போனது தான். குழலின் முதல் கணக்கு. பெரிய 'காவு' மாஸ்டர். ஒடிச்சு அடுப்பில் வெச்சாத்தான் விடியும்னு ஒரொரு சமயம் தோணுது. ஆனால் அதுக்கும் மனசு வல்லியே! அதுக்குத் துணிச்சல் வேணும். தன் மிச்சம் ஆவ ஆவ, தலைமுறைக்குத்தலைமுறை அதுக்கு உசிர் கூடுது. நாம் ஆண்ட பொருள் பிறகு நம்மை ஆளுது. இப்போ அதன் கிட்டே கோமு மாட்டிட்டிருக்கா''

முட்டுவான விளிம்பை உதைத்துக் கொண்டு கிழக்கில் ஒரு புள்ளி கிளம்பி, பெரிதாகிக் கொண்டே, கிட்டக் கிட்ட வருகிறது. கம்பீரமாய் மூன்றாம் வகுப்பு, புவியியல் மூன்றாம் பாடத்தில் பூமி உருண்டையென்று நிரூபிக்கும் கப்பல் போல் அந்த உயரத்திலும் அந்தச் சிறகுகளின் வீச்சு அழுத்துகிறது அது பறக்கும் உயரத்தின்

உச்சாணியில், அதன் நிழல் என் மார்பைக் கடக்கும் உணர்வில், என்னத்தை நினைவு மூட்ட இச்சமயம் பார்த்து வருகிறது?

காலமும் கோளவடிவம் என்றா?
மோகாம்பரி அதனிடம் என்ன சேதி விடுத்திருக்கிறாள்?

மதுரை மீனாக்ஷி அம்மன் கையில் கிளி.
மோகாம்பரி அம்மன் தோளில்—

—''அம்பீ, எந்தப் பழக்கத்திலும் நான் கெட்டிழிஞ்சு போயிடல்லே. கையில் இந்தக் கத்தி என்னைச் சுத்தி மரத்தின் பச்சையை வெச்சிட்டு சொல்றேன். வெறும் வெத்திலையே எனக்கு மாரடைக்கும். இந்தக் கிணத்தைத் தோண்டின உடல் உழைப்பில் எனக்கும் சமபங்கு உண்டு. இந்த ரெண்டுகையாலும் மண்ணைப்பறிச்சு அள்ளிப் போட்டிருக்கேன். இங்கே ஒவ்வொரு தென்னையையும் நட்டது இந்தக் கைதான். ரா இல்லை பகல் இல்லை இந்தக் கமலையில் நான் இரைச்சிருக்கும் தண்ணி ஒரு ஏரிகொள்ளும். ஒண்ணும் வீணாவல்லே. மரமாகி, திருப்பிக் கொடுக்குது; கொடுத்துக்கிட்டேயிருக்குது.

என்ன கொடுத்தால் என்ன? இப்பவே ஆறுகுளு வானாச்சு. ஆண்டவன் சித்தம் இன்னும் எத்தினியோ? அரசாங்கம் அதுக்குள் என்னை ஜெயிலில் பொட்டுடுதோ என்னவோ? ''மூணுக்குமேலே யிருந்தால் சிறை அஞ்சுக்கு ஆயுள் தண்டனை'' கண்ணைச்சிமிட்டினான். ''சட்டம் வந்துட்டா, நான் என்ன ஆவேன்? செந்தாமரை மூனுமாதமா முளுவல்லே, கண்ணைச் சிமிட்டுகிறான். ''மரம் வெச்சவன் தண்ணி ஊத்துவான் அவன்விட்ட வழி'ன்னு நான் சும்மாயில்லை. ஆனால் பத்துப் பேருக்கும் பங்கானால் பாற்கடலும் பத்தாதே! இப்போ ஒரு பெருமாள் படுத்திட்டிருக்கார் உலகத்தைக் காப்பாத்தறார். பத்துப் பெருமாளுங்களைப் படுக்க விட்டுப்பாரு, பாலும் கொள்ளுமா, இடமும் கொள்ளுமா?

கடல் ஒண்ணு அப்புறம் பாலே இருக்குமா ? பாலை விடு, தண்ணிக்கு வழியிருக்குமா ? அப்புறம் கடலே சேறுதான். அந்த சேத்துலேயும் என் செந்தாமரை பூத்துக்கிட்டிருக்கும். வருடா வருடம் !—''

சிரிப்பு அந்தக் காலை வேளையில் காலை வெளியில், காலை வெய்யிலின் ரஸவாதத்தில் கவலையே சிரிப்பாக மாறிய சிரிப்பு.

கோமு குழலை ஆளத்தவங்கிடக்கிறாள்.
முத்தையா உடலை அடக்கத் தவிக்கிறான்.
ஒவ்வொருவனுக்கும் ஒரு பிறவி வேட்கை.
வேட்கையை வெட்கத்தால் மூடி.
மூட்டத்துக்குப் பொருள் தரும் சிரிப்பு.
எனது வேட்கை என்ன ?

உடலை முறித்துக் கொண்டு எழுந்து நிற்கிறான். அனுமாரின் விசுவரூபம்.

—''தலைக்கு மேலே வேலை நிக்கிது. நான் இங்கே பேசிக்கிட்டேயிருக்கேன். இன்னிக்குப் பசு ஒண்ணு விலை பேசணும். அதுவும் செனைப்பட்டிருக்கு. அவளோடே சேர்ந்துகன்னு போடற மாதிரி. வீட்டுக்கு மகாலச்சுமி யாட்டம் ஒண்ணு இருந்தா நல்லதில்லே ? செந்தாமரைக்கு ஆசை. அவளுக்கு இந்தத் தடவை தாய்ப்பால் சிரமந்தான். போனதடவை இரட்டைப் பிறப்பு ரெண்டு பக்கமும் தொங்கி, உசிரையே குடிச்சுட்டுது ! அம்பீ, மாலைவரை நீ இங்கேயே இரு. உனக்கும் உடலுக்குச் சுகமாச்சு. எனக்கு தோப்புக்குக் காவலாச்சு. மதியம் சாப்பாடு அனுப்பச் சொல்லுறேன் ! அம்பீ, நீ தான் என் பேச்சைப் பொறுமையா, கவனம் கொடுத்துக் கேக்கறே. அத்தாலே நானும் பேசிட்டிருக்கேன். முத்தய்யா வுக்கு ஆபீசுலே ஒரு பேர் ''முத்தையா அகராதி ஆனால் அதுலே முற்றுப்புள்ளி கிடையாது. அச்சுக்கோர்க்க மறந்துட்டான் ஆண்டவன் ! ஒ— ஹ்ஹோ !!''

காற்றுக்குச் சலங்கை கட்டினாற்போல் அவனுக்குப் பின்னரும் சிரிப்பு ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அறுந்த மணிச்சரம்.

o o o

ஆஸ்பத்திரி.

வெள்ளைப்பீங்கன் சதுரங்கள் பதித்த சுவர்கள்.

விசாலமான அறையில் ஒரே ஒரு கட்டில்.

Nun. விழிகளில் மருந்தைக் கட்டி, இமைகளை மெத்தென மூடுகிறாள்.

''உஷ்—please, don't''

ஆஸ்பத்திரியுமல்ல. நன்னுமல்ல. கண்ணுக்கு மருந்து மல்ல. அத்தனையும் ஆசை.

தென்னஞ்சோலையில் கயிற்றுக் கட்டிலில் படுத்தபடி. கண்ணின் உள் குளுகுளுவில் தோன்றும் தென்றலின் ஆவி சொரூபம். போனவாரம் நான் இருந்த நிலவரமென்ன? இப்போ நான் காணும் சொகுசு என்ன? சோத்துக்கு லாட்டரி அடிச்சவனுக்கு வேளா வேளைக்குத் தீனி, திணிப்பு, உபசரணை, சங்கீதம் வானத்தில் நீந்தும் சம்பாஷணை, தென்னந்தோப்பில் கயிற்றுக்கட்டில்— கைகட்டிச் சேவகம்.

சொர்க்கம் என்பது இது தானா?

இது கனவு இல்லை. தெரிகிறது. ஆனால் இத்தனை-யும் கனவுக்குத்தான் பாந்தமான அம்சங்கள். ஆனால் இவை நனவாயிருப்பின் பொருந்தவில்லை. இதில் நீதிகூட இல்லை என்று தோன்றுகிறது.

இப்படியே நீளோட்டி நடக்குமா?

நடக்கலாமா?

No! No!! No!!!

இது எதனுடைய ஸ்வரம்? என்னுடைய ஸ்வரமா, ஒவ்வொரு ஜீவனும் ஒரு ஸ்வரமானால்?—

தெய்வத்துக்குத் தனி உருக்கிடையாது. ஆளாக வந்துதான் தருமாம்.

எனக்குத் தேளாய் வந்து தந்தாயா?

உன் விஷக்கடியில் எனக்கு அமுதமாக வேளை வந்தது

என் விதியை நீ வாங்கிக் கொண்டதில், தேளே, உன் விதியே முடிந்தது.

அப்போ என் விதி எத்தனை கொடுமையானது!

இமைகளை ஒற்றிய மெத்தில் கண்திறக்க மன மில்லை. முடியவில்லை என்றுகூடச் சொல்லலாமா?

கண் திறந்திருந்தபோது கண் வாங்கிக் கொண்ட உருவங்கள், தோற்றங்கள் எல்லாம் இப்போது நினைவோடு கலவையில், சட்டை மாறி, சட்டம் மாறி, ஏதேதோ அர்த்தங்களாய் அனர்த்தங்களாய், புஷ்டி களாய்ப் பிதுங்குகின்றன.

நான் நானில்லை

நீ நீயில்லை.

யாருமே யாருமில்லை

உருவங்கள் எல்லாம்
உருவகங்கள்

பாஷை பரத்தின் பரஸ்பரம் என்றால்
எனக்கு இப்படித் தோன்றியதெல்லாம்
இந்தப் பாஷையுமல்ல.
அவ்வப்போது ஏதேதோ
சிமிழ்கள் திறந்து அவைகளும் அடைபட்டுக் கிடந்த
மணம் வெளிப்பட்டதும்
சிமிழ்கள், குப்பிகள்,
சிப்பிகள் மூடிக் கொள் கின்றன.

மனங்கள் ஒன்றோடொன்று கலந்து
தனியாயும் நின்று,
விதவித உணர்வுகளில் உள்ளத்தில்
வெள்ளம் பெருக்கெடுக்கின்றது.
விழி திறவாதே!
விசுவ கர்ப்பத்தில் நீ ஒரு சிசு.
உனக்கு முலை தர, அந்தந்த சமயத்தின் தாய் வந்து போகிறாள்.
தோள் தர உனக்கு எத்தனை உடன் பிறந்தோர்கள்!

தென்னங்குலைகள் அண்ணன்மார்களின் புஜங்கள், மார், புஜப் புடைப்புக்கள்

கூந்தல்களை அள்ளிச் செருகிய கொண்டை முடிச்சுக்கள்.

மனைவிகள், காதலிகள், அக்கா, தங்கை, பாட்டி, பெண்ணின் உறவுகள்.

எத்தனை எத்தனை அத்தனையும் பரத்துக்குப் பரஸ்பரத்தின் அர்ச்சனை.

அதையே எடுத்து அதுக்கே அர்ச்சனை.

கம்பங்களில் மின்சாரக் கம்பிகள் அதிர்ந்து பாடுகின்றன 'ஸிங்ங் -sing sing!'

தென்னை மட்டைகளில் சலசலப்பு.

கட்டில் கால்களைச்சுற்றி, அணில்கள், ஓடிப்பிடித்து விளையாடுகின்றன.

எங்கோ வயலில் பம்புசெட் ஓடுகிறது. 'ஜக் ஜக் ஜக் ஜக்...' குழாயில் தண்ணீரின் படபடப்பு. யாரோ அங்கு துணி துவைக்கிறார்கள்.

நான் கண் திறக்கவில்லை. ஆனால் என்மேல் வெண் மேகங்களின் வெளிச்சம் தவழ்கின்றது.

வயல் பரப்பை அளவெடுப்பது போலும் ரயில் தொடர் வளைந்து ஓடுகிறது.

'புக் புக் புக் புக் புக்'—மில்

தோப்பின் எந்த மூலையிலோ, முற்றின மட்டை 'உஸ்' என்ற அசதி மூச்சுடன் சுழன்று

பொத்தென்று விழுகின்றது. அம்மாடி! விடுதலை!

எத்தனை நாள் இந்த மூதுடன் ஒட்டி ஊசலாடி யிருப்பது?

"ஓஹோய்! அஹாய்!!" வயலுக்கு வயல், கூப்பாடி லேயே சங்கேத பாஷையில் விவசாயியின் சம்பாஷணை. எங்கோ ஒரு சோக மலர் பூத்துக் கொண்டிருக்கிறது. அல்லேல் காற்று வாக்கில் ஏது இந்தக் கவிதா மணம்?

"அம்மே!" தொண்டை விம்முகிறது.

எனக்குப்பாக்கியமில்லை.

பசுவினால் தான் இத்தனை உருக்கமாக, முதுகின் நடுநரம்பிலிருந்து நார் உரித்து, நாபிமலரைத் தொடுத்து.

ஸ்பஷ்டமாய்

ப்ராண ஸ்வரத்தை உச்சரிக்க முடியும்.

தோல் பொசுங்கலின் லேசு நெடி. இங்கிருந்து இரண்டு பர்லாங்கு தூரத்தில் தோல் பதனிடு தொழிற் சாலையாம்.

"கொக்கரக் கொக் கொக் கொக்கோ!" வேளை தப்பாத ஜாமக்கோழி.

சிறகையடித்துக் கொண்டு, கழுத்துச் செதிள்களைச் சிலிர்த்துக் கொண்டு ஆண்மையின் சிராக்கொண்டை.

செக்கச் செவேல் சேவல்.

சாலையில் சுமை தாங்கி அருகே களியாந்துறைக்குப் பத்துமணி பஸ் 'பூம் பூம்' இதோ கிளம்பிவிட்டது. gear

மாறுகிறது. தும்முகிறது, அடித் தொண்டையைக் கனைக்கிறது.

எங்கோ gate எண்ணெய் போடாமல் 'கீச் கீச் கி றீ — ஈ ஈ — ச் !"

கழுத்து மணிகளின் ஓயாத கிண்கிணி; நேற்றிரவு வயலில் மடக்கிய ஆட்டு மந்தை திரும்புகிறது.

வயல் நடுவில் தகரக் கொட்டகை மேல் கல்லெறி சத்தம். ஆடு மேய்க்கும் பையனின் சேஷ்டை. வேகும் பிணத்துக்குத் தூக்கிப் போடுகிறதோ என்னவோ ? சாகும் சமயத்தில் கூட பிராணன் போகிறது.

மோகாம்பரி மலையில் குமுறல்—

இடியா ?

கிணறு தோண்டப்பாறை வெடியா ?

காடை கவுதாரியைத் துப்பாக்கிச் சுடலா ?

'கீச் கீச்' (எனுமாம்) பச்சைக்கிளி

"ரொய்ஞ்ஞ்ஞ்"

பொன்வண்டு

இல்லை கருவண்டு

இல்லை குளவி

இல்லை தேனீ

இல்லை க்ரஹங்கள் அந்தரத்தில் ஒன்றையொன்று இழுத்துப் பிடிக்கும் விண் விண் கிண் கிண். ஓயாத தந்தி தொம் தோம் திந்தி திம்திம். ஓயாத புவன கீதம்.

இல்லை. பூமியை ஆகாயத்துடன் பிணைக்கும் காற்றின் நாண் ஒலி

இல்லை. தனிமையின் ஏக்கத்வனி.

இல்லை— இல்லை இல்லை இல்லை என்று மறுப்பின் உயிரோடு சட்டையுரிப்பு.

'கீச் கீச் கீச் கீச் கீச்—' குரங்கின் அலறல் ஏன்?

என்னால் கண்ணைத் திறக்கமுடியவில்லை.

இல்லை—நான் கழுகு

இல்லை- என்னதான் முயன்றாலும் என்னால் கண்ணைத் திறக்க தெரியவில்லை. பிசின் போட்டுக் குரூரமாய் இமைகள் ஒட்டுக்கொண்டிருக்கின்றன. நான் என்னிலிருந்து கழன்று கொண்டிருக்கிறேன். கழன்று கொண்டேயிருக்கிறேன். கழன்று கொள்கிறேன். கட்டிலில் கண்மூடி, புன்முறுவலுடன் மல்லாந்து கிடக்கும் என்னை வியப்புடன் பார்க்கிறேன். அப்பா என்ன லேசு! என்ன சுகம்! என்ன இதவு! என்ன மிதப்பு!

நான் அந்தர்யாமி

அகண்ட மோனத்தின் திறவுகோல்

இயற்கையின் இயக்கத்தின் ஜீவன்.

—அம்பீ! அம்பீ! அம்பீ!!!

நான் என்னுள் அவசரமாகப் புகுந்து கொள்கிறேன்

"என்ன அம்பீ! அப்படிக் கட்டையாக் கிடந்தே? எட்டுத்தடவை கூப்பிடறேன் அசைக்கிறேன் அசையக் கூட இல்லை. என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன்!"

எழுந்து உட்கார்ந்தேன். பூட்டுக்குப்பூட்டு வலி முறித்தது

—இவள் யார்? ஏன் வந்தாள்?
உடல் இவ்வளவு பெரிய சுமையா?
மீண்டபின் முன்னைவிடக் கனக்கிறது.
சற்றுமுன் எப்படி விடுதலைச் சிறகாயிருந்தேன்!
ஏன் வந்தாள் இவள்?

கோமு உட்கார்ந்து சாப்பாடு மூட்டையை அவிழ்க்கிறாள்.

மீண்டும் பசி அகோரப் பசி.

உப்பும் சோறும் தின்று தின்று மீண்டும் சுரணை கெட்ட இந்த வாழ்வுடன் தொடர்பு.

மறதியின் வெற்றியே வாழ்க்கையின் நியதி.

புல் திட்டுமேல் இலையைப் போட்டுப் பரிமாறு கிறாள்.

முருங்கைக்காய்த் தானையும் முழுக் கத்தரிக்கா யையும் மேலே தங்கவிட்டு, புழுங்கலரிசியின் புலுபுலுவுள் காரக்குழம்பு இறங்குகிறது. காரத்தின் ஜெவஜெவ. உருளைக்கிழங்குப் பொரியலில் அங்கங்கே வெங்காயமும் பூண்டும் முழிமுழி முழிக்கின்றது. கிழங்குத் துண்டு ஒன்று ஒன்றும் வாய்கொள்ளா அவ்வளவு பெரிது.

இவர்கள் வீட்டுச் சமையலே காரம்தான், கண் தளும்பும் காரம். வாய்க்கு உணக்கை. வயிற்றுக்கு ஆகணும். எப்பவும் ஒரு ஐட்டம்தான். அதுவும் குழம்பு.

ரஸம் இவர்களுக்குச் செய்ய வரவில்லை.

எனக்காக மோர். ஒரு கொட்டாங்கச்சி.

தயிர் என்கிறாள்.

வாங்கினது பின் எப்படி இருக்கும்?

''எங்களுக்கு மோர் ஒத்துக்காது. உடனே ஜளிப்பு. மோர்ப் பேச்சை எடுத்தாலே மூக்கு ஙெண ஙெண, தெரியல்லே?''

எனக்குச் சாப்பாடு ஆனதும் கோமு, மூட்டையைக் கட்டிவிட்டு முன்றானையை விரித்துத் தரையில் உடம்பை நீட்டி விட்டாள். ஆள் உயரம். சித்திரை பிடிக்கல்லே ஆனால் என்ன வெய்யில்!

நிமிஷத்தில் உரத்த மூச்சு— குறட்டை அல்ல— துருத்திபோல் அவளிடமிருந்து கிளம்புகிறது. வாய் லேசாய்த் திறந்துகொண்டது. அழுந்த வாரிய கூந்தலில் இரண்டொரு பிரி கலைந்து அலைகிறது. வாத்யத்தை ஊதி ஊதி தாடைகள் உரங்கண்டு பெண் ம்ருதுவை இழந்து விட்டன.

கட்டிலில் படுத்துப் பார்க்கிறேன். தூக்கம் வரவில்லை.

கூட்டைவிட்டுப் பிரிந்த அனுபவததை மீண்டும் தூண்டப் பார்க்கிறேன்.

ஈதெல்லாம் வரணும் என்றால் வந்து விடுமா?

உன் கைச் சொடுக்குக்குக் காத்திருக்குமா என்ன? எனக்குத் தெரியவில்லையா?

ஆனாலும் கண்ட ருசி...

ஆனால் வருவதற்கு ஏதோ வழி இருக்கிறது எனக்கே தெரிகிறது. தேட வேண்டும், முறையோடு தேட வேண்டும்... ஏதோ அகஸ்மாத்தில் ஒரு தருணம் உடல், மனம், ஆவி மூன்றும் லோகோஸ்ருதியுடன் இணைந்து இரண்டறக் கலந்ததன் விளைவு அனுபவம் நேர்ந்து ருசி காட்டி விட்டுப் போயும் விட்டது. அது வந்த வேலையே அதுவந்த வேளைதான். திரும்பி அதேபோல் வாவாவென்று வேளையைச் சீண்ட முடியுமோ? சீண்டச் சீண்டச் சொரசொரப்புத்தான். வழி தெரிந்து வழியோடு வழிபட்டு, வழி அடையணும். அதுவரை, அதுவரை—

எழுந்து உட்காருகிறேன்.

கிணற்றில் ஜலம் உறங்குகிறது.

ஏற்றக்காலில், ஏற்றக்கால் கட்டியபடி உறங்குகிறது.

வெய்யிலில் வயற் பச்சை துளிர்த்து நிற்கிறது.

ஆகாய நீலம் அசைவற்று நிற்கிறது.

எங்கும் உறக்கம்; நிசப்தம்.

அமைதி.

அன்னையிடம் பால் குடிக்கையிலேயே, உறக்கம் வந்து, குழந்தை தலை ஒரு பக்கமாகச் சாய்வதுபோல் கடைவாயில் வழியும் பால் மயக்கம்.

என் மேலும் அது மயக்கம், திருட்டுத்தனமாக என் மேல் இறங்கி, மார்மேல் தவழ்ந்து முகத்துக்கு ஏறி விரிந்து

அதன் அடித்த பஞ்சு என் மேல் படர்ந்து என்னைத் தன்னுள் சுருட்டிக்கொள்கிறது. இதுதான் அன்னை மயக்கமோ? அம்மா தோன்றுகிறாள்.

அம்மாவை நான் கடைசியாகப் பார்த்த நினைவில் அவள் உடுத்தியிருந்த அதே பச்சைப் புடவையில் அவளைப் பார்க்கிறேன்.

அப்பாவும் அம்மாவும் என்னைப் பிரிந்த போது, என்ன காரியமாக இருவரும் சேர்ந்துபோனார்கள். எனக்கு இதுவரை நிச்சயமாகத் தெரியாது. எல்லாம் வயிற்றுப் பிழைப்பின் கொடுமையால் தான் இருக்கும். கலியாணமோ அபகாரியமோ என்னையும் கூட அழைத்தும் செல்லும் இடமாவோ சமயமாவோ இல்லையோ என்னவோ ? இரவே திரும்பிவரும் திட்டத் தில்தான் போயிருக்கிறார்கள் காமுப்பாட்டி சமயத் துக்கு ஒரு கதை வரலாறு, தன் சௌகரியத்துக்குச் சொல் கிறாள். இருவருக்கும் ஒன்றாக உயிர் பிரிந்த விவரம் இன்னும் மூடுசூளைதான். நானும் அவர்களுடன் போயி ருந்தால் எனக்குத் தெரிய வழியில்லை-என் விதியும் அவர் களுடன் சேர்ந்திருக்குமே! இதுலே என் ஆயுசுபூரா எனக்குத் தீராக்கொடுமை. இத்தனை அநிச்சயமான இந்த வாழ்வு எதற்கய்யா வேண்டும்? எல்லாம் ஆட்டிவைப்ப வன் வேடிக்கைக்குத்தானே!

அம்மா என்னை விட்டுட்டு ஏன் போனே?

நான் அழவில்லை. என்சதை அழுகிறது என்னை விட்டுவிட்டுப் போனவள்மேல் என் மனம் இறுகுகிறது. இத்தனை கிட்ட நிற்கிறாள். ஆனால் எட்டித் தொட முடியவில்லையே.

"எங்கே குழந்தை போயிட்டோம்? அம்பீ, போக்கிடம் சொல்லேன். உன்னையே சுத்திண்டு உன் மேலேயே கண்ணாய்த் தானிருக்கோம்."

"அம்மா, அப்பா எங்கே?"

"என் பக்கத்தில் தான் நிக்கறார் தெரியல்லே? உன்னைப்பார்த்துச் சிரிக்கிறாரே, தெரியல்லே?"

"தெரியல்லியே அம்மா!"

"பரவாயில்லே. இப்போ நான் தெரிஞ்சேனா, பின்னாலே தானே தெரிவார்."

"நீ தெய்வமான பின்னும் எனக்குச் சொல்லும் ஆறுதல் இதுதானா?"

"நான் தெய்வம் என்று யார் சொன்னது? கண்ணுக்குத் தெரிஞ்சவரை, மனசுக்கும் புரிஞ்சவரை இதயம் திறந்தவரை, எல்லாமே அவ்வளவு தானே! போகப்போக உலகம் நகர்றது. அத்தோடு நாம் நகர்றோம். அந்த ரீதியில் எல்லாமே போகப் போகத்தானே! அப்பப்போ அப்பப்போ போகப் போக...

மந்திரம் மூச்சாய் அடங்கிப்போகிறது.

என் கண்கள் மலர்கின்றன.

என்னோடு எனைச் சூழ்ந்த காக்ஷியறும் உலகமும் மலர்கிறது.

கோமு முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாள்.

"என்ன அம்பி இன்னிக்கு நீ ஒரு மாதிரியாத்தான் இருக்கே? தூக்கத்திலே அழுவறே! கன்னத்தில் கண்ணீர் காஞ்சிருக்கு."

"ஏதேனும் கனவு கண்டிருப்பேன்" கண்ணைக் கசக்கிக்கொண்டேன். கன்னங்களை இழுத்துத் தேய்த்துக் கொள்கிறேன். என்னின்று ஒரு தேம்பல் எழுகிறது, குழியில் புதைத்த குழந்தை புரள்வது போல. கோமு கண்டு கொள்ளவில்லை. கோமு நீ சமர்த்து.

வெய்யில் சாய்ந்து விட்டது.

''கோமு, நீ வாத்தியத்தைக் கொண்டு வந்திருக்கலாம். இந்த சமயத்துக்குப் பைரவியோ முகாரியோ மூச்சுப் பிடிச்சு வில் வளைச்சேன்னா, இந்தப் பரந்தவெளிக்கு அப்படியே அள்ளிக்கும்.''

''வெக்கக் கேடு! வீட்டுள்ளே வாசிக்கவே ஆயிரம் வில்லங்கம். இங்கே கல்லடி தான். முதல் கல்லெறி அப்பன், அடுத்தது புருசன், அப்புறம் நீ—''

''நான் என்ன சேஞ்சேன்?''

''உலகமே அதுதானேப்பா! காரணமே தேவை யில்லே. அவங்க எறிஞ்சாஹ என் கணக்குக்கு நானும் ஒண்ணு! வீட்டிலே யாருக்கும் என்னைப் பிடிக்காது. எனக்கும் யாரையும் பிடிக்காது. அதுவும் நான் குழலைப் பிடிச்சதிலிருந்து குரோதம் முத்திப் போச்சு. ஆமா. பெரிய வார்த்தைதான். இருந்துட்டுப் போவுது. என் புருசன் என் வாசிப்புக்கு எப்படி வேவறான் தெரியு மில்லே?''

எனக்கெப்படித் தெரியும்? அந்த ஆள் கண்ணில் படுவதே துர்லபம். நானும் அவரும் இதுவரை சந்திக்கவே நேரவில்லை. மாடிச் சுவரில், காலையோ, மாலையோ சில சமயங்களில் உயரமாய், ஒரு நிழல், மீசை, சிவப்புத் தலைப்பா உள்ளடங்க, ஏறுவதோ இறங்குவதோ எனக்கென்று ஒதுக்கி வைத்திருந்த என் அறைக் கதவு திறந்திருந்தால் தென்படும். ஏட்டய்யா யாரோடும் பேசுவதாகத் தெரியவில்லை. மாடியிலிருந்து வார்த்தை விளங்காமல், சில சமயங்களில் சில உறுமல்கள் கீழே எட்டும்.

''ஆளுக்கு ஒண்ணே ஒண்ணுதான் குறி. எப்போ சர்கிள் ஆவுது? எப்படி ஆவறது? அதுக்குக் குறுக்குவழி என்ன? இன்னொணு. ஏட்டு ஏட்டுகூட இல்லே. சாதா P.C. 433 தான். ஆனால் மனுசனின் கேணி ஆசைக்குக் கேலியா ஸ்டேஷன்லே யாரோ ஏட்டுன்னு அழைச்சுட்

டாங்க. அவ்வளவுதான், ஐயா அதையும் ஏத்துக் கிட்டாரு. வெக்கம், மானம் கெட்டவன். சர்கிளுக்கும் தனக்கும் இடையே அது ஒண்ணுதானே! சர்கிளுக்குப் போய்ச் சேர, யார் மூஞ்சியை மிதிச்சு ஏறலாம்? யார் முதுகைச் சொரியணும்? ஒரே வெறி. கொள்கையில்லாத மனுசன். பிடிச்சு முயலுக்கு மூணே கால். அடிச்சுக் கிட்டேன் அப்பவே. இங்கே போய் என்னைத் தள்ளாதே. இங்கே எனக்குப் பிடிப்பு ஏற்படல்லேன்னு. ஆனால் இதை யாராலே மாத்த முடியும்?'' முன் மண்டையில் சுழித்துக் கொண்டாள். ''ஆனால் எனக்கு எதைப் பத்தியும் அக்கறையில்லே. யாரைப் பத்தியும் அக்கறை யில்லே. அம்பீ, எனக்கு உன்னைப் பத்திக்கூட அக்கறை யில்லே—''

பேச்சு என்னவோபோல் போய்க் கொண்டிருக்கிறது. யாரிடம் எதை எதிர்பார்க்க எனக்கு உரிமை? இப்போ தேள் கடியை முன்னிட்டு எனக்கு நடந்து கொண்டிருக்கும் உபசரணையே—? ஆனால் என்றேனும் பட்டாசு வெடிக்க வேண்டியது தானே!

''ஆனால் உன்னிடம் ஒரு சூட்சுமம் இருக்கு. சுண்ணாம்பிலே சூட்சுமம். யாரும் எது சொல்றதையும் பொறுமையா, கவனமா கேட்டுக்கறே. நாங்களும் உன் செலவில் எங்கள் மனசில் இருப்பதை அப்படியே கொட்டி டறோம்.''

நீ அப்படி நினைக்கிறாய். இதையே வேறு விதமாயும் கொள்ளலாம். எல்லாருக்கும் நான் துவைக்கிற கல். மல்லன் குத்துப் பழகும் மணல் மூட்டை. எடுப்பார் கைப் பிள்ளையென்று இப்படியே வாழ்க்கையில் என் பங்காக ஆகி விட்டது.

கோமு எங்கோ பார்த்தபடி, உரக்கச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

''தேள் கொட்டின கையோடு, உன்னை மூச்சு பேச்சில் லாமே, தட்டையா வீட்டுக்குக் கொணாந்து கட்டிலில்

அப்பா கிடத்திச்சே அப்போ எனக்கு ஒரு எண்ணம் தோணிச்சு. நீ என் வீட்டில் இருக்கற வரை உன் கண்ணில் படக்கூடாது.''

எழுந்து உட்கார்ந்தேன்.

''நான் மாடியில் இருந்தால் நீ கீழே, நீ இங்கிருக்கும் வரை. நான் வெறும் நாயனமா மட்டும், உன் செவியில் ஒலிச்சுக்கிட்டிருக்கணும், உன் உயிர் போகும் வரை அந்த அளவுக்கு உனக்கு இந்த ஓசை நினைப்பிருந்தால் இது தவிர நாம் இருவரும் ஒருவரைப் பத்தி ஒருவர் தெரிஞ்சுக்க அவசியம் இல்லை, எதுவுமில்லை. எப்படி என் யோசனை ?'' என் பக்கம் திரும்பிப் புன்னகை புரிந்தாள். ''ஆனால் அதுதான் நடக்கல்லியே ! உனக்கு நெனைப்பு வந்த அன்னிக்கே நான் கும்பலோடு சேர்ந்துட்டேனே ! ஆனால் நான் ஆசைப்பட்டபடி இருந்திருந்தால்— அதிலேயே ஒரு தவமிருப்பதாப் படல்லே? மத்தவங்களுக்கு இது சொன்னாலே புரியாது. எதிர்ப்பு, கேலி, கிண்டல் தான் மிச்சம். நம்மவங்களுக்கு ஒண்ணுதான் தெரியும் எல்லாமே கேலி.

ஆமா, வரவர எனக்கு இப்படித் தோணுது. உறவினால் என்னபயன் ? ஒரு ஒரு சந்திப்பிலும், ஒரு ஒரு புது முகத்திலும், உறவில் ஏதோ சிக்கல்தான் ஏற்படுது. தனிமை. யார் வழிக்கும் நான் போவல்லே, யாரும் என் வழிக்கு வரவேணாம். என் வழியில் என்னை விட்டுடுங்க. என் வழி என் பிறப்புரிமை ! அந்த நிலை கெட்டுப் போவுது. நான் சொல்றது யாருக்குப் புரியப் போவுது ? நான் குணம் கெட்டுப் போய் வழி தப்பி இருக்க வழி தேடறேன். அதுவும் நான் பொம்புள்ளை—ன்னு நினைக்கறாங்க.''

ஏன் புரியவில்லை ? என்னென்று புரியவில்லை. ஆனால் நன்றாய்ப் புரிகிறது. அப்பவே நன்றாய்ப் புரிந்தது. இப்போ என்னென்று புரிகிறது. ஒரு

கலைஞனின் உண்மையான தவநிலையை நீ எவ்வளவு அற்புதமாகச் சொல்கிறாய்! இத்தனைக்கு உனக்குத் ‘தம்’. இல்லை. கழுத்து நரம்பு புடைக்கவில்லை. உன்னோடு படுக்கும் புருஷனிலிருந்து இரவு உன் எச்சிற் சோற்றைத் தின்று விட்டு, நன்றியில் வாலைக்குழைக்கும் நாய் வரை— வழிப் போக்கன் நான் உள்பட— எல்லோரும் உன் வழியின் குறுக்கே போய், உன்னையே ஒரு கிறுக்கலாக்கிக் கொண்டிருப்பவர்தான். ஆனால் நாங்கள் என்ன செய்ய, அதுவே எங்கள் வழியாயிருக்கிறதே! ஒருவர் காலை ஒருவர் இடறிக் கொண்டு தான் நடக்கவே வருகிறது. நீ கூறும் உண்மைக்கு ரோசப்பட்டு என்ன செய்வது ? நான் என்ன செய்வேன் ?

ராமா, என்ன செய்வேன் ?
காமு, என்ன செய்வேன் ?
கோமு, என்ன செய்வேன் ?
அம்மா, என்ன செய்வேன் ?

அவள் போன பின், கல்லாலடித்தாற்போல், கட்டிலில் எந்நேரம் உட்கார்ந்திருந்தேனோ ? என்னதான் நினைத்துக் கொண்டிருந்தேனோ, அதுவும் தெரியாது. கோமு பொதுவில் “நான், ‘நீ’ உறவைச் சொன்னாளா அல்லது அம்பியையே மறுத்தாளா ? தெரியாது.

வயலோரம், ஊர் எல்லையில் ஆங்காங்கே விளக்குகள் ஏற்றிக்கொள்ள ஆரம்பித்து விட்டன. உச்சந்தலைக்கு நேரே நிலவின் தேசல் நிற்கிறது. நேரம் ஆக ஆக, இருளின் ஊட்டத்தில் நல்ல வெளிச்சம் ஏறிவிடும். நிழலிலேயே பிழைக்கத் தெரிந்த கிரஹம்.

கனைப்புக் கேட்டுத் திரும்பினேன்.

அந்தி மங்கலில் உயரமாக ஒரு உருவக் கோடு முறுக்கிய மீசையின் நுனிமுள், சிவப்புத் தலைப்பா உள்பட

“ஆ மாப்பிள்ளை வாங்க வாங்க. அமருங்க—” கட்டிலில் இடம்கொடுக்க நகர்ந்தேன்.

ஆனால் ஆள் உட்காரவில்லை.

"நீ யார்? எங்கிருந்து வந்தே?"

எங்கள் முதல் சந்திப்பிலேயே அதட்டலா? இல்லை இதுதான் இவன் சுபாவமா? என்னைவிடப் பதினஞ்சு வயசேனும் மூத்தவன் என்கிற உரிமையா?

"அதைத் தான் நான் இன்னமும் யோசிச்சிட்டிருக்கேன்'

"அப்படின்னா? நேர்க் கேள்விக்கு நேர்ப்பதில்."

"போலிஸ் கேள்வியா?"

என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான். "அப்படித் தான் வெச்சுக்கோயேன்"

"நான் எல்லாருக்கும் அம்பி. அதோ மோகாம்பரித் மலைப்பக்கத்தில் மலையான் பட்டிக் கிராமத்திலிருந்து வந்தேன். எனக்கு அப்பன் ஆயி கிடையாது. நான் தருமத் துக்கு வளர்த்தெடுத்த பிள்ளை. அட்ரெஸ் இல்லாதவன், பிழைப்பைத்தேடி வீட்டைவிட்டு ஓடி வந்தவன். பிழைக்க வந்தவன். உன் மாமன்—''

"உங்களை'ன்னு சொல்லு"—

"உன் மாமனது தென்னந் தோப்பில் இதோ இதே மரத்தில் ஏறி இளநீர் திருடினேன்"

"அதுக்குத்தான் உன்னை எல்லாரும் தலையில் தூக்கி வெச்சிட்டுக் கரகம் ஆட றாங்களா?"

"அதை அவங்களை விசாரி!"

"என்ன தம்பி நான் சொல்லிக் கொடுத்ததும் மரி யாதை மில்லாமே 'நீ' போடுறே?"

"எல்லாம் நீ சொல்லிக் கொடுத்தது தான்." இப்போ இவனிடம் ஒரு அடி பின்வாங்கினால் கூடக் கோட்டையை விட்டுடுவேன். "மரியாதை இல்லே. Oneway Traffic நீ கொடுத்ததைத் தானே திரும்பி வாங்க முடியும்!"

ஆள் கொஞ்சம் அடங்கினான். ''மாமா கம்ப ளெயின்ட் கொடுத்தால் கேஸ் எழுதிடலாம்'' என்றான்.

''இப்போக் கூட அவரைக் கேட்டு செய்யேன்!''

அவன் காதில் வாங்கிச் கொள்ளாதது மாதிரி சொல் லிக்கொண்டே போனான்.

''கேஸ்புக்கிலே பேர் ஏறிட்டால், மாமாவும் ஒண்ணும் செய்ய முடியாது, நான் கூட ஒண்ணும் செய்ய முடியாது'' அவன் குரலில் வருத்தம் தெரிந்தது.

''அப்படியா? ஆனால் மாப்பிள்ளே, உன்னை ஒண்ணு கேக்கணும்''

அவன் புருவங்கள் உயர்ந்தனவா? இருட்டு.

''இந்த எழுதாத கேஸ்மேலேயா,ஏட்டு-ஏட்டு இன்னும் ஆவாதஏட்டு நீ சர்க்கிள் ஆவ ஆசைப்படறே? இது ஏதோ விக்ரமாதித்தனுடைய முறை தெரியாக் கதை, போவாத ஊருக்கு வழி— இதுமாதிரி பழமொழியோடு சேர்ந்துடும் போல இருக்கே!''

இருட்டில் முகபாவங்கள் தெரியவில்லை. ஆனால் அவன் உள்ளே நாடி. நரம்பு, ரேடியோ, மின்சாரம், திசை மாணி, தண்டவாளம், சவாரி எல்லாம் அந்த ஒரு கண பூகம்பத்தில் தகர்ந்த வேகம் என் மேலும் தெறித்தது.

ஒரு தந்திக் கம்பம் கூட உள்ளே வேரோடு சாய்ந் ததோ என்னவோ ?

தன் கன்னத்தைத் தடவிக் கொண்டான். கொசு கடித்ததோ ?

''எல்லாம் மாமன் கொடுத்த இடம்—'' குரல் மூச்சாகி விட்டது.

''ஏன், நீ அவரிடம் ஒரு வார்த்தை சொல்றது தானே?''

''சொல்லாமலா போறேன் ? இல்லை. அவர் தெரிஞ் சுக்காமலா போறார் ? வழியிலே போனவனை இளுத்து

வந்து வழிபடறியே, உன் கழுத்துக்குத் தீம்பு தேடிக் கறேன்'னு சொல்லாமலா போறேன் ?" என்னை உன்னிப் பாய்ப் பார்த்துக் கொண்டே, "போன வாரத்திலிருந்து ஒரு கேஸ் அமர்க்களப் படுது தெரியுமா ?"

"தெரியணுமா ?"

"ஆமா. ஏன்னா, நீவந்த திக்கிலிருந்துதான்" கையை வீசினான்.

திரும்பிப்பார்த்தேன். இருள் சூழ்ந்து பெருகிக் கொண்டிருந்தது.

"ஏட்டு, நான் வந்த திக்கு வடக்கு, அதுபோவுது காஷ்மீரம், கைலாசம் வரைக்கும் உன் கைவீச்சின் தாரா ளத்தைப் பார்த்தால்''

ஒருமூச்சு அவனுக்கு வாங்கிற்று. P.C.433க்கும் பேச்சில் சிலம்ப விளையாட்டுக்கும் வெகு தூரம் தெரிந்தது.

"ஒரே ஒரு ஊரிலே—"என்று அடியெடுத்துக் கொடுத் தேன்.

"எடக் கெல்லாம் வேணாம் எல்லாம் நம்ம ஜூரிஸ்டிக்ஷன் தான்"

"நம்மன்னா ? விளங்கல்லியே!"

"போகப்போக விளங்கும். விளங்க வைக்கிறேன்"

"நீ சொல்லத்தானே வந்திருக்கே. சொல்லாமல் விடமாட்டே. சொல்லு"

காதில் வாங்கிக் கொள்ளாது போல் பேசிக் கொண்டே போனான்.

"எதிருக்கெதிர் வீடு,ரொம்ப நெருங்கிப் பளகினவங்க. உறவு மனுஷாள்னே வெச்சுக்கோ"

"வெச்சுக்கறேன். நீ சொல்றது கதையா, கேஸா?"

''போகப் போகத் தெரியும். அதுலே ஒரு வீடு குடும்பத்தோடே காசிக்குப் போற ஏற்பாடுலே, ஒரு பெட்டியிலே அவங்களுடைய விலை மதிப்பான பண்டம், பாத்திரம், பொருளை வெச்சுப் பூட்டி, எதிர்வீட்டுலே பெட்டியை ஒப்படைச்சுட்டுப் போயிட்டாங்க.

போனவங்க திரும்பிவர மூணுமாஸம் ஆச்சு. திரும்பி வந்தவங்க பெட்டியைத் வாங்கிட்டு, திறந்து பார்த்தால், உள்ள வெச்சபாத்ரம்— கிழங்காட்டம் சாப்பிடற வெள்ளித்தட்டு, ஒரு வெள்ளிக் குத்துவிளக்கு, பறங்கிக் காயாட்டம் வெள்ளிகூஜா அரை டஜன் வெள்ளிதம்ளர்— எல்லாம் அபேஸ். வீட்டுப் பெண் கலியாணத்துக்கு தேன் துளியாட்டாம் சேர்த்துப் பண்ணிவெச்ச பிரியப் பண்டங்க.''

சற்று எட்ட வீழ்ந்துகிடந்த ஒரு தென்னை அடிமரத் துண்டின் மேலிருந்து ஒரு ஓணான் ''ஆமாம் ஆமாம்'' என்று தலையை ஆட்டிற்று. இந்த நேரத்தில் இது ஏன் இன்னும் தன் வளையில் அடங்கவில்லை? சாட்சி சொல்ல வந்ததா? ஓணான் சாக்ஷி ஏற்கப் படுமானால், நாட்டில் வீடுகளைக் கட்டுவதற்குப் பதிலாக, எல்லோருக்கும் சேர்த்து ஒரு ஜெயிலே கட்டிவிடலாம். போலீஸ் இலாகாவில் கனவேகமாக ஏறிக் கொண்டேயிருக்கும். குறைந்த பட்ச உத்தியோகமே ஏட்டில் தான் ஆரம்பிக்கும். P. C. இல்லாமல் H. C. அதெப்படி? அது என் கவலை அல்ல. அது டிமார்ட்மெண்டல் அதுதான் கற்பனை. கற்பனை என்பது இதுதானா?

''பெட்டிக் கடியில் நாலஞ்சு இன்சூரென்ஸ், ஒரு S.S.L.C சர்டிபிக்கேட்டு, எலெக்ட்ரிக் பில் பழையரசீதுக் கட்டு, ஒரு கத்தை ஜாதகக்கட்டு, வீட்டுப்பத்திரங்கள், அப்படியே வெச்ச படி இருக்குதுங்க. வெச்சவனுக்குத் தெரியாது, காயிதங்கள் தனக்கும் பிரயோசனம் இல்லேன்னு?''

உண்மையிலேயே நான் இவ்வளவு பெரிய ஓணானைப் பார்த்ததில்லை. பச்சோந்தியாகவே இருக்கலாமோ? இரவு, செதிள்களின் நிழலன்றி வேறு தெரியவில்லை.

''பண்டத்துக்குச் சொந்தக்காரர் வாயிலும் வவுத்துலும் அடிச்சுக்கறாங்க யார்கிட்ட ஒப்படைச்சாங்களோ அவங்களும் பதை பதைக்கறாங்க. உண்மையிலேயே பதை பதைக்கறாங்க. மானஸ்தர். அவங்கவீட்டுப் பிள்ளைக்குத்தான் எதிர்வீட்டுப் பெண்ணைச் சம்பந்தம் முடிச்சிருக்கு. பெண் வீட்டார், காசியிலிருந்து வந்ததும் கலியாணம் பண்றதா ஏற்பாடு. அதனாலே அவங்களுக்கு எப்படியும் சீராகச் சேரப் போறப் பொருளை முன் கூட்டி ஏன் எடுக்கப் போறாங்க? தவிர ஏற்கெனவே சொத்து உள்ளவங்க. இந்தப்பண்டம் வந்து அவங்களுக்கு ஒண்ணும் ஆவப்போவதில்லே. இது சுத்தியிருப்பவங்க யாரும் ஒப்புக்கிடற பேச்சு. ஆனால் பணக்காரன் கிட்டத்தான் ஊழல் ஜாஸ்தி. இவங்களும் நல்லவங்க, அவங்களும் நல்லவங்கன்னு ஒருத்தருக்கொருத்தர் சர்டிபிகேட் கொடுத்துக்கறாங்க. அப்போ யார் பொய்? யார் மெய்?''

கேஸ், உண்மையிலே கொஞ்சம் சுவாரஸ்யம் தான்!

''காசிக்குப் போனவங்க திரும்பிவரதுக்கு முதன்னாள் தான், இவங்க கதவைப்பூட்டிக்கிட்டு, குடும்பமா ஆறு மணியாட்டம் போயிருக்காங்க. Tent—'பாக்தாத்திருடன்' ஏதானும் நடந்திருந்தால் அன்னிக்கு அந்த வேளைக்குத் தான் நடந்திருக்கணும். தாழ்ப்பாள், ஜன்னல் கதவு; மேல் கூரை முழுக்கத்தளம்—அத்தினியும் in Tact மூணாம் மனுசனைச் சந்தேகிக்க வழியில்லே. விருந்தாளி யாரும் இடையில் வரல்லே, நோட்டம் பார்த்துட்டுப்போனான்னு சொல்ல. அப்போ அது என்னய்யா மாயம் மந்திரம் சூன்யவேலை? இவங்க எலுமிச்சம் பழம் கோழி சோழி வெச்சுப்பாக்கறதெல்லாம் போலீஸ் ஒப்புமா? எங்க Method எல்லாமே வேறே—''

இப்போ இவன் தோரணை சர்கிளாக இல்லை. D S. Pக்குக் குறையவில்லை.

அவன் பார்வை என்னை ஆசையோடு, பசியோடு தழுவிற்று. பாம்பு இரையை விழுங்கு முன் அதன் மேல் தன எச்சிலைக் கொட்டுமாம்; அது போல.

''உங்கள் Method இல் உங்களுக்கென்ன புலனாச்சு?'' அவன் ஆத்திரத்துடன் தொடையை அறைந்து கொண் டான். ''அதான் கேஸ் எழுதமாட்டேன்கறாங்களே!''

எனக்கே சற்று ஆயாசம் தட்டிற்று. இந்தப் பிசுபிசுப் புக்குத்தானா, இத்தனை பாண வேடிக்கை, ஆர்ப் பாட்டம்?

''மாப்பிள்ளே, உன்னைப் பார்த்தால் எனக்கு நிஜமாவே பரிதாபமாயிருக்கு அங்கேயும் முறைதெரியாக் கதைதானா?',

''ரெண்டு பேரும் அஞ்சறாங்க. போலீஸ்விசாரணை, குடும்பமானத்தைச் சந்தியிலே இழுத்துடுமே! சொத் தோடு மானம் போனது தான் மிச்சம். எடுத்தவன், ஏமாந்தவன் ரெண்டு பேருமே ஒருத்தரையொருத்தர் கொண்டாடிக்கறாங்க. தவிர இந்த சம்பந்தம் வேறே யிருக்குது. அது என்ன ஆவறது?''

''நீங்க-இல்லை, நீ என்ன நினைக்கிறே?''

''படிச்ச முட்டாளுங்க கூழுக்கும் ஆசை மீசைக்கும்ம் ஆசை. பணியாரம் தின்னவும் தின்னணும். குறையவும் கூடாது ஆத்துலே ஒரு கால் சேத்திலே ஒருகால். நம் மக்களின் அவலப் புளைப்பே இதுதானே! இந்தத் தென் பிலேதானே குத்தவாளியும் தனக்கு நிகர்யாருமில்லேன்னு நம்மிடையிலேயே துணிச்சலா வளையவரான் |பாம்புக்குப் பாலூட்டி வளர்க்கறோம்—''என்மேல் மறுபடியும் அந்தப் பசியேக்கப் பார்வை. தலைப்பாகையைக் கையிலேந்திக் கொண்டு அத்துடன் பேசினான். ''என்மாமன் இருக் காரே பைத்யக்கார மனுசன். இல்லாட்டி கருடா சுகமான்னு நீ என்னைக் கேப்பியா ?''

சொல்லிவிட்டு அவன் போய் விட்டான்.

இரவே முழுமையில் வந்தாகிவிட்டது

காலடியில் ஒரு தவளை தத்தித்தத்தி—வயல்புறத்தில் எதற்கும் வேளை கிடையாது போலும்! கையைத் தட்டினேன். சோகமாய் என்னைப் பார்த்துவிட்டு, தத்தித்தித்தித்—

தன் பசிக்கு விலங்கு இரையை வேட்டையாடுகிறது.

இரைக்கு உயிர்தப்ப வேண்டியிருக்கிறது.

இரை விலங்குக்கு இரையாகிக்கொண்டு

இரை அப்படியும் பெருகிக்கொண்டு

இரு முரண்களும் ஒருங்கே நிறைவேறிக் கொண்டு தானிருக்கின்றன.

நியாயம் கேட்க நீயும் இல்லை நானும் இல்லை.

ஏட்டு, என்றேனும் ஒரு நாள் நீ என்னைக் கவ்வி விடுவாய்.

ஏனென்று கேட்க நான் யார்?

அதுவரை எனக்குள்ளது ஒன்றுதான்

தத்தித்தித்தித்தித்—

சிரிப்புக்கூட வருகிறது.

காற்று குறுகுறு வென்று திடீரெனக் கிளம்பிற்று. பெரும் கேவல் ஒன்று என்னிடமிருந்து கிளம்பிற்று, அதில் நான் மிரண்டு போனேன். பிறவியின்—எனது மட்டுமல்ல - பிறவியின் பெரும் அசதி.

தலைக்கு மேலே நிலவு முகம் பிதுங்கிற்று.

அம்மா நீ எங்கேயிருக்கே?

உன் கர்ப்பத்தின் இருளில் நானே எனக்கில்லாமல் மீண்டும் கலந்து விட வழியில்லையா?

சரியாப் போச்சு. முதலில் நீ எனக்கு எங்கேயிருக்கே?

o o o

முத்தையாவும் நானும் தென்னந்தோப்பில் மாலை வேளை உட்கார்ந்திருக்கிறோம். நான் கட்டிலில். தரையில் அவன் தென்னை ஓலையில் தடுக்கு முடைந்து கொண்டிருக்கிறான். முத்தையாவினால் ஒரு நிமிஷம் சும்மாயிருக்க முடியாது. அவன் கரங்கள் தாம் உண்மைக் கரங்கள். உழைக்கும் கரங்கள். சொல்லாமலே செய்து காட்டும் உபதேசக் கரங்கள். செயல்தான் அவைகளின் பேச்சு, சேதி எல்லாம்.

'பிந்து மாலினி, சிந்து பைரவி, வாஹதீஸ்வரி, மாளவி', என்று கோமுவும் நானும் கலை, ஸங்கீதம் ஸௌந்தர்யம் என்று நக்ஷத்ரங்களுடன் ஆயிரம் அளாவினால் ஆய்விடுமா? தாக்ஷண்யமற்ற எடையில், அத்தனையும் சுகஜீவிகளின் பொழுது போக்கு வளவளாத் தானே!

"அம்பீ, இன்னிக்கு இந்நேரம் இங்கே நான் ஏன் இருக்கேன் தெரியுமா?"

"தடுக்குமுடையறே."

"அது Side. மெயின் அதுவல்ல. இன்னிக்கு நம் மருமவப்பிள்ளை தனிக்குடித்தனம் போறாரு. அவங்க போறப்போ நான் அங்கே இருக்க வேணாம்னு இங்கேயிருக்கேன்."

அப்போ நாங்கள் திரும்பிப் போறப்போ வீட்டில் கோமு இருக்க மாட்டாளா? மார்பு லேசாக 'பக்'

இரண்டு நாட்களாக ஏதோ மசமசப்பு உண்டு. ஏட்டு வேளையில்லாத வேளை வீட்டுக்குத் திரும்பி மாடிக்கும் கீழுக்குமா, கிடுகிடென ஏறுவதும் இறங்குவதும், அறைக் கதவுகள் அறைந்து மூடிக் கொள்வதும், கோமு முகத்தில் குங்குமச் சிவப்பும், விறைத்த மார்பு (அங்கு மார்பு என்று சொல்லிக் கொள்ள என்ன இருக்கிறது? வேறு விஷயம்) ம், நடையும் அவள் மூக்கின் பின் அவன் போவதும்— குடும்பம் என்றால் இதுவும் போலும்! எனக்கென்ன?

ஆனால் இப்படி வந்து முடியும் என்று கண்டேனா? எதில்? நான் இன்று வீடு திரும்புகையில் கோமு இருக்க மாட்டாள். ஆனால் அதற்கும் நான் என்ன செய்ய முடியும்?

"திடீரென்று காரணம்?"

(ஏதோ ஒன்று கேட்கணும்)

"நீ."

"நானா?" எனக்கு உடம்பையே தூக்கி வாரிப் போட்டது.

"ஆமா, உன்னை வீட்டில் வெச்சுக்கக்கூடாது, வீட்டை விட்டு வெளியேத்தணும்னு மருமவப்பிள்ளை ஒரு வாரமா முஸ்தீபா நிக்கிறாரு."

"நான் என்ன செஞ்சேன்?" அழுது விடுவேனோ என்று பயம் வந்து விட்டது.

"நீயும் கோமுவும் சேர்ந்து அரட்டையடிக்கறது அவனுக்கு ஆவல்லே. அவங்க இலாக்காவிலேயே அது தானே அரிச்சுவடிவே முதல் பாடம்! 'சந்தேகப்படு! யாருன்னு பார்க்காதே. எல்லாரையும் சந்தேகப்படு, நான் கூட சொல்லிப் பார்த்தேன். 'மாப்பிள்ளை, நீ பாவம் பண்றே. கோமு அம்பீயைவிடப் பத்து வருடம் மூத்தவ, இடையிலே அவளுக்கு மூணு தம்பியிருக்க முடியும்'னு. அதுக்கு அவன் ஒரு பதில் சொன்னான் பாரு, எனக்கு நினைக்கவே செவி கூசுது. என் வீட்டில் சாக்கடைத் தண்ணி கூடத்தங்கறதில்லே. வாழைக்குப் பாயுது. வாழை தார் போடுது, வாழையடி வாழையா வளர்றது, வழங்குது. சரி—" சூள் கொட்டினான் "அவங்க அவங்க சாக்கடை அவங்களது. நமக்கென்ன? நீ இங்கே ஜாடாயிருக்கப் போறியா? அது எனக்குத் தெரியாதா? இல்லை எனக்குப் பிள்ளையில்லா சொத்தா, உன்னை சுவீகாரம் எடுக்க? இல்லை

உனக்கு வர சொத்தை அவனுக்குக் கொடுக்கப் போறேனா? என் விசயத்திலே 'கண்டிசன்' போட இவன் யாரு? ஏட்டு சொல்லி உன்னை நான் வெளியே அனுப்பறதுன்னா அது எனக்கு சரிப்படல்லே. அப்பறம் முத்தையான்னு ஒருத்தன் என்னத்துக்கு? முத்தையா பைத்யக்காரன். ஒப்புக்கிடறேன். ஆனால் இவங்க எல்லாம் நினைக்கிற மாதிரியில்லே. முத்தையா எல்லாம் தெரிஞ்ச பைத்தியக்காரன். தெரிஞ்சே ஏமாந்து போறவன், உண்மையில் ஏமாந்து போறவனா? என்னவோ விட்டுக் கொடுத்துட்டு மேல் காரியத்தை ஓட்டிட்டுப் போவறேன். அவங்களுக்கு அதிலேயே ஒரு சந்தோசம்னு, அதிலே எனக்கு கஷ்டமா? ஒண்ணு வெச்சுக்க அம்பீ, நான் அனுபவத்துலே கண்டது. தாங்கக் கூடிய நஷ்டம் எதுவுமே நஷ்டமில்லே. அதெல்லா 'ஸவால்'லே சேர்த்தி. அப்படிப் பார்க்கப் போனால் எதுவுமே நஷ்டமில்லே. ஆனால் விட்டுக் கொடுக்கறத்துலேயும் எல்லை உண்டு. துரோகம்தான் உண்மையிலே தாங்க முடியாது. முதுகிலே கத்திக் குத்துக்கு என்ன செய்ய முடியும்? உன் கையாலேயே கத்தியை எடுக்க முடியுமா?

'அவன் போவாட்டி நான் போவேன்'னான். 'ரொம்ப சரி, இன்னிக்காச்சும் தெரிஞ்சுதே உனக்கு, உனக்கு ரெக்கை முளைச்சுப் போச்சு, நீதான் பறக்காமே தரையிலேயே சுத்திட்டிருக்கேன்னு. அதுவே சரி, குசாலாப் போய்க்கோ, என்னிக்காவது நடக்க வேண்டியது தானே'ன்னு சொல்லிட்டேன், ஏட்டு என்ன நினைச்சாரோ, நான் மோவாய்க் கட்டையைப் பிடிச்சுக்கிட்டுக் கெஞ்சுவேன்னு பார்த்தாரோ? இப்போ அவன் சொன்னபடி நடத்திக் காட்டாட்டி, அவனுக்கு அவமானம். ஒருத்தருக்கொருத்தர் சவாலாப் போச்சு. இன்னிக்கு நாள் பார்த்திருக்கான்''

''கோமு என்ன சொல்றாள்?'' அசட்டுக் கேள்வி ஆனால் என்னால் அடக்க முடியாத கேள்வி.

''கோமு சொல்ல என்ன இருக்கு? நான் பிறந்த வீட்டிலேயே இருந்துடறேன்னு சொன்னால் நான் விட்டுடுவேனா? அவனோடு அவள் வீடு. இதுஎன் வீடு. செந்தாமரை வீடு. பெண்ணைக் கட்டிக் கொடுத்தப்பறம் பெரியவங்க நியாயத்தை அப்பிடித்தானே வகுத்து வெச்சிருக்காங்க! சரியாத்தானே வெச்சிருக்காங்க! ஏன், உனக்குக் கோமுவோடு சங்கீதம் பேசிக்கிட்டேயிருக் கணும்னு இருக்கா?"

நான் முகத்தைப் பொத்திக் கொண்டேன். எனக்கு உடம்பு குலுங்கிற்று. முத்தையா ஆணியை சரியாக மண்டையில்தான் அடிக்கிறான். அவன் கேள்வியில் தெறிக்கும் நியாயத்தின் நிர்வாணம் எப்படிக் கூசுகிறது!

''சரி இப்போ அங்கே கூட்டம் கலைஞ்சிருக்கும். வீட்டுக்குப் போவமா?"

''இல்லை, நான் கொஞ்சம் பொறுத்து வரேன்"

மங்கி வரும் இருளில் அவன் தயங்கி நின்றான்.

''அம்பீ"

நிமிர்ந்தேன். அருகே வந்தான்.

''இங்கே, இனி நமக்கென்ன ஜோலின்னு, வீட்டுக்குத் திரும்பாமலே இப்படியே கம்பி நீட்டிடலாம்னு பாக்கிறியா? அப்பிடி சேஞ்சே, ஏட்டுக்கு நீ என்னே விட்டுக் கொடுத்ததாவும். அப்படிச் செய்யாதே." கை கூப்பினான். ''நீ ஓடிப் போனால், ஓடிக்கிட்டேத் தான் இருப்பே.

அப்புறம் உதவாக்கறையாப் போயிடுவே. நீ என்னை விட்டு எப்பப்போவணும்னு எனக்குத் தெரியும். உனக்கு நான் ஏதாவது வழிபண்ணியாவணும். இல்லாட்டி என்

மூத்தாள் ஆவியும் உன் ஆத்தாள் ஆவியும் என்னைச் சுத்திக்கிட்டேயிருக்கும்."

இருளில் என் சத்தம் எனக்குக் கேட்டது. ஆனால் அது சிரிப்பா, அழுகையா?

"என்ன முத்தையா நீ என் ஆத்தாளைப் பார்த்திருக்கியா?"

"உன் ஆத்தாளை நான் பார்த்துத் தான் ஆவனுமா என்ன? ஒண்ணு வெச்சுக்க, அம்பி நீ நல்லாயிருந்தால் தான் நான் நல்லாயிருப்பேன். அதனால் நீ நல்லாயிருகணும்"

எனக்கு உடம்பு சிலிர்த்தது. ஒரு விதமானபயத்தில்,

அவன் அப்படிச் சொன்னதுமே வானத்தில் ஒரு நஷத்ரம் ஒளி பிதுங்கிற்று.

சத்யம் தன் மேலேயே தீர்ப்புச் சொல்லிக் கொள்கிறது. சத்யத்தின் ரூபதரிசனம்

(தெய்வத்தின் அர்ச்சனை நாமாவளிகள் ஒவ்வொன்றாக இப்படித்தான் தனித்தனிசமயத்தில் உண்டாகி, பிறகு ஒன்றாக அடுக்கியாகியிருக்குமோ ?)

அவன் போன பின் எந் நேரம் நிலைகலையாமல் அப்படியே உட்கார்ந்திருந்தேனோ? நேரம் போனதே தெரியவில்லை. அப்படித் தீவிரமாக என்ன சிந்தித்தேன்? வடிவோ, வார்த்தைகளோ திண்ணமாகத் தெரியவில்லை.

கோமுவும் நானும்<br>
காமுவும் நானும்<br>
முத்தையாவும் நானும்<br>
முயல் குட்டியும் நானும்<br>
கடவுளும் நானும்<br>
நீயும் நானும்<br>
யாவும்

இந்தப் புவனத்தின் சரித்திரமே நீயும் நானும் உறவின் தாக்கல் தானே!

நான் நானில்லை
நீ, நீயில்லை.
அதனால் நீயுமில்லே நானுமில்லே
ஆனால் நீயுமில்லாமல் நானும் இலாமல்
உலகமே இல்லை.

என்ன புரிந்தது?
என்ன புரியாமல் இல்லை ?
வார்த்தைகள் சும்மா விடுவதில்லை.
தம்மைத்தாமே புரிந்து கொள்ள முடியாமல்
கண்ணாடியில் பிம்பம் போல்
பிறவியில் தம்முகம் தெரிய
தாமே கட்டிக் கொண்ட கோதாவுக்குள்
ஒன்றையொன்று வெறியில்
கட்டிப் புரள்கின்றன, கட்டித் தழுவுகின்றன.

உரிமை உணர்வில் மனிதன் எத்தனை கீழ்த்தரமாக நடந்து கொள்கிறான்! காற்றின் அலைவில் கோமு, உன் முன்றானைக் கோடுக்குக் கூட என்மேல் தற்செயலாய்ப் பட்டதில்லை. 'நீயே புடவை உடுத்தின ஆண் பிள்ளை'ன்னு கேலி பண்ணியிருக்கிறேன். "புருசன் பெண்சாதியில், யாரேனும் ஒருத்தர் ஆணாயிருக்கணு மில்லே"ன்னு பதிலடி அடிப்பாள். துணிச்சல்காரி-

"யாரது, அம்பீயா?"

திரும்பினேன்.

முதல் அடியிலேயே தாடை கிழிந்தது தெரிந்தது. அடுத்தடுத்து அடிகள் விழுந்துகொண்டேயிருந்தன. சர மாரியாக அல்ல. தடலடியாக அல்ல. விஷயம்

தெரிந்த, இடம் தெரிந்த, இத்தனை, இந்த வீச்சுக்கு இந்தச் சேதம் என்று அளவு, நோக்கம் தெளிந்த வேலைப் பாடான அடி. Systematic, Scientific. ஒரு கட்டத்துக்கு மேல் என்னைப் பொத்திக்கொள்ள நான் முயலக்கூட இல்லை. கைகளைத் தூக்க முடியவில்லை. எனக்கு உப யோகமில்லாவிட்டாலும் ஒருநாள் உன்னிடம் கத்துக் கணும் படிப்படியாகத் தலை, மார்பு, இடுப்பு, கணுக் கால்—

பெஞ்சில் இருப்புக் கொள்ளாமல், முழங்கால்களைத் தழுவிக்கொண்டு அப்படியும் அடக்கமுடியாமல் எழுந்து ஆர்ப்பரித்து, சொக்கரித்து, சினிமாவில் அனுபவிக் கிறோமே, இந்த டிஷூ டிஷூ' வெல்லாம் அத்தனையும் உண்மையாயிருந்தால், இப்போ என் போல் தான் ஆள் கூராகி விடுவான் என்று அன்று தான் தெரிந்தது. நகரக் கூட முடியாமல், என்கட்டை, கட்டையாக அவன் காலடி யில் விழுந்து விட்டபிறகு, கையை ஒரு முறை தூசி தட் டிக்கொண்டு காலால் கட்டையை ஒரு முறை உதைத்து விட்டுப் (கடைசி கட்டி மாம்பழம்! அடிக்குழம்பு யானை போல்!) போய்விட்டான் அந்த ரண வேதனையிலும் எனக்கு ரோசமாயிருந்தது. என்னை இப்படிக் கூழாக்கிய பின்னர், கையில் ஒட்டிக்கொள்ள அழுக்குக்கூட யிருந்ததா என்ன?

என்னைத் தேள்கொட்டிய தென்னை மரத்தடியில் வீழ்ந்து கிடப்பதை உணர்ந்தேன். தென்னை மரம்தான் எனக்குப் போதிமரம் போலிருக்கிறது, என்னவோ பம் பரம் சுத்தறது, கற்பூரம் எரிகின்றது. ஜாலர் குலுங்கறது. ஆனால் திரும்பத் திரும்ப, போதியிலிருந்து தென்னை வர நடப்பதே தான் நடந்து கொண்டிருக்கிறது.

தென்னங் கீற்றுகளிடையே ஒரு நக்ஷத்திரக் கொத்து என் மேல் சிதறுகிறது.

இனி உங்களுடன் நான் பேசலாமோ? உங்களோடு உறவாடலின் விளைவு தானே இது?

'மாஹேஸ்வரி, ஜன ரஞ்சனி. ஜோதிஸ்வரூபிணி'

த்விஜா வந்தி, ஹிந்தோலி வலந்தா, நாகஸ்வராளி, கம்பீர நாட்டை' —

அம்பீ! எதுவுமே இலவசமில்லை. ராகம் ராகமாக உன் ஞானம் பெருக,

ஒவ்வொரு ஞானமும், அது கிடைத்த அந்தச் சந்தர்ப்பச் சூழ்நிலைப்படி, அதன்

சுங்கத்தை விடாமல் வாங்கி விடும். தெரிந்து கொண்டாயா, இப்போதேனும் ?

இந்தத் தென்னை உயரமில்லை. அதனால் தான் அன்று இதைத் தேர்ந்தெடுத்தேன். அன்றிலிருந்து ஆரம்பித்த பாடம் தானே இன்னமும் ஓயவில்லை. கட்டை குட்டையாக, அடிமரம் பூதகியின் இடுப்பு என, என் முகத்தெதிரே இரண்டு ராக்ஷஸ ஸ்தனங்கள் தொங்கின. சுவைத் தேன். வாயில் ரத்தம் உப்புக் கரித்தது.

வலியின் அடிப்பாரம் பரவிக் கொண்டே மேலே அழுத்திக்கவ்வுகையில், அந்த வலிகனம் கூட, கிண்கிண் ஏதோ சுகம் தருகிறது.

மின் மினிப் பூச்சிக்கள் நாலைந்து எனக்கு விளக்குப் பிடித்தன. மின் மினியா, வலித் தெறிப்பா ?

கட்டுக் கட்டாய்க் கேதார கௌளம்
சிறகு முளைத்த கட்டுவிரியனின்
தங்க ரேக்குச் செதிள்கள் தகதக
ஆரோகணத்தில் கண்ணெதிரே கம்பீரமாய்
அழகான கவான் அடிக்கிறது
கோமு! ஐயோ கேதார கௌளம் வலிதாங்கல்லேடி!
கோமு! உன் பாடங்கள் ஏதுமே இலவசமில்லையடி!
அத்தனைக்கும் காணிக்கை ரத்தமடி!

என்கன்னம் ஒரு தையல் கேஸ்தான்.

தழும்புகூட நிற்கலாம். அதன்மேல் எனக்கு இப்பவே ஆசைவந்துவிட்டது.

நான் உதை பட்டச் சக்கை - ஆனால் அதன் பரிசு கன்னத்தில் புருஷத் தழும்பு.

இஷ்டப் பட்டுச் சம்பாதித்த தழும்பு.

உலகில் எதுவுமே இலவசமில்லை.

மேலே ஏதோ நிழல்

நிழலா? இருளா? நான் தழும்புடன்வாழ ஆசைப் பட்டாலும்

உன்னுடன் வாழ்ந்தது போதும்

என்று காயத்துக்கும் என்னின்று வெளிப்பட்டு விட்ட மூச்சா?

—ஐயையோ நீயா? திரும்பி வந்துட்டியா?

ஏதேனும் இடம் விட்டுப் போச்சோன்னு சந்தேகமா?

சந்தேகமே படாதே நீ ஒரு இடம் கூட மறக்கல்லே

ஏகலைவன் அம்பு.

அரைகுறையே வேணாம் ஒரு வழியா முடிச்சுட லாம்னு வந்துட்டியா? அப்போ சரி—

"இல்லை அம்பி! நான் முத்தையா?"

முத்தையா தேம்பினான்.

"நான் நெனச்சேன் நெனச்சேன். இப்படி ஒண்ணு நடக்கப் போவுதுன்னு என்னவோ தோணிச்சு. இருப்புக் கொள்ளல்லே, ஓடி வந்தேன். ஆனால் ஏமாந்து போயிட் டேனே!"

விக்கி விக்கி—

"ஐயையோ, என்னைத் தொடாதே!" அலறினேன் என் குரலே எனக்கு அடையாளம் தெரியவில்லை தொண்டையில் சிக்கிக் கொண்டது.

இருபத்தி ஏழாயிரம் வலிகள்
இருபத்தி ஏழாயிரம் தனித்தனி வாய்கள்
ஒரே சமயத்தில் இருபத்தி ஏழாயிரம்
தனித்தனிக் கடிகள் வலியின்
பற்களின் தனித்தனி அழுந்தல்கள்.

''இல்லேடா கண்ணு!'' அவனிடம் பொங்கும் தாய்மையில் மெத்தென்று மூழ்கிப் போய்க் கொண்டிருந்தேன்... ''நான்தான் முத்தய்யா கொஞ்சம் பொறுத்துக்க." தோள் மேல் அப்படியே சார்த்திக் கொண்டு எழுந்தான். மெத்து மெத்தென முத்தையா. முத்தய்யாதான் மத்யமாவதி. அப்புறம்— அப்புறம்- ?

தெ-ரி-யா-ஆ-ஆ-ஆ............

o o o

## நான்

''முத்தையா இன்னும் வல்லியா? இன்னிக்கும் வழக்கம் போல் தானா ?"

கேட்டுக் கொண்டே நாங்கள் உள்ளே நுழைந்து விட்டோம். இரண்டு படிக்கு ஒரு தாண்டல்—செங்குத்தான மாடி. இந்த வயசில எப்படி?— என்னால்...ஹூம்!

''-என்ன ஸார், என்னிக்கு நான் லேட்? கடியாரத்தைப் பாருங்க. வாய்க்குவந்தபடி சாடறீங்களே !"

''முத்தையா யார் வந்திருக்காங்க பார். அப்புறம் உன் கரடிக்கத்தலை வெச்சுக்கோ.''

மானேஜருக்கெதிரே 'டிப்டாப்'பா உடுத்திக்கொண்டு ஒருவர் உட்கார்ந்திருந்தார்.

''வணக்கமுங்க" கை கூப்பிக்கொண்டே முத்தையா விழித்தான்.

''இன்ஸ்பெக்டர் அப்பா இன்ஸ்பெக்டர்! இவர் எதிரே கொஞ்சம் வேஷம்போடு. மத்தநாள் தான் இருக்கவே இருக்கே! யார் அப்பா புதுமுகம், வாலா, கொசிரா, ஆறாம் விரலா?''

''என் அக்கா மவனுங்க, புளைப்பைத்தேடி வந்திருக்கான்''

நான் இருவருக்கும் கை கூப்பினேன்.

''இங்கே வேடிக்கை பார்க்க அழைச்சு வந்தயாக்கும், இன்னிக்கு நாள் பார்த்து ?

''எனக்கு எப்படி ஐயா தெரியும், இனிஸ்பெட்டர்! அய்யா வரம் போறாஹன்னு?"

''நீ பேசறதிலிருந்து மத்தநாளும் கூத்து இப்பிடித் தான்னு அவர் கண்டுக்ணுமாக்கும்!''

முத்தையா திகைத்தான். ''ஐயாவுக்குச் சரியா என்னால் பேசமுடியுமா? எப்பிடியும் மடக்கறீங்க."

இன்ஸ்பெக்டர் புன்னகை பூத்தார். வரிசையான அரிசிப்பல் நிசமா? பொய்யா?

'உங்கள் மானேஜர் லேசுப்பட்டவர் இல்லேய்யா, பெரிய புள்ளி."

''என்ன வோய், முத்தையாவுக்கு என்னைச் சிபாரிசு பண்றீமோ?"

''அப்படியில்லே Mr. மானேஜர், நல்லதாவே சொல்வதில் என்ன கெடுதல்? your imege is very good at H. .O yow know!"

''காலணாவுக்கு எனக்கு என்ன ஆச்சு? இன்னும் இருக்கிற இரண்டு வருஷத்தில்?"

''ஏன் இப்பத்தானே, எனக்குத் தெரிஞ்சவரை உனக்கு 55? இதில் இரண்டுவருடம், அப்புறம் extension மூணுவருடம் என்ன ஆச்சு?"

முத்தையா ஒருகும் பிடு போட்டான். முன்னிலும் இது ஒரு பலக்கும் பிடு. தனியாச் சொன்னால் புரியாது. பார்த்தவருக்குத்தான் அந்தத் தனிப் பலம் தெரியும்.

''இன்ஸ்பெக்டர் ஐயா, எங்கள் மானேஜரய்யா எங்கிருந்தாலும் நல்லாயிருக்கணும். இன்னிவரைக்கும் என்குடும்பம் தின்றதே ஐயா இட்ட உப்புத்தான். இருவது வருடத்துக்கு முன்னால் ஐயா இங்கே அக்கௌண்டய்யா வா இருந்தப்போ பண்ணி வெச்ச வேலை, தினம் அவர் பேரைச் சொல்லிக்கிட்டு, செய்திட்டிருக்கேன்''

''பார்த்தேளா, பார்த்தேளா, முத்தையா இன்னிக்கு ஏதோ பெரிய பிளான்லே வந்திருக்கான். முணுக்குன்னா போதும். ஆளை முழுசா முழுங்கிடுவான். நகம் கூடக் கிள்ள மாட்டான்."

''முத்தையா கும்பிடுக்கு இன்னிக்கு எண்ணிக்கையே கிடையாது போலும்."

''எல்லாம் இல்லாக் குறைதானுங்க. பையன் முன்னால் இந்த இடத்தின் பார்வைக்கும், மனுஷாளுக்கும் பழகினால், அப்புறம் ஐயா கருணை அவன் மேல் பட்டால்—"

''பார்த்தேளா, RSL, என்ன சொன்னேன்?''

இன்ஸ்பெக்டர் சுவாரஸ்யத்துடன் முத்தையா பக்கம் குனிந்தார்.

''ஆமாம் இருபது வருடத்துக்கு முன்னால் வேலை பண்ணி வெச்சார் இன்னியே, அப்போ உனக்கு முப்பது வயது இருக்காதா? முப்பது வயதில் பாங்கில் எப்படி வேலை கிடைக்கும்?''

''சரியாப் போச்சு," மானேஜர் மூன்று விரல்களில், பக்தியுடன், செல்லத்திலிருந்து, புகையிலைத் தூளை எடுத்து, இடது உள்ளங்கையில் வைத்துத் தேய்க்க ஆரம்பித்தார். ''அப்போ அவனுக்கு வயது இருபது

தஸ்தாவேஜ் ரீதியா. உங்களுக்குத் தெரியாதா? இங்கே மாத்திரம் இல்லை. நான் வேலை செய்த மற்ற இடங்களிலும் பார்த்தேன். ஒரு கட்டத்துக்குப் பின் பதினெட்டு யானை கட்டி இருந்தாலும் இவர்களுக்கு வயது நகர்வதே இல்லை. ஜாதகம், கீதகம், வயது ருசுவுக்கு எழுத்தில் ஒண்ணும் கிடையாது. இருந்தாலும் கிழித்துப் போட்டு விடுவான்கள் தோற்றம் பார்த்து வயதின் குத்து மதிப்பீடு. டாக்டர் சர்டிபிகேட். கேட்கவே வேண்டாம். அவங்க கிழிச்சுப் போட்ட எழுத்து ருசுத் துண்டுகள் எங்கானும் கிடக்கும். அதைத் தேடிப் பிடிச்சு சுக்கல்களை நீங்கள் ஒட்ட வைக்கப் பார்த்தால், மறுநாள் கழனிக் கட்டில் நீங்கள் துண்டு துண்டாய், உங்கள் சீட்டும் கிழிந்து கிடப்பீர்கள். இவர்கள் எல்லோரும் தேவர்கள். இந்த ரீதியில், இதே முத்தையா, ஒரு நாள் வாடி வதங்கி, ஒடுங்கி, முறையாக அவன் வேலையில் காலமானாலும் அவனுடைய ஆபீஸ் ஏட்டில், அவன் வயது மட்டும் வாடாமல்லியாக விளங்கிக் கொண்டிருக்கும். குடும்பத்துக்கு நிதி திரட்டலாம். கடுஞ்சாவுக்கு பையனுக்கு வேலை ஸ்தாபனத்திலேயே கொடுக்க வேண்டும் என்று கருணை மனு போடலாம், அதை யூனியன் உரிமை பிரச்னை ஆக்கி விடும். எண்ணமும் அதுதானே! பையனுக்கு என்ன கன்னத்தில் வெட்டுக் காயம், புதுசாக் கூடத் தோணுது?''

''அழகு வடுங்க—'' எனக்குப் பீறிட்ட சிரிப்பை, முத்தையாவின் தயக்கமற்ற பதில் தந்த திணறல், வியப்பு அடக்கி விட்டன.

''அடித்தரி சக்கை! அப்படி ஒண்ணு இருக்கா என்ன? அழகு மச்சம் மாதிரியாக்கும்! சோடா புட்டித் தண்டால் கீறிக் கொண்டானா?''

இன்ஸ்பெக்டர், கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டார். ''நேரமாச்சு, காஷ் திறப்போமா?''

''RSL, இன்னிக்கு நீங்களே திறவுங்கள். Cash Checking இன்னிக்கு உங்களுடையது தானே! இன்னிக்கு ஒரு வேளை எனக்கு மலை இறங்கலும் ஏறலும் மிச்ச-மாகட்டும். ஒரு நாள் இந்த மாடிப் படியிலேதான் எனக்குக் கைலாசமோ. நரகமோ. ஒரு வழியா மாரடைச்சுப் போயிட்டால் கைலாசம், இழுத்துப் பறிச்சுண்டிருந்தால் நரகம்- மேலும் வயசாச்சு—''

''என்ன வயசாச்சு ? உங்களைவிட நான் மூணு வயசு மூத்தவன், தெரியுமோன்னோ?"

''உங்களுக்கென்ன, நீங்கள் மாப்பிள்ளை மாதிரி யிருக்கேள் என்னை ஆயிரம் வியாதி பிடுங்கித் தின்கறது. B.P., மூலம், gastrihs, தொண்டை வலி, diabetes, heart போதுமா? வாங்கற சம்பளம், மாத்திரைக்கும் ஊசிக்குமே சரியாயிருக்கு. தவிர இது யம சிம்மாசனம், தலைக்கு மேல் மயிரிழையில் சதா கத்தி. உமக்கென்ன, இக்கா பிடுங்கலா? இது கோணல், குறுகல்னு பக்கம் பக்கமா எழுதி வெச்சுட்டு, கட்டின வீட்டுக்குப் பழுது சொல் லிட்டு, அடுத்த ஸ்டேஷனுக்குப் பேர் சொல்லாமலே, க்ஷேத்ராடனம் போயிடுவேள். நம்ம பாடு தான் தினம் கதி கலக்கம். ஐயோ, கிட்டங்கியில் சர்க்கரை மூட்டை யோடு மணல் மூட்டை அடுக்கியிருக்கோ? எண்ணெய் டின்னோடு, ஜலமும் ஸ்டோரேஜா? நாலு பக்கமும் ஒத்தைக்கல், சுவர் மாதிரி மூட்டை, நடுவிலே கடகடா குடுகுடு பள்ளமோ? போதுமப்பா போதும், நானும் நாளை எண்ணிண்டு தானிருக்கேன். நல்லவேளை இந்த ஒட்டை உடம்புக்கு extension கிடைக்காது, இன்னும் இருக்கும் இரண்டு வருடங்களில் இன்னும் 'லொட்டை' ஆகிவிடும்—"

முத்தையா கை கூப்பினான். ''மானேஜரய்யா, அதுக் குள்ளே நம்ம பையனுக்கு நீங்க விடிவுகாணனும்!"

''முத்தையா, you are impossible. Cash, Cesh, கீழே இறங்கு."

"ஸார்— ஸார்"—

"என்னடா விளையாடறியா, என்கிட்ட கையடிச்சு வாங்கறியா, get out!"

முத்தையாவின் முரண்டல் உண்மையாகவே நன்றா யில்லை. ஏன் சமயம் போது இல்லாமல் அசிங்கமா நடந்து கொள்கிறான்?

[முத்தையா பிறகு சொன்னான். "சும்மாயிரு அம்பி நீ, உனக்கென்ன தெரியும்? இவங்களுக்கெல்லாம், கோயில் சிலை மாதிரி, அப்பப்போ தோத்திரம் பண்ணிக்கிட்டே யிருக்கணும். 'உன்னைப்போல் உண்டா'ன்னு ரெண்டு கையையும் மாறி ஏந்திகிட்டு வரம் கேட்டுக்கிட்டே யிருக்கணும். நம்மமானேசருக்கு என் நச்சரிப்பு எப்பவுமே பிடிக்கும்: இல்லாட்டி ஏதும் நடவாது, எனக்குத் தெரியும். உத்தியோகமா, கொக்கா? நீ என்ன நெனச் சிட்டிருக்கே? இதைக் கேக்கறதுக்கு நேரம், வேளை, போது, வெட்கம் வேறேயா?"]

மாடியில் வங்கி அலுவலகம்.

கீழே இரும்புக் கிராதி அறைக்குள் பெட்டகம்.

தினம் பணத்தை எடுப்பதற்குக் காலையிலும், அலுவல் முடிந்ததும் மாலையில் உள்ளே வைப்பதற்கும். மாடிக்கும் கீழுக்கும் இரண்டு ஊர்வலம் நிச்சயம்.

முன்னால் காஷியர்.

நடுவில் கல்லாப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு, Cash peon.

முத்தையா தான் Cash peon.

பின்னால் மானேஜர்/அல்லது அக்கௌண்டென்ட்

அது ஒருவருக்கொருவர் யதா சௌகர்யம், இல்லை மானேஜர் சௌகரியம்.

(நீதான் போப்பா! எனக்கு உடம்பு தள்ளல்லே!)

இடையிடையே மீட்ட நகையை எடுக்க.

அடகு வைத்த நகையை உள்ளே வைக்க.

முறைப்படி மானேஜரும் கேஷியரும் இறங்கியா கணும். ஆளுக்கொரு சாவி.

(ராமலிங்கம்! இந்தா சாவி! அரை நாணைக் கேட்டவ னுக்கு ஒட்டியாணத்தைத் தூக்கிக் கொடுத்துடப் போறே!)

மானேஜர், காஷியரிடமே தன் சாவியையும் கொடுத் தனுப்புவது அல்லது தானும் கூட வந்து இறங்கி, ஏறுவது இருவருக்குமிடையே உள்ள உறவு, சமயத்தின் உசிதம், வங்கிவிதிகள் வேறுசொன்னாலும், தினசரி நடைமுறை சாத்தியங்களைப் பொறுத்தது.

ஈதெல்லாம் போகப் போகத் தெரிந்து கொண்ட விஷ யங்கள்.

மானேஜர் ஒன்றும் ஏமாளி அல்ல. எதிராளியை எடைபோடுவதில் மன்னன். அதற்கு வெறும் அனுபவம் மட்டும் போதாது. கூடவே அவரிடம், ஏதோ விவரிக்க முடியாத, பிடிபடாத ஒருதனி அம்சமும் அவருக்கு இருந்த தென்றே சொல்லணும். ஏதோ ஒரு பேச்சு த்வனியில், சொல்வதொன்று நினைத்து வந்திருப்பது வேறொன்று என புத்தகத்தின் பக்கத்தைப் புரட்டினாற் போலவே தெரிந்து கொள்ளும் நுண்புலன். ஏதோ சொக்குப் பொடி. அடேயப்பா!

அதுவும் போகப் போகத் தெரிந்து கொண்ட விஷயம் தான்.

மாடியும் நெட்டுக் குத்துத்தான்.

இன்று செவ்வாய்க் கிழமை. செவ்வாயே கொஞ்சம் 'டல்' தானாம். மாதக் கடைசி வேறே.

"அம்பீ இதுதான் சிவராமன் சார். லெட்ஜரில் புலி. கூட்டல் கழித்தல் மறுமுறை 'செக்' பண்ணவே

வேணாம். புள்ளியில் அத்தனை சுட்டி. ஆனால் இவரோட பேச்சு மட்டா வெச்சுக்கணும். அவர் பாட்டுக்குப் பேசிட்டிருப்பார். ஆனால் அவரோடு நாம் பேசினால் பீஸ் கொடுக்கணும்.''

''சும்மா சொல்லிட்டா ஆச்சா? எடு ஒரு காரம் காப்பிக்கு!''

''மாதக் கடைசி சிவராமன் சார்!''

அதனாலேதான் நெய்க்கடலை காப்பியோட விடறது, சம்பளம் இன்னி சாயங்காலம் பட்டுவாடா. அப்போ பார்ட்டி தனியா வெச்சுக்கலாம். ப்ரதர் யாரு?''

''என் அக்கா மகன்''

''ஓஹோ! சோழியன் குடுமி சும்மா ஆடாதேன்னு பார்த்தேன். மு த் தை ய ா , ஆக மொத்தம் உனக்கு எத்தனை அக்காமாருகள்? அப்பப்போ, வாழை மரத் தடியிலே சிங்கக்கன்னு முளைக்கிறமாதிரி!—''

''சிவராமன் சார், நீங்கள் இருந்தால் பூனைக் குட்டியை மடியில் கட்டிக்கிட்டு சகுனம் பார்த்த மாதிரி தான்—அம்பி வாம்மா நீ இப்படி—இது விசுவம்சார் - alround - இவருக்குத் தெரியாத வேலையைக் கத்துக்கத் தேவையில்லை. சிவராமன் எத்தனை அரட்டையோ அத்தனைக்கத்தனை இது அழுத்தம். சிவராமன் ஊர் தூத்துக்கொடி, விசுவம் இங்கேயே சுத்துவட்டாரம் ஆனால் ரெண்டும் ரெட்டைப் பிறவி. அதெப்படின்னா என்னைக் கேக்காதே. அதுதான் அதிசியம். தீபாவளிக்கு ரெண்டு பேரும் ஒரு செட் துணி எடுப்பாக. சட்டையை அவர் மாட்டிக்குவாரு. லுங்கியை இவர் கட்டிப்பாரு. மறுநாளைக்கு மாத்திப்பாங்க. விசுவம்சார், ரெண்டு பாஸ்புக் எடுத்து வெளிலே போடுங்களேன் அம்பி எழுதட்டும்''

''ஓஹா டியூட்டி கூடப் போட்டாச்சா?'' கேட்டுக் கொண்டே மானேஜர் கவுண்டருக்கு வந்துவிட்டார்

"விசுவம், நீ போய் Cash இல் உட்கார். காஷியர். இன்ஸ்பெக்டருக்கு ஒத்தாசையா நோட் எண்ணட்டும், முத்தையா, இன்ஸ்பெக்டரை எதிரே வெச்சுண்டே என்ன உளர்றதுன்னு கிடையாதா? வழியிலே போறவன் வரவன் எல்லாம் Bank record இலே கைவெக்கறான்னு, இனிஸ் பட்டன் எழுதிட்டுப் போகணுமாக்கும்! என் மண்டையை உருட்டணுமாக்கும்!"

"வழியில் போறவன் இல்லேசார். என் அக்கா மகன் சார்!" சிவராமனுக்குக் கிளுக்கென்று சிரிப்பு வந்தது. உச்சந்தலையைப் பலமாகத் தட்டிக் கொண்டான். மானேஜர் கர்ச்சீப்பை எடுத்து மூக்கை அதனுள் சத்தமாக ஊதிக் கொண்டார். இங்கே ஏதோ பாஷை நடக்கிறது. விசுவம் முகத்தை வெறிச்சாக வைத்திருப்பதே ஒரு உச்சரிப்பாயிருந்தது. எனக்கு முத்தையா மேல் எக்கச்சக்க எரிச்சல் மூள்கிறது. எனக்கு வெட்கமாயிருக்கிறது.

"முத்தையா, you are impossible!"

"நாற்பது நாளிலிருந்து பத்துமாதம் வரைப் பிள்ளை தாச்சிக் கணக்கில் அதுக்குமேலே யானைகர்ப்ப மெல்லாம் கூட இருக்குது - எனக்கென்ன - ரகம்ரகமா தூங்குதே. சிவராமன் மேஜை ட்ராயரை இழுத்துப்பாருங்க—"

சிவராமன் நறநறவென்று பல்லைக்கடித்தான்.

"Shut up—"மானேஜர் விசுவம் காலி பண்ணிவிட்ட கௌண்டர் நாற்காலிமேல்ஏறி உட்கார்ந்துகொண்டார். எனக்குத் 'திக்திக்' முத்தையாவை முழங்கைச் சட்டையைப் பிடித்து இழுத்தேன். "நீ சும்மாயிரு அம்பீ!" முத்தையா உதறிக் கொண்டான். "கஸ்டமருங்க பாஸ் புக்குக்குப் பிராணனை வாங்கறது எனக்கல்ல தெரியும்! எதிருக்கெதிர்பட்டாலே திருடன் மாதிரி ஓடி ஒளியற புளைப்பா போச்சு. இது என்தலையெழுத்து"

''ஹெட் ஆபீஸ் கடன்காரன் ஆள் தரமாட்டேன் கறானே முத்தையா! லீவுலே போயிருக்கற அக்கௌண் டண்டுக்குப் பர்த்தியை இதுவரை காணோம். இதோ என்கிறான். அதோ என்கிறோன். அவரும் வரவாரம் திரும்பி விடப் போறார். அவன் சூழ்ச்சியும் அதுதானே! இதோ இனிஸ்பட்டன் வந்துட்டான் காள கண்டன். அவன் கேக்கற ஸ்டேட்மெண்டுகளில்பாதிக்குமேலே நான் மாரடிச்சாகணும். இந்த உடம்பில் ராக்கண் முழிப்பேனா பகல் கண் முழிப்பேனா. என் கதை ஓயற சமயத்துலே உங்கள் வாயிலே வேறே போட்டு எடுக்கறான். அத்தோடு குதிரைவால் மயிரிலே பட்டுக்குல்லா தைச்சுப் போடணுங் கறான்.''

''ஐயா, எல்லாம் நீங்களே சொல்றீங்க. இத பாருங்க மரக்கடை மரக்காயன் ஒரு வீட்டைக் கிரயம் பண்ணி அம்பது ரூவா வீட்டுலே ரொக்கமா வெச்சிருக்கான். எனக்குத் தெரியும். என்னை விட்டும் போவாது—ஆனா, ஸ்டேட் பாங்க் மானேஜர் தலையை அறுத்தகோழியாட்டம் அவனை ஒருவாரமா சுத்தி வராரு. ''முத்தையா, அந்த ஆள் எங்கெங்கே தான் பின்னாலே வரதுண்ணுல்லே''ன்னு மரக்காயன் விளுந்துவிளுந்து சிரிக்கிறான். ''ஐயா, நான் செங்கல்லைத் தொட்டுக்கிட்டிருக்கேன்னு ஒருதரம் வாய் விட்டே சொல்லிட்டேன். ஊஹூம், ஆள்சட்டை பண்ணினாத்தானே!'' ஆனால்அவனும் எத்தினி நாள் இந்த மாதிரி உலுத்தலைத் தாக்குப் பிடிக்கமுடியும். அவர் புது மானேஜர், ஆபிசுலே தங்கறதேயில்லே. ஆள் சுத்தாத இட மில்லை. புதுக்குதிரையும் அவங்க ஹெட் ஆபிஸுலே அவுத்து விட்டிருக்காங்க. களத்துமேட்டுலே நெல் அளக்கறச்சே, தென்னங்கொல்லையிலே தேங்காய்ப்பறியிலே, பணம் கைக்குக் கை மாறுமே அப்பவே அடிமடியைப் பிடிச்சுக் கறார். 'என்னய்யா ? நீங்க அமீனாவா? போலிஸா ?'ன்னு எரிச்சல்லே கேட்டாக்கூட, ''நான் பத்துவருசத்துக்கு முன்னால் ஓடிப்போன உங்க வீட்டுப் பேரன், இப்போ என் பங்குக்கு வந்துட்டேன்!'' மனுசன் சிரிச்சால்,

பேசினால், பொண்ணாப் பிறக்க இருந்த சிசு பிள்ளையாப் பூமியிலே விளுந்துடும்.''

''உன் சினிமா டயலாக் இவ்வளவுதானா? இதுக்கும் மேலேயோ?''

''நான் சினிமாப் போறதேயில்லிங்க''

''நீ போய்க் கையோடு பணத்தை வாங்கிட்டு வந்துட வேண்டியதுதானே!'' மானேஜருக்குக் கைகள் பரபரத்தன. ''நானும் உன்னோடு வரட்டுமா ?''

''அம்பதுக் கெல்லாம் நீங்க எதுக்கு? ஐயாவைப் பாத்தா மிரண்டுடுவான்.''

''அப்போ போயேன்! ஏன் இன்னும் இங்கே நிக்கறே!''

''பாஸ் புக்!'' முத்தையா குரலில் ஒரே சமயத்தில் சிம்ம கர்ஜனை, ஆராய்ச்சி மணியின் வீச்சு, சப்பாத்திப் புதரில் மாட்டிக் கொண்ட ஆட்டுக்குட்டியின் அலறல்:— எப்படி அது? மானேஜர் கூடச் சற்றுப் பின்னடைந்தார்.

''அவன் கொடுத்து ஆறுமாதமாவுது. அவசரமாக வேணும். பாஸ்புக்கையே தேடியாவணும். No Pass book, no deposit'' (அட, இங்கிலீஷ் வேறேயா)''

''முத்தையா, blackmail பன்றே?''

அவர்குரல் பூம் என்று அதிர்ந்தது. அவருக்கு முகம் செவந்து விட்டது.

கௌண்டருக்கு வெளியே நின்று கொண்டிருந்த ஓரிருவர் திரும்பிப் பார்த்தனர்.

ஒரு சங்கடமான மௌனம் அங்கு தேக்கம் கண்டது

இரட்டையர் அவரவர் புத்தகத்தின் மேல் கவிழ்ந்த தலை நிமிரவில்லை.

நான் நின்ற இடத்திலேயே உடல் வெடவெட...

சுவரோரம் ஒரு சுண்டெலி விழுந்தடித்துக் கொண்டு ஓடிற்று.

சாது சாது—சாதுவா?

அடிக்கடி பயன் படுத்தலில் தேய்ந்து போகாத அதிகாரத்தின் விறு விறுப்பு.

வெள்ளி ரிஷப வாகனத்திலின்று உறை கழன்று விழுந்தாற்போல்

உக்கிர வெளிப்பாடு.

முத்தையா முகத்தில் ஒரு அசட்டுக்களை

திருட்டுக்களை

பயக்களை

துணிச்சல்

அசட்டுத் திருட்டுப் பயத்துணிச்சல்களை.

ஆனால் ஆள் ஜக்கவில்லை.

ஸன்னமான குரலில்

''என் கஸ்டத்தை ஐயா கிட்ட இல்லாமே யார்கிட்ட சொல்லிக்க முடியும்?''

கட்டம் உச்சம்.

ஆனால் பாஷை செயற்கை.

ஏன்?

''வேலை பண்ணி வெக்கறது முன் மாதிரியில்லேடா முத்தையா!''

(''ஆதிமூலமே?'')

''முன் மாதிரி எதுதான் இருக்குதுங்க? அப்போ போட்டியில்லே தனிக்காட்டு ராசாவா ஆள்மூலம் அந்த நாள் நான் சொன்னால் விவசாயி கேட்டான்''.

அண்ணே, ரத்தச் சொட்டாட்டம் சேர்த்துத் துட்டைத் துணியிலே சுத்தி அரிசிப் பானையிலே வெக்காதே.

கள்ளுக் கடைக்குக் கப்பமாக் கட்டிடாதே. வட்டிக்கு ஆசைப்பட்டு, ஆப்பம் சுட றவளுக்கும், ஆடு மேய்க்கற வனுக்கும் கொடுத்துட்டு, வாயிலே விரலே வெச்சுக்கிட்டு நிக்காதே. பாங்கிலே போடு என் பாங்கிலே போடு. அதுபாட்டுக்குக் குட்டி போட்டுக் கிட்டிருக்கும்னு சொல்லுவேன். கேட்டான். என் கையிலேயே பண மூட்டையைக் கொடுத்திடுவான். நீயே பாத்து என்ன செய்யணுமோ சேஞ்சுக்கோன்னுவான்.

இப்போ, இன்னிக்கி, இதோ, இந்தத் தெருவிலேயே நமக்கு நாலு சக்களத்திமார் குடித்தனம் போட்டுட் டாங்க. முந்தா நேத்திக் காணாமே போன உன் மாட்டை, நீயும் நானும் என் காரிலே தேடுவோம் வா என்கிட்ட வா— இல்லே என்கிட்டே—' இதென்ன பாங்கியா நடக்குது இப்பொல்லாம்? வெட்கக் கேடு. இந்தப் போட்டியிலே நாம் தலை முழுவாமே நிக்க ணும்னா—

''உன் அக்கா மகன் மரக்காயன் பாஸ் புக்கை எழுதிக் கொடுக்கணும், இல்லையா?''

''அங்கிருந்து தானே ஆரம்பிக்கணுங்க!''

(மானங்கெட்ட முத்தையா
காரியவாதி முத்தையா
சூழ்ச்சிக்காரன் முத்தையா
ஆனால் எனக்காக முத்தையா
ஐயோ என்ன செய்வேன் முத்தையா)

''விசுவம், பாஸ் புக்கைத் தேடி இந்தப் பையன்கிட்டப் போடு, ஒரு மேசையும் நாற்காலியும் ஒழிச்சு இவனுக்குத் தனியாக் கொடு முத்தையா''

''காஷ்லே உக்காரச் சொன்னேளே ஸார்!''

''ஓஹோ, நீ சலசலக்க இதுதான் சமயமாக்கும். காஷ்லே நான் உக்கார்ரேன். அதைவிட இங்கே வெட்டி

முறிக்கறதென்ன? இந்த ஆபிஸை மானேஜரா நடத்த றான், பியூன்னா நடத்தறான்!"

அப்போத்தான் காஷ் கூண்டில் நாற்காலியில் எம்பி உட்கார்ந்தார்.

"Mr. Manager!"

"Yes?"

"இங்கே ஒரு fake note."

"இதோ வந்துட்டேன்."

அவர் பார்வை என்மேல் விழுந்தது.

"தம்பி, இங்கேயே கூண்டு வாசல்லே நில்."

அந்த முகத்தில் கலவரம் இல்லை. நீளோட்டிய நோய், கவலைகள் இம்சைகளில் நாளடைவில் அழகு சிதைந்த முகம். கையில் நான் மோதிரம் பார்க்கவில்லை. ஆனால் மோதிரக்கை. புகையிலையை அடக்கிக் கொண்டாலும் உலகத்தைக் கொட்டை உமிழ்ந்த வாய்.

மானேஜர் ஸார், உங்களால் எனக்கு வேலை கிடைத்தால் கிடைக்கட்டும்; கிடைக்காவிட்டால் போகிறது.

அது என் அதிர்ஷ்டம். ஆனால் உங்கள் புள்ளி குறைந்து விடுமா என்ன.

நான் casablanca நின்ற இடத்திலிருந்தே மானேஜர் அறையில் நடப்பதெல்லாம் கேட்கிறது. தெரிகிறது. அவர் என்ன மெலிந்த குரலிலா பேசுகிறார்? ஒளி மறைவு என்பதே அவரிடம் கிடையாது. அப்படி இருப்பதில் அவருக்கு ஒரு தனிவீம்பு, அகம்பாவமே இருந்ததென்பதைப் பின்னால் கண்டு கொண்டேன்.

"என்னப்பா காசி, கள்ள நோட்டு லிஸ்ட்டைக் கொட்டையாஎழுதி அட்டையில் ஒட்டிக் கண்ணெதிரே தானே தொங்கறது!"

''இதுவேதான் ஸார், கண்ணாயிருக்கோம்! கௌன்டர் கெடுபிடியில்—"

''காசி அது மாதிரி பேசாதே! உன் ட்யூட்டியே அது தானே! நீ நோட்டை எண்ணிண்டே இன்னி மத்தியான டிபனுக்கு ஆத்துக்காரி, தோசையைப் பவுன் நிறத்தில் எடுப்பளா? சட்னி அரைச்சிருப்பாளா, இல்லை மிளகாய்ப் பொடியைப் போட்டு உன்னை விரட்டிடப் போறாளான்னு, மனசை மேயவிட்டுட்டு நோட்டைக் கோட்டை விட்டுட்டையா ?"

காஷியர் ஏதோ பேசவாயெடுத்தார். மானேஜர் அதட்டி அடக்கினார்.

''No no no நீ ஏதேனும் பேச ஆரம்பிக்காதே. மானேஜர் நாலு பேர் நடுவிலே கத்தினார்னு உன்யூனியனுக்கு வேணும்னா எழுதிப் போட்டுக்கோ. Ignorance is no excuse. H.O. இலேந்து வரவாள், வெறும் வாயை மெல்றவாள், ஏதானும் அகப்படாதான்னு. காத்திண்டிருக்கிறவாள். உன் மேல் neglegnce report உன் personal file இல் போச்சுன்னா என்ன செய்வே? இப்போ தண்டம்நீதானே அழப்போறே? அதுக்கென்ன செய்யப்போற?"

''நீங்கதான் ஸார் சமயத்துக்கு—''

''போன மாஸம்தான், சரிசரி நானே உளறிக் கொட்டறேன். RSL, forget the episode நான் செக் எழுதிடறேன்—''

'why should I?''

மானேஜர் நிமிர்ந்தார்.

' I will make good—''

''அப்போ உங்கள் வாதப்படி, என்ன வேணுமானாலும் பண்ணலாம். if it is made good, இல்லையா ?"

''அப்படியில்லை RSL இது. அப்படியிருந்தால் நான் சும்மாயிருக்க முடியுமா ? இது தெரிஞ்சுபண்ணின குத்த

மில்லை. sagree, neglec is not excusable. ஆனால் காசியும் அப்படி அஜாக்கிரதையான மனுஷனுமில்லை. என்னவோ போறாதவேளை, have a heart—''

''No, நான் வேணுமானால் நடந்ததை நடந்தபடி எழுதறேன். கள்ள நோட்டு கண்டுபிடிக்கப் பட்டது, மானேஜர் முன் வந்து தொகையைக் கட்டிவிட்டார்னு. H.O. அவங்க இஷ்டப்படி ரிபோர்ட்டை படிச்சுக்கட்டும்''

கப்சிப்.

விர்ர்ர்ர்ர்

விசிறி.

உன்னிப்பாகக் கவனிப்பவர்களுக்கு மட்டுமே கேட்கும்.

ஆவரவர் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

''Oh, it goes that way!'' மானேஜர் குரல் மெத்து மெத்தென பஞ்சுபோல், வெண்ணெய், உருகலில் உடைவது போல். (லேசான சொடசொடப்பு) ''Never mind. நான் மறக்கச் சென்னேன் என்பதை மறந்துவிடுங்கள். Go ahead. நீங்கள் சொன்னபடியே எழுதலாம். நீங்கள் எல்லோரும் ஏட்டுச்சுரைக்காய். ஃபீல்டுக்கு வந்துட்டா விட்டுக் கொடுக்க வேண்டியது எவ்வளவோ இருக்கு. இல்லாட்டி ஒரு காய் கூட நகராது. ஆனால் அதுபத்தி உங்களிடம் சொல்லி என்ன பண்ண? ராத்தல் எடை மாமிசக்காரன்கள்—''

''Mr Manager, you are imsultig! Remember, man the Inspector!''

''ஆஹா, அதுதான் தெரியறதே! ஆனால் நீங்கள் எனக்கு மேல் அதிகாரின்னு உங்களுக்கு யார் சொன்னது? உங்கள் வேலை இங்கே என்ன 'தெரியுமில்லே? உங்கள் கண்டு பிடிப்புக்களைப் பக்கம் பக்கமாக எழுதலாம். அத்தோடு சரி. உங்கள் எழுத்தோடு எழுத்தாய், அதோ

ஆளில்லாமல், Cashக்குக் காவல் வெச்சிருக்கேனே மூணா மனுஷன், அவனையும் உங்கள் ரிபோர்ட்டில் சேர்த்துக் கொள்ளுங்கள். அவனே பாஸ்புக் எழுதறான். உங்களுக்கு எழுத நிறைய இருக்குது. How lucky you are! முத்தையா!"மானேஜர் மேஜைமணி திடீரென அலறிற்று. முத்தையா பதறி ஓடிவந்தான். இன்ஸ்பெக்டர் மேசையை ரிகார்டு ரூமிலே போடு. கஸ்டமர் வந்தால் அவர் எதிரே பிஸினெஸ் பேசக் கூச்சப்படுவாங்க, Excuse me, from now on, I am a busy man''

முத்தையாவுடன் நானும் மேஜையை ஒரு கை பிடித்தேன்.

ரிகார்டு ரூம் ஒரே ரொட்டி அடுப்பு.

மானேஜர் முத்தையாவுடன் வெளியே போய் விட்டார். மரக்கடை மரக்காயன்?

சிவராமனும் விசுவும் என்காதில் படக் கிசுகிசு:

''அக்கா மகனைக் காப்பி வாங்கிவற அனுப்புவோமா?"

''என்னடா, அவன்தான் சொல்றான்னு நீ—''

''சொன்னால் சொன்னபடித்தான். நான் வேறேயா நெனச்சிக்கணுமோ? வாங்கிண்டு வந்தால் குறைஞ்சு போயிடுவானோ? நாய் வேஷம்போட்டால் குறைச்சுத் தான் ஆவனும்-''

அப்புறம் அவர்களுக்குள் என்னபட்டதோ? சிவராமன் மட்டும் கீழே இறங்கிப்போகிறான்.

விசுவம் காஷ்கூண்டில் சிறை.

இன்ஸ்பெக்டர் ரிகார்டுரூமில் வேகறார். காஷியரும் கூட வேகறார்

நான் பாஸ்புக் எழுதிக் கொண்டே, என் மூளை குப்பை மேட்டைச் சுற்றுகிறது.

இருவரும் (எந்த இருவர்? ஹூம்)ஏன் இப்படி சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறார்கள்? அந்தஸ்து உயர உயர இப்படித்தான் ஆகுமோ?.

ஹெட் ஆபிஸிலிருந்து வந்தவருடன் எல்லோருமே இப்படி முறைத்துக் கொள்ள முடியுமோ ?

இது தைரியத்தில் சேர்த்தியா? அல்ல அசட்டுத் துணிச்சலா? அல்ல விரக்தியா ?

சாவிஸ் இருப்பது இன்னும் இரண்டு வருடங்கள், கொடுத்தால் சரி

கொடுக்கா விட்டால் அதுவும்சரி, விட்டது பிடுங்கல்

அந்தமுனைவரை என்ஃ ஏதும் நடந்துவிடவில்லை.

(இல்லை நடந்துவிட்டதோ ?)

ஆனால் இது பற்றியே எனக்கென்ன ?

பாஸ்புக் அதுபாட்டுக்குப் பக்கம் பக்கமா இழுக்கறது. லெட்ஜரைப் பார்த்து காப்பியடிக்கற சமாச்சாரம்தான். ஆனால் இது லெட்ஜரா, கடலா? கரையைக் காண முடியுமா, முடியாதா ?

மானேஜர் ஏதோ மெட்டை முனகிக்கொண்டு மெதுவாக மாடியேறி வருகிறார். அவர் பின்னால் முத்தையா முகம் மலர்ந்திருக்கிறது. நேரே காஷ் கூண்டுக்குள் போய், நோட்டுக் கத்தைகளைத் தோல் பையிலிருந்து கொட்டுகிறான்.

விசுவம் முகம் சுண்டுகிறது. "ஒத்தையை அள்ளிண்டு வந்துட்டையோன்னோ? கைஇருப்பே லக்ஷத்துக்கு மேல் பூஞ்சைக்காளான் பூத்துட்டுக் கிடக்கு."

"என்ன அம்பீ எந்த மட்டில் இருக்கு? இன்னி சாயந்தரம் கொடுப்பதாச் சொல்லிட்டேன்" என் பதிலுக்குக் காத்திராமலே அறைக்குப் போகிறார். "முத்தையா, டிபன் வாங்கிண்டுவா, இன்ஸ்பெக்டருக்கும் சேர்த்துத்

தான். ஆனால் அவர் இங்கே வேண்டாம். அவர் டேபிள்லே வெச்சுடு"

காரியங்கள் நடக்கின்றன.

அன்றன்றைய முடிவில் நிற்கும் நிகரம் சொல்ப மானாலும்,இந்தப்பாவி போட்டுஎடுப்பதில் பஞ்சமில்லை. ஆறுமாசக் கடன்காரன் கணக்கு. அனுமார் வால் மாதிரி நீண்டுகொண்டே போகிறதே, சொன்னபடி இன்னிக்கே முடியுமா ?

முத்தையா விசுவத்துடன் காஷ்கூண்டில் உட்கார்ந்து கொண்டு நோட்டைக் கட்டுத்தைக்கிறான்.

"Mr. மானேஜர், இன்னிக்கு எண்ணிமுடியாது போல இருக்கே ? ஒத்தையே இன்னும் எண்ணிமுடியவில்லை. ஏன் இவ்வளவு heary cash balance?"

"உங்களுடைய குற்றப் பத்திரிகைக்கு இன்னொரு item கூடித்து I Congratulate you. இங்கே state Bank அவ்வளவு ஒப்புறவு. வாரத்துக்கு ஒருநாள், 6000 piecesக்கு மேலே வாங்க மாட்டான்களாம். ஜனங்கள் பாதிக்குமேலே விவசாயிகள். காசை எண்ணிக் கணக்கில் கட்டறதுக்கு அவனுக்கு உசிரே பிரிஞ்சுபோற மாதிரி, தொட்டுத்தடவிப்பாக்கறதுலே அவன் காணுற சந்தோஷம் அவனுக்குக் கணக்கில் கட்டறதில்இல்லை. பச்சை நோட்டுலே அவனுக்கு எங்கே லேவா தேவி நடக்கும் ?"

"But idle cash!"

"அதான் ஆரம்பத்திலேயே சொல்லிட்டேனே! ரூல பேசலாம், ஆனால் அத்தனையும் ஏட்டுச்சுரைக்காய். field க்கு வந்தால் எல்லாம் எதிர்மறை. இன்னும் கேட்டால், நடைமுறையில் நடக்கக் கூடியதுதான் ரூலும் கூட. Bank bible க்கும் Practicability க்கும் துருவதூரம். அப்பப்போ, மதறாஸுக்கா, பக்கத்துக்கு ப்ராஞ்சுக்கோ, சொந்தக்காரியமாவோ ஆபிஸ் வேலையாவோ

போறப்போ வரப்போ, அடப்பம் மாதிரி முடிஞ்சதை அக்குளில் இடுக்கிண்டு, கணக்கில் கட்டின வரை லாபம். அதிலேயும் Procedure பிரகாரம் நடக்கணும்னா, நடக்கிற காரியம் எதுவுமேயில்லை. Look here, இது கம்ப்ளெயின்ட் இல்லே, இருக்கிற நிலவரம் இப்படி, இப்படித்தான். This is field, not H. O.

"இப்போ நடக்க வேண்டியதைச் சொல்லுங்கள், இன்னிக்குக் காஷ் எண்ணி, முடியாது."

"நான் என்னசெய்யணும் சொல்லுங்கோ. ஏற்கனவே ஆள் பற்றாக் குறையில், காஷியரை உங்களுக்கு உதவிக்குக் கொடுத்துட்டேன். முன்னால் வந்து போனவங்க, சாதாரணமா, ஒத்தையை அங்கங்கே எடுத்து Testcheck பண்ணுவாங்க, தூக்கி எறிவாங்க, "Is it alright mister? 'yes sir' 'O K." இப்படிப் போறவங்களும் இருக்காங்க. உங்கள் மாதிரி,ஒரொரு கட்டா காதை நிமிட்டிக்கிட்டு இருக்கிறவங்களுமிருக்காங்க. அவங்கவங்க சுபாவம், style, நம்பிக்கை. இதில் நான் தலையிடலாமா? You are a ruleman. alright, உங்களுக்குத் தோணினபடி நீங்க செய்யுங்க."

"இவ்வளவு காஷ் கையிருப்பிலே கூடாது."

"அப்பவே சொன்னேனே, அது வேறே ப்ரச்னை. உங்கள் ரிபோர்ட்டில் தான் வரப் போவுதே, நான் பதில் எழுதிக்கிறேன். இன்ஸ்பெக்டர் சார், இது மண்டைச்சளி ஓயாத சமாச்சாரம்."

இன்ஸ்பெக்டர், மேல் உதட்டை மீசை நுனி இருக்க வேண்டிய இடத்தில் [இல்லை], யோசனையாகத் திருகிக் கொண்டே

"இன்னிக்கி எண்ணி முடியாது இதை இப்படியே பூட்டி Seal வெச்சுடறேன். இன்னி ரொக்கத்தை நீங்கள் தனியாப் பூட்டிக்கங்க."

''அப்படித்தான் செய்யவேண்டும். சரி. காசி, போய் Cash க்ளோஸ் பண்ணு''

''Mr. Manager, கோவிலுக்குப் போவலாம்னு இருக்கேன் !"

''very good. முத்தையா அழைச்சுண்டு போவான். அவனை லாட்ஜுக்கு அனுப்பறேன்"

''Thank you.''

நான் இன்னும் Pass book எழுதிக் கொண்டிருக்கிறேன். சிவராமனும் விசுவும் ஏதோ கிசுகிசு. இருவர் முகத்திலும் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது. அவர்கள் எதிரே முறம் போல் ஒரு பெரிய ரிஜிஸ்தர் விரித்தபடி. ரெவின்யூ ஸ்டாம்ப் அங்கங்கே அந்தப்பக்கத்தில் ஒட்டியிருக்கிறது.

சம்பளப் பட்டியல் போலும் !

சற்று நேரம் கழித்து ஊர்வலம்.

முன்னால் காஷியர்.

அடுத்து முத்தையா, தலையில் பணப்பெட்டி, அதன் மேல் ட்ரே (தட்டு) யில் இன்றைய நோட்டுக்கள், கட்டுத் தைத்தவைகளும், தைக்காதவையுமாக வழிந்தன.

அடுத்து இன்ஸ்பெக்டர்.
ஊர்வலம் படியிறங்குகிறது.

மெதுவாக.

அப்போது தற்செயலாக என் தலை நிமிர்—

எனக்கு உடல் பூரா குப்பென்று வேர்த்துவிட்டது. கைகள் வெலவெலத்துக் கையைத்தூக்க முடியல்லே. வாயடைச்சுப் போச்சு. உடம்பு கல்லாக் கனத்துப் போச்ச.

சற்று நேரம் கழித்து முத்தையா மூணு தாண்டலில் மேலே தாவி வந்தான்.

பின்னால் நிதானமாய்க் காஷியர் ஒரொருபடியாக ஏறிவந்தார், மானேஜர் மேஜைமேல் அவர் சாவியை, கண்ணாடித் தகடின்மேல் அவர் வைத்ததும் 'க்ளிங்' கென்று இனிய ஓசை பண்ணிற்று.

என்னை அழுத்திய பாராங்கல்லை முழுமூச்சில், முதுகிலிருந்து தள்ளிவிட்டு, கால்களை என்னோடு இழுத்துக் கொண்டு மானேஜர் எதிரே போய் நின்றேன்.

''என்ன அம்பி முடிச்சுட்—என்ன பேய்கீய் அறைஞ்சுட்டுதா உனக்கென்னகேடு ?"

என் நாக்கு வாய்க்கூரையைத் துழாவித்தவித்தது.

''என்னப்பா உடம்பு சரியில்லியா ?''

''தி-ழுட்-டு-தி-ழுட்-டு—"

''திருட்டா ? முத்தையா இங்கேவா—உன் அக்கா மகனைப்பார்—என்ன உளர்ரான் ?"

''திழுட்டு'' முத்தையா, திகைப்புடன் என்னைப் பார்த்தான்.

''என்ன, எப்படி? எதை? என்ன சொல்லவரே? இப்படி உட்காந்துக்கோ, பரவாயில்லே. முத்தையா கொஞ்சம் தண்ணி கொண்டுவா.''

''எனக்குப்பயமாயிருக்கு."

''என்னபயம் ? நாங்கள் எல்லோரும் உன்னைச் சுற்றியிருக்கோமே!"

''ஸார், இன்ஸ்பெக்டர் ஒரு கட்டு எடுத்து பேண்டில் திணிச்சுண்டார்".

இஸ்பெக்டரா ?- முத்தையா, இதென்ன ஸ்டன்ட்? இந்த மறைலூஸையா, வேலைக்கு வெச்சுங்கணுங்கறே? இவனை வெக்கற இடம் வேறப்பா—'

எனக்குக் கண் துளும்பிற்று ஆம், என்னை யார் ஏன் நம்பணும்? எனக்கென்ன, நான் வாயை மூடிண்டிருக்க வேண்டியவன் தானே ?

Damn it! நீ ஆண்பிள்ளையில்லே ? Stop it!"

மூக்கை உறிஞ்சினேன்.

''ஸார், ஸத்தியமா—,'

''ராமா ராமா!—" மானேஜருக்கு உடல் குலுங்கிற்று செவிகளைப் பொத்திக் கொண்டார்.'' இந்தக் காலத்துப் பசங்களுக்கு சத்தியம் தண்ணிப் பட்ட பாடாப் போச்சு. நமக்கு அதைச் சொல்லவே நெஞ்சு அஞ்சறது. ஆனால் இப்போ உனக்கு ஆணை வெக்கறதைத்தவிர வேறே வழியில்லை. இன்ஸ்பெக்டர் எங்கே ?"

''அவர் அப்படியே லாட்ஜுக்குப் போயிட்டார். மேலே ஒரு நடை வருவானேன்னு—'' இது காஷியர்.

''சரி என்ன நேர்ந்தது ? திருப்பி விவரமாச்சொல்லு"

''முன்னாடி காஷியர் ஸார், நடுவுலே முத்தையா தலையில் காஷ்பெட்டி, அதுமேலே ட்ரே—''

''ஒஹோ அப்படியா ? புரிஞ்சுபோச்சு. இத்தோடு எத்தனாந்தடவை எச்சரிச்சிருக்கேன் காசி ? கீழேயிருந்து இன்னொரு பெட்டி கொண்டுவரத்துக்கென்ன ?''

முத்தையாவும் காஷியரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு புலிக்கெதிரே உள் ஒடுங்கிப் போனார்கள்.

''உடம்பு வணங்கல்லே, இல்லியா ? பணத்தை எடுக்க வழி காட்டியவன்களே நீங்கள் ரெண்டு பேரும் தான். இப்போ நேரமில்லை, பின்னால் கவனிச்சுக்கறேன். என்ன போச்சு, எத்தனை போச்சு பார்க்கணும். கீழே போய் tray ஐக் கொண்டு வாருங்கள்."

தட்டைக் கொண்டு வந்து பதிவுப் புத்தகத்துடன் சோதித்துப் பார்த்ததில், ஒரு பத்து ரூபாக்கட்டு Missing.

''என்ன, ஒரு ஆயிரம் out ஆ ? என்ன காசி, உன் பெண்டாட்டி கழுத்திலிருந்து தான் வசூலிக்கணுமா ? கழுத்து தாங்குமா ?"

(ஏன் இவ்வளவு கொடூரமாயிருக்கார் ?)

மலேரியா ஜுரம் வந்தாற் போல் காஷியருக்கு உடல் வெட வெட வென உதறிற்று.

மானேஜர் பேசினார் என்று சொல்ல மாட்டேன். வார்த்தைகள் வாயினின்று உதிர்ந்து கொண்டிருந்தன. தனித் தனிப்பந்துகள், உயிர்கள், த்வனிகள். இந்த அமைதி உள் கொந்தளிப்புக்கு போர்வை போர்த்த அமைதி. பயமாயிருக்கு. வசியமாயிருக்கு. சுவாரஸ்யமா யிருக்கு. இது பிய்த்துக் கொண்டால் என்னவாகும் என்பதை நினைக்கவே—ஊஹூம் வேண்டாம்.

இதை எடுத்ததற்கோ. தானாக இறக்கை முளைத்துப் பறந்து விட்டதற்கோ என்ன ருசு ? அடையாளமா நம்பரா ? எல்லாம் பத்து ரூபா நோட்டுக்கள்... யார் எடுத்தது ? யார் வேணுமானாலும்— அம்பி சொல்றான். ஆனால் அம்பி தானே ? அம்பி வேத வாக்கா ? அம்பி யார் ? இவனை நானே இன்னிக்குத் தானே முதலாப் பார்க்கிறேன், இன்று Cash balance Register ஐக் கொண்டு வந்து என் முன்னால் வைத்ததும் நான் எப்போதும் போல் ஒரு கண் மூடிக் கையெழுத்துப் போட்டுட்டேன். நான் மட்டும் என்ன ஒழுங்கா? எல்லாம் ஐயமுள்ள வரை பயமில்லை என்கிற அசட்டுத் தைரியத்தில் தானே போயிண்டிருக்கு. ஆனால் ரூபா எப்போப் போச்சு, எப்படிப் போச்சு ? இந்தப் பணத்தை Inspector check பண்ணத் தேவையில்லை தெரியு மோன்னோ ? நேற்று Closing balance உடன் அவர் சரி தெரியுமோன்னோ ? இன்னி Shortage அவரைப் பாதிக் காது, தெரியுமோன்னோ ?''

தெரிகிறது, எனக்கே தெரிகிறது. ஸார், வகுப்பல்லவா நடத்துகிறார் !

''முத்தையா, மஹானுபாவா, தவிக்கிறையே என்ன?''

''பத்து ரூபாக்கத்தைத் தச்சதே இன்னிக்கு ஒண்ணு தானுங்க. அங்கேயும் இங்கேயுமாப் போனோமா, அதுக்கு மேலே நேரமில்லை. அதனாலே காணாமல் போன கட்டு அடையாளம் எனக்கு நல்லா நெனப்பு இருக்கும்.''

''சரி முத்தையா, உன் மகன் நிசம் சொல்றான்னு என்ன நிச்சயம்? தூங்கி வழிஞ்சு கனவு கண்டானா? இல்லை சித்தப்ரமையா? இல்லே படா கில்லாடியா? நானே அவனைக் Cash கௌண்டருக்குக் காவல் வெச்சேன். எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள். எல்லாரும் சந்தேகத்துக்குரியவர்களே. சரி சரி நீ இப்போ ஏதேனும் ஆரம்பிக்க வேண்டாம். உன் பழைய பல்லவி 'உன் அக்கா மகன்'— இப்போ என்ன செய்யலாம்?'' மேஜை மேல் விரல்கள் தாளம் போட்டன. பெருமூச்செறிந்து ஏதோ தீர்மானத்துக்கு வந்தவராய் எழுந்தார்.

''இங்கு நாம் உட்கார்ந்து வெறும் வார்த்தைகளை மென்று தின்று கொண்டிருக்கையிலேயே, காணாமல் போன நோட்டுக்கள் கடைத் தெருவில் பங்காகி விடும். முத்தையா, நீ உடனே, இன்ஸ்பெக்டர் லாட்ஜுக்கு சைகிளை மிதி. அவர் கோவிலுக்குப் போவணுமாம். நீ இல்லாமல் அவர் பறந்து போவாதபடி அவர் மேல் உஷாராயிரு. நான் வரதுக்கு முன்னாடி அவரை எங்கே யும் போகவிடாதே. ஏதாச்சும் பேச்சுக் கொடுத்து நிறுத்திவை. அப்பறம் போற வழியில்-கொஞ்சம் கிட்டவா''— காதோடு ஏதோ. முத்தையா தலையைப் பலமாக ஆட்டி விட்டுச் சிட்டாய்ப் பறந்தான்.

'Cashier, ஒரு டாக்ஸி பிடியும். இதன் செலவு உம் தலையில் தான். அத்தோடு விட்டால் உன் அதிர்ஷ்டம். எனக்கும் சேர்த்து ''ஆபதாமப ஹர்தாரம்'' சொல் லிண்டிரு, நான் திரும்பி வரும் வரை. அம்பி நீ என்னோடு வா. சிவராமா, விசுவம் நீங்கள் இருவரும் இங்கே காவல்

இருங்கள். எல்லாம் போட்டது போட்டபடிக் கிடக்கு—இது emergency. Over time இல்லே.''

இருவருக்கும் முகம் ஒரு முழம் விழுந்தது.
இரட்டையர்.

டாக்ஸி கிளம்பி இருவரும் சற்று நேரம் மௌனமாக இருந்தோம். நான் என் மூலையில் ஒடுங்கிக் கிடந்தேன். இதுவரை எங்கே ஏறியிருக்கிறேன்? வெண்ணெய்மேல் வழுக்கற மாதிரி. இதுபோலும் ஒரு சுகம் இருக்கா? இத்தோடு, காதுக்கே கேட்காத ஒத்துமாதிரி 'கும்' முனு ஒரு சுருதி.

''அம்பீ, உன் பேச்சை நம்பி ஒரு பெரிய சூதாட்டத்தில் இறங்கியாச்சு. இது வெடிச்சுதுன்னா, யார் யாருக்கு மொக்கு மோறை எப்படி உடையப் போறதோ என்னையும் சேர்த்து? யார் பணம் எடுத்ததுக்கும் நீதான் சாக்ஷி. இப்போ கேள்விகள். நீ பதில் சொல்ல வேண்டாம். ஆனால் கேள்விகள்.

மூணாம் மனுஷன் நீ, வங்கி அலுவல் நேரம் தாண்டி, வங்கியில் உனக்கென்ன வேலை?

முத்தையாவும் நீயும் உள்கையாவோ, அல்லது முத்தையாவுக்குத் தெரியாமலே நீ மட்டுமோவோ, அவன் நோட்டுத் தைக்கும் போதோ, சிவராமனுக்கும் விசுவத்துக்கும் காப்பி வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கும் சாக்கில்—பேச்சுக்கு — இல்லை, ரெஜிஸ்தர் ஏதாவது அவர்களுக்கு கொண்டு வந்து கொடுக்கும் சாக்கில் — இல்லை 'பேனாவுக்கு மசி ஊற்றுகிறேன்' சாக்கில்— எத்தனையோவில் இதுவும் ஒன்று, எல்லாரும் 'அஸால்ட்டா'யிருக்கும் சமயம் பார்த்து, அதுதானே உங்கள் பாஷை, உன் கை 'ஜாலக்' கை ஏன் காண்பித்திருக்க முடியாது? உன்னைப்பற்றி யாருக்கு என்ன தெரியும்? உண்மையில் முத்தையாவுக்குத் தெரியுமா?''

எனக்கு நடுமுதுகு சில்லிட்டது. என் முட்டாள்தனம் என் வாய் எக்கேடு கெட்டுப் போகட்டும்னு ஏன் எனக்குக் கொடுத்த வேலை பாஸ்புக் எழுதுவதோடு நிற்கவில்லை? இன்றிரவு நான் போலிஸ் 'லாக்கப்'பிலா ?

— ''என்னைச் சோதித்துப் பார்த்துக்கொள் என்பாய் நீ எடுத்திருந்தால், பணம் உன் உடம்பிலேயே இன்னும் இருக்க உன் உடம்பு என்ன அவ்வளவு முட்டாளா? எந்த ஜலதாரையிலோ, பெருச்சாளிப் பொந்திலோ—இரண்டுக்கும் கட்டிடத்தில் குறைவில்லை.

அடுத்து முத்தையா, காஷைக் காய்கறிக் கூடை தூக்கினது பெரிய தப்பு. ஏசல் உடைசல் தப்பு இல்லை. மஹா மஹாதப்பு இது. அம்பலமானால் யார் யாரை எப்படி மாட்டி விடுமோ? நோட்டுக்கத்தை நழுவித் தற்செயலாக ஏன் கீழே விழுந்திருக்கக் கூடாது? இருட்டில் இசைகேடாய், கண்ணுக்குச் சட்டென்று படாமல் இன்னும் விழுந்த இடத்திலேயே கிடக்கலாம். எலி, இதற்குள் இழுத்துக் கொண்டும் போயிருக்கலாம். இதுவும் தற்செயலாக நேர்ந்ததா? திட்டம் போட்டு நடந்ததா? 'விசாரணைக்குரிய விஷயம். அக்கா மகன் நீ மேடையில் தோன்றியிருப்பதால் சந்தேகம் இன்னும் பலம்.

Cash Balance Ragister ஐ என் முன் வைத்ததும் நான் வழக்கம் போல் ஒரு கண் மூடிக் கையெழுத்துப் போட்டது என் தப்பு. ரொக்கத்தை என் கைப்பட நான் எண்ணி Test Check ஏனும் பண்ணி, நான் கீழே துணை போய் Stock Room இல் Safe இல் வைக்கும்வரை உடன்காவல் என் கடமை. நான் மேலே தங்கி விட்டேன். உடம்பு என்றால் தாத்தன் ஒத்துப்பானா? 'வேலையை விட்டுப் போ. அல்ல, செத்துப்போ" நியாயமும் அதுதானே!

காசி எப்படியெல்லாம் மாட்டிக்கறான்! போன மாதம்தான் ஒரு over payment அவனுக்கு இப்போ ''வளை சரியாயில்லை. இதோ முத்தையா வாசலில் நிக்கறான். இறங்கு. நீ என்னோடேயே இரு. நீயா வாயைத்

திறக்காதே. 'றாபணா, — இன்னிக்கு மாடி ஏறும் ராசி போல இருக்கு. முழங்கால்விட்டுப் போறது. என்ன முத்தையா? பக்ஷி பறந்தோடிப் போயிட்டுதா?"

"இல்லே சார் 'பின்னாலேயே அவருக்குத் தெரியாமல் பத்தடியிலே தொடர்ந்து வந்தேன். நேரே இங்கேதான். முதன் மாடி ரூம் 45. கதவு மூடிக்கூட இருக்கவில்லை."

நாங்கள் உள்ளே நுழையும்போது இன்ஸ்பெக்டர் அப்போத்தான் சட்டையைக் கழற்றிக் கொண்டிருந்தார். (மனுஷன் தினப்படிக்குப் பனியனைத் தோய்க்க மாட்டானா? அழுக்கு).

"Hallo RSL!"

"யார்—ஓ நீங்களா? வாங்கோ வாங்கோ Manager sir, it is a great pleasure."

"RLS, உங்களுக்குத் தெரியாததா? கலியாண மண்டபத்தில் பிள்ளை வீட்டாரை மாடியில் இறங்கியிருப்பாங்க. பெண்வீட்டார் வழக்கம் போல் கீழே ஒவ்வொரு சடங்குக்கும் மேலே போய் குங்குமம் அக்ஷதை நீட்டி அழைப்பாங்க அதுபோல் Diplomatic vist. இப்போ என்னுடைய turn "பொய்யை எப்படிப் பெருக்கிக்கிட்டுப் போகிறோம். பார்த்தீங்களா? குழந்தைங்க செப்பு வெச்சு அப்பா அம்மா விளையாடுது. நம்ப என்ன விளையாடறோம் ?

இன்ஸ் பெக்டர் புன்னகை புரிந்தார். "you are always welcome. என்ன சாப்பிடறீங்க? CooldrinKs? Coffee? Tea?"

"No, no, no you are our guest. தவிர பொண்ணுக்கு இப்பத் தான் கலியாணம் பண்ணியிருக்கீங்க. உங்களுக்கு, அனாவசியச் செலவே லெக்கக் கூடாது. முத்தையா மூணுகாப்பி கொண்டு வரச்சொல்..."

''என்ன ஜோக் அடிக்கறேளா? பெண்ணுக்குக் குழந்தைகூடப் பிறந்தாச்சும் வோய்!''

''அப்படியா? சந்தோஷம். ஆனால் ஒண்ணு. பெண்ணுக்குக் குழந்தை பிறந்துட்டதோடு பெண்ணின் கலியாணக் கடன் தீர்ந்து போச்சா? தப்பா எண்ணிக்காதிங்க. நாம் எல்லாம் என்ன குபேரக் குட்டிங்களா?''

''நீங்கள் சொல்றதென்னவோ வாஸ்தவம் தான் இன்னும் இரண்டுபேர் வேறே காத்திட்டிருக்காங்க, இந்த பிரச்னையே ஒரு தீராக் கடன் தான். ஆனா அதைப் பத்தி இப்போ என்ன? இந்தப்பையன் ஏன் இங்கு வந்தான்?''

''துணைக்கு அழைச்சுண்டு வந்தேன். I am a sick man. yow know.''

''பையா, எங்கேயாவும் போய் உக்காந்துகோ. எத்தனை நேரம் நிற்பாய்?''

''பையன் தானே, நிக்கட்டும்.''

''Mr. Manager இன்னிக் காலை unpleasant epcsode. let us forget''

''Oh no. no, தப்புத் தப்பு, நான் சமாதானம் செய்துக்க வந்தேன்னு நினைச்சுட்டீங்களா? yow ore free to write what you like and you should do your duty''

''please: oh, dont make a fuss.''

''ஏன், திடீர்னு இந்த மன மாறுதல்?''

''எல்லாம் பழகின தோஷம் தான். ஒரு நாளா, இருபது வருஷமாவது இருக்காது? தவிர, Yow have got a good image at H.O. அதை நான் ரிபோர்ட் எழுதி அழிச்சுட முடியுமா? அழிக்கலாமா?''

''எல்லாம் நீங்க சொல்றதுதான்.''

No no, அதிகாரிகள் அந்தந்த டிபார்ட்மென்டில் ஒவ்வொரு மானேஜரைப்பத்திப் பரிமாறிக் கொள்ளும்

போது, உங்களைப் பத்தியும் காதிலே விழறதே! காதைப் பொத்திக் கொள்ள முடியுமா?"

"RSL, நீங்க இப்படிச் சொல்லும்போது நாங்களும் Managers' Conference இல் H. O சிப்பந்திங்களைப் பத்திப் பேசிக் கொள்வது, பையன்கள் வாத்தியாரைக் கோட்டா பண்ணுவது—When the cat is away, the mice will play எங்கே நாம் மாறி விட்டோம்? உங்களைப் பத்தியும் பேசியிருக்கோம்."

இன்ஸ்பெக்டர் சுவாரஸ்யத்தில் தலை தனி நிமிர்ந்தார். கண்களில் வினா.

"எதைன்னு வரிசையா சொல்ல முடியும்? ஏதோ ஒண்ணுரெண்டு சட்டுனு மேல்வந்த ஞாபகத்தில் நிக்கிறது மட்டும். இது சீர்காழி மானேஜர் சொன்னது. நீங்க அங்கே போனதும் நல்ல சலூனைப் பத்தி விசாரிச்சீங்களாம். பியூன் உங்களை அழைச்சிட்டுப் போய் உள்ளே அந்த சிம்மாஸனத்துலே குந்த வெச்சுட்டு வெளியிலே காத்திருந்தானாம். அதெல்லாம் அந்தப் பக்கம் போனால் ஒரு மரியாதை. Madras இலே நம்மைச் சீந்துவனா. சொல்லுங்க, பார்க்கலாம்."

சரி, விஷயத்துக்கு வருவோம், ஆபிஸ்பியூன் வெளியிலே காத்திருந்தானா? உங்களுக்கு முடிவெட்டி, ஸ்னோ போட்டு கழுத்துச் சொடக்கு, தூசி தட்டி, சோடசோபசாரங்கள் எல்லாம் செய்வானே-எல்லாம் ஆனபிறகு. அந்த special இளிப்புடன் கையை நீட்டினால்-நீங்கள் அவனுக்கு மேல் ஷோக்கா எழுந்து நின்று சொக்காயை உதறி விட்டுக்கொண்டு ஒருதடவை கண்ணாடியில் வகிடுசரி பார்த்துட்டு- இதெல்லாம் அவர் பாஷை, நேரே பார்த்தையான்னு என்னைக் கேளாதேயும் - சீர்காழிமானேஜர் அமெச்சூர் நடிகர் தெரியுமோன்னோ, நம்ம HOவிலேயே annuval day அன்னிக்குக் 'கப்' வாங்கியிருக்கார்—வாசலில் நிற்கும் பியூனைக் கைக் கட்டைவிரலால் சுட்டிக்காட்டி

னேளாம்: wind mill மாதிரி wind mill நான் பார்த்த தில்லே, அது எப்படியிருக்கும் ? அவர் பிள்ளை England returned, அவன் பார்த்திருப்பான், எனக்குப் பிள்ளையே கிடையாது— அவர் உங்கள் ஜாடையில் அப்படிக் கை காட்டிக் காண்பிச்சபோது, Conference table ஏ 'கொல் Regional Manager சிடுமூஞ்சு. அவரே வாய் விட்டுச் சிரிச்சுட்டாரு.''

எனக்கு நா வரண்டது. மனுஷனுக்குப் பைத்யம் பிடிச்சுட்டுதா ? என்னை எச்சரித்து விட்டு இவர் ஏன் 'றாபணா' பண்றார் ? அல்லது அதிகார வர்க்கத்தின் விளையாட்டே இப்படித்தானா ?

இன்ஸ்பெக்டர் முகத்தில் 'ஈ' ஆடவில்லை.

''உடனே ஹைதராபாத் மானேஜர், 'ஓ அந்த ஆளா ? சுத்த மோசம்னா ! அவர் என் ப்ராஞ்சுக்கு வந்த போது ஒரு ஆயில் மில் Stock checkingக்குப் போனோம். Inspection முடிஞ்சு ஆளும் அடுத்த campக்குப் போயாச்சு அப்புறம் அந்த client என்கிட்ட சொல்றான், பேச்சு வாக்கில்: இன்ஸ்பெக்டருக்கு ரெண்டுடின் fast passenger இலே 'புக்' பண்ணேனுங்க. ஒண்ணு Madras ஒண்ணு மதுரை. ரெண்டும் ஓ. சி. கிராக்கி. சொன்ன மரியாதைக்கு உடனே அனுப்பிட்டேன். பைசாவுக்குக் காத்திட்டிருக்கேன், ஐயா சொல்லிக்காமலே போயிட்டாரு போல இருக்கு—.''

இந்த சில் மிஷம் எங்கேயும் நடக்கறது. நம்மால் முழுக்கவும் தடுக்க முடியாது. எனக்குத் தெரியும்.

''Madras booking புரியுது. அவருக்கு ஹெட்கு வார்ட்டர்ஸ் அங்கே, ஆனால் மதுரை booking— அது ஏன் ?''

''அவர் பெண்ணை மதுரையில்தான் கொடுத்திருக் காளாமே ?'' இதெப்படி ? கரகோஷமே வாங்கிட்டேள் போங்கோ, R. S. L. !''

எனக்குச் செவியில் ஆவி பறந்தது. அங்கு விட்டுத் தப்ப வழியில்லை.

மேலும் சொல்றான், Hyderabad man : "H.O ஆள்னா கஸ்டமர்ஸ் ஏன் பயப்படறான்களோ தெரியல்லே. இவங்க வந்த இடத்தில் இதைப் பண்றேன் அதைப்பண்றேன்னு clientக்கு ஆசை காட்றது. இல்லாட்டி அதைப்பண்ணிடுவேன் இதைப் பண்ணிடுவேன்னு பயமுறுத்தறது, அகப்பட்டதைத்தட்டிண்டு போறது— அவங்களுக்கோ படிப்பு வாசனை கிடையாது. அவங்ககிட்டத்தான் லக்ஷ்மி தாண்டவமாடறாள். வியாபாரத்தில் அடிக்கிற கொள்ளை பத்தாதுன்னு லாட்டரிச் சீட்டும் அவங்களுக்கேதான் விழுது. இந்த H.O. people வாராங்களே, இவங்க எழுதற ரிபோர்ட்டுக்குக் குத்தற ஊசியைத் தனியா மார்க்கெட்டில் வாங்கக்கூட இவங்களுக்கு அதிகாரம் கிடையாது. நம்ம clientக்கு அது எங்கே தெரியறது? சொன்னாலும் எங்கே புரியப் போகுது ?"

'கப்சிப்'

கதவைத்தட்டும் சப்தம்

மானேஜர், கோபத்துடன். "யாரது ?"

கதவைத்திறந்து கொண்டு உள்ளே வந்து P.C. 433 முறுக்காக ஒரு 'ஸெல்யூட்' அடித்து நின்றான்.

"நீங்க கூப்பிட்டாங்களாமே."

இன்ஸ்பெக்டருக்கு முகம் வெளுத்தது.

"ஆமாம், கொஞ்ச நேரம் வெளியே நில். அப்புறம் கூப்பிடறேன்."

இன்னொரு Salute Right. about turn March. கதவு மூடிற்று. என்னை அறியாமல் என் கை என் கன்னத்தைத் தடவிக் கொண்டது. இன்னும் தழும்பு கூசிற்று.

"R. S. L. excuse me. இவங்களுக்கு Manners, வேளை சமயமே கிடையாது. முக்கியமா ஏதோ பேசிட்டிருக்கோம்—"

இன்ஸ்பெக்டர் முகம் கறுத்து விட்டது. என்னைச் சுட்டிக் காட்டி, "இந்தப் பையனை இங்கே வெச்சிண்டு, What is all this? இவன் ஏன் இன்னும் இங்கிருக்கிறான். Get out!"

மானேஜர் என்னைக் கண்ணெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. "RSL அவன் வழிக்குப் போகாதீங்க. உங்களுக்கு இவனால்தான் இப்போ பெரிய டேஞ்ஜர்."

"What is all this beating about the bush?"

"அவன்தான் Key-witness."

"எதுக்கு?"

"நான் சொல்ல மாட்டேன். நான் ஏன் சொல்லணும்? உங்களுக்கே தெரியும்."

இன்ஸ்பெக்டர் என் மேல் திரும்பினார். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "என்னடா பார்த்தே? ராஸ்கல்?"

நான் வாயெடுத்தேன். என்ன சொல்லவென்று எனக்கே தெரியாது.

"Shut up!" மானேஜர் போட்ட கர்ஜனையில் வாயடைச்சுப் போச்சு.

"RSL, அவன் வாயைத் திறந்தால் நீங்கள் காலி. ஏன், நாம எல்லோருமே சந்தி சிரிச்சுப் போவோம் Dynamite, அவனை வாய்க்கு வந்தபடி பேசாதேயும். உமக்கு வேளை சரியாயில்லை"

இன்ஸ்பெக்டர் Side pocket-ஐ அமுக்கிக்கொண்டார் (அதன் பெயர் Involuntary reaction ஆமே! பின்னால் கற்றுக் கொண்ட பாஷை) கட்டு-அதிகப் பிரசங்கி

தலையை நீட்டிற்று. இதோ இருக்கேன். மானேஜர் கையை நீட்டினார்.

''என்ன?''

மானேஜர் புன்னகை புரிந்தார்.

''இதுவா?'' இன்ஸ்பெக்டர் நோட்டுக் கத்தையை வெளியே எடுத்தார்.

''Exactly. அதுவேதான், the very thing.''

''Mister, I will sue you personally and the Bank for defamation. என்னென்று நினைச்சுண்டிருக்கேள்? இதை நான், என் east camp-இல் draw பண்ணினது.''

''இல்லேங்க. அத்தனையும் மரக்காயன் நோட்டு'' முத்தையா எப்போ உள்ளே வந்தான்? ''நடுவுலே வரிசையா நாலு நோட்டுலே மசி கொட்டியிருக்கும், ஒரு நோட்டுலே 'அருணாசலம்'னு பச்சை மசியிலே எழுதியிருக்கும், அருணாசலப் பண்டாரம் பஜாரிலே மல்லிப்பூ வியாபாரம் பண்றான். மரக்காயன் கையெழுத்து. மரக்காயனுக்குக் கொஞ்ச நாளா பச்சை மசி ஷோக்கு.''

இன்ஸ்பெக்டர் பஸ்மயாகப் பிசுபிசுத்துப் போனார், முகம் திராவகத்தில் கரைவது போல், கன்னம், நெற்றி மோவாய் எல்லாம் தனித் தனியாக நசுங்கின. ஸஹிக்க வில்லை. முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டார், கேட்கிறேன். இந்த மாதிரி சமயத்தில் முகம் நிஜமாவே தீய்ந்து போகுமோ? பொசுங்கின நாற்றம் அடிக்கிறதோ?

''அம்பி, எங்கே ஓடப் பாக்கறே, நில்!'' மானேஜர் அதட்டினார். ''RSL, கொடுக்கறேளா? Thanks—'' கையிலிருந்து கழற்றிக் கொண்டார். நோட்டுக்களை எண்ணிக் கொண்டே

''உங்களை நான் முழுக்கக் குற்றம் சொல்ல மாட்டேன் RSL. மனிதனே, அவன் கருவில் நட்ட

விதையிலிருந்தே, சந்தர்ப்பங்களின் சேர்க்கைதான். எல்லாமே ஏமாந்த வேளைகள். எல்லாருமே வழி தப்பிப் போனவர்கள்தான். யாருடைய உண்மையை யாரால் கண்டு பிடிக்க முடியும்? நான் திண்ணமாகக் கூறுவேன். உண்மை, பொய், எதிலிருந்து எதையும் தனியாகப் பிரிக்க முடியாது. எது உண்மை? நமக்குத் தெரியுமா? ஆனால் எரிமலையின் விளிம்பில் உட்கார்ந்தபின் கற்குழம்பில் விரலை விட்டு, அதன் சூட்டைப் பதம் பார்க்கிறோம். இத்தோடு விட்டுதேன்னு இப்போதைக்கு மூச்சு விடுவோம். வாழ்க்கையையே தருணத்திலிருந்து தருணமாக ஆயுசு பூரா எண்ணி விடுகிறோம். ஆனால் இந்த சமயத்துக்கு இந்த வேதாந்த விசாரணை ஏதுக்கு? ஆனால் அது வரதும் இப்பத்தானே! இத்தோடு விட்டுதேன்னு இதை விட்டு விடுவோம்."

''Manager சார், நான் பிள்ளை குட்டிக்காரன். என்னை ஒண்ணும் பண்ணிடாதேங்கோ—'' இன்ஸ்பெக்டர் குரல் உடைந்து கை கூப்பினார்.

''உஷ்—''மானேஜர், மெல்ல கூப்பிய கரங்களின் விரல்களைப் பிரித்து விட்டார், ''நாம் எல்லோரும் மனுஷ ஜன்மம் தானே! எல்லாருமே தப்புப் பண்ணறவா தான். சில சமயங்களில் தவறை ஒப்புக்கறோம். மறைக்க முடிஞ்சால் மறைச்சுடறோம். ஆனால் நம்மையே மறந்துட்டு, தெய்வாம்சமா பேசப் போத்தான் உடனே காலைத் தடுக்கிறது. மண்ணைக் கவ்வறோம்- சரி நேரமாச்சி, வரட்டுமா? ஆபீஸில் எல்லாம் போட்டது போட்ட படிக் கிடக்கு."

''நாளைக்கி எல்லார் முகத்திலும் எப்படி முழிப்பேன் இ-இ-இ-'' இன்ஸ்பெக்டர் குழந்தை போல் விக்கி விக்கி அழுதார்,

''லீவைப் போடும். உங்களே குவாரன் டைனிலேயே வைக்கற மாதிரி எதற்கு வேணுமானாலும் டாக்டர் சர்டி

பிகேட் வாங்கித் தரேன். ப்ரோக்ராமே ரத்தாகி விடும் அடுத்த தடவை எப்பவோ—அப்பவும் நீங்கள் தான் இங்கே ரிபீட்னு என்ன நிச்சயம்? அப்படியே அவங்க போட்டுக் கொடுத்தாலும் அங்கேயே ஏதேனும் மனுரவர் பண்ணிக் கோங்கோ-அது உங்கள் பாடு— Damn! மறுபடியும் நியூசென்ஸ்-!''

கதவு திறந்து P. C. 433 உள்ளே வந்து விறைப்பாய் ஸெல்யூட்.

''ஓ மறந்தே போச்சு. Oh I am sorry, Constable பூனைக்குட்டி அகப்பட்டு விட்டது.''

P. C. விழித்தான். நாங்கள் எல்லோருமே விழித்தோம். மானேஜர் பாடினார்.

'மியா மியா பூனைக்குட்டி.

பாலைச் சூடிக்கொண்ட பூனைக்குட்டி

இனி பாலே வேணாம் பூனைக்குட்டி.

''முத்தையா, உன் மருமவப்பிள்ளைக்கு ரூ 5/-தளத்து''

முத்தையா பின்னிடைந்தான். ''நான் ஏன் சார் கொடுக்கணும்?''

''பாங்கிலே Safe roomக்குப் போறபோது படிக்கட்டுலேட்ரேயைத் தலையிலே வெச்சுக்கிட்டுக் காய்கறி வித்தையே அதற்கு மாமூல். என்னால் உன்னால் வந்த வினைதான்''

''காணாமல் போன பூனைக்குட்டி

கண்டெடுத்தேன் பூனைக்குட்டி-அம்மம்மா

இனி விடமாட்டேன் உன்னைப் பூனைக்குட்டி. கொடு-கொடு-கொடுன்னா கொடுத்துடு- இன்ஸ்பெக்டர் எதிரே எல்லாரும் சண்டை போட்டுண்டு எல்லாரும் மாட்டிக்கணுமா? அதே மாதிரி காஷியர் தலையிலே டாக்ஸி சார்ஜ்—இன்னிக்கு நாம் எல்லாரும் காஷியர் காசிலிங்கத்தின் மருமகப்பிள்ளைகள் —ஆட்டம் முடிஞ்சுது.

சீட்டைக் கலை, தூக்கி எறி
துண்டை உதறித்
தோளில் போடு
Let us all get out
Taxi Taxi !!

காசி, இன்னிக்கு உன் உபயத்தில் ஒரு பன்னீர்ப் புகையிலை பொட்டலமும் சேர்த்துக்கோயேன்-என்கிட்ட சில்லறை யில்லை.''

★ ★ ★ ★

''என்னை யாரேனும் மாடிக்குத் தூக்கிண்டு போங் கோளேன்! கால்விட்டுப் போறது. மாரில் செம்மட்டி அடிக்கிறது''

முத்தையா, மெய்யாகவே அவரைத் தூக்க முன் வந்துவிட்டான்.

''வேண்டாம் வேண்டாம். சும்மாச் சொன்னேன் பல்லக்குக்கு இன்னும் கொஞ்ச நாள் ஆகட்டும். ஏன் அவசரப்படறே ? தோளைமட்டும் - Thanks- அப்பாடி!''

அவர் அறையில் தன் நாற்காலியில் சரிந்த போது உண்மையிலேயே நெற்றியில் வேர்வை ஜலகண்டமாகக் கொட்டியிருந்தது. மின்விசிறியைப் போட்டேன்.

''சரிமுத்தையா! இந்தப் பையனை என்ன செய்வோம்? ஒரு S. K. C. கொடுத்து விரட்டிடுவோமா? கட்டிடத்தில் கால்வெச்ச முதல் நாளே குட்டையைக் கலக்கிட்டான் !''

மானேஜரின் கண்ணடிப்பைக் கவனித்திரா விட்டால், முத்தையா அழுதேயிருப்பான்.

''ஏன் சார், என்பையன் ராசி, பாஸ்புக் இல்லாமலே மரக்காயன் ரூபாயைத் தட்டிட்டு வந்துட்டோம்!''

'ஓ, பேச்சு அப்பிடிப் போவுதா? இதென்ன Salary bill? இத்தனை நாழிக்கு? காஷ் க்ளோஸ் பண்ணின பிற்பாடு!"

"எண்ணித் தனியா பையில் போட்டு வெச்சிருக்கோம் ஸார்— இரட்டையர் கோரஸ் பாடினார்கள்.

"கில்லேடிகள்! யார் செத்தாலென்ன, வாழ்ந்தா லென்ன? எனக்கு அளந்துடு! மறுபடியும் ஒரு மொட்டைக் கையெழுத்து!" கையெழுத்துப் போட்டுக் கொண்டே, "என்னிக்கு என் கையெழுத்து எனக்கு வேட்டு வெக்கப் போறதோ?"

"Sir!" விசுவம்.

"Yes"

"சூசைப் பிள்ளை ஓய்வெடுத்த பிறகு அந்த Vacancy அப்படியே தானிருக்கு. ஆளுக்குக் காத்திண்டிருக்கோம். கஷ்டப்பட்டிண்டிருக்கோம்"

"Idea! அம்பிக்கு எந்த வரைக்கும் படிப்போ?"

"III form பாஸ் பண்ணிருக்கேன் IV படிச்சிண் டிருந்தேன்"

"சர்டிபிகேட் இருக்கா?"

"நாளைக்கு ஒரு நாள் டைம் கொடுங்கோ ஸார்—" முத்தையா இடைமறித்தான் "வேண்டியதெல்லாம் வாங் கிட்டு வந்திடறேன்."

"அந்தப் பள்ளிக் கூடத்து H. M. வீட்டு எருமை மாட்டைக் குளிப்பாட்டினாயாக்கும்!"

"எல்லாமுந்தான். எல்லாரும் உள்ளூர்தானே! அன்னிக்குச் குளிப்பாட்டினால் இன்னிக்குக் கறக்கிறேன்."

"சபாஷ்! அம்பி, இப்போ உனக்கிருக்கற படிப் போடே நீ நின்னுட்டே. விசுவம் சிவராமனுக்குக் காப்பி வாங்கிக் கொடுக்கத் தான் உனக்குப்போது சரியாயிருக்கும். நீ நல்லாப்படிக்கணும், நல்லா உழைக்

கணும், ஆமாம், உனக்குப் பிடிச்சுதோ இல்லையோ, நான் சொல்லிட்டேன். சும்மா வாசற் படியில் உட்கார்ந்துண்டு வானத்து விளிம்பைப் பூமியோடு ஒட்டியிருப்பது பிசினா, சோத்துப் பருக்கையா? என்று சிந்தித்துக் கொண்டிருந்தால் போதாது. பயனற்ற சிந்தனை வயதில் நீ இப்போது இருக்கே. சினிமாவின் பொய்யான சுவர்க்கத்தில் உனக்கு ஸீட் என்ன, Plot ஏற்பாடு பண்ண விசுவும் சிவராமனும் இருக்கான்கள். அவன்க சொல்றதெல்லாம் நீ செய்ய ஆசைப்பட்டால், புலியைப் பார்த்துப் பூனை சூடிக் கொண்ட கதைதான். ரெண்டும் உள்ளூர் ஜமீன், உத்யோகம் கௌரவத்துக்கு. வயிற்றுப் பிழைப்புக்கல்ல."

"என்னை ஏன் சார் அதில்லே சேர்க்கறீங்க?" சிவராமன் நடு வெட்டினான். "எனக்குப் பொறுப்புக்கள் இருக்கு."

"Then, it is good. உழைப்பு, உழைப்பு உழைப்பே தெய்வம், உழைப்பே தவம். எங்கள் காலத்துச் சின்ன வயதில் எங்கள் பெரியவாள் எங்கள் முழங்கால் எலும்பில் விறகு கட்டையால் அடித்துச் சொல்லிக் கொடுத்த முதல் பாடம், கடைசிப்பாடம் எல்லாமே அதுதான். உழைப்பு. உழைப்பு. முத்தையா, மீன், கறி, ஆமை சூப் எல்லாம் அக்கா மகனுக்குப் பழக்கிட்டியா? உண்மையில் இவன் உன் அக்கா மகனா? அதாவது உன் பெண்டாட்டியைத் தவிர, உலகத்துப் பெண்மக்கள் அத்தனை பேரும் உனக்குத் தாய்மார். உடன் பிறந்தார், பெண்கள் என்கிற பெரிய உறவு முறை தவிர? சரி, சரி, தலையைச் சொரிய வேண்டாம். புரிஞ்சுண்டுட்டேன். இந்தப் பையன் உன் வீட்டு உப்பிலும் தண்ணிலும் ஊறினதுபோதும். இனி கொஞ்ச நாள் என்னோடு இருக்கட்டும். என்ன சொல்றே?"

"நான் சொல்ல என்ன இருக்குங்க? இனம் இனத்தோடு தானே சேரும்!"

எனக்குத் தொண்டையை அடைத்தது. தடாலென்று விழுந்து ஸாரை நமஸ்கரித்தேன்.

"தீர்க்காயுஷ்மான் பவ:"

உடனே காஷியர் விழுந்து அவர் பாதங்களில் பதித்த சிரம் கொஞ்ச நேரம் எழவேயில்லை.

"காசி, விடு அப்பா! என்ன இப்ப வந்துடுத்து? ஏன் அழறே?"

"நீங்கள் இன்னிக்கிக்-கிக்-கிக் காப்பாத்தாட்டா ஆ—ஆ— என்கதி அதோகதி. ஸார், குடும்பம் ஏற்கெனவே தத்தளிக்கிறது. அவள் மூணு மாஸமா ஸ்னானம் பண்ணல்லே. இப்பவே மருந்து மாயம், ஊசியெல்லாம்—எங்கே கொண்டு போய் விடுமோ தெரியல்லே—"

"நான் அப்பவே சொன்னேனே, ஐயா நமக்கெல்லாம் கடவுள் மாதிரி. நல்ல ராசிக்கை— எனக்கும் இடம் விடுங்க. நானும் கும்பிட்டுக்கறேன். ஐயா எங்கிருந்தாலும் நல்லாயிருக்கணும்."

சிவராமனும் விசுவமும் யோசித்துக் கொண்டு நிற்கிறார்கள். பண்ணலாமா? வேண்டாமா? ஸார் குஞ்சிரிப்புக் கொண்டார்.

"ஒரு குடும்பத்தில் அடங்கியபிள்ளை
அடங்காப்பிள்ளை
ஒரு சமயம் தகப்பனைப் பிடிக்கும்
ஒரு சமயம் வெறுக்கும்
கக்ஷியாச் சேர்ந்து கரிக்கும்
போட்டி போட்டுக் கொண்டு உடம்பைப் பிடித்துவிடும்
காலம் சிறியோர் கறுவும் காலம்
அப்பனுக்குக் கொடுக்கத்தான் கடமை
கண்டிக்க உரிமை கிடையாது

நீங்கள் எப்படியிருந்தால் எனக்கென்ன ?

எல்லோரும் என் பிள்ளைகள்."

அவர் கண்களும் பனித்தனவோ ? தொண்டையைக் கனைத்துக் கொண்டு அவசரமாகச் சுண்ணாம்பைத் தடவிப், பாக்கும் வெற்றிலையுமாகச் சுருட்டி, வாயில் திணித்துக் கொண்டார்.

இம்மாதிரித் தருணங்கள் தாம், வாழ்க்கை வாழ்வதற்கென்றே என உறுதிப்படுத்துகின்றன.

"சரி அம்பி, கிளம்புவோமா ?"

## பாலா

ஹோலியின் சாயக் குழம்பில் குளித்துத் தோழிகள் தூவிய வர்ணப் பொடிகள் நெற்றி, கன்னம், மார்பு மேடுகளில் கறை படிய, துரத்தும் சிரிப்புக்கு ஒளிந்து, தன் சிரிப்புக் காட்டி, மார்வாரி மங்கை களவு காட்டுகிறாள்.

சட்டென்று கண்ணுக்குப் படாமல் அதைச் சூழ்ந்த கமுகு, தென்னை, சொய்யா நடுவில் பதுங்கி, கூரை விளிம்பு மட்டும் எட்டிப் பார்த்துக் 'கொண்டு, ஒளிவு மறைவில் ஒளிச்சிரிப்புடன் வீடு, பார்வைக்கு எழுந்தது.

பின்னால், உத்யோக முறையில், நாலு இடம் போய் நாலு பேரோடு பழக நேர்ந்த போது ஹோலி பார்த்தேன்.

முன்னால் கண்டது சில சமயங்களில் பின் கண்டது ருசு.

சில சமயங்கள், முன் கண்ட பொருள் பின்வந்த இருளுக்கு விளக்கு ஆட்டுகிறது.

நீலச்சுடர்

நெய்விளக்கு

மாவிளக்கு
சிதைத் தீ
எல்லாமே
அவ்வப்போ
ஞான ஒளி.

காலமெனும் பாடு எம்மா நீளம் இழுக்கிறது!
கண் குளிக்குப் பனித்த கண்ணீரின் சுனை கண்டபின்
ஸ்படிகம் தெளியக் கேட்கவா?
அவ்வவ்வமயங்களின் அந்தந்த அபூர்வ தயக்கங்களில்
ஜீவநதியின் அடிவயிறு ரேகைகள் முன்னும் பின்னுமாய்ப்
பின்னுவதே தெரிகையில் அவையில்
முன் எது? பின் எது??
பிறருடன் பங்கு கொண்டு மகிழ
இதோ இங்கு அதோ அங்கே—அதோ! அதோ!!!
நினைவு மலர்களைப் பறித்துச் செண்டுகட்டி அதன்
மெத்துள் முகம் புதைத்து, பரிமளத்தில் என்னை நான் இழக்கையில்
நான் பறித்த பூக்களில் முன்முளைத்தது எது பின் மலர்ந்தது எது கண்டேனா?
காண வேணுமா?
பிறருடன் பங்கென்றேன் — பிழை, பிழை!
சில அனுபவங்களின் சுய நலனில் பங்குகொண்ட அந்தப் பிறனும் நானே.
என்னைப் பிறனாய்க் காணும் அளவு பழைய நினைவுகளின் அசை
என்னை இரண்டாகப் பிளந்தபோது என்னில் பிறந்த பிறனை
பொறாமை கொள்கிறேன். ஏ, நீ, நீ எப்போது வந்தாய்?

'நீ' பிறந்தவாறே இது தானோ? என் காலடியில்
சர்ப்பம் நீயே தானா?

சரி சரி, நீயும் நானும் சிண்டைப் பிடித்துக் கொள்ள
வேண்டாம்.

சமாதானமாவோம். நீயும் நானும் சேர்ந்து காவியம்
தேடுவோம்.

உன்னோடு சமாதானமே உயிரின் சாதகம்.

என் போன்ற நான்

உன் போன்ற நீ

வேட்டையும் இரையும் ஒருமித்த

தேடலே தான் காவியமோ?

மானேஜர் சார், நாம் பழகிய இவ்வருடங்களில் உங்கள் பெயரை நான் உச்சரித்ததில்லை. என்னைப் பெயர் சொல்லி நீங்களும் அழைத்ததில்லை. ''ஸார்!'' ''அம்பீ!'' ஆனால் நமக்கு ஒருவருக்கொருவர் பெயர் தெரியாமலே போச்சா? ஆனால் என்றும் நீங்கள் எனக்கு-நான் தூக்கத்தில் புரளும் போது, கனவில் காணும்போது என்றும் நீங்கள் எனக்கு ''ஸார்''. தாங்கள் என்னை அம்பி என்றன்றி வேறு அழைத்ததில்லை. பெயர்கள் வேண்டாம்; உறவே போதும், வேறேதும் வேண்டாம்—காவியத்தில் இதுஎன்ன வதை?

''அம்பி, ஒரு நிமிஷம் நில்.''

குடிசைமோஸ்தரில்—குடிசையல்ல. கூரை ஓடுகள்-ஓடுகள் அன்று.

ஓடுபோன்று கபடு வர்ணம் தீட்டிச் சிமிட்டியில் செதுக்கல்.

புகைப் போக்கி—புகைப்போக்கி இல்லை.

ஸ்தூபி உச்சியில் தாமரை இதழ்கள் விரிந்து, உயரம் தீட்டுகின்றன.

வீட்டை முதன் முதல் பார்க்கையில் பிரமிக்கிறேன், நான் பிரமிக்கக் காரணமுண்டு. அவர் ஏன் சிந்திக்க

வேண்டும்? பின்னாடி கை கோர்த்த வண்ணம் ஸ்தூபியின் உச்சியில் விரிந்த இதழ்கள் மேல் பார்வை ஆழ்ந்தது. எந்நேரமோ?

என் பக்கம் திரும்புகிறார். கண்கள் என் முகத்தைத் துருவுகின்றன. ஏன் அங்கு இத்தனை வேதனை ?

''அம்பி, நான் அவசரப்பட்டு விட்டேனோ ? என் தோளை உலுக்குகிறார். என்ன, எதற்கு, ஒன்றும் புரிய வில்லையே! விழிக்கிறேன். புரியாமலும் இல்லை. என் ராசியே இப்படி நெய்யிலும் நெருப்பிலுமாய்ச் சுட்டும் பொரிந்தும் ஊசலாடுவதுதானா? வாசல் வரைவந்தேன் உள்நுழைவது உன் திருவுளச்சீட்டா ?

''கிருஷ்ணா!''

இருளில் கூடுக்கு வழி தேடிக் கொண்டிருக்கும் ஒரு பருந்து, வழித்துணைக்குத் தன் குரலைக் கொடுத்துக் கொள்கிறது.

அசரீரி கேட்டதுதானோ என்னவோ அந்த முகத்தில் சஞ்சலம் படிப்படியாக அடங்கி, முகம் தெளிவதைத் தெள்ளெனக் காணமுடிகிறது.

''ஒன்றுமில்லை, பயப்படாதே. நம்மை பயமுறுத்துவதே நம் நிழல்கள்தானே!'' என் முதுகைத் தடவுகிறார். என்னுள் எலும்பு கதகதப்பாய் உருகுகிறது. அவர் முகத்தில் புன்னகை படர்கிறது. ஆனால் புன்னகையா அது? மார்பில் தழும்பை மூடும் பதக்கம் போலும், நெஞ்சின் புன்னகை என்கிற பெயரில் மறைக்கிறார். ஏதோ ஒரு நகையா ?

ஆனால்—மற்றது எதுதான் எனக்குப் புரிந்து விட்டது?

''சரி வா, உள்ளே போகலாம்—''

நாலு படிக் கட்டுகளின் உயரத்தில்தான் வீடே. சுற்றித் தாழ்வாரம் தாண்டி வாசல்.

உள்ளே நுழைகையிலே மனம் எங்கோ இழுத்துச் செல்லும் ஒரு மயக்கம்.

வெளித்தாழ்வாரத்தில், உள்ளே, சோபாக்கள், நாற்காலி வகைச் சாமான்களின் செறிவாலும், வாசலுக்கு வாசல், ஜன்னலுக்கு ஜன்னல், திரைகள் தொங்குவதாலும், வீட்டிலேயே லேசானதொரு மங்கல், ம்ருது நிழல்-இருட்டென்று சொல்ல மனமில்லை, சொல்லத் துவங்கில் அதுவுமில்லை. தேங்கியது.

காற்றில் சீலைகள் ஆடி மிதக்கையில், யாரோ பெருமூச்செறிவது போன்ற பிரமை. சொல்லத் துவங்கிய ரகஸ்யம் வெளிப்படவில்லை. சொல்ல வந்ததென்னவோ? செவியோரம் அதரங்கள் உராய்வது போன்று ஒரு நினைப்பு - ஆனால் உராயவில்லை ஊமைக்கனாவின் ஊமைப்பேச்சு.

*"பாலா!"*

*மாடியில், படிக்கட்டின் திருப்பத்தில் ஒரு சிலை.*

*பாற்கடலில் லஷ்மி தோன்றினாள்.*

*சிவன் விரித்த சடைமேல் ஆகாசகங்கை இறங்கினாள்.*

*யாக குண்டத்தினின்று கிருஷ்ணை எழுந்தாள்.*

*இவை:*

பையல் பருவத்தில் என்னையொத்த சிறாரோடு நானும் எதிர் வீட்டுத் திண்ணையில் கைலாசத் தாத்தா காலைப்பிடித்து, அவரிடமிருந்து காலும் பாதியுமாய், அரைத்தூக்கம் முழுத்தூக்கத்தில், தாம்பூலத்தின் கொழகொழப்புடன் பொக்கைவாய் வார்த்தைச் சிதைவுகளுடன் கழன்ற கதைகள் நான் கேட்டவை.

இது நான் கண்டது.

கண்டதும் கேட்டதும் வண்ணம் குழைந்து இது இப்புவியுமில்லை, அங்கிருந்தும் வரவில்லை. என்று

நேரும் குழப்பம், இது அப்போது எதில் சேர்த்தி— கண்ட கதை என்பதா ?

## Legend

நெற்றியில் ஜிகினாப்பொட்டு, மாடிச்சுவருள் அடங்கிய குளோப் வெளிச்சத்தில் சுடர் விட்டது.

இப்போக்கூட உடல் பரபரக்கிறது, அந்தக்காக்ஷி நினைவில் எழுகையில்.

''நான் ஒரு நாத அதிர்வு.''

இந்த பாஷை என்னுடையது அன்று. ஆனால் இது இந்நாள் என்னுள் எங்கு ஒளிந்து கொண்டிருந்தது? ஆனால் இது என்ன ?

''பாலா, இந்தப் பையன் இனி நம்மோடு இருக்கப் போகிறான்.''

இறங்கி வருகிறாள். தாழம்பு நிறம். நீலப்புடவை, நீலரவிக்கை, நீலஜிகினாப் பொட்டு. கைகளில் நீல வளையல்களின் லேசான நீல கிலுகிலு. பாலாவின் இன்றைய ராக், நீலாம்பரி.

எனக்கு மூத்தவள் தான்.

முகத்தில் கடுப்பு இல்லையே அன்றி, புது முகம் கண்ட ஒரு ஆர்வம், வியப்பு கூட அங்கு இல்லை.

இன்று மட்டுமன்று, இங்கிருந்தவரை, அம்முகத்தில் என்றுமே நுட்பமான பாவங்கள் விளையாடவில்லை. உறைந்துபோன செதுக்கல்களில், எப்போதேனும் கன்னங்களில் லேசான இளக்கம்; அவ்வளவுதான். அதுவும் உடனே மருள் கண்டு மறைந்துவிடும்.

[நாடகம் பண்ணுகிறேனா ? ஆனால் என்னையே நான் யாரிடம் ருசுப்படுத்திக் கொள்வேன் ?]

ஆனால் மந்த முகமல்ல. நெற்றி, கண்கள், கன்னங்கள், மோவாயின் தெளிவில், அவைகளைச் செதுக்கிய

சிருஷ்டியின் உளிப்பளப்பளப்பே கண்-(இல்லை மனமா?)-கூசுகிறது.

"அம்பி, உன்பெட்டி, படுக்கை, பொருள் என்று இருந்தால், முத்தையாவிடம் சொல்லியோ, நீயோ கொண்டுவந்துகொள்: என்ன முழிக்கறே? சரி, சரி, பரவாயில்லை. நாளைக்கு A. N. ஜவுளிக்கடையில் உனக்கு வேண்டியதை வாங்கித் தைக்கக்கொடு. என் பேரைச்சொல். பில்லை எனக்கு அனுப்பிவிடுவார்கள். பாலா, எனக்குப் பக்கத்து அறையை இவனுக்குக் காண்பி—உஸ், அப்பாடா, What a day!"

சோபாவில் சாய்ந்தபடி உடைகளைக் கழற்ற ஆரம்பிக்கிறார். பனியனுக்கு அடியில், பறங்கிக் கொட்டை போல் இளந்தொந்தி.

அவள் மாடி ஏற, நான் பின் தொடர்கிறேன்.
நேற்று வரை திக்கற்றவன்
இன்று, மாடியில் எனக்கென்று ஒரு அறை.
கனவாய்க்கூட இல்லை, திகைப்பூண்டாயிருக்கிறது.

RSL, உங்களுக்கு நன்றி செலுத்துவேனா? மானேஜருக்குச் செலுத்துவேனா? இதிலிருந்து எல்லாரும் நல்லவரே என்பதுதான் இன்றைய பாடமா? ஒன்று தெரிகிறது. அங்கங்கே விதி மூலை என்று இருக்கிறது. அங்கே காத்திருக்கும் குரங்கு (?) தன் கூரிய நகங்களால் என் கண்களைக் குதறப்போகிறதா, அல்லது வாயில் பஞ்சாமிர்தம் ஊட்டப்போகிறதா? அதுதான் விதி மூலை ரகஸ்யம்.

பின்னல் தடுமனாய், சோம்பிய பாம்பாய், கிட்டத் தட்ட ஒரே சமனாய் இடைக்கும் கீழ் இறங்கி, நுனியில் நீல ரிப்பன். படி ஏறுகையில், அவ்வப்போது பிடிசுவரின் மேல், கைவிரல்கள் அழுந்துகையில் நகங்களில் ரோஜாத் திட்டு ஒற்றி ஒற்றி மங்கிற்று. செழிப்பான உடல் இடையின்—

No; No, No—

நான் இப்படி உன்னிப்பாய்க் கவனிப்பது சரியில்லை. நியாயமேயில்லை. ஆனால் சிருஷ்டியின் வண்ணக் குழைவுக்கும் அதை மீறிய தற்செயல் இருக்க வேண்டும். திட்டமிட்ட செயல்பாடினும் உயர்ந்ததாய், அமைந்தது என்று ஒன்று தனி. இது ஆள் நடப்பது மாதிரியில்லை. ஏதோ சிலை, ஓவியம் உ யி ர் த் த து போலிருப்பின் அது இயற்கையா, செயற்கையா (நாடகம் பண்ணுகிறேனா?) சிலையும் ஓவியமும் மனித யத்தனம். ஆனால் அது உயிர்த்ததென்கையில் விபரீதம் ஏதோ நுழைகிறது.

ஈதெல்லாம் வேதாந்த விசாரணையா ? விஞ்ஞானக் கேள்வியா ? கலையின் ஆராய்ச்சியா ?

எந்த இடத்தில், எந்த சமயத்துக்கு, எது ?

அறைக்கதவைத்திறந்து வாசலில் நின்றாள். நான் தயங்கி நின்றேன். கதவுமறைவில், அவள் ஸ்விட்சைத் தட்டி, விளக்கை ஏற்றிக் கொண்டதும், தலையோடு கையும் சமிக்ஞையில் அறைப்பக்கமாய்ச் சாய்ந்தது.

குட்டி அறை. இரண்டு பக்கங்களிலும் ஜன்னல்கள். எதிர் வாசல் பால்கனியுள் திறந்தது. ஒரு ஜன்னல் அருகே மேஜை நாற்காலி. அலமாரி நிறைய அடைத்த புத்தகங்கள். சுவரோரம் ஒரு தலையணையும் ஜமக்காளமும் சுத்தமாய் இறுகச் சுருட்டி வைத்திருந்தது. வெளிச்சத்துக்கும் காற்றோட்டத்துக்கும் பஞ்சமில்லை.

என் அறை.

என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள, நான் திரும்பினால் அவள் இல்லை.

அ ம ா னு ஷ் ை ய .

தோன்றிவிட்ட சொல்லின் ஒவ்வொரு எழுத்தையும் சுவைத்து, ஓசையைக் கூட்டிப்பார்க்கிறேன்.

அமானுஷ்யை.

ஆச்சரியமாயிருக்கிறது.

அச்சமாயிருக்கிறது

ஆனால் எப்படியோ ஏதோ விதத்தில்

பொருத்தமாயிருக்கிறது.

பதியாத பாதங்கள்.

காற்றில் வரைந்து காற்றில் கரைந்து விடப்போம்

கானல்.

காலையில் எண்ணெய் ஸ்னானம் செய்து, அகிற்புகை போட்டு நன்கு உலர்த்தி,

மாலையில் வங்கி வங்கியாய்ப் பிசு பிசு அலை பொங்கு கூந்தல்,

இருளில், ஜ்வலிக்கும் மூக்குத்தி.

நெற்றியின் செந்தூரப் பொட்டு.

எண்ணங்கள், எண்ணத்திட்டுக்கள், ஒன்றுக்கொன்று ஒட்டு இன்றி

ஆனால் இழைந்து குழைந்து காட்டும் தோற்றச் சிதர்கள்

அ மா னு ஷ் யை.

★

மேஜை சாப்பாடு,

மானேஜருக்கு உள்ளங்கையளவுக்கு இரண்டு சின்ன சப்பாத்திகள், ஏதோ கூட்டு. எங்களுக்கு வற்றல் குழம்பு, பருப்புத் துவையல், மத்யான ரஸம்.

''அம்பி, என் சாப்பாட்டைப் பார்த்து நீ வெட்கப் படாதே. அதற்கேற்றபடி, உன் வயிற்றைக் குறுக்கிக்கப் பார்க்காதே. குறுக்கிக்கவும் முடியாது. வயசுப் பையன் நீ நல்லா சாப்பிடணும். இது என் தலையெழுத்து. சாப்பாட்டு ராமனாயிருந்துதான் பட்டினிச் சாவில்

வந்து முடிந்திருக்கிறது. எனக்கு இனி விமோசனம் இல்லை. எனக்குச் சில சமயங்களில் தோன்றுவதுண்டு. ''அட, வயிறு நிரம்ப, வாய் நிறையச் சாப்பிட வழியில்லாமல்— எல்லா வசதிகளும் இருந்தும்— இவ்வளவு பெரிய பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு உத்யோகம் பண்ணித்தான் ஆகணுமா? கட்டு திட்டமாயிருந்தால் தான் உடம்போடு உயிர் ஒட்டி வாழ முடியும் என்றிருந்தால் என் செய்வது? மனம் மாற்ற இந்த உத்தியோகமும் இல்லாவிட்டால், ஆயுசு பூரா, சாப்பாட்டு விதங்களை நினைத்துப் புழுங்கியே பைத்தியம் பிடித்துவிடும்— ஏ பாலா, பருப்புத் துவையல் வாசனை தூக்கறதே, ஒரு ஸ்பூன் ஸான்க்ஷன்?— என்னடி தலையை ஆட்டறே, மாட்டையா? ஒரே ஒரு ஸ்பூன், போடறியா, நானே எடுத்துக்கட்டுமா?— Oh thanks good girl! பார்த்தையா அம்பி, இப்படிப் பத்தியம் பிசகிப் போறதனால்தான், உடனே அதன் பலனையும் அனுபவிக்கிறேன். ஓ ஒரு ஸ்பூன்தான், ஆனால் இது, என்னை விடாது, எனக்குத் தெரியும். இருக்கிற வரைக்கும் இப்படித்தான் இழுபறி. இந்தச் சபலம்னு ஒண்ணு இருக்கே! மானங்கெட்ட பிழைப்பு. பெரிய ஆசைகள், சவால்கள். ஃபட், நானோ அதுவோ— எதுவோ ஒண்ணுக்கு ஜெயிப்பு. தோத்தால் அத்தோடு க்ளோஸ். இரண்டு பல்லிகளோ, முதலைகளோ, ஒன்றையொன்று வயிற்றைக் கவ்விக் கொண்டு சண்டை போடுகிற மாதிரி. சாவு வரை சண்டை. ஆனால் சபலங்கள், சின்னத்தனங்கள், உண்மையில் மனிதனை அழிப்பவை இவைதான். பேன், மூட்டைப் பூச்சி மாதிரி. சிறுகச் சிறுகக் கடித்து ரத்தத்தையே குடித்து... இன்று இன்ஸ்பெக்டர் சீரழிஞ்சு போனதே இந்தச் சபலம் காரணம் தானே! இந்த ஆயிரத்தைத் திருடி அந்த மனுஷனுக்கு ஆக வேண்டியது ஒண்ணுமில்லே. இருந்தும் சமயமும் சபலமும் சேர்ந்து நாய்ப் புத்தி ஆக்கி விடறது. அம்பி, ஒரு தினுசில் உனக்கு நான் Thanks சொல்லணும்;

இந்த ஹெட் ஆஃபீசிலிருந்து வராங்களே இவங்க தங்களை மேலுன்னு நினைச்சுக்கறது. வந்த இடத்தில் இல்லாத கார்வாரெல்லாம் பண்றது. இவாளுக்கெல்லாம் RSL மூலம் தலையிறக்கம் தானே! ஓ பேரைச் சொல்லாமல், ஊரைச் சொல்லாமல், அவங்க வாலாட்டினால், மண்டையில் தட்டுவது எப்படி என்று எனக்குத் தெரியும். எல்லாரையும் சேர்த்து RSL மேல் பழிவாங்கின மாதிரி நல்லா அவனைப் பொக்கை வெச்சேப்பா! ஹா—ஹா—ஹா—ஹா!''

அவர் சிரிப்பில் மேஜை மேல் பாத்திரங்கள் அதிர்ந்தன. கண்களில் ஜலத்தைத் துடைத்துக் கொண்டே, ''எத்தனை வயசு ஆனால் என்ன? உத்யோக வாழ்க்கையின் அலுப்பைக் கலைக்க இப்படிச் சில அல்ப த்ருப்திகள்! கிடைச்ச வரை பேச்சுக்குக் கொஞ்ச நாள் தீனி ஆச்சு!"

பாலா முகத்தில் லேசான புன்னகை. புரிந்து கொண்டா, புரியாமலேயா? என்னவென்று அவள் விளக்கம் கேட்கவில்லை. அவரும் சொல்லவில்லை. ஆமாம், நான் இங்கு வந்தது முதல் இன்னும் பாலா ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே! அவள் குரலே கேட்கவில்லையே!

அன்று இரவு சரியாகத் தூக்கம் வரவில்லை. ஒரு வேளை புது இடம்; அல்ல. இத்தனை சுகத்துக்கு நான் பழக்கப்பட்டவன் அல்லன். தூக்கம் தேடி மூடிய கண் இமையுள் இனம் தெரியா வார்த்தைகள், அவை பயக்கும் மௌனமான சப்தரேகைகள் தோன்றி மறைந்து தோன்றிக் கொண்டிருந்தன.

★

யூனிபாரம். உருப்படியா, உரமாக, நிச்சயமா இரண்டு ஸெட் வெள்ளை உடை. வலிக்கறதா? மாலையில் களைந்ததும் மறுபடியும் அம்பி (எப்பவுமே அம்பீதான்!) மானேஜர் என்னிடம் காட்டும் தனி உறவின் விளைவு.

சிவராமனும் விசுவும் என்னைக் காப்பிக்கு அனுப்புவதில்லை.

''அம்பீ!''

மானேஜர் கூட மணியடித்து வரவழைப்பதில்லை:
நீங்கள் ஒருமுறை அழைத்தால் போதும்.
அனுமன் மாதிரி பதறி ஓடி வருவேன்.

—ஸார், நீங்கள் என்னை மணி அடித்து அழைத்தால் ஆகாதா? இதில் என்ன வந்துவிட்டது?—நாய் வேஷம் போட்டால் குறைத்துத் தானே ஆகணும்? காமுப்பாட்டி என்னை 'நாயே!' என்றுதானே அவள் குரூரம் அத்தனையும் அந்த அழைப்பில் துப்பத்தானே அழைப்பாள்!

ஸார்—உங்களுடைய ''தோ தோ!!'' நாய்க் குட்டியாக இருக்கக் கொடுத்து வைக்கணும். மானேஜர் ஸார்! என்னவோ முறையில் எனக்குச் சொல்லத் தெரியவில்லை. சொல்லப் பயமாயிருக்கு நாளுக்கு நாள் வெளியே. சொன்னால் அசம்பாவிதம். ஆனால இம்மாதிரி ஒரு நிலையும் உண்டோ? தெரியவில்லையே! திகைப்பாயிருக்கே!

வெளி வேலையாக—கடிதங்கள் கொடுக்க, ஆளை அழைத்துவர—என்னை அனுப்புவதில்லை.

நான் வேலை கற்றுக் கொள்கிறேன்,
வரிந்து வரிந்து பாஸ்புக் எழுதுகிறேன்.
பழைய தஸ்தாவேஜு புதுசு பழக்கிக் கொள்கிறேன்.
filing Records

காஷியருக்கு ஒத்தாசையாக காஷ் வாங்குகிறேன். ரிஜிஸ்தரில் பதிவு செய்கிறேன்.

கூட்டுகிறேன், சரிபார்க்கிறேன்.

ஒரு நாள் நாற்காலியில் ஏறி லெட்ஜரிலேயே உட்கார்ந்துவிட்டேன்.

(விசுவத்தின் தகப்பனார் காலமாகி விட்டார். இருவருமே லீவு).

மாலை போய், தூக்க ஒரு தோள் கொடுத்தேன்.

என்னென்ன நேரக்கூடாதோ, அதுதான் இந்த ஆபீ ஸில் கங்கணம் கட்டி நடக்கிறதே!

ஹெட் ஆபீஸ்காரனும் ஆள் கொடுக்காமல் வேடிக்கை பார்க்கிறான்.

''உம் நடக்கட்டும், ஒவ்வொரு செக்கையும் என்னிடம் காண்பித்து லெட்ஜரில் ஏற்று!''

ஆனால் அப்படியும் எல்லாக் கையெழுத்தும் எனக்கு மட்டும் எப்படி நினைப்பில் இருக்கமுடியும்?

எத்தனைதரம் Specimen signature record ஒப்பிட் டுண்டே யிருக்க முடியும்? சாத்தியமா?

அதுமட்டும் என்ன up to dateஆ? ஈசுவரோ ரக்ஷது. சத்யமேவ ஜயதே!

அக்கௌண்டன்ட் சென்னைக்குப் போயிருக்கிறார். மாற்றலுக்குப் பிரயத்னம் பண்ணுவதாகக் கேள்வி.

மானேஜர் ஸார் என்னை அலுத்துக் கொள்கிறாரா?

தன்னைச் சலித்துக் கொள்கிறாரா?

உள்ளூர என்மேல் மகிழ்கிறாரா?

மாலை வீடு திரும்பியதும் தெரிகிறது.

(Not bad, not at all bad! keep it up!)

''என்ன extra கிடைக்குமான்னு எதிர் பார்க்காதே. என்ன கத்துக்கலாம் சந்தர்ப்பம் கிடைச்ச போதுன்னு அதிலே கவனமாயிரு''

இரவில் பாடப் புத்தகங்களைப் பரப்பிக் கொண்டு படிக்கிறேன். இல்லை, டப்பா அடிக்கிறேன். அர்த்தம் கேட்டுத் தெரிந்து, புரிந்து, படிக்க நேரம் ஏது? ஸாரே சொல்கிறார். ''மெய்யான படிப்பே, பரிக்ஷைக்குப் படிப்பு முடிந்த பின்னர்தான் ஆரம்பமாகிறது. நம்முடைய படிப்பு முறை அப்படியிருக்கிறது. படிச்சதுக்கும்

வயிற்றுப் பிழைப்புக்கும் சம்பந்தம் கிடையாது. நாம் என்ன செய்ய ?"

எப்படியும் இந்தப் பரீக்ஷையில் 'டக்' அடிக்காமல் தேற வேண்டும். இந்த வருடத்துக்குள் எந்த ரூல் மாறி, இருக்கிற சட்டத்தை அடித்து என்வாயில் மண்ணைப் போட்டு விடுகிறதோ ?

"அம்பி, படி, படி, குறுக்கு வடத்துக்கே காலமில்லை, தெரியுமோன்னோ ? உனக்குப் பூணூல் போடவில்லை. தெரியும். ஆபீஸ் தாக்கல் வரை நீ முத்தையாவின் அக்கா மகனாவே காலத்தைத் தள்ளு. அதில்தான் உனக்கு விடிமோக்ஷம்"

எனக்குப் பயமாயிருக்கிறது. விழுந்து விழுந்து படிக்கிறேன். இரவில்லை, பகலில்லை. உடலைப் பந்தயக் குதிரையாக விரட்டுகிறேன். ஆனால் கூடவே ஒரு ஆச்சர்யம். இப்படித் திடீரென ஒரே முறுக்காய் மனதையும் உடலையும் ஒருகாரிய முனைப்பில் பிழிந்தெடுப்பதில் ஒரு உற்சாகம் தெரிகிறது.

நள்ளிரவில் புத்தகத்தை எதிரே வைத்துக் கொண்டு, தூக்கத்தில் சுவாரஸ்யமாகச் சாமியாடுகையில் சுவர்க் கோழி 'சில்'லென்று கூவிக் கலைத்துவிடும்.

அப்படியும் ஒரு சமயம், தூக்கம் அழுத்தி, தழுவி, முகம் கவிழ்ந்து விடுவதுமுண்டு. விழிப்பு வந்தபோது என்மேல் போர்வை—

யார் ?

நீங்கள் போர்த்தினீர்களா ?

நீ போர்த்தினாயா ?

யாரைக் கேட்க முடியும் ?

இந்தக் கேள்வி கேட்டுத்தான் ஆகணுமா ?

பதில் வந்து தான் ஆகணுமா ?

ஆயினும்—

பதிலுக்கு மனம் நோக்காடுடன் ஏங்குகிறது.

ஏ காவியமே நீ எங்கெங்கெலாம் ஒளிந்துகொண்டு

எதிர்பாராத சமயங்களில்,

கடைசிவரை பிடிபடாத நிலையிலேயே காட்டிக் கொள்கிறாய் ?

அன்பின் பல உருக்களில் போர்வையும் ஒன்று போலும்!

ஆயினும் உருத்தெரியாததை வைத்துக்கொண்டு

நான் அதற்குக் குஞ்சலமும் மணிகளும் கட்டுகிறேன்.

கட்டிக் கொள்கிறேன் மணிகள் என் எண்ணத்தின் தென்றலில்

ஒன்றுடன் ஒன்று உராய்கையில் உட்செவியின் கட்செவியில் ஏதேதோ உருத்தெரியா நாதங்கள் சப்தங்கள் எழுகின்றன.

பெருமூச்சு.

எண்ணத்தின் தென்றல்.

★

வெள்ளிக்கிழமை. அவர் கீழே, ஹாலில், ஸோஃபாவில் அமர்ந்தபடி ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறார். நான் வீட்டுள் நுழைகையிலேயே சொல்லி வைத்தாற் போல், என் அணைப்பிலிருந்து ஒன்றிரண்டு பார்சல்கள் நழுவி, தடுக்கப் போய் எல்லாமே அவர் காலடியில் விழுகின்றன. அவைகளுடன் நானும் விழுகிறேன். சாஷ்டாங்கமாக.

"அடேடே என்னப்பா இதெல்லாம் ? இன்னிக்கு என்ன விசேஷம்? என்ன, கை நிறையக் காசு வேறே?" நோட்டுக்களை அவர் கையில் திணிக்கிறேன்.

"இன்று சம்பளம், என் முதல் சம்பளம் ஸார்."

''ஓ, தீர்க்காயுஷ்மான்பவ. ஒழுங்காய் பாங்கில் ஒரு கணக்கு ஆரம்பித்து, பணத்தை அதில் சேர்த்து வைத்துக் கொள். சமர்த்தாயிரு. நீ எனக்குச் சாப்பாட்டுக்குத் தனியாக ஒண்ணும் தர வேண்டாம்.''

என் விழிகள் தளும்புகின்றன. ''ஸார், எல்லாமே உங்களுடையதுதான். உங்கள் பிள்ளை மாதிரி, இல்லை ஸார். தப்பு தப்பு, மன்னிச்சுக்கோங்கோ, உங்கள் அடிமை. எனக்கு அப்பா அம்மா இல்லை—'' தேம்பித் தேம்பி அழுகிறேன்.

''உஷ்—'' நிமிர்ந்து உட்கார்கிறார். ''இப்படி உட்கார் -இதோ என் பக்கத்தில்'' உட்கார்ந்து கொள்கிறேன். மூக்கை உறிஞ்சுகிறேன். முதுகைத் தடவுகிறார். ''you know, I am shy of tears— இப்ப என்ன நேர்ந்துவிட்டது, அழும்படி? நீ சொல்வதெல்லாம் கேட்க நன்றாயிருக்கிறது. இந்தக் காலத்தில் பெற்ற பிள்ளைகூட இப்படிச் சொல்ல மாட்டேன்கிறான். 'முதல் சம்பளம் வாங்கினவுடனே என்ன பண்ணப் போறேன் தெரியுமா? ஒரு telefunken வாங்கி 'ஸ்ட்ராப்'போடு கழுத்தில் மாட்டிண்டு வரப் போறேன்'ன்னு அப்பன் கிட்டேயே சொல்றான். 'குழந்தை அவன் என்ன செய்வான்? இந்த வீட்டில் அவனை அப்படி அடக்கி வெச்சிருக்கு. சிறிசுகள் இஷ்டப்படி விட்டுடணும்—''னு அவன் தாயும் சிபாரிசுக்கு வந்து விடுகிறாள். மக்களுக்கு முதல் சத்துரு மாதா பிதா. வீட்டுக்குப் பெரியவா கையில் கொடுத்து, நமஸ்கரித்து குல தெய்வத்துக்கு இசைந்து முடித்து வைத்து, —அதெல்லாம் எப்பவோ போச்சு. 'மூட நம்பிக்கை, இளைய தலைமுறை கொக்கரிக்கிறது— இதென்ன புஷ்பம், சந்தனம், ரவிக்கைத் துண்டு, ஏது ஒரே அமர்க்களமாயிருக்கே? ஓஹோஹோ, நெய் ஹல்வா, மிக்ஸ்சர்— இந்த அல்வாத் துண்டில் ஒண்ணு எடுத்துக்கறேன். பாலாவுக்குத் தெரிய வேண்டாம். தெரிஞ்சால் ரெண்டு பேரையும் கிழிச்சு மாலையாப் போட்டுண்டுடுவா—''

ஏதோ நிழல் அரவம் கேட்டுத் திரும்புகிறேன். என் பின்னால் பாலா, மார்மேல் கைகட்டிக் கொண்டு நிற்கிறாள். புருவங்கள் மின்னல் கொடிகளாய் நெரி கின்றன. காளியாக மாறி விடுவாளோ? முகம் தழல் வீசுகிறது. எனக்குப் பயமாயிருக்கிறது.

எப்பவுமே அவளைக் கண்டால் ஒருவிதப் பயமா யிருக்கிறது. ஏதோ ஒரு அமானுஷத் தன்மை அவளைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. அல்லது ஆமை ஓடுபோல் அவள் அதைச் சுமந்து கொண்டிருக்கிறாளோ? ராவணன் தன் கூந்தலைத் தீண்டியதால், தன் கையை வாளாக்கிக் கூந்தலை வெட்டி அக்னி ப்ரவேசம் செய்த வேதவதி போல்.

அக்னி னி.

நல்ல வேளை, ஒன்றும் நேரவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அவள் நெற்றி மூட்டம் கலைகிறது. வானவில் போல் 'புன்னகை, மேகங்களைக் கிழித்துக் கொண்டு. ''உஸ்—', என்னை 'அறியாமலே என் நெற்றி மேல் என் கை போகிறது. நெற்றி கசகசத்திருக்கிறது.

★ ★ ★

நெஞ்சு முள்ளில் சொல் தாண்டி ஏதோ இடறு கிறது. இங்கு நான் வந்து எத்தனை நாளானாலும் சரி. இங்கு என்னவோ சரியில்லை. ஆனால் சொல்ல வல்லையே! மானேஜரைக் கேட்க தைரியம் இல்லையே. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் ஏதோ கதவடைப்பு உணர் கிறேன். எனக்குப் பயமாயிருக்கிறது. ஏதோ பயம். என்ன பயம்?

''தொந்தின்னு பாக்கறியா அம்பி ?" மானேஜர் தன் அடிவயிற்றைத் தடவிக் கொள்கிறார். ''இ தனுள் இன்னும் வைத்யனுக்கே தெரியாத ஏதேதோ இருக்கிறது.

கண்ணாடித்துண்டு, நெருஞ்சிமுள், இன்னமும் வெடிக்காமல் திரிமட்டும் பற்றிக் கொண்ட பட்டாசுக் கட்டு என்னிக்கு 'டுமீலோ?'. ஒவ்வொரு கோளாறுக்கும் தனித் தனியாக உள்ளே போயிருக்கும் மாத்திரைகளின் சண்டையில் ஒரு நாள் என்னுடைய Water eoo"

மானேஜர் பாஷையே ஒரொரு சமயம் தனிப்பட்டதாயிருக்கும். முழுக் கவனத்துடன் தொடர்ந்தால், தொடர முடிந்தால், புரிந்தவனுக்குப் புரிந்தவரை பாக்யம்.

தன்னையே கேலிபண்ணத் தெரிந்தவன் ஞானி.
ஆனால் எத்தனை பேருக்கு அது தெரியும் ?
தெரிந்தாலும், முடியும்?

நிச்சயம் என்னிலும் மூத்தவள்.
மூணு நாலு வயதேனும் மூத்தவள்.
இது என்னுடைய ராசிபோலும்.
ஜோமு.
ஜனா.

காமு என்னிலும் ஒரு சமுத்ரமேனும் பெரியாள்.

★ ★ ★

மானேஜருடன் Godown inspection போகிறேன்.

கிடங்கு சோதனை யென அப்பட்ட மொழி பெயர்ப்பானாலும், இந்த அடை மொழியில், வங்கி மொழியில், கடன் வாங்கினவர்களின் பல்வேறு வித அடமானங்களின் சரக்குகளை மானேஜர் நேர் முகமாகக் கண்காணிப்பது உள் அடங்கும். அடமானச் சரக்கு எல்லாமே வங்கியின் பூட்டு சாவியின் பத்திரத்துள் அடங்காது; அடங்கமுடியாது.

இப்போது தெரிகிறது அந்தச் சொல்லின் பதப்பிரிவு. அடை, மானம் ஆகவே, மானம் எனும் கைக்ககப்படாது ஆனால் எல்லா மதிப்புகளையும் மீறிய ஒரு ஆத்மிகமான சொத்தை ஈடாக வைத்துக் கொண்டு ஆரம்பித்தாலும்

வங்கி முறைகள் இப்போது எத்தனையோ கிளைகளாகப் பரவி முன்னேறியும் விட்டன.

அடகில் பல வகைகள். கடையில் நட்டநடு வியாபாரத்தில் புழங்கிக் கொண்டிருக்கும் சரக்கு; வெளியிலிருந்து ரயிலில், கப்பலில், விமானத்தில் வந்து கொண்டிருக்கும் சரக்கு; கிடங்கிலிருந்து ரயிலில் ஏறிக் கொண்டிருக்கும் சரக்கு; உற்பத்தியின் பல கட்டங்களில் உருமாறிக் கொண்டிருக்கும் சரக்கு; வயல்களில் நட்ட கட்டத்தினின்று முளைவிட்டு அறுவடையாகி, அறுவடை விற்றுப் போகும் வரை பயிர்; பயிர் செய்ய, கிணறு வெட்ட, பம்பு செட்டுக்களின் மேல், காற்றில் ஆடிக் கொண்டிருக்கும் பயிர்—இன்னும் எவ்வளவோ சொல்லிக் கொண்டு போகலாம்.

எல்லாவற்றுக்கும் அடிப்படை அடமானம், வழக்கில் அடமானமாக மருவி, உருமாறி, பொஃருள் மாறி—மானம் என்றால் என்ன என்று கேள்வி கேட்கும் நிலைக்கு வந்து விட்டது. இதில் கையெழுத்து, அதில் கையெழுத்து; காட்டின இடத்தில் கையெழுத்துப் போடறேன் ராஜா, எனக்கு இப்போ வேண்டியது பணம்.

திருப்பிக் கொடுப்பதா ? ஆமாம். எவன் இல்லேங்கறான். அதான் கையெழுத்து வாங்கியிருக்கையே, காட்டின இடத்தில் எல்லாம் கண்மூடிக் கையெழுத்து.

வங்கி வழிகள் எவ்வளவோ மாறிவிட்டன. முகமே மாறிப் போச்சு வங்கி முறைக்கு.

ஆனால் நான் எங்கோ போய்க் கொண்டிருக்கிறேன். இன்று Godown Inspectionக்கு மானேஜருக்குத் துணை போகும் என்னுடைய இந்தப் பருவகட்டத்தில் இதெல்லாம் அதிகப்ரசங்கம். (ஆனால் மன்னிப்பு கேட்க மாட்டேன்)

டாக்சி வாசலில் நிற்கிறது.

"அம்பி, ஏறு. வழியில் மண்டையைப் போட்டேனா னால், தானாக விழுந்ததா, கடன் பட்டவன் உடைத் தானா தெரியவேண்டாமா? காலை முறித்துப் போட்டால் வண்டியிலாவது தூக்கிப் போடுவையா ? இல்லை ஓடிப் போனாலும் வீட்டுக்கு வந்தேனும் சேதி சொல்லுவை யோன்னோ ?" கண்ணைச் சிமிட்டுகிறார். "இல்லை என்மேல் அடி விழுந்ததும் கம்பியை நீட்டிவிடுவாயா ? நீ இப்பவும் எங்கிருந்து வந்தாய் எனக்குத் தெரியாது. வந்த இடத்துக்கே திரும்பிப் போய் விடுவாயோ ? நீ ஆதிமூலப் பொருளில் சேர்ந்தவன். கடமையைச் செய்கையில், உயிர் போனாலும் கை கால் பின்னமானாலும் ஏதேனும் Compensation கிடைக்கட்டுமே!"

மானேஜரின் நகைச்சுவை சில சமயங்களில் இப்படித் தான். விபரீதமாக, இனம் தெரியா பயத்தை விளை விக்கும். ஒரு சமயம் ஸாரைத் தொடறதுக்குத் தைரிய முள்ள ஆளும் இருக்கானா என்று தோன்றும். கூடவே, இந்த மனுஷனோடு போய் பழிக்கு ஆகணுமா, ஏதேனும் சாக்குச் சொல்லிப் பின் வாங்கி விடலாமா என்றும்... ஆனால் அதெல்லாம் ஒரு செக்கண்டுதான். இப்படி யெல்லாம் சொல்லித்தானே, சார் சோதிச்சுப்பார்க்கிறார்!

"என்ன முழிக்கறே ? நான் சொன்னதெல்லாம் நேரக்கூடாதா ? நேரக் கூடாததா ? எனக்கு வயசா கல்லியா ? இல்லை நான் சொல்வதெல்லாம் நேர்வதற்கு வ்யசாகணுமா ?"

சரியான சிமிட்டி ரோடு. டாக்ஸி வெண்ணெய் மேல் வழுக்கிக் கொண்டு போகிறது. ரோடு வளைகையில் எட்ட தூரத்தில் ஒரு குன்று கம்பீரமாய், மெல்லத் திரும்பு கிறது. மூன்று மணியின் சாய்ந்த வெய்யிலில் குன்றின் மேல் ஒரு கறுப்பு மேகத் திட்டுக்குத் தங்க விளிம்பு கட்டி யிருக்கிறது. ஆங்காங்கே களத்து மேட்டில் பொற்கதிர் களைப் போர் அடிக்கிறார்கள். தலைக்கு மேல் உயரத்

தூக்கிய முறத்திலிருந்து நெல் ஒரே சீராய்ப் புறு புறு வென்று உதிர்ந்து முறத்துக்கும் தரைக்குமிடையே பிற்பகலில் வெய்யில் மயக்கில் ஒரு தங்கச் சீலை திரை மின்னிப்படபடக்கையில் நெஞ்சில் என்னவோ செய்கிறது.

அன்று கூந்தலை அவள் வாரி முடிக்கையில்
அகஸ்மாத்—பார்க்க நேர்ந்தது.
லேசான செம்பட்டை. சீப்பு, உச்சந்தலையிலிருந்து
உழுதுகொண்டே கீழிறங்கும் ஒவ்வொரு தடவையும்
ஒரு பிரயாணம் கை அலுத்துப் போய் கூந்தலைச்
சட்டென்று முறுக்கிக் கொண்டை முடிந்து, கூந்தல் நுனியை
இழுத்து வெளி வாங்கிய போது அவசரமாய்த் தன் கூட்டில்
புகுந்து கொண்டிருக்கும் ஒரு சிட்டுக் குருவி வால் போல்
தோன்றிற்று.

— பற்களினிடையே கொண்டையூசி. கூந்தலை அள்ளிக் கொண்டு உயரத்தூக்கிய கைகள். அக்குளில் ரவிக்கையில் படர்ந்த வேர்வைத் திட்டு.

—அச்சமயம் நான் நேர்முகமாயிருப்பின் சிற்பத்தின் சீற்றத்தில் என்ன ஆகியிருப்பேனோ?

நாதமுனி நாயக்கர் தொந்தியில் துணிசரிய ஓடிவந்து டாக்ஸி கதவைத் திறக்கிறார். காவியேறிய பற்களின் இளிப்பில் இரண்டு அகல ஜன்னல்கள்.

"ஐயா வாங்க வாங்க" கைகூப்புகிறார், கட்டுக்குடுமி. மேல்துண்டு கூட இல்லை. மானேஜர் மெதுவாய் இறங்குகிறார். "என்ன நாயக்கர்வாள், சௌக்யம் எப்படி?"

"ஐயா உருவத்தில் ஆண்டவன் கொடுத்திட்டிருக்கும் போது இந்தக் கட்டைக்குக் குறை ஏதுங்க?

"அம்பி நாயக்கர் பார்க்க இப்படியிருக்காரேன்னு ஏமாந்துடாதே! இன்னிக் கணக்குக்கு அஞ்சுலகரத்துக்குப் பஞ்சமில்லே. ஆனால் கணக்கு மட்டும் கேட்கப்படாது."

"அஞ்சாவது பஞ்சாவது எங்கேங்க? விவசாயி கணக்கு பார்த்தால் பளுதையும் அரிவாளும் நிகரத்தில் மிஞ்சாதுன்னு பழமொழி கேட்டதில்லியா? எல்லாம் மண்ணுலே போட்டுட்டு மண்ணிலேருந்து எடுக்கறதுங்கறது லேசுக் காரியமா? பரம்பரையா நடக்கற காரியம். இன்னும் முடிவு காணாத காரியம்!"

"நாயக்கரே, நிலத்தில் போட்டதைக் கேக்கல்லே. விதைச்சதையும் கேக்கல்லே, அறுப்பதையும் கேக்கல்லே, புதைச்சதைக் கேக்கறேன் வோய்!"

நாயக்கர் விழுந்து விழுந்து சிரிக்கிறார். புரையேறி மண்டையைத் தட்டிக் கொள்கிறார்.

"வெக்கக் கேடு, நீங்க ஒண்ணு! எப்பவந்தாலும் ஐயாவுக்கு இந்தக் கேள்விதான் போணி!"

"சளைக்காமல் நீரும் ஒவ்வொரு தடவையும் இதே பதிலைச் சொல்லி, இதே சிரிப்பைச் சிரிச்சு இதே புரையை ஏற்றி இதே மண்டையைத் தட்டிக்கிற Knack ஐ அம்பிக்குக் காட்டணும்னுதான் இதே கேள்வியை இப்போ கேக்கறேன்."

"பின்னே நான் யார் மண்டையைத் தட்டுவேனுங்க?" என்ன திகைப்பு, என்ன பணிவு!

"சபாஷ் நாயக்கரே வாரிட்டீங்க! இந்தத்தடவை இது ஒண்ணு புதுசு,"

"நீங்க ஒண்ணு...ஆமா சின்ன ஐயா...யா...ரோ?" நாசூக்காய் அந்த இழுப்பு...அதுமட்டும் நாலுமாசமேனும் பழகணும்.

மானேஜர் கண் கொட்டாமல் என்னைப் பார்த்துக் கொண்டே, "என் அக்கா மகன்."

''அதானே பார்த்தேன். ஐயா ஜாடையை அப்பிடியே உரிச்சு வெச்சிருக்கேன்னு!''

''நானும் அதானே கேட்டேன் நாயக்கர்வாள், இந்தத் தடவை கிணறு எங்கானும் பறந்து போகாமல் இருக்கா?''

நாயக்கர் சிரிப்பில் தொண்டையில் வெண்கலம் குலுங்கிற்று. ஆனால் மானேஜர் சிரிக்கவில்லை. நாயக்கர் முகத்தில், சிரிப்பு துடைத் தெறிந்தாற் போல் சட்டென மறைந்தது.

''இருக்குதுங்க'' எட்டிற்றோ எட்டாதோவெனக் குரல் அத்தனை தாழ்வு.

''அப்போ என்னுடைய நல்லகாலம்''

எனக்கு விளங்கவேயில்லை. இது பரிபாஷையில்லை. ஏதோ குகையிருட்டு.

பிரம்மாண்டமான துறவு கிணறு. பம்பு செட் ஓடிக் கொண்டிருக்கிறது 'குபுக் குபுக்'குபுக்' கிணற்றின் இதயத் துடிப்பு! மோட்டார் ஷெட்டை ஒட்டிக்கட்டிய தொட்டியில் ஜலம் நுரைத்துக் கொண்டு கடைகிறது. தொட்டியிலிருந்து கட்டிய சரிவிலிறங்கி, தன் பலத்தை ஒன்று கூட்டிக் கொள்வது போல் ஒரு தேக்கம் கண்டு அதில் சுழித்துக் கொண்டு வரப்புகளினிடையே கால்வாய்கள் வழி,பாய்ச்சலின் வீச்சு எங்கெங்கோ போகிறது. சலசலப்பு எங்கிருந்தெல்லாமோ கேட்கிறது. என் திகைப்பு கண்டு நாயக்கர் முகம், பூசனிக் காய் வெடித்தாற் போன்று கீறு காண்கிறது.

''சின்ன ஐயா கிட்ட சொல்லுதேன். சின்ன ஐயா பாக்குதெல்லாம் பெரிய ஐயா தன் பெரிய மனசுலே கட்டிக் கொடுத்த புண்ணியம்தான்''

''என்னை ஏன்ய்யா வம்புக் கிழுக்கறே? சரியான கண்டத்திலே என்னை மாட்டி விட்டே. மறக்க முடியுமா உன் புண்ணியத்தை?''

மறுபடியும் அந்த உடம்பு ஒடுங்கிய கைகூப்பல்.

''ஐயா என்னை என்ன வேனுமானாலும் நெனச்சுக் கட்டும் இத்தனியும்—'' பரவலாய்த் தன்கையை வீசி ''ஐயா போட்ட பிச்சை. வர வாரம் ஐயாவிடம் ஒரு வரம் கேக்கப் போறேன்."

''என்ன அஸ்திவாரம் பலமாயிருக்கே, எனக்குப் பயமாயிருக்கே!''

'ஐயா கருணையிலே அந்த நாளெல்லாம் போயிட்டுது. ஒண்ணுமில்லே. இங்கேயே இப்பவே கேட்டுடறேனுங்க. எனக்கு ஐயா போட்டோ வேணும்,''

''என்னைப் பூஜையிலே வெக்க என்னய்யா அவசரம்? என் விளக்கு இன்னும் மலை ஏறல்லே நாயக்கரே!''

''நீங்க ஒண்ணு! ஐயாவுக்கு இதெல்லாம்கூட ஒரு வேடிக்கையா? பூசையில்தான் வெக்கணுமா? ஆண்டவனே! தினம் கண்ணால் பார்த்துக்கிட்டு, 'என்னை வாழ வெச்ச புண்யவான்'னு நெஞ்சார வாழ்த்தக் கூடாதா?''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம், பின்னாலே தப்பு தண்டா வரும். எல்லாம் நெனப்புலே இருந்தால் சரி. அதுக்காக இங்கே என்னை விழுந்து கும்பிட வேண்டாம், எழுந்திருமய்யா! வாங்க ஒரு முறை வயலைச் சுத்தி நடப்போம், நேரமாவுது."

''நீங்க நடக்கற தூரமாவா இருக்குது. நீங்க கடைசியா வந்து போனப்பறம் அடுத்தாப்பிலே இரண்டு ஏகரா, நமக்கு சொந்தமாயிடுச்சுங்க- அதுக்கும் இந்தத் தண்ணி போவுதுங்க."

''ஏதேது, நாயக்கரே, நீங்கள் நடத்தறது விவசாயமா, ராஜ்யமா?"

''எல்லாம் ஐயா ஆசிர்வாதம். ஆனால் ஐயா காலை தான் தொடக்கூட விட மாட்டேன்கறீங்க. அது கிடக்கு

இந்த ஏழை கதை ஓயாத கதை. இப்ப நீங்க நடக்கற தூரமாவா இருக்குது? இந்தக் கயித்துக் கட்டில்லே சாஞ்ச மாதிரி அமர்ந்து இளைப்பாறிக்கிட்டிருங்க. சின்ன ஐயாவைச் சுத்திக் காண்பிக்கறேன். கிணத்துக்கு, கிணத்துப் பாசனத்துக்கு அவர் சாக்ஷியம் ஐயாவுக்குப் போதாதா?"

"அதுவும் சரிதான். அம்பி, நாயக்கரோடு போய் வா. இந்தக் கிணற்றுப் பாய்ச்சல் இதுவரைன்னு எந்த மூலையைக் காண்பித்தாலும் பேசாமல் கேட்டுக் கொள்வது தவிர நமக்கு வழியில்லே. பிறத்தியான் வயலாயிருந்தாலும் தெரியப் போறதில்லே. ஏதாவது சந்தேகம் கேட்காதே. அவ்வளவுதான் இளநீர் பொக்கற மாதிரி தலையை—"

நாயக்கர் செவிகளைப் பொத்திக் கொண்டார்.

"ஆண்டவனே! ஆண்டவனே!! எசக்கி, சடுதிலே வந்தியா?"

இளநீர் என்ற சொல்லே மந்திரம் போல், இரண்டு கைகளிலும் அரை டஜனை அணைத்த வண்ணம் கத்தியைப் பிடித்தவண்ணம் ஒரு ஆள் தோன்றினான்.

செவ்விளநீர்.

மானேஜர்: "மூலத்துக்கு, வயிற்றுப் புண்ணுக்கு நல்லது; ஆனால் ரத்தத்தில் சர்க்கரைக்கு எமனாச்சே!"

நாயக்கர் "எல்லாம் அங்காளம்மன் மேலே பாரத்தைப் போடுங்க. ஒண்ணும் ஆவாது. சும்மா ஒண்ணு சாப்பிடுங்க."

"பின்னே விட்டா வெக்கப் போறேன்? நல்லா யிருக்கு, இன்னொண்ணு சீவும்!"

நாயக்கர் குந்திட்டு உட்கார்ந்து கொண்டு, பய பக்தியாய்த் தன் கையாலேயே சீவினார்.

''சின்ன ஐயாவைக் கேக்கறேன், ருசி எப்படி? இந்த மரத்தை ஐயாவுக்குன்னே ஒதுக்கிட்டேன். இந்தக் கிணத்துப் பாய்ச்சலில் முதலில் விருத்தியானது இந்த மரம்தான். மூணே வருசத்துலே குலை தள்ளிடுச்சு. நான் எப்டின்னு பார்த்ததில்லை. வேண்டுதலை மாதிரி இது ஐயாவுக்கு மட்டும்தான். எசக்கி, டைவர் ஐயாவுக்கு அடுத்த மரத்துலே ஏறிப் பறிச்சு சீவிக் கொடு. எசக்கி, ப்ளஷர்லே ஒரு டஜன் ஐயா வீட்டுக்கு அடுக்கு!''

மானேஜர் தடுத்து விட்டார்.

''வூட்டுலே குளந்தைங்க பிரியமா சாப்பிடுங்க.''

''நாயக்கர்வாள், வீட்டு சமாச்சாரம் உங்களுக்குத் தெரியாது. தெரியவும் வேண்டாம். நான் இங்கே தின்கறது, குடிக்கறதெல்லாம் திருட்டுத்தனம். நாயக்கரே, வீட்டுக்குக் கலகமே வேண்டாம். என் உடம்புக்காக வீட்டிலே அவ்வளவு உஷாராயிருக்காங்க. நான்தான் வெளியில் வந்தால் நாக்கை அடக்க முடியாமல் சறுக்கி விழுகிறேன். அப்பா, அக்கா மகனே, அசதி மறதியாக்கூட நீ வீட்டில் ஏதேனும் திருவாய் மலர்ந்துடாதே.''

வரப்பின்மேல் இருவரும் நடக்கிறோம். வரப்பு குறுகலாய் ஒற்றையடிப் பாதையாக இல்லை, பக்கத்தில் பக்கத்தில் இருவரைக் கொண்டது, கொஞ்சம் சிரமத்துடன்.

''சின்ன ஐயா கிட்ட சொல்லுதேன். அடியிலே ரெண்டரை அடிக் குழாய் போவுது. ஒரு பர்லாங்கு வரைக்கும் போய் மேட்டுக்குப் பாயுது. குழாயை மக்கள் கண் சுடவேணாம்னு செலவானாலும் போவுதுன்னு மேலே சொந்தமா ஒரு சின்ன ரோட்டையே போட்டுட்டேன், எப்பிடி?''

எப்படியென்ன? 'ரோட்டு' வளைவில் நடக்க நடக்கக் கிரிப்ரதக்ஷணம் போல் இருக்கிறது. எட்ட எட்ட,

நட்ட நடுவே கிணறு, அதன் கட்டடம் உள்பட மொத்தா காரமாய் ஏதோ ராக்ஷத ப்ராணி உட்கார்ந்திருப்பது போல...

''இங்கே ஏரிப் பாய்ச்சல், ஆத்துப் பாய்ச்சலுக்கு வழியில்லை. விவசாயம் கிணத்தை நம்பித்தான் வாழுது. கிணத்தைத் தோண்டினாலும் தண்ணி கண்டால் வாய்ச்சான் போச்சான். தலையிலே கை வைச்சுக்கிட்ட வனுக்குக் கிணத்துத் தண்ணைக் கடன் கொடுப்போம். வாடிக்கைக்கு விடுவோம். ஈடு கொடுப்போம். அதென்னவோ போங்க. விவசாயமோ வெக்கக் கேடோ? பெண்டாட்டியைக் கட்டிக்கிட்ட மாதிரி, மண்ணைக் கட்டிக்கிட்டு வாழறோம். பானை பிடிச்சவ பாக்கியம்.

ஐயா பாருங்க, இந்தக் கிணறு இப்பத்தான் அஞ்சு வருசமா குளுகுளுன்னு வவுத்துக்குப் பாயுது. ஐயோ, இது எங்கள் குடும்பத்தைக் காட்டின கோலம் எம்மாம் தெரியுமா? இருவது வருசத்துக்கு முன்னாலே என் பாட்டன் இடம் பார்த்து, பூசை பண்ணி, நூல் பிடிச்சு மண் வெட்டியினால் முதல் வெட்டுப் போட்டு வூட்டுக்கு வந்தவர் அடுத்த நாள் எளுந்திருக்கல்லே. ஒரு பக்கம் விளுந்திடிச்சு. அப்பவே நாங்க பின் வாங்கறவங்கதான். ஆனால் பாட்டன் விடல்லே. 'இடம் பா்த்தவன் நான். எத்தினியோ கிணறு வெட்டிக் கொடுத்திருக்கேன். இது சொந்தக் கிணறு. அந்த இடத்திலேயே வெட்டி நான் பாத்த சாஸ்த்ரம், பொய்யாவாமே என் பேரை நீங்க நிலைநாட்டணும். அதுக்காச்சு எனக்காச்சு. நான் பலியானாலும் போறேன். இதெல்லாம் காவு வாங்கிட்டுத்தான் கொடுக்கும். நான் போனால் ஆவாதா?'ன்னு படுக்கையிலிருந்து வாக்காவே சொல்லிட்டாரு, கல்பூரத்தை ஏத்தி உள்ளங்கையிலே வெச்சுக்கிட்டு.

'எடுப்பிலேயே சரியில்லியே ஐயா?'ன்னு என் அப்பனார் கேட்டுது.

'அப்பிடித்தான் இருக்கட்டும், என்னைக் காவு வாங்கியாச்சுல்லே? வேலையைத் தொடர்ந்து ஆவட்டும்'

உத்தரவு போட்டுட்டாரு. வேலையும் நடக்குது. ரெண்டு தலைமுறை நகை, நட்டு, சொத்து சுளை சுளையா, கல்லு கல்லா வாங்கிக்குது; நாங்களும் கிணத்து வாயிலே தள்ளிக்கிட்டேயிருக்கோம். ஒரு தங்க ஒட்டியாணம், என் ஆயாளுக்கு மாமியாருடையது. பசங்க தெருவிலே விட்டுக்கிட்டு ஓடறாங்களே, சக்கரம், அது மாதிரி. இப்பொல்லாம் கிடையாது. ஒரு தோள் வங்கி, இப்ப யாரும் போடறதில்லை. எல்லாம் கிழங்காட்டும். என் பெண்சாதி, தன் கணக்குக்கு, இல்லை என் கணக்குன்னு சொல்லுதா, தாலிச்சரட்டோடே நிக்கிது. ஊரிலே கலியாணம் கார்த்திக்குத் தலை காட்ட முடியல்லே. கிணறு முழுங்கின அடையாளத்துக்கு ஒரு ஏப்பங்கூட விடல்லே.

பாட்டனைக் கொண்டு போய் ஒருநாள் புளிய மரத்தடியிலே வெச்சாச்சு. அப்பனாரும் பின்னாலேயே போயாச்சு. நாதமுனி நாயக்கன்- வீட்டுலே பெண்டாட்டியும் குழந்தைங்களும் நஞ்சானும் குஞ்சானும்— ஒரு நாள் மட்டும் இதே நேரம்- கிணத்து விளிம்பிலே தனியே நிக்கிறான். எனக்கு அலுப்பு வந்திருச்சு. அன்னைக்கி அவ சோறு எனக்கு வெக்கச்சே, அவள் தாலி மஞ்சாக் கயிறிலிருந்து இத்துக் கழண்டு போய், மஞ்சா, என் கலத்துலே விழுந்திடுச்சு. 'டேய் நாதமுனி', இத்தோடு போதும் இனி முளிச்சுக்கோ'ன்னு எச்சரிக்கை மாதிரி.

ஒரு வாரத்துக்கு முந்திதான் பாங்கிலே ஐயா கிட்டே இருக்கிற நஞ்சை, புஞ்சை எல்லாத்துக்கும் பத்திரத்தை வெச்சு, ஐயா கிட்டே மேட்டுலே புதுக் கிணறு தோண்டறதா ஒரு பத்து ரூபாய்க்கு ஏற்பாடு பண்ணியாச்சு. ஐயா தான் ஸான்க்சன். அவ்வளவுதான் கொடுக்க முடியும்னுட்டாரு. அங்கேயும் தண்ணி வராமே நடு வேலையிலே நின்னுட்டா என்ன ஆவறது தெரியாது. உள்ளூர திகில் அடிச்சுக்குது. விவசாயி கதியைப் பாத்தீங்களா ஐயா? எங்கே தொடங்கு

வான், எங்கே முடியும் தெரியாது. ஆனால் சும்மா மட்டும் இருக்க முடியாது. ஏதாட்டும் செஞ்சுகிட்டே யிருக்கணும். ஆண்டவனே நீ தான் கதி. விவசாயி லாப நஷ்டம் கணக்குப் பாக்கவே முடியாது. பெண் ஜாதி தாலி சேட்டு கிட்டயிருக்கும். அக்கா ஒரு கலியாணத் துக்குப் போவணும்னு மச்சினிச்சி கிட்டே ஒரு நாளைக்குன்னு சொல்லி அவ நகையைக் கடன் வாங்கி அதையும் மார்வாடி கிட்டே வெச்சிட்டு குடும்பமா அன்னி ராத்திரி குசாலா டெண்டு சினிமாவிலே அரிச்சந்தர விலாசம் பார்ப்பான். நெல் விலை விளுந்து பல் கொட்டிக்கும்.

மிளகா விலை தூக்கி கை கொடுக்கும். அப்போவானும் கணக்கிலே ஏதாச்சும் படுமா? ஓட்டைப் பானையிலே எம்மாங் கொட்டியும் என்ன கொட்டியும் நிறைவா காணறதெப்போ? பயிர் சாவியாவதைப் பார்த்துக் கிட்டேயிருக்க முடியுமா? அண்டை வயிலில் நடு ராத்திரியிலே போய் கள்ளக்கமல் இரைச்சு வரப்பு வெட்டி தண்ணியை மாத்திப் பயிருக்கு ஊட்ட வேண்டியதுதான். அடுத்த நாள் மாட்டிக்கிட்டா திண்ணைப் பஞ்சாயத்துத் தீர்ப்பு. அபராதம் செலுத்து வானோ— அபராதத்துக்கு அவன் எங்கே போவான். முருங்கை மரத்துலே கட்டி அணைகயிறிலே பத்துப் பதி னைஞ்சு—ஒண்ணு ரெண்டுன்னு எண்ணி எண்ணி அங் கேயே முதுகிலே தோல் கிழிஞ்சுக்கும். பெண்சாதி புதுஸ்ஸா, அளகாயிருந்தா—சின்ன ஐயா கிட்டே தப்பு பேசுதேனோ?-அனுப்பிவைக்கலாம். அவள் மாட்டேன்னா அவளை வெட்டிக் கிணத்துலே போட்டு, தண்ணியிலே ஏத்தினால் நிம்மதியா போயிட்டு வந்திடுவான். மானம் பாத்தவன் புழக்கடையிலே எண்ணிக்கும் எருப்பள்ளத்துக் கப்பாலே விஷப் பூண்டு இருக்குது 'கொளந்தை குட்டி குடும்பத்தோட, பரமபத சோபான படம் பெரிய ஏணி ஏறிட்டா அப்புறம் என்ன ஆச்சு எவன்பார்த்தான்? ஐயா

கிட்ட என்னென்னவோ பேசறேன் வாயிலே ஏதேதோ வருது. ஆனால் வாயைப் பொத்திக்கிட்டுத்தான் பேசு தேன். ஆனால் ஈதெல்லாம் சேர்ந்ததுதான் பயிராளி. ஆனால் பேச்சிலே கிணறுதாண்டி எங்கெங்கோ ரொம்ப தூரம் தாண்டி வந்துட்டமில்லே?"

வெய்யிலின் மஞ்சள், மேகங்களின் கறுப்புத்தட்டில் தோய்கையில், பொட்டில் கண்ட ரத்தப் பெருக்குப்போல் கசியும் இந்தத் தங்க மசியில்தான், சரித்திரத்தில் பொன் னால் பொறிக்கப்படும் செய்கைகள் எழுதப் படுமோ? (யாரால்?) பனி. நல்லவேளை, கம்பளி கொண்டு வந்திருக் கிறோம். ஆனால் நான் இங்கு வந்துவிட்டேனே? மானேஜர் 'டைவரை' அழைத்தால் கொணர்ந்து கொடுப் பான். ஆனால் அவருக்குத் தோணணுமே!

"கிணத்து விளிம்பிலே நிக்கிறேன். திடீர்னு ஒரு நெனப்பிலே வயிர் பகீராயிட்டுது. இந்த வாய்திறந்த பூமி, களபலியா என் ஐயா உயிரை வாங்கியாச்சு. பின்னா லேயே ஆயா கல்லு கல்லா பூட்டியிருந்த நகையை முழுங் கியாச்சு. அப்புறம் என் அப்பன், ஆத்தா, என் சம்சாரம் — பொருள் எல்லாம் இன்னும் இதுலே வராத தண்ணியிலே முழுகியாச்சு. இப்போ நான் இங்கே தனியா நிக்கேன். ஏன் ஏன் நிக்கேன்? நிக்கணும்? இதன் பசி இன்னும் அடங்கல்லே. இனியும் என்ன ஆவப் போவுது? வாழை நாராட்டம் என்னவோ ஒரு திகில் நெஞ்சுலே சுத்தி கிச்சு. தலையைக் கையில் பிடிச்சுக்கிட்டு அங்கேயே குந்திட்டேன். அப்போ ஐயா—

"அடே நாதமுனி! நாதமுனி!!"

சுத்து முத்தும் நோக்கறேன். எப்போ இப்பிடி இருண்டு போச்சு?

"இங்கே பாருடா!"

கிணத்து ஆழத்துலேருந்து ஒரு ஆள் என்னை அண்ணாந்து நிக்கற கோடு மின்னல் மினுக்குது. முகம் சும்மா நகநகன்னு — நெனைச்சா இப்பக் கண் கூசுது. கண்ணைப் பொத்திக்கிட்டேன். ஆனால் கண்ணுக்குள் ஆளு. தோளிலே கலப்பை, தலையில் முண்டாசு.

''அடே சோம்பேறி, மீசையை சரைச்சுக் கொட்டுடா. இனம் தெரியாமல் தோண்டினால் உன் மாதிரி தோத்துட்டு நிக்க வேண்டியதுதான். ஆகப் பொறுத்தவனுக்கு ஆக்கப் பொறுக்கல்லே."

நான் குப்புற விழுந்து, ''ஆண்டவனே எனக்குத் தெரிஞ்ச பூசையெல்லாம் போயாச்சு. முடிஞ்ச பலியெல்லாம் கொடுத்தாச்சு.—"

''சீ!''— கண்ணுக்குள்ளே, அந்த ஆள் உடம்பு பூரா கோவத்துலே குங்குமா செழுப்பாயிடுச்சு. ''நான் பிராம்மணன். பலியைப்பத்தி என்கிட்டப் பேசாதே. பள்ளத்தை விட்டுட்டு மேட்டுலே தோண்டிப் புதுசா கொட்டப் போறியோ? மடையா, அதென்னடா மூளை?"ன்னு சொல்லிக்கிட்டே, தோளிலிருந்து கலப்பையைக் கையில் வாங்கி பக்கவாட்டில் வீசி எறிஞ்சான். ஏர் முள் பொத்துகிட்ட இடத்துலேருந்து, ஆண்டவனே. பீச்சி அடிக்குது.

எனக்கு உடல் பூரா ரோமம் குத்திட்டது. குளிரினால் அல்ல. நெற்றி கசகசத்தது.

''ஆண்டவனே!" கண்ணைக் கசக்கிக்கிட்டேன்! கண்ணுக்குள்ளே இதென்ன கண்கட்டா? இல்லை மெய்தானா? மெய்தான். கண்ணுக்கு வெளியே கிணத்துலே தண்ணி. மளமளன்னு ஏறிக்கிட்டு வருது. இடுப்பிலே கை வெச்சிக்கிட்டு அந்த ஐயா சிரிச்சிக்கிட்டே நிக்கிறார் சிரிப்பிலே அப்படி ஒரு ஒளி வீசுதுங்க ஐயா! தண்ணி ஏறி அவரை மூடுது. எனக்குக் கை கொடுக்கத் தோணல்லே 'தண்ணீ! தண்ணீ!!. தொண்டைக்குள்ளே தான்

குமுறுது. நாக்கு இளுத்துட்டுது. ஆளின் முண்டாசுத்துணி மட்டும் கழண்டு மேலே மிதந்துவருது. எட்டிப் பிடிச்சுக் களுத்துலே சுத்திக்கிட்டேன்.

கிணறு பொங்கி வயல்லே வளிஞ்சு ஓடுது.ரெண்டு கையி லும் அள்ளிக்குடிக்கிறேன். தண்ணியா அது? அமிழ்தம்! அமிழ்தம்!! தண்ணிலே முங்குறேன். விளுந்து புரள்றேன் உடல் பூரா புது ரத்தம் பாயுது. பழைய கவலை,தரித்திரம் எல்லாம் களுவி ஓடுது. அங்காளம்மா! அங்காளம்மா!! ஆத்தா வவுத்துலே பாலைவாத்துட்டா. முழுமுலையே எனக்குக் கொடுத்துட்டா!என்னவோ பினாத்திட்டு ஊருக் குள்ளே ஓடியாறேன்.

"என்னப்பா நாதமுனி?"

"ஆத்தா பாலு! ஆத்தா பாலு!" வெறியாட்டம். என்னை நாலு பேர்கட்டிப் பிடிக்கறாங்க. அவங்களாலே மாளல்லே."

நாயக்கர் கொஞ்சம் மூச்சு வாங்கிக் கொண்டார். எனக்கும் அப்பிடித்தான் இருந்தது. தென்னைமரத்தில் குரங்கு க்ரீச்சிட்டது.

"அந்த தலைப்பாத்துணி, வூட்டுலே, பானைலே பூவாடையில் வெச்சிருக்குது." இருள்மூட்டத்தில் அவர் முகம் திரையிட்டு விட்டது. அங்கிருந்து குரல்.

—"அப்புறம் புதுக் கிணறு ஏன் தோண்டணும்? இதுக்கே இன்னும் கட்டடம் கட்டியாவணும், தொட்டி கட்டணும், பம்பு செட், கொட்டா, உள்ள எந்த ஆழத் துக்குக் குழாயிறக்கணும்! கூலி கொடுத்தது, சரக்கு வாங்கினது எல்லாம் கையெழுத்து, கைநாட்டு, ரசீது, புதுகிணறு தோண்டினாப்போல காட்டிட்டேன். பெரிய ஐயா இடையிலே வந்து நோட்டம் பார்த்திருந் தால் மாட்டிக்கிட்டு இருப்பேன். நல்ல காலம் ஐயாவோ, பாங்க் இனிஸ்பட்டரோ ஆறு மாஸத்துக்கு இந்தப்

பக்கம் எட்டிப் பார்க்கல்லே ஐயாவுக்கு, உடம்பு சரியில்லே. ஆபிஸிலேவேறே ஜோலி, அப்புறம் ப்ளஷரைப் போட்டுகிட்டு ஒரு நாள் வீட்டு வாசல்லே நிக்கிறார். வவுத்துலே புளியைக் கரைக்குது. ஆனா என்னாச்சானும் மாட்டிக்க வேண்டியதுதானே? ஆனா நாமட்டும் என்ன கடனை வாங்கி என் பெண்டாட்டிக்கு காசுமாலை கட்டிட்டேனா?

கழனிக்கட்டுக்குப் போனோம். ஐயா சுத்து முத்தும் பாக்கறார்.

"என்ன நாயக்கரே? கிண்று எங்கே? வடையைக் காக்கா தூக்கிண்டு போயிட்டுதா?" பேசாமே ஐயாகாலுலே நெடுஞ்சாங்கடியா விழுந்துட்டேன். விசயம் பூரா கக்கிட்டேன். கதை முடிஞ்சதும் ஐயா என்னை ஒரு பார்வை பார்த்தாரு பாருங்க. அதை நான் சாவற நேரம் வரைக்கும் மறக்க மாட்டேன், மறக்க முடியாது.

"முன்னாலேயே ஏன் சொல்லல்லே? உன் புளுகு மந்தரத்துலே என்னையும் மாட்டி விட்டையே! நடந்தது ஒண்ணு, பாங்குலே ரிகார்டு ஒண்ணு காட்டுதே, என்னையும் உடந்தையாக்கிட்டே. உன்னை நம்பிமோசம் போனேன்னு நின்ன இடத்துலே நிக்காமே துள்ளறாரு.

"காலை விடய்யா! காலைவிடய்யா!!"

நான் ஏன் விடறேன்? விடமாட்டேன். நல்லதோ பொல்லாதோ ஐயாதான் கதி.

ராவோடு ராவா வீட்டுக்கு வரவழைச்சாரு. புதுசா புதுசா காலி பாரத்துலே ஏதேதோ அங்கே இங்கேன்னு காட்டி கையெழுத்து வாங்கிட்டாரு. மன்னன் என்ன செய்தாரோ தெரியாது. புதுக் கிணறு தோண்ட வாங்கின கடனை பழங்கிணறை ஆழப்படுத்த சீர்படுத்த கட்டடம் கட்டவாங்கின கடனாய் மாத்தி—பெருமூச்சு ஐயாதான் விட்டாரு. எனக்கென்ன கவலை? என்னையேதான் ஐயா கிட்ட ஒப்படைச்சுட்டேனே!

"நாயக்கரே நீர் கஜப் போக்கிரி!"

"நாயக்கரே துரோகம் பண்ணிட்டீங்க" ஐயா. சொன்னது என்னவோ ஒரு முறைதான். ஆனால் அந்த எண்ணம், மனவருத்தம் அவர் நெஞ்சை விட்டு இன்னும் நீங்கல்லே. எனக்குத் தெரியும். அப்புறம் நான் எட்டு போகம் எடுத்தாச்சு. ஆண்டவன் புண்ணியத்துலே நாளைக்கே ஒரு மட்டா இந்தக் கணக்கை அடைச்சுடலாம். ஐயாவுக்குத் தெரியும். அடைச்சுட்டேன்னா ஐயா அன்னிலேருந்து இந்தப் பக்கம் காலை உதறிடுவார். ஆனால் நான் மாட்டேன். ஐயா பாதம் என் மண்ணுலே பட்டுகிட்டேயிருக்கணும். அதுதான் என் ஆஸ்தை. ஐயா கடன் கொடுத்த ராசிலே தானே எங்கள் பரம்பரை கஷ்டம் விடிஞ்சுது?"

துரியோதனனுக்குத் தொடைவரை
கர்ணனுக்குக் குண்டலத்தில்
தருமனுக்கு சத்யத்தில்
மானேஜர் ஸார், உங்களுக்குப் பாதத்திலா ?
நாயக்கர் குரலில் கண்ணீர் துளும்பிற்று.

"சின்ன ஐயா கிட்டே சொல்லுதேன். நடந்தது நடந்து போச்சு. என்ன செய்ய ? விவசாயிகிட்ட, வியாபாரிகிட்ட என்ன நாணயத்தை எதிர் பார்க்கிறார் ? அதுவும் எனக்கு எத்தனி சோதனை நடுவுலே? வியாபாரிக்கும் பேராசை, ஏமாத்தத்தூண்டுது. வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்கத் தோணுதா ? எண்ணம் இருந்தால், அதுமட்டுக்கும் தான் எங்கள் நாணயம் - கடன் வாங்கறப்போ ஒரு நியாயம்; கூழைக்கும்பிடு. எசமான்பாட்டு, கடன் வாங்கினப்பறம் இன்னொரு நியாயம். எனக்கே தெரியுது. ஆனால் என்ன செய்ய ?"

நாயக்கர் கையை விரிக்கிறார்.

"நாடு முளுக்க ஒரு அரிச்சந்திரன் கதைதான் உண்டு. அதனால் சொல்லிக் காட்டவும், கதைசொன்னால்

ஆவேசப்படவும் முடியுது. அவனே புளைக்கத் தெரியாதவன். அந்த ஒரு பொய்யைச் சொல்லிப் போட்டால்தான் என்ன ?'' கண்ணைச்சிமிட்டுகிறாரா, நிஜமாகத்தான் சொல்கிறாரா ? இருட்டில் தெரியவில்லையே. "ஆனால் அப்புறம் நமக்குக்கதை கிடைச்சிருக்காது; எல்லாருமே அரிச்சந்திரனாயிருந்துட்டா எப்பிடி ? இந்த நியாயம் ஐயாவுக்கு—எல்லாம் தெரிஞ்சவர் - படல்லே? இதைச் சின்ன ஐயாகிட்ட மட்டும்தான் சொல்லிக்க முடியும்னு சொல்லிக்கிறேன், ஐயாகிட்ட மூச்சு விட்டுடாதிங்க. சரி, திரும்புவோமா ?"

நாயக்கரே, நீங்கள் செய்த காரியம் ஜாக்க, நீங்கள் இன்னேரம் சொல்லி வந்த கதையையும் உங்கள் கண்ணீரையும் நான் நம்பணுமா ? கதையை இத்தனை சுவாரஸ்யமா சொல்பவர் குறைச்சல்தான். அதற்கு உங்களுக்கு சர்டிபிகேட் கொடுக்கவேண்டியதுதான். ஒன்றுதெரிகிறது ஆளுக்குஆள் எத்தனை நாடகம், நடிப்பு, இந்தக்கதையைக் கேட்கத் தெரிந்தே உங்களுடன் என்னை அனுப்பிய மானேஜரும் நாடகம் நடத்திக் காட்டுகிறார். நெல்லிலிருந்து உமியைப் பிரிக்க எனக்கு எவ்வளவு சக்தியிருக்கிறது என்று தலைக்குள் சோதித்துப்பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொள்கிறாரா ? அவருடைய அகண்ட கருணையில், என்படிப்பினையில் இப்படியும் ஒரு பாடம் ஊட்டுகிறாரா?

வந்தவர் போனவரிடம், சொன்னகதையை சொல்லிச் சொல்லி, நாயக்கரே, உங்களை அறியாமலே அதில் மெருகேறி, உங்களுக்கே உங்கள் நிஜம், பொய்யின் கலவை மறந்து, உங்கள் வார்த்தையில் உங்களுக்கு அத்தனை நம்பிக்கை ஏறிவிட்டது. நீங்கள் சொல்வதை நீங்களே அப்படியே அப்பட்டமாக நம்புகிறீர்கள். சாஸ்திரமே புதிதாக அமைத்துப் பார்க்கிறீர். அது செல்லுகிறதா என்று என்னிடம் ஓதிப்பார்க்கிறீர். ஆனால் உங்களுடன் தர்க்கிக்க எனக்கு என்ன தகுதி

யிருக்கிறது? மானேஜர் சிறகணைப்பில் நான் ஒருகுஞ்சு.

டாக்ஸி உள் மங்கிய வெளிச்சத்தில் மானேஜர் புன்முறுவலை உணர்கிறேன். அதில்தான் எத்தனை அர்த்தம், நாயக்கர் என்ன பேசினார் என்று கேட்க மாட்டீர்கள். வீட்டுக்குப் போன பிறகும் கேட்க மாட்டீர் கள். ஆனால் நாயக்கர் பேசினது அத்தனையும்,, நீங்கள் பார்க்காமலே கேட்காமலே உங்களுக்கு அற்றுபடி. உங்கள் விசேஷமே அதுதான்.

ஆண்டவனே, சிலருக்குக் கதை சொல்லும் வரத்தை வழங்கியிருக்கிறாய். அதற்கு சாக்ஷியாக நிமிடத்துக்கு நிமிடம் நாதமுனி நாயக்கர் உங்களை அழைக்கிறார். நம்பினோர்க்கு நடராஜா, நம்பாதவருக்கு எமராஜா. ஆண்டவனே, நீ யார் பக்ஷம்? இல்லை நாயக்கர் நூற்கும் கூட்டில் நீயும் சிக்கிவிட்டாயா?

டாக்சி, நாயக்கர் வீட்டு வாசலில் நிற்கிறது. நாயக்கர் இறங்கிக் கொண்டு, கைகூப்பி எங்களை உள்ளே அழைக்கிறார்.

"ஐயா வாங்க வாங்க!" ஒரு ஆட்டுக்கல் உள்ளிருந்து எங்களை நோக்கி அசைந்து வருகிறது.

"கொளந்தே ஐயா நீங்களும் வாங்க."

ரவிக்கையில்லை. அவள் பூட்டியிருக்கும் நகைகளைப் பார்க்கையிலேயே எனக்குக் கழுத்து கனக்கிறது. தோடு தொங்கும் இழுப்பில் காது எப்போ அறுந்து கொள் கிறதோ?

கூடத்தில் கட்டில் மேல் குவிந்திருந்த துணிகளை அவசரமாக ஒதுக்கி நாயக்கர் எங்களுக்கு இடம் பண்ணு கிறார். என்னை அறியாமலே என் மூக்கு நுனி தராசு முள் போல் நிலை கொள்ளாது என்னவோ அசைகிற

மாதிரி பண்ணுகிறது. கூடம் பூரா அப்படி ஒரு நெய் மணம். நெய்யோடு சேர்ந்த தேங்காய் எண்ணெயின் 'கம்'.

இரண்டு கைகளிலும் இரண்டு தட்டுக்களில்—சூடாக இரண்டிரண்டு தேன் குழலுடன் நாயக்கர் மனைவி சமையலறையிலிருந்து வருகிறாள். செவக்க, என் இஷ்டத்துக்கு எடுக்க அவளுக்கு எப்படித் தெரியாமலே தெரிந்தது? மானேஜர் அதைப் பார்த்ததும் நாக்கு ஊறலை இழுத்து உறிஞ்சிக் கொள்கிறார்.

''இதெல்லாம் எனக்கு ஆவாதப்பா! பையனுக்குக் கொடு.''

''வீட்டுப் பச்சரிசிலே சுட்டதுங்க— அத்தினியும் வீட்டு வெண்ணெய்ங்க. ஒண்ணும் செய்யாதுங்க!'' கெஞ்சு கிறாள். ஊட்டாத குறைதான். 'கொளந்தை ஐயா நீங்களும் சாப்பிடு கண்ணு!'' அவசர அவசரமாய் உள்ளே போய் இரண்டு அதிரஸங்களைக் கொணர்ந்து ஆளுக்கு ஒன்று வைக்கிறாள். ஆனையடி அதிர்சம். அதன்மேல் விழுது நெய்வேறு.

''ஐயாமாரே, சும்மா சாப்பிடுங்க. ஒண்ணும் ஆவாது- கொளந்தே ஐயா மூவம் ஏன் சவுங்குது?'' பதறிப் போகிறாள். ''ஏதாச்சும் தப்பாப் பேசிட்டேனா?''

மானேஜர் என்னைப் பார்த்துப் புன்னகை புரிகிறார். ஸார், நீங்கள் தகப்பன் கருணை— இவள் தாய்க் கருணை_ இருவருமே கருணையினாலேயே ஏன் இப்படி என்னை வதைக்கிறீர்கள்?

''ஒண்ணுமில்லை— ஒண்ணுமில்லை.'' கோபத்துடன் மூக்கை உறிஞ்சிக் கொள்கிறேன். அவள் திகைத்து நிற்கிறாள். என் கலவரத்தை சமாளிக்கத் தலை குனிந்து அதிரஸத்தைப் பிடுகிறேன்.

பற்களிடையில் அதிரஸவிள்ளல் அதுங்கியதுமே தேன் விடுகிறது. பாகு அத்தனைப் பக்குவம்.

"அம்பி, வீட்டில் வத்தி வைக்காதே. வாழ்க்கையே இப்படித்தான், விசுவாமித்ர தபஸ் மாதிரி. கற்பு எப்படியெல்லாம் அழிகிறது!" நெஞ்சில் அவள் காலடிச் சத்தம் கேட்கும் பயத்தில் அவசர அவசரமாக அள்ளிப் போட்டுக் கொள்கிறார். சரியாகக் கடித்து, ருசித்து விழுங்க அவருக்கு எண்ணத்தில் கூட நேரமில்லை. எல்லாம் இருந்தும் திருட்டு வாழ்க்கையாப் போச்சு. ஸார் நிலைமையை ஒரொரு சமயம் நினைத்துப் பார்த்தால் வயிறு ஒட்டிக் கொள்கிறது. திடீரென்று காணாமல் போய் விட்ட நாயக்கர், தோளில் அணைகயிறும் கையில் குவளையுமாக புழைக்கடையிலிருந்து வருகிறார்.

"பசும் பாலுங்க, ஒண்ணும் செய்யாதுங்க!"

'மதுர மதுர க்ஷீரா பானமு'. இதென்ன என்னிலிருந்து எனக்கு மட்டும் வாக்கியம் பீம்ப்ளாஸ் ராகமெட்டில் கேட்கிறது? (கோமுவுடன் சகவாச ப்ரஸாதம்?)

மானேஜர் பாலை அருந்திக் கொண்டே, "உனக்கென்ன எதுவுமே ஒண்ணும் செய்யாது. தேன் குழலும் பாலும் வயிற்றில் கடபுடாவுக்குச் சரியான காம்பினேஷன்."

பாவம், மூணு நாள் அவஸ்தைப்பட்டார். ஒரு நாள் ஆபிஸுக்கு வரமுடியவில்லை.

பாலாவின் கண்கள் என்மேல் சினம் கக்குகின்றன. நான் என்ன செய்ய?

எல்லாருக்கும் எப்பவும் எதற்கும் ஒரே Safetey Valve.

"என்ன செய்ய?"

o o o

நாயக்கரே, பேசாமல் என்னை தத்து எடுத்துக் கொள்ளுமேன்!

உமக்குக் கிணறு தோண்டிக் கொடுத்த பிராம்மணன் உங்கள் குடும்பத்துக்குப் பிள்ளையாக வந்துட்டதா நெனச்சுக்குமேன் !

நாதியத்தவனுக்கு ஜாதியென்ன ? நீங்கள் இஷ்டப் பட்டால் அம்பி நாயக்கன் ஆயிடறேன்.

o o o

ஆனால், இப்படி நினைத்ததாலேயே என்னைக் கை தூக்கிவிட்ட மானேஜர் ஸார் என் தெய்வத்துக்குத் துரோகம் இழைத்து விட்டேனோ? தெரியல்லியே! யாரை மன்னிப்புக் கேட்பேன், ஸாரையா? தெய்வத்தையா?

o o o

ஒருநாள், தெருவில் நானும் P.C. 433-ம் ஒருவரை யொருவர் கடந்து செல்கிறோம். பேசிக் கொள்ள வில்லை. மனிதன் கண்களில் என்னைக் கண்டு கொண்ட அடையாளமே இல்லை. P.C. 433, உன்னை நான் என்ன செய்தேன்? செய்ததெல்லாம் நீதான். சிரிப்பு வருகிறது. ஒரு பக்கம் வியப்பாகவும் இருக்கிறது. அடித்த கை சுளுக்கிக் கொண்டது என்று அழுவோர்க்கும் அவர்கள் நியாயம் செல்லத்தான் செய்கிறது.

o o o

அப்புறமும் ஓரிரு முறை. அப்பவும் அப்படியேதான்.

ஒரு நாள் பேச்சு வாக்கில் முத்தையா, "மருமவப் பிள்ளை தனியாப் போனப்புறம் கோமு என் வீட்டுக்கு வரதில்லை. அவள் தான் விரோதம் பாராட்டறாளோ அவன் தான் வரவிடல்லியோ ? யார் கண்டது ? வந்தால் சந்தோசம். வீட்டிலே மட்டனோ, கஞ்சியோ, ஒரு நாள் சேர்ந்து சாப்பிடலாம். வாராட்டி யான் என் செய்ய ? நான் போய் வேப்பிலை அடிக்க மாட்டேன். எனக்கு இறங்கவும் இறங்காது"

கோமுவா ? கோஷாவா ?

o o o

குடும்பம், விசுவாசம், நன்றி, பாசம் இதெல்லாம் நாளாக ஆக வெறுமெனப் பொழுதுபோக்குக்குக் கட்டி விட்ட கதையாகி விடுவதைக் கண்ணெதிரே பார்க்க ஏதோ திகிலாயிருக்கிறது.

இந்த தூரத்தில் காமுப்பாட்டியை நினைக்கத் தோன்றாமல் இல்லை. மண்ணைப் போட்டு வளர்த் தாளோ, கல்லைப் போட்டுவளர்த்தாளோ, கடுஞ் சொல் லைப் போட்டு வளர்த்தாளோ, வளர்த்தாள்.

ஒரு நாள் அவளைப் பார்க்கணும்.

o o o

இந்த வீட்டில் பூஜை அறை இருக்கிறது. மூன்று புறங்களிலும் சுவரை அடைத்த பெரும் படங்கள். ரவிவர்மாவின் லக்ஷ்மி, சரஸ்வதி, தமயந்தியும் அன்னப் பறவையும்.

பார்வதியையும் பிள்ளையாரையும் இருமருங்கிலும்
அணைத்துக் கொண்டு
முறுக்கிய மீசையுடன் சிவன், ஆணழகன். காலடியில்
ரிஷபமும் சிங்கமும்.

இன்னொருபடம்:

ஆகாச கங்கையை வாங்கிக் கொள்ள விரித்த சடை யோடு, அண்ணாந்து, ஒரு அலக்ஷிய செளரியத்துடன், கைகள் இடுப்பில் வைத்தபடி சிவன்.

ஒருபக்கம் ரிஷபத்தில் சாய்ந்தபடி பார்வதி.

மறுபக்கம் கூப்பிய கைகளுடன் தாடிவாலா பகீரதன்,

ஆகாயத்தில், அவன் பிரயத்தனம் கோப கங்கா.

சமுத்திரத்தின்மேல் அம்பை எய்துவிட்டு நிற்கும் கோபராமன்.

சஞ்சீவி மலையை ஏந்திப் பறந்து வரும் ஆஞ்சநேயர்.

ராம பட்டாபிஷேகம்.

தோளில் கிளியுடன் மீனாக்ஷி.

பின்னால் மதுரையில், கோவிலில் பார்த்தேன். வேண்டுதலைக்கு வளர்த்துக் கோவிலுக்கு விடப்பட்ட கிளிகள், கூண்டுகளிலிருந்து "மீனாக்ஷீ மீனாக்ஷீ" என்று அழைக்கின்றன.

பாலாவின் அழகுக்கு ஏற்றபடி அவள் குரலும் இருந்து அவள் என்னை, எல்லோரும் போல், "அம்பீ" என்று அழைக்கமாட்டாளா என்று சில சமயங்களில் தோன்றுகிறது.

ஆனால் பாலா கூண்டினுள் இருக்கிறாள். கூண்டுக் கிளி "மீனாக்ஷீ!" என்று அழைக்கிறது. அதுவுமில்லை இவள். ஒப்பு உவமை இந்த மட்டில்தான். விசனம், கெட்டிப்பாலின் சோம்பலான பொங்கல்போல், நெஞ்சில் மேடு இடுகிறது. இங்கு நான் வந்திருக்கக்கூடாது. இது என் பல்லவி ஆகிவிட்டது.

ராமகிருஷ்ணர்.

கண்களில், அந்த உள்ளுக்கு வாங்கிப் போன பார்வை லேசாக வாய்திறந்து, இரண்டு பற்கள் நுனி மட்டும் தெரியும் அந்த லேசுப்புன்னகை.

மார்மேல் கைகட்டி, பக்கப்பார்வை விறைப்பாய், மூண்டாசு விவேகானந்தர்.

ஆளஉயரத்துக்கு வெண்கலக் குத்துவிளக்கு

எப்பவும் பளிங்கெனத் துலக்கிய பூஜா பாத்திரங்கள்.

(இங்கு வேலைக்காரியில்லை. எல்லாக் காரியங்களும் பாலா)

எப்பவும் தேங்கிய அகிற் புகை.

சுவரோரமா சார்த்தியிருக்கும் தம்பூர்.

ஆனால் பூஜைசெய்ய சாஸ்திரி யாரும் வரவில்லை.

பூஜை அறையில் இத்தனைக்கும் நடுநாயகமாய் உயிர் size இல் ஒரு ஓவியம். கொசுவம் வைத்துக் கட்டிக் கொண்டு கொழுகொழு வென்று பசுப்போல் மாமி கைகளைக் கோர்த்துக் கொண்டு ஃப்ரேமுக்குள் நிற்கிறாள். யாரென்று கேட்கத் தேவையில்லை. நானும் கேட்கவில்லை. இப்போது கடைந்தெடுத்த பொம்மை பாலா, அந்த வயதுக்கு அப்படி ஆகிவிடுவாள்.

தூபதீப உபசாரங்கள் (பாலாவால்) எனக்குத் தெரிந்தவரை, அந்த ஓவியத்துக்குத்தான் நடக்கின்றன.

பூஜை அறை அனேகமாக மூடித்தான் இருக்கும். திறந்த நேரங்கள் அரிது,

ஒரு சமயம், தற்செயலாக அந்தப்பக்கம் செல்ல நேர்ந்த போது, பூஜை அறை திறந்திருந்தது. ஸார் பின்னால் கோர்த்தகைகளுடன், மாமி படத்தெதிரே நிற்கிறார். அவருக்குக் கீழுதடு பிதுங்கியிருக்கிறது. கண்களில் வேதனை. ஓவியத்தில் கண்களில் இப்போ என்னால் தாங்கமுடியாத துயரத்தைப் பார்க்கிறேன். இருவரும் ஏதோ சம்பாஷணையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இங்கே இப்போ என் இடம் அல்ல, சமயம் அல்ல. சந்தடி செய்யாமல் பின்னிடைகிறேன்.

o o o

இங்கு என்ன குறைவு?

ஆனால்

இழுத்துப் பிடித்து முறுக்கேறிய தந்தி எப்போ அறுந்து போமோ.

அறுந்தால் என்ன ஆகுமோ? யார் முகத்தில் எந்த மாதிரி அடிக்கப் போகிறதோ என்று சூழ்நிலையில் ஒரு அடிவாரப் பிகித்தம்.

சிலந்திக் கூடு நாளுக்கு ஒரு இழையாக மேலே பின்னிய வண்ணம்

கண்ணுக்குத் தெரியாது, கற்பனையில் நீந்தும் பிரம்மாண்ட சிலந்திவிழி.

வாவா என் கூட்டுக்குள்ளே

கண்ணாடியில் முகம்பார்த்து

விழியில் மைதீட்டிக் கொள்

இங்கு வந்திருக்கக் கூடாது என்று தினம் தினம் எண்ணிக் கொண்டே சிலந்தி இழை என் மேலும் வெய்து கொண்டே, இருக்குமிடத்தில் இருந்து கொண்டேயிருக்கிறேன். ஆனால் உண்மையிலேயே யாருக்குத்தான் போக்கிடம் எங்கேயிருக்கிறது? இருக்குமிடத்திலேயே நாளுக்கு நாள் புதைந்து போகிறோம். மனமும் அணு அணுவாய் ஊக்கமெனும் செயலிழந்து போகிறது. காமுப் பாட்டியிடமிருந்து தப்பி ஓடிவர இருந்த ஆர்வம், இங்கு விட்டு மாறுவதற்கு இல்லை,

என் Savings கணக்கில் தொகை ஏறிக் கொண்டே போகிறது. செலவுக்கு வழியில்லை. மானேஜர் அபத்தியம் பண்ணிக் கொண்டு தானிருக்கிறார்.

"அட போடா அம்பி!" அலுத்துக் கொள்கிறார் "நான் இனிமேல் நாக்கைக்கட்டி இழுத்துப் பிடிச்சு என்னத்தை வாழறது?" எனக்கு விழி ததும்புகிறது. ஆனால் நான் என்ன செய்ய?

மானேஜர் என் முதுகில் அறைகிறார். அறை சற்று சூடாய்த்தான் விழுகிறது.

"முத்தையா, பரவாயில்லே. உன் அக்கா மவன் மூக்கைக் காப்பாத்திகிட்டான். பரீக்ஷ பாஸ் மட்டுமல்ல, நிறையவே மார்க் வாங்கிட்டானே!"

நானே என்னை யாருக்கும் தெரியாமல் நிமிண்டிப் பார்த்துக் கொள்கிறேன்.

"என் அக்கா மவன் இல்லே" முத்தையா கண்ணைச் சிமிட்டுகிறான். உடனேயே கையைக் கூப்பிக் கொண்டு. ஆனால் "எந்த நிழல்லே அமர்ந்து எந்த வெளிச்சத்திலே படிச்சான், அதையும் கவனிக்கணுமல்லே ?"

கண்ணெரிய, மூளை கொதிக்க, இரவே பகலாய், பகலே இரவாய்.

கண்ட இடம், கிடைத்த நேரம் என எப்போது படித்தேன் ? எப்படிப் படித்தேன் ?

எப்போது பரீக்ஷைக்கு உட்கார்ந்தேன் ? எப்படித் தேறினேன் ? எல்லாமே ஒரு விளையாட்டாய்ப் போயிற்று.

"இனிமேல் எப்படிங்க அவன் என் அக்கா மவன் ஆவான் ? அம்பீ எப்பவோ ஜாதி மாறியாச்சே !"

விஷ்ணு சக்ரம் போல் அத்தனை பேருக்கும் ஒரே சிரிப்பு சீறி தன் மத்தாப்புவைக் கொட்டிக் கொண்டு சுற்றி வருகிறது. நானும் சிரிக்கிறேன். ஆனால் நெஞ்சடியில் ஏதோ விரிசல் கண்டு கண்ணீர் கசிகிறது. கண்ணுக்கு வரவில்லே.

அம்மா ! அப்பா ! என்று பேர் சொல்லி இந்த சமயத்தின் பெருமையைப்பட்டுக் கொள்ளக் கூட நீங்கள் இல்லை.

"சிவராமா, என்ன மொண மொண ?"

"ஒண்ணுமில்லே சார்—"

"சும்மா சொல்லு—"

"நான் என்ன ஸார் கேட்கப் போறேன் ? அல்வா, நெய்கடலைதான் !"

"அல்வா நெய்கடலை என்ன, முத்தையா, பாலாஜி கபே ப்ரொப்ரைட்டரை வரச்சொல்லு. நாளை ராத்திரி பாங்க் மொட்டை மாடியிலே நிலாச்சாப்பாடு."

ஒரு ஆஹா காரம் கூட்டத்தை ஊடுருவியது. சமயம் ஏற்படுத்திக் கொண்டு சிவராமன் என்னைத் தனியா மூலைக்கு இழுத்துச் சென்றான்.

"இது யார் செலவு?" நான் தோளைத் தூக்குகிறேன். எனக்கென்ன தெரியும்?

"யார் செலவாயிருந்தாலும் சரி. எனக்கு நாளைக்கு நீ தனியா அல்வா நெய்க்கடலை கவனிச்சுடணும்?" எனக்குச் சிரிப்பு வருகிறது.

o o o

மொட்டை மாடியில் மேஜை நாற்காலியெல்லாம் ஏற்றியாகி விட்டது.

வழக்கப்ரகாரம் அக்கௌண்டண்ட் இல்லை. மதறாஸ் போயிருக்கிறார். அதென்ன அவருக்கு மட்டில் அப்படி ஒரு மதறாஸ் ஜோலியோ?

மாடி மூலையில் சமையல் பண்டங்கள் எல்லாம் ஒரு இரு மேஜைகளின் மேல் ஒழுங்காக எவர்ஸில்வர் பாத்ரங்கள், மூடிகள், தனித்தனி கரண்டிகள், சுத்தமாகி, வரிசையாக வைக்கப் பட்டிருக்கின்றன.

வாழையிலைக் கட்டு.

பாலாஜி கபே ப்ரொப்ரைட்டர் ராயரே ப்ரஸன்னமாகயிருக்கிறார், இரண்டு உதவிகளுடன். இரண்டு கணப்புக் கும்மட்டிகள் சுறுசுறுப்பான வேலையிலிருக்கின்றன.

தக்காளி சூப்:— ரொட்டித் துண்டங்கள் மொறு மொறுவென மிதக்கின்றன. படுருசி. சிவராமன் இதை அவன் ஆயுசில் பார்த்திருக்க மாட்டான். கண்டிப்பாக நான் பார்த்ததில்லே. ஆனால் ஒரு கோப்பைக்கு மேல் கிடையாது. பசியைத் தூண்டவாம்.

(எங்கள் பசியைத் தூண்டிவேறே பார்க்கணுமாக்கும்.)

பூரி, தால் (அதில் பச்சைப் பட்டாணி, பொடிப் பொடியாக மாங்காய்த் துண்டுகள்)

(முத்தையா, மத்த ஸார்களையும் கேட்டுக் கொள்றேன். ஒண்ணையே போட்டு வளைச்சிண்டிருக் காதேங்கோ, பின்னால் வரும் ஐட்டங்களை நீங்கள் அனுபவித்து சாப்பிட வேண்டாமா?—ராயர்)

முத்தய்யா "வீட்டுக்குக் கட்டி எடுத்துட்டுப் போயிட் டாப் போவுது."

எல்லாரும் சிரிக்கிறார்கள்.

ராயரின் சிரிப்பு ஒரு நொடி தாமதித்து வருகிறது அதில் துளிர்த்த அலக்ஷியம் எனக்கு மட்டும் தெரிகிறது.

("காட்டான்கள்!" வேறென்ன அதற்கு அர்த்தம்?)

பிஸிபேளா ஹுளி — வாழையிலையில் அன்னாபிலை
ஒரு கரண்டி—இன்னும் ஒண்ணு, பக்குவமான இள கலில் கரண்டியிலிருந்து இலைக்குத் துவண்டு விழுகையில்...

அன்னா, கோஸ்

தேங்காய் போட்டுக் கறி

அதற்குப்பின் வேணா பார்ட்டி கள், உத்யோக ரீதியில்

மூஞ்சியில் அடித்தாற் போல், இதற்கும் கூடுதலான ஐட்டங்களுடன், அலுத்துப் போமளவுக்கு சாப் பிட்டாச்சு. ஆனால் இந்த ருசி.உண்மையில் இது பண்டத் தின் ருசி கூட இல்லை. எதற்கும் முதல் தடவை யெனும் மஹிமை இருக்கிறது. முதல் தடவையை எதுவும் மிஞ்ச முடியாது. அதற்கு முன்னும் இல்லை பின்னும் இல்லை. முதல் தடவை என்பது எப்பவும் ஒரு தடவை, ஒரே தடவைதான் உண்டு. அதில் ஒரு ஆத்மீகமே இருக்கிறது.

தேங்காய்ச்சாதம்- (முழிமுழி முந்திரிப்பருப்பு), பப் படம். வாழைக்காய் வறுவல் (ஊசி ஊசியாகநறுக்கி)

தெளிவாய்க் கொட்டுரஸம். எடுத்து ஊற்றினால் ஆள், திரை வழி தெரியும். சும்மா குடிக்கத்தான், எவன் கலந்து சாப்பிடப் போகிறான்?

சிவராமன், இன்னும் பிரமிப்பிலிருந்தே மீள வில்லை. இலையில் ஒரு பக்கம் தேங்காய் சாதம் பப்படத் தைப் போர்த்திக்கொண்டு, உட்கார்ந்திருக்கிறது.

''ஓய் ராயரே, நீர் நல்லவரில்லை. சாப்பிடவும் முடிய வில்லை. விடவும் முடியவில்லை''

''எல்லாம் அண்ணா தயவு, ஆசிர்வாதம்''

அன்றைய சமையல் விவரங்கள் என்ன தீர்க்கமாக மனதில் பதிந்து இப்போது 3-Dயில் பிதுங்குகின்றன!

''எங்கேய்யா இத்தனை வித்தையையும் அடக்கி வெச்சிண்டிருந்தீர் ?''

''எல்லாம் அண்ணா ஆசிர்வாதம்தான். ஸாரை விட்டால் இங்கே இதையெல்லாம் ரஸிக்கக் கூட மனுஷாள் கிடையாது! கத்துண்டது மறந்துடாமல் இன்னிக்கு எனக்குச் சான்ஸ் கிடைச்சது மைசூர் சாமராவ் group இல் தான் மெயினா சிக்ஷை விலாவிலே சூடு வாங்கியிருக்கேன் ஸார்'' — பெருமையாக சொக்காயைத் தூக்கிக் காண்பிக்கிறார். ''ஒண்ணுமில்லே எஸரு கூட காஞ்சு போச்சாம். எஸருன்னா தெரியு மோன்னோ? உலை நீர்! ஒரு தம்ளர் எடுத்து என் மேல் வீசி அடிச்சுட்டார்! அப்புறம் திருநெல்வேலி அய்யாசாமி அய்யரிடம் கொஞ்ச நாள் பதமானேன். பால் பாயஸம் அந்த மனுஷன் பண்ணணும், சாப்பிடணும். அதில் அவன் போடற சொக்குப் பொடி மந்திரத்தை யாருக்கும் சொல்லாமலே தன்னோடேயே கொண்டு போயிட்டான். அவர்கிட்ட அம்சமிருந்தது. அதனால்தான் அபரிமிதமான பக்தியில், வாயில் அவன்னு வரது, இதையெல்லாம் யாரிடம் சொன்னால் ஏத்துப்பா? முன்னால் யாருக்கு இந்தப் புள்ளிகள் பேரே தெரியும்? யாருக்கு முன்னாலே சாப்பிடறதுலே அக்கறையிருக்கு? நான் என்னத்தை

சேஞ்சு என்ன? இந்த ஊரிலே இந்தப் புளிச்ச ரவா தோசையும் நெருப்பாட்டம் பச்சை மிளகாய்ச் சட்டினியும் தவிர வேறேதும் எடுபடல்லியே! பண்ண றவன் எனக்குப் பாத்துப் பாத்து அலுத்துப் போச்சு. சாப்பிடறவா தினமும் எப்படித்தான் சாப்பிடறாளோ? எங்கெல்லாமோ ஓடியாடித் திரிஞ்சு, ஆஞ்சனேய பகவான் இங்கேதான் நமக்குக் கவளம் பிடிச்சுப் போட்டிருக்கார்."

"Good God! எனக்கு ஏதோ மதறாஸ் பார்ட்டியிலே இருக்கற மாதிரியே இருக்கு அதென்ன ஏதோ ஒரு டிஸைனா கட் பண்ணி—?"

"விஜிடபிள் கட்லெட் ஸார்—"

ராயர் ஆசையாய்ப் போடுகிறார். மானேஜர் அதைவிட ஆசையா, ருசி பார்த்து சாப்பிடுகிறார்.

"ஸார் எனக்கு ஒரே ஒரு மனக்குறை. ஐஸ் க்ரீம் பண்ண முடியல்லியேன்னு—"

"ஏன், பண்றதுதானே?"

"மெஷின் இல்லை சாரி. ஸார்— ஸார்"

"Yes?" மானேஜர் வறுவலைக் கொத்தாய் அள்ளிப் போட்டுக் கொள்கிறார்.

"பாங்க் கொஞ்சம் ஒத்தாசை பண்ணினால், ஹோட்டலை இன்னும் கொஞ்சம் ஷோ பண்ணி ஒரு ஃப்ரிஜ் வாங்கி—"

"அதானே பார்த்தேன், ராயர் நேரிலேயே ஆஜரா யிட்டாரேன்னு! எல்லாம் அடிமடியிலே கை போடத் தான்!"

எனக்குத் தலை லேசாகச் சுற்றுகிறது. இந்தக் கிலுகிலுப்பில் நான் நானா? நீ நீயா? யார் யாரா? தலைக்கு மேலே நிலாவா? ஐஸ் க்ரீமா? வத்தல் காச்சி படவா எனக்கு ஒரு பார்ட்டியா? நம்பும்படியிருக்

கிறதோ? சீ— என் மேலேயே எனக்கு ஒரு சீற்றம் உண்டாகிறது. அல்பனுக்கு வாழ்வு! என்பாடு திணறிப் போச்சு. இடுப்பில் ஒரு பொத்தானை அவிழ்த்து விட்டால் தான். வயிற்றை இறுக்குகிறது.

ஆனால் மானேஜர் என்னவோ வெறி பிடித்தாற் போல் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார் பச்சைக் குழந்தை மாதிரி. வயிறு தெரியாமல்,

நான் எழுந்து அவரிடம் சென்று பின்னால் நின்று அவரிடம் குனிகிறேன்.

மானேஜர் கோபத்துடன் என் கையை உதறுகிறார்.

"சரிசரி, நீ என் முழங்கையைத் தொடறது ஏன்னு தெரியும். பெரிய கொத்தவால், ரேஷன் ஆபிஸர் அரெஸ்ட் பண்ண வந்துட்டான். ஒருநாள் இப்படியும் தான் போ! எங்கே போனாலும் எப்போப் பார்த்தாலும் வாய் விலங்கு?"

காட்டு யானை போல் பிளிறுகிறார். எல்லாரும் என்னைப் பார்க்கிறார்கள்.

"ஓய் ராயரே, எங்கேய்யா போயிட்டீர்?"

'இதோ இருக்கேன் அண்ணா!' பதறி ஓடி வருகிறார்.

"அந்தப் பாதாம்கீரை இன்னொரு கப் ஊத்துங் களேன்! ஒழுங்காய்ப் பரிமாற வந்திருக்கேளா, கொலு வெச்சுப் பார்த்தாலே பசி தீர்ந்துடுமா? உமக்கு என்னவோய் பில் தானே? ஊத்தும், ஊத்தும், அம்பி என்னைத் தொடாதே, சொல்லிட்டேன். பின்னாலிருந்து மேலே மூச்சு விடாதே, சொல்லிட்டேன். நான் அப்புறம் கெட்டவனாகி விடுவேன். என்னைக் கட்டுப்படுத்த நீ யார்? Get out!"

எல்லாரும் என்னைப் பார்க்கின்றனர். சொரணை கொண்டாட எனக்குத் தகுதி எது? அதுவும் ஸார், உங்களிடமா? ஆனால் விழிகள் உறுத்துகின்றன.

டே, பாலாஜிராவ், குடி கெடுக்கவே நேரில் வந்தையா? டேய், உன்னை ஒரு நாள் மடக்கி வெச்சு உதைக்காட்டா என் பேர் அம்பியில்லை. ஆமாம், என் பேர் என்ன?

முத்தையாவும் சிவராமனும் அவசரமாத் தனித் தனியாக ஜாங்கிரியையும் கட்லெட்டையும் பார்சல் கட்டுகின்றனர். முத்தையா வீட்டில் குஞ்சான் குளு வான்கள் காத்திருக்கின்றன. கட்டைப் பிரம்மசாரி சிவராமன் ஏன்? ஆனால் அதுவும் சரிதான். காசைக் கொடுத்துவிட்டு பாலாஜி ராவுக்கு வாபஸ் ஆவானேன்! ராயருக்கு ஒண்ணுக்கு மேலே ஒண்ணு நாமே தக்ஷிணை கொடுத்து, லாபமும் பண்ணி வெக்கணுமா?

அம்பி, நீயும் எடுத்துட்டுப் போறியா?

நானா No, பயமாயிருக்கிறது. காட்டிக் கொடுக்கப் பொட்டலம் வேறு கொண்டு போகணுமா? பாலா தூக்கி விட்டெறிவாள். இப்பவே நேரம் ரொம்ப ஆகி விட்டது. பயமாயிருக்கிறது.

அந்தச் சினம் கக்கும் விழிகள்.

இரு பக்கங்களிலும் அற்புதமாய் அச்சுப் பிசகாது கோடுகளாய் வளைந்த புருவங்களடியில், முழுக் கறுப்பு அல்ல. லேசாக சாம்பல் பூத்த விழிகள். நீறு கலந்து கக்கும் நெருப்பில் முகமும் சிவப்பேறப் போவதை நினைக்கையிலேயே பிடரி குலுகுலுக்கிறது. அவளைக் கண்டால் எனக்கு எப்பவுமே லேசாக அஸ்தியில் 'சில்' தான். இங்கே வந்திருக்கப் படாது, வந்திருக்கப்படாது என் நரம்புகளில் அபாயத் தந்தி அடிக்கிறது. இப்ப இங்கேயே இவரை விட்டு விட்டுப் போய் விட்டால் என்ன? அவர் பாடு, அவர் பெண் பாடு— அம்பீ, சீ. நீ மனுஷனா? அம்பி நாயே, உண்மையில் இந்த மனுஷ னுடைய நிலைக்கு நீதான் காரணம். பார்ட்டியே உனக்குத்தானே, உன்னால் தானே!

ஊரடங்க நேரமாகி விட்டதா? அதற்குள்? தெருவில் சந்தடியே காணோம்! நேரம் என்ன இருக்கும்? மானேஜர் கைக் கடியாரம் அணிவதில்லை. எப்படியிருந்தால் என்ன? எங்களுக்கு இது திருட்டு நேரம்.

மொண மொணத்துக் கொண்டே நடக்கிறார். ஏதேதோ உறுமல்கள், குமுறல்கள், உருப்படியாக வார்த்தைகள் புரியவில்லை. இடையிடையே வெருட்டல்கள். பொட்டென நடுவழியில் நிற்கிறார்.

"அம்பி, I am sorry. நீ சொன்னதைக் கேட்கவில்லை. வயத்தைப் புரட்றது."

ஏன் புரட்டாது? ஐந்து கப் பாதாம் கீரை உள்ளே தள்ளினால்?

"அம்பி, I am sor—" ஓரமாய் ஒதுங்கக் கூட குமட்டல் இடம் கொடுக்கவில்லை. நின்ற இடத்திலேயே வாந்தி எடுக்கிறார் அவர். தலையைப் பிடித்துக் கொள்கிறேன். மறுக்கி மறுக்கி மனுஷன் அவஸ்தைப்படுகையில் வேதனையாக இருக்கிறது. சந்திரன் எங்களைப் பார்த்துச் சிரிக்கிறான்.

"அம்பி, I am sorry."

எனக்குச் சிரிப்பு வருகிறது. அடக்கிக் கொள்கிறேன் எல்லாத்துக்கும் ஒரே காசிக் கயிறு "I am sorry"

இங்கே நடுவழியில் வாய் கொப்புளிக்கத் தண்ணீருக்கு வழியில்லை.

பாலாகோபம் நியாய கோபம். அடிப்படைக் காரணம் நான்தானே! எனக்குப் பார்ட்டி இல்லாமல் வாழாதா? எதையோ சாக்கிட்டு ஏதோ ஒண்ணு. பொய்மையின் ஜிகினாத்தான் வாழ்க்கையின் உள்ளோட்டமாக விளங்குகிறது. என்ன தூயதான உணர்ச்சியிருந்தாலும் அதன் கட்டுக் கோப்பின் காரைப் பூச்சாகப் பொய்மை இன்றியமையாதது போலும்.

ஆனால் எப்பவும் 'நிஜம்தான் வெல்லும்.' வெல்லட்டுமே! யார் தடுக்கிறார்கள்? இன்று சாக்ஷிக்கு அழைக்கும் சந்திரனாய்த் தானிருக்கிறான். காழ்ப் பாட்டி சொன்ன கதை ஞாபகம் வருகிறது. யாரோ கொலையுண்டவன், சாகுமுன் சந்திரனை சாக்ஷிவைத்து விட்டுப் போனானாம்.

''அம்பி, உன் மானேஜரை இந்த நிலையில் பார்க்க உனக்கு வெறுப்பாயிருக்குமே! எனக்கு நாளைக்காலை உன் முகத்தில் விழிக்க வெட்கமாயிருக்கும்''

சந்திரனே சாக்ஷி.

வெண்ணெய் உருகினாற் போல் வெண்ணீல மேகங்கள் பாறை பாறையாக உடைந்து கிடக்கின்றன. நக்ஷத்ரங்கள் கல்கண்டுக் கட்டிகளாய் மின்னுகின்றன. அற்புதமான மோனம் உலகைத் தன் வாயில் கவ்விக் கொண்டிருக்கிறது மோனத்துக்கு உரு உண்டோ? உண்டோ இல்லையோ, இச்சமயம் என் நினைப்பில் அதற்கு வாய் இருக்கிறது.

சந்திரனே சாக்ஷி.

''அம்பி, ரொம்பத்தலை சுத்தறது. You must see me home sonehow to night'

''ஸார், இதோ நாம் வீட்டுக்கே வந்தாச்சு''

சைகையில் கையை உயரத் தூக்குகிறார். ஆம் அது என்ன?

நெருப்புப் பிழம்பு என, வீட்டிலிருந்து தம்பூரின் உருகோசை புறப்பட்டு எங்கள் மேல் இறங்குகிறது. இந்த வீட்டுக்கு வந்த பின் முதன் முதலாக இன்றுதான் கேட்கிறேன். மானேஜர் முகத்தில்—திகில்?

வாசற் கதவை மெல்ல அழுத்துகிறேன். எங்கள் நல்ல காலம் தாளிடப்படவில்லை. மறந்தாளோ ? மறந்தால் தவறு அல்ல ? இந்த நேரத்தில் ஏன் இப்படித் திறந்தது

திறந்தபடி ? எவனேனும் நுழைந்து அடித்துப் போட்டா லும் கொலை செய்தாலும் கேள்வியில்லை. அடிமேல் அடி வைத்து இரண்டு திருடர்கள், நாங்கள் தான், உள்ளே செல்கிறோம். மானேஜர் வாஷ் பேஸினில் வாயை அலம்பிக் கொப்புளித்து முகம் துடைத்துக் கொள்கிறார். முகம் கடிதாசாய் வெளுத்திருக்கிறது.

வெளியே கொட்டும் பனியிலிருந்து வீட்டின் அடைப்புள் உஷ்ண நிலை மாறியது இதவாயிருந்தாலும் லேசாய் நெற்றி கசகசக்கிறது. நாதக்கனல் ?

பூஜையறை வாசலில் இரு கள்ளர்கள் நிற்கிறோம்.
தம்பூரைத் தழுவிய வண்ணம்
பாலா
ஸஹிக்க முடியாத ஸௌந்தர்யம்
தரிசனம் பாலா
நீலம் உடுத்தியிருக்கிறாள்
அகிற்புகையில் உருவான சித்திரமாய் மிளிர்கிறாள்
குத்து விளக்கொளியில்
தானே ஒரு தழல் கொழுந்து
வெறி மீட்டலில்
என்ன கொந்தளிப்பு இது ?
படத்தில் முகம் மாறுகிறது
கண்ணீரின் பள பளப்பில்
கன்னங்கள் ஒளி வீசுகின்றன
படத்தினின்று வெளிவந்து
பெண்ணை அணைத்துக்
கொள்வாயோ ! — ஓசையின் கடையலில்

"நான் ஒரு நாத அதிர்வு" — ஓசையின் கடையலில் சுருண்டு திரளும் நஞ்சின் நீல இருளில் அங்கே நெஞ்சப் புயலுக்கு சொற்கள் என்னிடம் நிகழ் கின்றன. பயமாயிருக்கு.

'நான் ஒரு நாத அதிர்வு' — அடித்தாலும் அலற வாயில்லாத பாம்பு சாகாவரத்தில் பிடாரனின் தோலுரிப்பில் துவண்டு நெளிகிறது.

'நான் ஒரு நாத அதிர்வு' — விட்ட இடத்தைத் தொட்டுக் கொண்டு உயிரின் ஜன்ம வாசனையில் குளித்து இதய அஸ்தமனத்தின் தொடுவிளிம்பிலிருந்து வார்த்தைகள் புறப்படுகின்றன

'நான் ஒரு நாத அதிர்வு'
இடி வலியின் அலையில்
கரையில் தூக்கி எறியப்பட்டேன்
அந்தரத்தில் தொங்கித்
தவித்துத் திணறித் திக்கற்றுத்
தெப்பலாடித் தத்தளிக்கிறேன்'

தென்னந்தோப்பில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். முத்தையா கீழே உட்கார்ந்து, தேங்காய் மட்டை நாரில் கயிறு திரித்துக் கொண்டிருக்கிறான்

பிற்பகல் வேளைக்கு முத்தையாவின் தென்னஞ் சோலைக்கு மிஞ்சியில்லை. இந்த மண்ணில் என்றோ ஏதோ ஒரு மஹானின் அஸ்தியே கலந்திருக்க வேண்டும். அப்படி ஒரு இதமான அமைதி.

புண்ணுக்குத் தைலம் தடவினாற் போல அமைதி உள் இறங்கி பரவுவதை சதை பூர்வமாகவே அறியலாம். ஏற்றக் காலைச் சுற்றி சோலைக்குள் ஒரு தனிச் சோலை. தண்ணீர் பாய்ச்சுகையில் எதுவும் சேதமாகாமல்

ஆங்காங்கே வெய்யில் படும் இடமாகப் பார்த்து, பூவும் காயும் படர விட்டிருக்கும் பாங்கையும் கம்பி வேலிமீது புஷ்பங்கள் தலையாட்டிச் சிரிக்கும் வெட்கத்தையும் நாள் பூரா அலுக்காமல் அனுபவித்துக் கொண்டிருக்கலாம். வாழை நாலைந்து ஒரு ஓரத்தில் செழித்து வருகின்றன. ஆள் படுக்கலாமளவுக்கு இலைகள் இரண்டினிடையே ஒரு தார் திருட்டுத்தனமாய் விட்டிருக்கிறது. திருடன் கண் படாமலிருக்கணும்.

இங்கு அபஸ்வரத்துக்கே வழியில்லை. பூமியின் ஏற்றத் தாழ்வுப்படி ஓய்ந்தும் நெருங்கியும் கேட்கும் ரயிலின் திடும்திடும், சாலையில் பஸ் பூம்பூம், எருமை மாட்டின் உறுமலைக் கூடக் காற்றலைகள் ஏதோ முறையில் வடிகட்டி ஸ்வரமாக்கி இடத்தின் ஸ்ருதியோடு இழைத்து விடும் ஜாதுவில் எல்லாமே கிளுகிளு குளுகுளு. எண்ணங்கள் ஒருமுகமாகி அருவி பாய்கின்றன. எண்ணங்கள் சுருக்க ஸ்ருதி சேர்வதே பெரும் பாக்யம் தான். லயிப்புக்கு இது போன்ற இடமும் ஏவலும் அமைந்தால் கேட்கவும் வேண்டுமா? கட்டிலின் மேல் சாய்கிறேன். கண்சொக்கறது ஆனந்த மூர்ச்சையா தென்றலின் வருடலில் அரைத் தூக்கமா தெரியவில்லை.

ஜீவநதியின் ஓட்டத்தில் கலந்தபின் நானே, என் வாழ்வே, வாழ்வின் நோக்கமே ஒரு எண்ணமாய்ப் பாய்கிறேன்.

மானேஜர் வீட்டில், பூஜைஅறையில் கங்கையை ஏற்கச் சடை விரித்து சிவன் காத்திருக்கும் படம் எண்ணத்தில் எழுகிறது.

மானேஜர் அறை அலமாரியில் பலதுறைப்பட்ட புத்தகங்கள் இருக்கின்றன. ஆங்கிலமோ, தமிழோ, இடறி விழுந்து எழுந்து சமாளித்து அப்படியும் இப்படியுமாக அரையோ குறையோ, நாளடைவில் முறையாகவே முழுமையாகவே புரிந்து கொள்ளப் பழக்கிக் கொண்டு

விட்டேன். சமைத்துப்பார், கரும்புப் பயிர், ஷாஜஹானின் துயரங்கள், மஹாபாரதம், பெரிய எழுத்து விக்ரமாதித்தன் கதை, பூகோளம், அறிவியல், இலக்கியம் ஒன்று பாக்கியில்லை.

ஸார்: "இந்த பாங்கிங் தொழில் முறையிருக்கே, உத்யோகம்—இது நாய் வாய் வைத்த மாதிரி உலகின். இயக்கத் துறைகள் அத்தனையிலும் அறிவு கொஞ்சம் கொஞ்சமேனும் அவசியம். எல்லாவற்றையும் பூரா தெரிந்து கொள்வது சாத்யமில்லை. பிறன் நம்மை ஏமாற்றாமல், என்னை நான் காப்பாற்றிக் கொள்ளும் அளவுக்கேனும். உஷாராயிருக்க வேண்டுமல்லவா?"

தாஜ்மஹால், நயாகரா, Fujiyama, கைலாச மலை, மானஸரோவர், கங்கோத்ரி, அமர்நாத், நான் பாராத ஊர், இடமெல்லாம் எனக்குப் பசித்தவனின் கனவு தானே! மானேஜர் அலமாரியில் மேய்ந்து விட்டு, முத்தையாவின் தென்னந்தோப்பில், கயிற்றுக் கட்டிலில் சொகுசாய்ப் படுத்த வண்ணம் அசை போடுகிறேன். இந்த சமயத்தில், இடம், காலம் தாண்டி எண்ணத்தின் மார்க்கத்தில் போகாத இடமே இல்லை.

எங்கோ பிறந்து, எங்கெல்லாமோ பாய்ந்து, ஆங்காங்கே ஒன்றோடு இன்னொன்று கலந்து, ஒரொரு பெயர் மாறி, எவ்வளவு பெரிய நீண்ட யாத்ரை! யாரைத் தேடிக் கொண்டு! சிவனைத் தேடிக் கொண்டா? இல்லை, தன்னைத் தேடிக் கொண்டு, பாலா மாதிரி. கங்கா பாலா. தம்பூரின் ஸ்ருதியில் தன்னைத் தேடி அலைய நான் கண்ட பாலா. தபஸ்வினி.

கங்கையோ, காவிரியோ, வாய்க்காலோ, நீரில் மூழ்கி எழுகையில், ஆடை ஈரம் அங்கங்களை விளம்புகையில்—என்ன தூய ஸ்னானமானாலும்— பார்ப்பவன் மனிதன் தானே! கண்ணுக்குச் சோரம் ஒப்புக் கொள். எண்ணத்தில் சோரம் ஒப்புக் கொள். ஆனால் நெருப்பில்

குளித்தவளை என் செய்வது? முழு நிர்வாணத்தில் கூட அவள் ஜ்வாலைதான்.

தபஸ்வினி.

அமானுஷ்யை.

கங்கா பாலா.

ஜ்வாலா பாலா.

கங்கையைச் சிவன் தாங்கியதுபோல் நான்— நான்—

கன்னங்களடியில் குலுகுலுக்கிறது. தழலை ஏந்த நான் சிவனா? எனக்குக் காதல் பிறந்து விட்டதா?' இ-ல்-லை அடித்துச் சொல்லிக் கொள்ள முடியவில்லை. ஒரு இன்பக் குழப்பம் தெரியாமல் நக்ஷத்ரத்தை விழுங்கி விட்டு அது உள்ளே 'மினுக் மினுக்' ஓடி விளையாடுவது தாங்க முடியவில்லை.

எண்ணம் பட்ட பின்தான் அதன் துணிச்சல் தெரிந்தது. உணர்வில் தோய்ந்ததும் திகில் வந்தது. நக்ஷத்ரம் உள்ளே 'பொசுக்'—

இல்லை— 'பொசுக்' 'மினுக்' 'பொசுக் மினுக்' 'பொசுக் மினுக்'

"அம்பி, இந்தத் தோப்பை வாங்கிக்கறியா?"

வெளிக் குரல் உள் புகைச்சலைக் கலைத்தது. என்ன உளர்றான்

அவன் என்னை முகம் நிமிர்ந்து பார்க்கவில்லை. கயிறைத் திரித்துக் கொண்டே,

"இந்த ரெண்டு வருசத்துலே உன் கணக்கிலே எட்டாயிரம் தொடாமே கிடக்குதே!"

எனக்குக் கோபம் வந்தது அடக்கிக் கொண்டேன். ஒருத்தன் கணக்கை ஒருத்தன் பார்ப்பது (கடன் வாங்க வழியிருக்கிறதா) சிப்பந்திகளிடையே சகஜம்தான். அதென்னவோ சம்பளப் பட்டியலில் ஒவ்வொருத்த னுக்கும் சம்பளத்துக்குக் குறைச்சல் இல்லை. ஆனால்

பிடிப்புக்கும் குறைச்சல் இல்லை, மானேஜர் உள்படத் தான்.

(இப்போது நான் மட்டும் மற்றவன் சம்பளம் பார்க்கல்லியா? ஆனால் போடுபவனே நான் தானே, அதற்கு அதிகார பூர்வமில்லை. அவ்வளவுதான்!)

வாரமானவுடன் மறுபடியும் கடன் வட்டம். இப்படியே சக்கரம்.

''அம்பி, பிழைக்கத் தெரியாதவன், வட்டிக்கு விட்டால், இந்த ரெண்டு வருடத்திலே ஒட்டிக்கு ரெட்டி பண்ணியிருக்கலாம். பாங்கு வட்டியை ஒரு வட்டியாச் சொல்லு, வெட்கக் கேடு!''

''என் வழிக்கு வராதீங்க அப்பா, நான் கண்டிப்பா சொல்லிட்டேன், joint a/c தெரியுமில்ல? பாஸ்புக் காசோலைப் புத்தகம் அவரிடம் இருக்கு.''

''கில்லேடி, நீ கொடுத்தே, இருக்கு''

''விடு அப்பா அவனை, மானேஜருக்கு அவன் ஜவாப் சொல்லணும், சேர்த்து வெச்சுக்கட்டும். கலியாணம் கார்த்தி அவன் செய்துக்க வேண்டாமா?'' கண்ணைச் சிமிட்டுகிறான்கள்.

''பெண் பார்த்தாச்சா?''

''பெண் பார்க்கணுமா என்ன? வீட்டோட மாப் பிள்ளை—''

''அம்பீ!'' நல்ல வேளை மானேஜர் கூப்பிட்டாரோ பிழைத்தது. நடுஹாலில் அடிதடி ஆகியிருக்குமோ என்னவோ?

ஆனால் முத்தையா தமாஷ் பண்ணுகிறானா? இல்லை கொஞ்ச நாளாவே முத்தையா தமாஷா இல்லை. பழைய முத்தையா இல்லை. ஒரு தாவுக்கு மூணுபடி தாண்டு 'ஜிவ்' எங்கே போயிற்று? விழியோரம், வாய்க்கடுப்பில் சுருக்

குங்கள் சட்டெனக் கண்ணுக்குப் படு மளவுக்கு வந்து விட்டன.

''வருடத்துக்கு நாலுபறி. பறிக்கு நிகரம் ஐந்நூறு நிக்கி. இன்னிக்கு இந்த ஊரிலே பத்து ரூவாய்க்குப் பஞ்ச மில்லாமே போகும்''

''முத்தையா, மெய்யாவா சொல்றே?''

''பின்னே என்ன, உன்னோடு சீட்டு வெச்சு விளையா றேனா?

''அப்படி யென்ன அவசரம் உனக்கு, திடீர்னு?''

''வந்துட்டுதப்பா. செந்தாமரைக்கு ரெண்டு மாதங்களா உடம்பு சொகமில்லே. வாந்தியெடுக்குது. உணவு வயித்திலே தக்கல்லே. நீ நமுட்டுச் சிரிப்புச் சிரிக்காதே. நீ சிரிக்கிற வாந்தியில்லே. டாக்டர் கிஷ்ண சாமி பாக்கறார். கொஞ்சம் முன் கோபிதான். ஆனால் கஸ்டம் தெரிஞ்சவர். நேத்து மாலைதான் செந்தா மரையை வீட்டுக்கனுப்பிச்சிட்டு என்னை மட்டும் நிறுத்திக்கிட்டு மண்டையிலே வெடிகுண்டைப் போட்டாரு.

'முத்தையா உன் சம்சாரத்துக்கு உடம்பு நல்லா யில்லை'

'முளிச்சேன்'

'நல்லாவேயில்லே'

'அதுக்குத்தானே ஐயா ஊசி போட்டாவுது'

''பத்தாது மவனே, பெரிய இடத்து சமாச்சாரம் ஆயிட்டு வரது. போட்டோ எடுக்கணும். என் வைத்யம் உதவாது தனிப் புள்ளி பாக்கணும். வேலூருக்குப் போவணுமோ என்னவோ? எல்லாத்துக்கும் தயாராயிரு. எனக்கென்னவோ தென்பாயில்லே. அவகிட்ட இம்ப விவரம் சொல்லாதே பைத்தியக்காரா. ஆனால் மருந்து பாக்கறவன் நீ தானே! ஆனைக்குத் தீனி போடற மாதிரி

வந்திருக்கு. அபப்பவும் அதன்சி ஆறுமோ ஆறாதோ? நான் என்ன கடவுளா ?'ன்னு என்னென்னவோ இப்டியெல்லாம் பூட்டமாப் பேசறாரு. வயித்தைக் கலக்குது. 'கையிலே கணிசமா வெச்சுக்க நாலுலக்கத்து அதாவது உன் சம்சாரத்து உடம்பைப் பாக்கணும்னு உண்மையா உனக்கு எண்ணம் இருந்தால், வாலு போச்சு கத்திவந்தது டும்டும்னா உனக்கு இங்கே வேலையில்லே. அம்பீ, நீ போய் எனக்காக அவரைக் காணறியா ? உன்னிடம் விட்டுச் சொல்வாரோ என்னவோ ?" முகத்தைத் திருப்பிக் கொண்டு மூக்கை உறிஞ்சினான். என் தொண்டையை யாரோ பிடித்தமாதிரியிருந்தது.

"என்னைப் போலக் குடுப்பத்தை வெச்சிக்கிட்டுத் திடீர்னு, மூவாயிரம், நாலாயிரத்தைக் கொண்டான்னா நான் எங்கே போவேன் ? சோசிட்டி லோன், P. F,லோன், வெள்ளலோன், தீபாவளி அட்வான்ஸ், சம்பளத்திலே ஒண்ணு பாக்கியில்லே. அத்தினியும் தொண்டைவரை நிக்கி, ஒருநாளைக்கு வேளைக்கு ரெண்டுபடி வேவணும் அதையும் வாங்கியாவணும்னா என்பாடு போண்டிதான். பெரிவங்க வெச்சுட்டுப்போன கழனிச்சேறு நல்லசேறு. கொடுக்குது. எல்லாம் ரெண்டாங் கெட்டான். ஒண்ணு ரெண்டு விவரம் தெரிஞ்சது அடவுஇல்லே. நமக்கு வயசு ஏற ஏற ரோஷம் பொத்துக்குது, கயிறைத் திரிச்சிட்டேன். அத்தினிபேருக்கும் பத்துமா? வெறுப்பாயிருக்குது அம்பி. நேத்தியிலிருந்து தனியாயிருக்கவே பயமாயிருக்குது. நினைப்பு எப்படியெப்படியோ ஓடுது."

முத்தையாவா இப்படிப் பேசுகிறான் ? எனக்கும் பயமாயிருக்கிறது

"கேட்டேனே என்ன சொல்றே ?"

நாடோடி நான் நிலம்வாங்கி—

என் எண்ணத்தைப் படித்தவனாய், "நீயும் எங்காணும் நிலை காணனுமில்லே? வாங்கிப் போட்டு வெச்சா மண்ணுமேல போட்டது எங்கேயும்

போவாது. இந்த மண்ணும் நல்லமண். இந்த ஊரும் நல்ல ஊர். நினைக்காதே கிராமத்துக்குக் கிராமம். பட்டணத்துக்குப் பட்டணம் ஒரொருகன்னையும் இந்தக் கையாலேயே நட்டு கண்ணுலே வெச்சு வளர்த்தது. மன சோடு கொடுப்பேனா ? உனக்குக் கொடுத்தால், எனக்கு என்னிக்கானும் நிழல்தரமாட்டியா ? இப்போ இருக்கற தைக் கொடு. மிச்சத்தை வர வருசம் கொடேன். இல்லே பத்தரத்தை வெச்சுக் கடனாத்தான் கொடேன், வட்டிக் குப் போகத்தெ அனுபவிச்சிக்கிட்டு நல்ல காலம் வந்தால் மீட்டுக்கறேன். எனக்கு அசலை, மாசூலிலிருந்தே மூனாக் கிக் கொடுக்கறேன். ஆனால் எனக்கு இப்போதைக்கு விடியும்னு தோணல்லே. சக்ரம் 'ரிவெர்ஸ்'லே சுத்துது. நல்ல காலம் மறந்துபோய் கூடவே ஒடியும் பூட்டுது. இப்போ இளுத்துப் பிடிக்குது. என் கதை இருக்கவே இருக்குது, சரி, என்ன சொல்றே ?"

''எனக்குத் தனிச் செயல் இல்லேன்னு உனக்கே தெரியும்'' என்று முனகினேன். எனக்கு அவனிடம் பேசக் குரல் எழும்ப மாட்டேன்கறது. திடீரென நினைப்பு வேகத்தில் தேள் கொட்டிய இடம் சுறீல் என்றது. வெறும் அஸ்தியிலிருந்து உருப்பிடித்து உயிர் கொடுத்த வனாச்சே! செந்தாமரை தாய்க்குத்தாயாக உனக்கு ஊட்டினாளேடா பாவி !

''ஐயாகிட்ட விசயத்தை சொல்லேன். ஐயா கருணை உள்ளம் படைச்சவர் நிலைமை புரிஞ்சுக்குவார் மாட் டேன்ன மாட்டார்.''

உன் கஷ்டத்திலே சுலபமாச் சொல்லி விடுகிறாய். ஸாரிடம் வார்த்தை கொடுக்க வேண்டாமா ? என்னுடை யது என்று யாரிடம் உரிமை பேசச் சொல்கிறாய்? பயப் படுவதே ஒரு பிழைப்பு. பழகமாட்டேன்கறதே. சமயம் பார்த்துக் கேட்கணும். ஆனால் எது சமயம்? நாமாக எடுத்துக் கொள்வதா? ஏற்படுத்திக் கொள்வதா? தானா நேர்வதா? ஆனால் நாளுக்கு நாள் முத்தையா முகம்

நீளமாகிக் கொண்டிருக்கிறது. அவன் காலடியில் மணல் கரைந்து கொண்டிருக்கிறது. இன்று ஞாயிறு. நாளைக்குள் அவனுக்குத் தகவல் சொல்லியாகணும்.

''அம்பி! முதுகுலே நரம்புப் பிடிப்பு. கொஞ்சம் மிதியேன்!''

மிதிக்கறதா? எனக்கு உதறல் எடுத்துக் கொண்டது. கை கூப்பி 'மாட்டேன்' தலையை அசைத்தேன்,

''வலிக்கிறதப்பா!''

''பிடிச்சுவிடறேன் ஸார்!''

''ஏதேனும் செய்.''

சற்று நேரம் மாலிஷுக்குப்பின் அவருக்கு இதவுகண்டது போலும். ''அம்மாடி பரவாயில்லையே!''

''ஸார்—''

''yes?''

''ஸார்!''

''உம்— ஹூம்?''

''ஸார், ஸார்...''

''சரிதான், ஊசியைத் தள்ளி விடப்பா!''

அவ்வளவுதான். விஷயத்தைக் கக்கி விட்டேன்.

தேங்கிய மௌனம். இம்சையாயில்லை. எப்படியிருந்தால் என்ன? மடியைவிட்டு கனம் இறங்கியாச்சு.

மானேஜர் உடல் நிறம் ஒரு சமயம் போல் இல்லை. குளித்துவந்தவுடன் தக்காளிப் பழம் மாதிரி 'டால்' அடிக்கிறார். நேரம் ஆகஆக ஒரு மாதிரியாக வெளுத்துக் கொள்கிறார். சில சமயங்களில் கறுப்புக் காட்டுவது போலக் கூடத் தோன்றும் உடல்வாகா? அல்ல அவர் தான் படுவதாகச் சொல்லும் பல நோய் வாகா? இப்போ என்ன நிறம்? இது என்ன வ்யவஸ்தை கெட்ட யோசனையோ?

''அப்போ நீ முதலாளியாகப் போறியாக்கும்!''

''நான் ஒண்ணுமே அவனிடம் சொல்லவில்லை. ஸாரிடம் விஷயத்தை சேர்த்துவிட்டேன், அவ்வளவுதான். இனி உங்களிஷ்டம்."

''Dont play Uniah Heep.''

விழித்தேன்.

''ஓ, நீ இந்தத் தலை முறைன்னா! படிப்பு இல்லாமலே பாஸ் பண்ற கூட்டம்!"

' மன்னிச்சுக்கோங்கோ ஸார்."

''எதற்கு? பரீக்ஷை பாஸ் பண்ணினதுக்கா? ஓ! அம்பி, சொல்ல மறந்துட்டேன். அடுத்த வாரம் Regional Manager தஞ்சாவூருக்குக் Camp இலே வரான். உன்னை Interview-வுக்கு அனுப்பச் சொல்லி எழுதியிருக்கான்—ஐயோ!"

மானேஜர் முதுகில் 'மளுக்'கென்று முறிந்தது. ஒன்றுக்கொன்று ஆகி விட்டதா?

''என்னை மன்னிச்சுக்கோங்கோ ஸார்" என் குரல் நடுங்கிற்று.

''அம்மாடி! என்ன உளர்றே?''

''என்னை மன்னிச்சுக்கோங்கோ!''

''இன்னிக்கென்ன trouble உனக்கு? Never mind; எனக்கு வலி சரியாப் போயிடுத்து. படுக்கைப் பிசகுன்னு நினைக்கிறேன் Thanks.''

அழுகிறேன். சிரிக்கிறேன். மானேஜர் முறுவலிக்கிறார். முதுகில் தட்டிக் கொடுக்கிறார்.

''Nice fellow! அம்பி, ஆனால் நீ இவ்வளவு கோழையாக இருக்கக் கூடாது. கொஞ்சம் கண்ட்ரோல் பண்ணிக்கணும். அங்கே R M. கிட்ட Interview நடக்கறப்போ இந்த technicolor effect எல்லாம் கூடாது, தெரியுமா?"

தலையைப் பலமா ஆட்டுகிறேன். எனக்கென்ன தெரியும்?

மானேஜர் ஓரக்கண்ணால் ஒரு தினுசாய்ப் பார்த்துக் கொண்டே, ''முத்தையாவுக்கு நீ மாட்டேன்னு சொல்ல முடியாதல்லவா? முத்தையா poor fellow. நான் Dr. கிருஷ்ண ஸ்வாமியை விசாரிக்கிறேன்".

முத்தையா, ஜயிச்சுட்டே ஆனால்! என்ன ஜயிப்பு. டாக்டர் தீர்ப்பு என்னவாயிருக்குமோ? நினைக்கவே பயமாயிருக்கிறது. பூஜையறையில் நான் தனியா வேண்டிக் கொள்ளலாமா? யாரை வேண்டிக் கொள் வேன்? மாமி, இப்போ நீங்கள் தான் எனக்குத் தஞ்சம்.

''என்னடா அம்பி, நீ சுத்த அழுமூஞ்சி ஆயிட்டே! வெட்கமாயில்லே? தொட்டதற்கெல்லாம் அழுகை. என்ன கண்ணிலே தளும்பல்?''

''என்னை மன்னிச்சுக்கோங்கோ ஸார்''

என் அறைக்கு ஓடிப் போய், கதவை மூடிக் கொண்டு மேஜை மேல் முகம் கவிழ்கிறேன். கரை புரள்கிறது.

உங்களுக்குப் புரியல்லே ஸார். கருணையினாலேயே கொல்லும் இந்த வீட்டுக்கு வந்திருக்கப்படாது.

காமுப் பாட்டி ஏதோ கதை சொல்லுவாள். ''நாதி யத்த ஒடுகாலிக் கட்டையிலே போவானுக்கு இடம் கொடுத்ததே வலையனை மலர் மஞ்சத்தில் படுக்க வெச்ச மாதிரி. அவனுக்கு இங்கே எங்கே தூக்கம் வரும்? மீன் கூடையிலே முகத்தைப் புதைச்சுண்டாத்தான் தூக்கம் வரும்."

காமுப் பாட்டி, நீ சொன்னது மெய்தான்.

அந்தி வேளை.

தென்னந் தோப்பில் தன்னந்தனியாகக் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருக்கிறேன். ஏன் ? தெரியாது.

சில நாட்களாவே சொற்கள் என்னைத் துன்புறுத்து கின்றன. சொற்களுக்கும் முற்பட்ட கோலங்கள் ஏதேதோ என்னுள் தோன்றி, தங்கள் கோணங்கள், வளைவுகள், கோணல்களில் என்னை முறித்துப் போட்டு அழகு பார்க் கின்றன. நான் சொல்வதென்ன ? தெரியவில்லையே !

கோலப்புள்ளிகளில் என் இடம் எங்கே ? நான் தேட வில்லை. அவைகள் என்னைத் தேடிக் கொண்டிருக் கின்றன. எவை ? புள்ளிகள்.

புள்ளிகளா?

o o o

கட்டிலடியில் சலசல...கீழே நோக்குகிறேன்.

வாலின் சுழட்டலில் தான் என்ன லகு, ஜியோமிதி தோற்றது. நேர்த்தியான வளை உயிர்க்கோடுகள், கட்டுக் கட்டாய்க் கட்டுக்குள் புள்ளிகள். எனக்கும் சதா தேடிக் கொண்டிருக்கும் பிளந்த நாவுக்கும் இடைவெளி ஓரடி கூட இல்லை. இதற்குப் படமுண்டோ ? பாலாவின் பின்னல் தடுமனில் எட்டடி.

இந்த அந்தியிருளில், இந்தத் தனிமையில், என்னை யறியாமலே உனக்காகக் காத்திருக்கிறேன். எனக்குப் பயம் தெரியவில்லை. ஒரு அகண்ட விரக்திதான் தெரி கிறது. என் உடலே கலசமாய், அதில் நான் ஒரு காணிக்கை யாகி, என் விரக்தியின் முழுமையில் என் அந்தக் கரணத் தின் நிர்வாணத்தில் : 'இந்தா என்னை ஏற்றுக்கொள்.'

ஆனால் உன் இன்றைய தேடலுக்கு நான் இலக்கு இல்லை போலும். நீ பாட்டுக்குத் தாண்டிப் போய்க் கொண்டிருக்கிறாய். இவன் எங்கே போகப்போகிறான்? இப்போ என்ன அவசரம், பின்னால் பார்த்துக் கொள்ள லாம் என்கிற எண்ணமோ?

உன் அலக்ஷியம் எனக்குக் கோபம் வருகிறது. ஏய், (இல்லை 'ஏடி' யா?) இந்தத் தென்னந்தோப்போடு சேர்ந்து, நீயும், உன் புற்றோடு இப்போ நீ என் சொத்துத்தான்.

நீ என் சொத்து ஆனால் நீ என்னை விட்டு வைத்திருப்பதால் நான் உன் சொத்து உன் சொந்தம் கொண்டாட உனக்கு ஒரு வழி தான் தெரியும். 'பட்' ஒரு போடு. பிறகு என்ன செய்வாய் பாவம்! என்னை விழுங்கவும் முடியாது. என்னால் எனக்குப் பலனில்லை. என்னால் உனக்குப் பலனில்லை. அர்த்தமற்ற கொல்லல். உன்னை நான் என்னால் நீ. ஆம், இருப்பவர்கள் உன்னை விட்டு வைத்திருப்பார்களா ? வாழ்க்கை என்பதே இதுதானா?

ஏதோ ஆவல் தூண்ட, எழுந்து ஓடிப்போய்ப் பார்க்கிறேன், உன்னைக் காணோம். அடையாளம் கூட இல்லை. ஏதோ ஏக்கம் நெஞ்சுள் புகுந்து கொள்கிறது. சாவுடன் ஊடல்?

என்னென்று தெரியவில்லை, இப்போதெல்லாம் தனிமையை விரும்புகிறேன். இல்லை. அதன் சுழிப்பு என்னைத் தன்னுள் இழுக்கிறது. சப்பாத்திப் புதர்கள்; ஆற்றுமணல் மேடு, வெறி பிடித்தாற் போல் நடக்கிறேன். நடந்து கொண்டேயிருக்கிறேன். திகைத்து நிற்கிறேன், இங்கே எப்படி வந்தேன்? நெற்றிப் பொட்டைத் தேய்த்துக் கொள்கிறேன்.

பசியில்லை. பருக்கைகூடச் செல்லவில்லை.

அகோரப் பசி. மூன்று முறம் இருந்தாலும் பற்ற
வில்லை.

பாலாவின் கண்களில் —?—

பதிலுக்கு நான் —?—

என்ன எனக்கு வந்திருக்கிறது?

o o o

மானேஜர் இப்போதெல்லாம் என்னை ஒரு மாதிரி
யாகப் பார்க்கிறார்.

எல்லாரும் தான். சிவராமன். "Crack Fellow!"

என்னில் பார்க்க என்ன இருக்கிறது?

என் முதுகே எனக்குத் தெரியும் போல ஏதோ
கண்ணாடித் தெளிவு, வெறிச்சு, லொட்டை

மானேஜர் பார்வையில் கருணையுடன் கபடு ஒன்று
தெரிகிறது.

மானேஜர் என்னைக் கவனிக்கிறார்.

தஞ்சாவூருக்கு Interview-க்குப் போய் வந்தாச்சு.
Regional Manager கொம்பு முளைத்த மாதிரி நடந்து
கொள்ளவில்லை.

"உன் மானேஜர் உன்னை ரொம்ப சிபாரிசு செய்தி
ருக்கிறார்

அவரை விட உன்னை நான் வடி கட்டப் போவ
தில்லே. we are

good friands. இருந்தாலும்"— என்ற பீடிகைக்குப்பின்
மை வேலைக்குச் சம்பந்தமிலாமல் ஒன்றிரண்டு
கேள்விகள்.

பிறகு உத்யோகத்தில் நாணயத்தைக் கடைப்பிடிப்பது
பற்றி

தனக்கே பழைய பாடங்களைத் திருப்பிக் கொள்வது
போல

புத்திமதி லெக்சர் ஆரம்பித்து விட்டார். சான்ஸ்
கிடைத்தால்

போதும், அவரவர் குரலை எப்போடா கேட்போம்
"என்று

காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் பிறர்க்குப்
புத்திமதி

சொல்வதென்றால் அலுப்பே கிடையாது.

வாழ்க்கையில் அலுப்புத் தட்டக் காரணமே

புத்திமதிகள் தான்

தேங்காய்ப் பறியில் Rs. 479. 28பை என்று முத்தையா என் கணக்கில் கட்டினான்.

''மூன்னூறு போதும் அதுவே அதிகம்'' என்று ஆக்ஷே பித்ததற்கு

''கணக்குன்னா கணக்கு இருக்கட்டும் நீ எங்கே போறே? எனக்கு வேணும்னா கேட்டால் கொடுக்க மாட்டியா? இத்தோடு விட்டதோ? எங்கே போய் விடுமுன்னு தெரியல்லியே!"

முத்தையா வேலூருக்குக் கொல்லைப்புறமாக அலைஞ்சுண்டிருக்கான். வீவு எல்லாம் கரைஞ்சுண்டிருக்கு பணம் தண்ணி பட்ட பாடுதான் பலன்? பலன்??

''அவனுக்குத்தான் வெளிச்சம். முத்தையாவுக்கு விழி விண்ணில் சொருகுகின்றது. எல்லாம் நல்லபடியா முடிஞ்சு அவ திரும்பி வந்தால், அம்பி, நீ எனக்கு ஒரு பறி பூரா கொடுத்துடு. வேண்டுதலில் உன்னையும் என் வீட்டுப் பிள்ளையா அப்பிடித்தான் சேர்த்துட்டிருக்கேன். முருகனுக்கு ஒரு பறி பூரா உறிச்சு, இளநீர் அபிஷேகம் செய்வதாக வேண்டிக் கிட்டிருக்கேன்.''

தொண்டையை அடைக்கிறது.

இத்தனைக்கும் கோமு தலை கூடக் காட்டவில்லை.

★

இன்று அற்புதமான காலை.

முஸ்தபா கடேயில் விம் போட்டுத் தேய்த்துக் கழுவித் துடைத்துக் கவிழ்த்திருக்கும் கண்ணாடித் தம்ளரின் பளிங்குத் துல்லியம். நீலப் பளிங்கு. நீலோத் பலத்தின் நலுநலும். நீலோத் பலம் பார்த்ததில்லை. ஆனால் சொல்லின் ஓசையில் மயங்கிப் போனேன். சொல்லும் இச்சமயத்துக்குத் தானே வருகிறது!

சுவர்களின் உள்ளிருந்து நீலத் தண்ணொளி, பொங்கப் போகும் பாலின் மிதப்பு கட்டுகிறது. அதிலேயே சுவர்

களில் லேசான மெத்திடல் சுவர் மூலையில். சிலந்தி தன் கூட்டைப் பொற்சரடுகளால் கட்டியிருக்கிறது. பொன் வண்டு ஒன்று முகத்தெதிரே Zoom அடிக்கிறது.

பால்கனிக்கு வந்து பார்க்கிறேன் தோட்டத்தில் பாலா செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கிறாள்.

பக்கத்தறையிலிருந்து மானேஜர் 'அம்பி, வேலையாயிருக்கையா?''

''என்ன ஸார் வேணும்?'

''பாலாவுக்குக் கொஞ்சம் help பண்ணேன்!''

Of course! விழுந்தடித்துக் கீழே ஓடுகிறேன்.

கொல்லை வாசற்படி தாண்டுகையில், அடி சறுக்கி— நான் வந்த வேகமோ, கீழே சிந்தியிருக்கும் தண்ணீரின் வழுக்கலோ, — ''ஆ!'' என் அபயக் குரலுக்குப் பாலா திடுக்கெனத் திரும்ப— அவள் மேல் நான் விழுந்தேனோ, என்மேல் அவள் விழுந்தாளா? அவளைத் தாங்கிக் கொண்டேன்.

''க்றீச்!''

அந்த அமானுஷ்ய மிருகக் குரலை என்னென்று சொல்ல? அவள் என்னிடமிருந்து திமிறித் துள்ளிய வேகமே அவளை நாலடி கொண்டு போய் வீழ்த்திற்று.

''வீல்—வீல்—வீல்—'' உச்சமும் கட்டையுமாய் சப்தங்கள்—அலறல்கள், ஓயாமல் அவளிடம் வந்த வண்ணமிருந்தன. கோரம் தாங்காது செவிகளைப் பொத்திக்கொண்டு விட்டேன். அப்படியும் செவிகளைத் துளைத்தன. குரங்கா, பட்சியா, கீரிப்பிள்ளையா—அவளுடைய உடல் பூரா அவளுடைய பூமியோடு கிடுகிடென ஆடிற்று. முகத்தில் மாறி மாறி அந்தத் திகிலையும், கோபத்தையும், பைத்யத்தையும்—முகத்தை மூடிக் கொண்டு விட்டேன்.

"அம்பீ! அம்பீ!!" மானேஜர் பின்னாலேயே வந்து விட்டார். "ஒண்ணுமில்லை, பயப்படாதே. அவளுக்கு வழி விட்டு விடு. பாலா! பாலா!! இங்கே பாரம்மா!"

அவரைப் பார்த்ததும் அவள் பின்னிடைந்தாள். விழிகள் திகில் வட்டங்கள். தப்பி ஓட முகம் அப்படியும் இப்படியும் திரும்பிற்று. எட்டுமைல் ஓடிவந்தாற்போல் மூச்சு இரைத்தது. "பாலா! பாலா!!"

புயல் நுழைந்தாற் போல் பாலா வீட்டுள் ஓடினாள். தடதடவென மாடியேறி அவள் அறைக்குள் ஓடி, கதவு தடாலென்று சாத்திக் கொண்டது.

மாடியடியில் இருவரும் நின்றோம் மாடிக்கும் எனக்கும் மானேஜர் மாறி மாறிப் பார்த்தார். அவர் முகத்தில் ஜலகண்டமாய்க் கொட்டியிருந்தது. உதட்டைப் பிதுக்கிக் கொண்டு சினம் கொண்ட காளைபோல் தலையைப் பலமாக ஆட்டினார். "No, it wont work, அம்பி, குடிக்கக் கொஞ்சம் ஜலம் கொண்டு வா, வா, இங்கே உட்கார். I have got to talk to you"

வேட்டி நுனியால் முகத்தைத் துடைத்துக் கொண்டார். துடைத்த இடங்கள் பப்பாளிப் பழம் போல், சிவப்புக் கண்டு, உடனே வெறுப்பு விட்டுக் கொண்டது.

"இந்த அலை அடங்க மூணு நாளாகும். நம்ம சாப்பாட்டுலே மண். அவளும் சாப்பிட மாட்டாள். இப்போதைக்கு நெருங்க முடியாது. காளி! Oh God சமயம் பார்த்து, தூக்கமருந்து கொடுத்துப் படுக்க வெக்கணும். நான் இங்கு காவல் இருக்கணும். நீ இனிமேல் அவள் கண்ணில் பட முடியுமா? Oh, I dont know. I have made a mess. ரொம்ப நாளாயிடுத்தேன்னு பார்த்தேன். ஆனால் பாபி உள்ளே பதுங்கியிருக்கான். பாபி! பாபி!! நீ ஆபிஸுக்குப் போ. இந்தா சாவி. Cash ஐ, காஷியரே திறக்கட்டும். நான் சொல்லி அனுப்பும் வரை வராதே."

''நான் ஒண்ணுமே பண்ணல்லியே ஸார்!'' உளருகிறேன்.

''No, no, it is not you. It has got nothing to do with you but இல்லாமலும் இல்லை, Look!'' என் தோள்களைப் பிடித்துக் கொண்டு உலுக்கினார். ''உனக்கு அவள் மூணுவயசு மூத்தவள்னு எனக்குத் தெரியும். But I didnt mind. எங்களுக்கு மனுஷாள் இல்லை. உனக்கும் இல்லை. நீ சம்மதப்பட்டால் — சம்மதப்பட்டால் சமாளிச்சிடலாம்னு பார்த்தேன். உன்னை சம்மதிக்க வெக்கறது எனக்கு problem ஆகப்படல்லே. But every thing has gone phut''

இன்று அற்புதமான காலை. சூரியன் ஆகாச கங்கையில் குளித்துவிட்டு பளிச்சென்று பட்டணம் பார்க்கப் புறப்பட்டிருக்கிறான். வான்கவான் முழு நீலத்தில் ரஸகுண்டு போல் தொங்குகிறது. மூஸ்தபா கூபேயில் கவிழ்த்திருக்கும் கண்ணாடி தம்ளர் போல்— சமயமில்லாமல் என்ன பல்லவி? மண்டையுள் முள் சக்கரங்கள் சுற்றுகின்றன. நாள் கசங்கிப் போயாச்சு.

இப்படி ஆகணும் என்றே

இத்தனை அழகு கொண்டது போலும்

இனி நான் எங்கே? மறுபடியும் நடுத்தெருவா?

விதியாட்டம்

ஆடுவோர் அத்தனை பேரும் முகமூடிகள்

அப்படியும் அவர்களில் இருவரை அறிவேன்.

என் பெற்றோர்கள்.

மானேஜர் என்னவோ சொல்லிக் கொண்டிருக்கிறாரே!

—''மரகதத்துக்குத் தாங்கல்லே. யாருக்குத் தாங்கும். இதே சாக்காய்ப் படுத்தவள்தான். எழுவாள். மெப்பா

முடிஞ்சவரை வளைய வருவாள் சிரிப்பாள். சிரிக்கணும்னு ஆரம்பிப்பாள். ஆனால் அது அழுகையாக மாறி முடியும். Hysteria அல்ல. சிரிப்பு நரம்பெல்லாம் அழுகை நரம்பாக மாறி விட்டன. அப்படி ஒன்று சாத்யம் என்று இருந்தால் அந்தக் கண்ணறாவியைப் பார்த்தால்தான் நம்ப முடியும். மரகதம், மாம்பழம் மாதிரி, தேங்காய் மாதிரி உள்ளே அழுகிப் போய் விட்டாள். அது மாதிரி ஒண்ணு சாத்யம்னு இருந்தால்.” துண்டு துண்டா துணுக்குத் துணுக்கா என்னென்னவோ பயம் பயமா—

—“பாலா அப்பவே செத்துப் போயிருந்தால், மரகதம் தக்கியிருப்பாளோ என்னவோ? பெத்தது ஒண்ணு, அதுவும் பெண் என்றாலும் நேர்ந்த கஷ்டத்துக்கு ஒரு மட்டாகப் போயிருந்தால் போயிடுத்து, அவ்வளவுதானே! என்ன செய்ய முடியும்? அழுவோம், ஒருவரையொருவர் தேற்றிக் கொண்டு, ஒருவருக்கொருவர் மிஞ்சுவோம். ஆனால் தலைகீழா நடக்கணும்னு இருக்கே! கண்டிப்பா பிராரத்தகர்மான்னு இருக்கத்தான் இருக்கு. இந்த ஜன்மத்தில் உன் பங்கு என்று மூட்டையை முடிச்சுக்கட்டி, கழுத்தில் சுமத்தி அனுப்பறான். அதற்காக அவனை, அவன் எவனோ, அவனை ஆயிரம் கசந்துண்டாலும் அவன் நிருபணை ஆவதே இப்படித்தான். என் குழந்தை அவன் வினையை அனுபவிப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பது என் வினை.”

எத்தனை நாள் அடக்கி வைத்துக் கொண்டிருந்ததோ கக்கலும் கரைசலுமாய்க் கரை புரண்டு வருகிறது. தனக்குத் தானே பேசிக் கொண்டிருக்கிறார்.

“சரணடைந்தோர் கதியே இப்படி. அவனோடு வியாஜ்ஜியம் நடத்தினால் முடியுமா? மரகதம் வியாஜ்ஜியம் நடத்தினாள். முடிந்தாள். ‘Vengeance is Mine and I will repay. அம்பி முழிக்கிறான், ‘பாவம்

அவனுக்கு விஷயம் என்ன தெரியும்? No that is too much to expect!" சிரிக்கிறார். புகை கக்குகிறது. "That is not fair to you அம்பி, பாலாவை நீ அழகென்று நினைக்கிறாயா? எப்படி?"

'பாலா அழகா இல்லையா ?' என்னைக் கிண்டல் பண்ணுகிற சமயம் இதுதானா ? அவர் என் பதிலுக்குக் காத்திருக்கவில்லை.

"அம்பி, அழகாகவே பிறக்கப்படாது. அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லை என்பதுதான் பாந்தம் பத்ரம். பாலாவைக் கூட நான் அழகென்று ஏற்றுக் கொள்ளமாட்டேன். இது அமானுஷ்யம் (என் பாஷை பேசுகிறாரே!); விபரீதம். abnormal. வரம்பு மீறின கேஸ். இப்ப பாலா கொஞ்சம் மங்கிப் போய் விட்டாள் என்று சொல்ல வேண்டும். பத்து வயசுலே, அப்பா ! சும்மா 'டால்' வீசுவாள் உடல் வாளிப்பு. No. நான் சுருக்கச் சொல்லி முடிச்சுடணும்.

"அன்று தை வெள்ளிக்கிழமை. தாயும் பெண்ணும் மங்கலஸ்னானம் செய்து நேம நிஷ்டையாக ராகுகாலத்துக்கு முன்னால் மாவிளக்கு ஏற்றி, மலையும் ஏத்தியாச்சு. பாலா பள்ளிக் கூடத்துக்குப் போறவழியில்— கொஞ்சம் தள்ளிப் போகணும், தெரிஞ்ச மாமிக்கு ப்ரசாதத்தைக் கொடுத்து விட்டுப் போகச் சொல்லியிருக்காள். அவ்வளவு தான்.

"மாலை, பாலா பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பிவரவில்லை. நேரம் மீறிப் போனதால் பள்ளிக் கூடத்துக்குக் கேட்டு அனுப்பியிருக்கிறாள். "இன்னி பூரா பாலா பள்ளிக் கூடத்துக்கே வரல்லியே !" வயிறு 'பகீர்'. மாவிளக்குப் பிரசாதமும் மாமியிடம் போய்ச் சேரவில்லை. "அனுப்பிச்சேளா ? பாலா இந்தப் பக்கம் வரல்லியே !" எப்படியிருக்கும் ! பிறகு எனக்குச் சொல்லியனுப்பினாள்.

"மணி ஏழு, எட்டு, ஒன்பது, பத்து. போலீசில் எழுதி வெச்சாச்சு. ஊர் முழுக்க சல்லடை போட்டு சலிச்சாறது-

அன்றிரவை இப்போ நினைச்சாக் கூட இப்ப மாதிரி யிருக்கு. வேண்டாம்! வேண்டாம்" கண்ணை மூடிக் கொண்டு இருகைகளாலும் காற்றில் எதையோ பிடித்துத் தள்ளினார். "மரகதத்துக்குப் பைத்யம் பிடிக்கல்லே. இல்லை, பிடிசசுடுத்தா? குத்து விளக்கு ராப்பூரா எரியறது. விளக்குக்கு நமஸ்காரம் பண்றா. பாலா போட்டோவை மாரில் அணைச்சுக்கறா. என்னிடம் வருகிறாள். "நீங்கள் தைரியமாயிருங்கோ என்னண்ணா பண்ணுவோம்?" கேட்டுக் கொண்டே உதட்டைப் பிதுக்கிக் கொண்டே உடைகிறாள்.

"இப்போ அவன்— அவன் எவனோ?— அவன் என்னைக் கேட்டால், "பெண், பெண்டாட்டி ரெண்டு பேரில் யாரை உனக்குக் காப்பாற்றிக் கொடுக்கணும் என்று கேட்டால், இப்போ பதில் சொல்ல எனக்குத் தெரியும். பிரயோசனம்?" உதட்டைப்பிதுக்குகிறார்.

மேலிருந்து முனகல்கள் எட்டுகின்றன. மானேஜர் ஒரு பக்கமாகத் தலை சாய்த்து உன்னிப்பாய்க் கேட்கிறார். முனகல்கள் படிப்படியாக அடங்குகின்றன. மானேஜர் ஏதோ புரிந்து கொண்டு தலையை ஆட்டுகிறார். அப்புறம் சந்தடி எதும் காணோம். பெருமூச்செறிகிறார்.

"விடிஞ்சுது ஒரு வழியா. போலிஸ் நாய் வந்தது. ஓடித்தோ ஓடித்தோ ஓடித்து, வீடுதாண்டி மூணுமைல் இருக்கும். ஜன சந்தடிதாண்டி ஒதுக்கான ஒரு ரோடில், ஒரு பாலத்தடியில் தண்ணியோரமா, கரையில், ஸ்மரணையில்லாமல்—"

மேலே ஓடவில்லை. எனக்கு அழுகை வந்துவிட்டது. முகத்தைப் பொத்திக் கொண்டார்.

தேம்பினார்.

"பாவாடையெல்லாம் ரத்தக்கறை

(இன்று அற்புதமான காலை. சூரியனே ஆகாச கங்கையில் குளித்து ... சூரியனே அன்றும் நீதானே சாக்ஷி!)

''அந்த நிலைகண்டு, நாங்களாகக் கண்டு கொண்டது தவிர

என்ன?

யார்?

எப்படி?

எப்போ?

ராப்பூரா பாலத்தடியில் கிடந்தாளா?

பூவைக் கசக்கினவன், கசக்கினவர்கள்,

எப்போ அங்கே போட்டான்கள்?

இடையில் நினைப்பு வந்ததா?

கேள்விகளுக்கு முடிவேயில்லை.

இன்றுவரை பதிலுமில்லை.

''ஆனால் 'கியா முயா' 'கொக்—கொக்' இதுமாதிரி ஏதேதோ சப்தங்கள்.

''திடீர் திடீர் என்று 'வீல் வீல்'. ஓயாத அலறல்கள் தான் வரதே தவிர அவளிடமிருந்து வாய் வார்த்தையா ஒரு விவரம் அகப்படவில்லை. புத்தகத்தில் நடு ஏடுகளைக் கிழித்த மாதிரி ஆகிவிட்டது. கிழித்த ஏடுகளைச் சுக்கல் சுக்கல்களா, மறுபடியும் மறுபடியும் பொடிப் பொடி யாக்கி நாலு திக்கிலும் அடையாளமே தெரியாமல், அகப்படாமல் தூவியாச்சு. இப்படியெல்லாம் சொல்லும் போது நாடக பாணியாகத் தோணலாம். ஆனால் வேறு எப்படிச் சொல்வது? நீயே சொல். அதுதான் முன்னும் இல்லாமல் பின்னும் இலாது நடுக்கதையும் கிடைக்காமல், எத்தோடும் ஒட்ட முடியாமல் தத்தளிக்கிறதை நீதான் பார்க்கிறையே! இந்த மாதிரிப் புத்தகத்தைப் பைண்டு பண்ணி என்ன பயன்? படித்து என்ன அறிந்து கொள்ள முடியும்?

''இருந்தாலும், கலகலத்துப்போன ஏடுகளை விட முடிவில்லையே! பெற்ற பெண் தூக்கி எரிகிற புத்தகமா? அம்பி, அந்த பாலாவை நீ பார்த்ததில்லே, உனக்குத் தெரியாது

''அவள் பாடங்கள், பள்ளிக்கூட ப்ரோ கிராம்கள் - டான்ஸ், பேச்சுப் போட்டி, வியாசப் போட்டி, பாடங்கள்—இவை தவிர மற்றெவையிலும் அவளுக்கு அக்கறை கிடையாது. சில சமயங்களில் அவளுடைய புத்திவேகத்தில் அவளுடைய பேச்சைச் சுருக்கப் பின்பற்ற முடியாமல் போகும்போது, பொறுமையிழந்து கத்துவாள். சுபாவத்திலேயே ஆத்திரக்காரி தான். செல்லப்பெண். கேட்கவும் வேணுமா? இப்போ 'டல்' லாயிட்டாள்.

''ஆனால் அவளை நாங்கள் பார்த்த கோலத்திற்குப் பிறகு என்ன ஆச்சு? அவள் தாயார் உள்பட அவளைத் தொடமுடியவில்லை. அவள் தொடவிடவில்லை. இப்போ பார்த்தையே இதே ரகளைதான். தொடவரதே 'தீம்புக்குத் தான் என்கிற திகிலில், யார், ஏன், எதற்காக என்கிறதெல்லாம் மறந்துபோய், பறந்து போய்— இல்லை அறவே அழிஞ்சு போன மாதிரி ஒரு அதிர்ச்சி. நாம் எல்லாத்துக்கும் அதிர்ச்சி என்று சொல்லிடறோம் தமிழில் எனக்கு நேர்ப்பதம் கிடைக்கவில்லை. Englishஇல் trauma என்கிறான். பாலா நம் கண்ணுக்குத் தெரியா மதில்களுள் மாட்டிக் கொண்டிருக்கிறாள். தாண்டி அவளால் வர முடியவில்லை. அம்பி, விடியுமோ!?'

''கஷ்டம், கஷ்டம் என்கிறோம். படுகிறவர்களுக்கா படுகிறவர்களைப் பார்ப்பதற்கா?

''இது நேர்த்தபிறகு, நான் மாற்றல் கேட்டு வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன். நாங்களே எங்களுள் ஒரு மஹா பயத்தில் ஒடுங்கிப்போயிட்டோம், யார் முகத்தில் விழிப்போம்? உபசாரம் கேட்க வருபவர்களைக் கண்

டாலே ஒரு பயம், அருவருப்பு, உறவு மனுஷாள் தான் எங்களைக் கண்டு விலகினார்களோ, இந்தக் கஷ்டமும் அவமானமும் தாங்கமுடியாமல் நாங்கள்தான் ஒதுங்கிவிட்டோமோ? நாங்கள் செய்தது தப்பா, சரியா, இப்போ கேட்டால் கூட எனக்குக் குழப்பம்தான். எனக்கிருந்த ஒருதுணை, மரகதமும் போய்விட்டாள்.

''மருந்து, மந்திரம். மாயம்—பார்க்காத சிகிச்சை இல்லை இடம் மாறினால், மனம் மாறுமோ என்று இது வரை எத்தனை மாற்றல் வாங்கியிருப்பேன்? What use?. இத்தனைநாளாச்சே, வேகம் குறைஞ்சிருக்கும்னு நினைச்சேன்?—" உதட்டைப் பிதுக்கிக் கொண்டு தலையை ஆட்டினார்.

வானக் கவான், முழு நீலம் திரண்ட சௌடாய் அலக்காகத் தொங்கிற்று.

''அவள் தாயார் காலமானபிறகு பாலாவிடம் ஒரு மாறுதல் கண்டது.அம்மா இடத்துக்குத் தான் ஈட்டு,நிரப்பணும்னு தானே தோணியிருக்குமோ என்னவோ? அவளுடைய Mental development எந்த ஸ்டேஜிலேயிருக்குன்னு யாருக்குத் தெரியும்? நான் டாக்டரிடம் போறது. தனியா வைத்யம் பாக்கறதுன்னெல்லாம் விட்டுட்டேன். What use? சமையல் எல்லாம் தானே கத்துண்டு தானாத்தான் செய்யறா. அவள் ஊமையே அன்றி செவிடுஇல்லை. நாம் பேசுவது. அவள் சொல்வது எல்லாம் அவளுக்குக் காது கேட்கும் போலத்தான் தெரிகிறது. கவனம் வாங்கிக் கொள்கிறது. ஆனால் அவளுடைய அந்த அனுபவத்தைப் பற்றி மட்டும் பேசக்கூடாது. திகில் மூட்டங்கள் முகத்தில் கூடுவதைப் பார்த்தால் நமக்கே கதி கலங்கிவிடும்.

''ஒரு வார்த்தை எழுதப்படிக்க வரவில்லே.

''இன்னும் அவளைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?

நம் இந்து சமயத்தில் கலியாணமாகாத கன்னியாக, இளவயதிலோ வயது வந்தோ காலமாகி விடுகிறவர்கள் எல்லோரும் விஷ்ணுவுக்கு வாழ்க்கைப் பட்டவர்கள் என்று ஒரு ஐதீகமுண்டு. அவர்களுடைய ஈமச்சடங்குகளில் அந்த அர்த்தத்திலேயே மந்திர ப்ரயோகம் வருகிறது.

பாலாவும் அதே போல், அந்த மஹாபுருஷன் விஷ்ணுவுக்கு அர்ப்பணமானவள்தான்.

சில சமயங்களில்—அவளுள் என்ன கிளர்ச்சி நேருகிறதோ, தம்பூரை மீட்டிக் கொண்டு!—அதுபோல் நேரும் Poor Child! she has her cross to beat and she is our cross, அம்பி, இங்கிலிஷ் ஒரு அருமையான பாஷை. அதை நீ நன்றாகப் படிக்கவேண்டும். நாளடைவில் அந்த பாஷைக்கே ஆத்ம சாந்தி தரும் சக்தி இருக்கிறது. சரி, நான் மாடிக்குப் போய்க் கவனிக்கிறேன், உனக்கு ஆபீஸுக்கு நேரமாயிட்டுது."

o o o

"அம்பி என்ன ஒருமாதிரியா இருக்கான்?"

"இன்னிக்கென்ன கொஞ்ச நாளாகவே அப்படித் தானே இருக்கான்."

"எல்லாம் வயசுக் கோளாறுதான்"

"ஒரு கலியாணத்தைப் பண்ணி வெச்சுட வேண்டியதுதான்."

"அப்போ அவன் மாத்திரம் திருப்பிக் கேட்க மாட்டானா, உங்களுக்குக் கலியாணம் ஆயிடுத்தான்னு?"

"நாம சினிமாப் போறோம், டிராமாபோறோம், அரட்டை அடிக்கிறோம், அல்காததனம் பண்ணறோம், ஒண்ணு பண்றானா? ஒரு கெட்ட பழக்கம் உண்டா? மூசுடு. காசு சேர்க்கிறது, ஒண்ணுதான் குறி".

"மானேஜர் அடிக்கடி மட்டம் போடறார் இல்லே?"

"ஆபிஸர்ஸ் என்ன வேணுமானாலும் செய்யலாம், கேக்கறவா யார்? நமக்கு ஒரு ரெண்டு நிமிஷம் தள்ளிப்

போகட்டும் பார், பண்ணுகிற அமர்க்களத்தை, ''கோயால் காப்பிக் கடையில் கொஞ்சம் 'லேட்' ஆயிடுத்து ஸார், ! ''ஏன் அவனுக்கு ஒத்தாசையா ரெண்டு வடை தட்டிப் போட்டையா ?''

''சே, நம்ம மானேஜர் எங்கே அப்படியெல்லாம் கேட்கிறார் ?''

''அவர்னா அவரா ? அந்த ஆபிஸர் கூட்டம், நம்ம யூனியன் General Body கூட்டத்தில் என்னென்னெல்லாம் அடி படறது, அப்போ உன் கவனம் குப்பை மேஞ் சுண்டிருந்ததோ ?''

''இல்லை, ரெண்டு வடை தின்று கொண்டிருந்தேன்,''

அன்று மாலை மானேஜர் பெயருக்கு ஒரு தந்தி வந்தது. எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போகிறேன். நல்ல வேளை. வாசலில் நிற்கிறார். என்னைப் பார்த்ததும் முகம் மலர்கிறது. ''உஷ்'' உதட்டின் மேல் விரலை வைக்கிறார் சமையலறையில் இருக்கிறாள். தானே எழுந்து என்னவோ செய்து கொண்டிருக்கிறாள். தந்தியைப் பிரிக்கிறார் முகம் மாறுகிறார்.

''என்ன ஸார்?'' ஆண்டவனே, இன்னும் என்ன பாக்கி.

''எல்லாம் நல்லது தான். உன்னைப் பற்றித்தான்? congratulations. உனக்கு Clerk ப்ரமோஷன் கொடுத்துக் கோவைக்கு மாற்றல் உடனே ட்யூட்டி சேரணுமாம். சட்டம், உரிமை பேசாமல் புறப்படு. இன்று இரவே புறப்படு''

அப்போ, உங்களுக்கும் என்னைத் தட்டிக் கழிக்க வாய்ப்பு கிடைச்சுப்போச்சு. ஆனால் எனக்கும் பாலா முகத்தில் முழித்துக் கொண்டு இந்த வீட்டில் இருக்க இனி ஏது வழி? நீங்களும் தான் என்ன செய்வீர்கள்?

முத்தையா அவன் மனைவிக்கு சிகிச்சை சம்பந்த மாக வேலூரில் இருக்கிறான்.

சிவராமனுக்கும் விசுவத்துக்கும் அல்வா நெய்க்கடலை வாங்கிக் கொடுக்கக் கூட அவகாசம் இல்லை.

அவர்களுக்கு ஸ்டேஷனில் யாரையோ தெரிந்திருந்த தால் ரிஸர்வேஷன் ரொம்பவும் சிரமப்படாமலே கிடைத்து விட்டது.

ஸ்டேஷனுக்கு மானேஜர் வந்திருந்தார். வண்டி ஊதிவிட்டது. புறப்படும் சமயத்தில் என்னை இழுத்து இறுக அணைத்துக் கொண்டார். ஏதோ சொல்ல முயன்றார். தொண்டை அடைத்து விட்டது ரயில் கிளம்பிவிட்டது மானேஜர் நிலை கண்டு விசுவமும் சிவராமனும். சுருண்டு போயினர். ஆசியில் தூக்கிய கையுடன் அவர் நிற்கையில் அவரைவிடத் தனிமையான மனிதன் இருக்க முடியாது.

அப்பா!

ரயில் ப்ளாட்பாரத்தைத் தாண்டி இருளுள் புகுந்து விட்டது.

★

"அம்பி ஸார்! தந்தி!!"

தந்தியா? எனக்கா! யார் தந்தி?

"Manager and daughter dead. Meeat me Dr Murthy."

இங்கு வந்து இன்னும் ஆறுவாரங்கள் ஆகவில்லை."

ஆச்சரியம்? அதிர்ச்சி? அழுகை???

கண்ணைக் கட்டி விட்டுத் தட்டாமாலையும் சுத்தி விட்ட மாதிரி இருக்கிறது. வேறேதும் தெரியவில்லை.

★

ரயிலை விட்டு இறங்குகிறேன். இங்கு விட்டுப் போய் இன்னும் ஆறு வாரங்கள் ஆகவில்லை. ஆனால் இந்த

ஊருக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லாது போல், தொப்புள் கொடி அறுந்து விட்டாற் போல், இங்கு ஏன் வந்தேன்? இங்கு இனி எனக்கு என்ன வேலை? அதற்குள்ளே இவ்வளவு நன்றி கெட்டவனாக எப்படி ஆனேன்? முதலில் அதுவே எப்படி சாத்தியம்? இல்லை, இதெல்லாம் ஒரு கனா. இங்கு இதுவரை நான் இருந்ததே ஒரு கனா. மீண்டும் அதே கனவுள் புகுவது என்பது கிடையாது. இது இன்னொரு கனா. கனவுக்குள் கனா. ஒண்ணுமே புரியவில்லை. பூமியில் கால் ஒட்டி நடப்பதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு விரக்தி.

தெருவில் என்னைப் பாாதது ஓரிருவர் தயங்கி நிற்கிறார். ஆனால் என் முகம் அவர்கள் பேச்சுக்கு இடம் கொடுக்காததால் அவர்களுடைய குழப்பம் அதிகரிக்கிறது. என்னை ஒருவருக்கொருவர் சுட்டிக் காட்டுகிறார்கள். நான் குற்றவாளியா? சாக்ஷியா?

நேரே டாக்டர் வீட்டுக்குச் செல்கிறேன். நல்ல வேளை ஒழிவாய்த் தானிருக்கிறார். எத்தனை தடவை மானேஜருடன், மானேஜர் உடம்புக்காக இவரிடம் வந்திருக்கிறேன்!

"வா அம்பி! I am sorry. Conventional தான். நீ அவங்களுக்கு உறவுகூட இல்லை, தெரியும். இருந்தாலும் நீதான் அவங்களோடு வீட்டோடு நெருங்கிப் பழகி யிருக்கை அல்ல? ஆனால் உங்க மானேஜர் என்ன இப்படி செய்துட்டாரு? சேச்சே!"

இப்படிக் கொஞ்சநேரம்.

அப்புறம் விஷயம்.

"பத்து நாட்களுக்கு முன்னாலே வந்தாரு. தொண்டை வலிக்குதுன்னாரு. சாப்பிட்டால் விழுங்கக் கஷ்டமாயிருக்குன்னாரு.

"நான் பார்த்து 'பட்'டுனு சொல்லிட்டேன். எனக்கு அப்பிடிக் கெட்ட பேரும் உண்டு என்ன செய்ய? வழவழா கொழ கொழாப் பண்ணிக் கடைசி வரைக்கும் கழுத்தை அறுக்கற விசயம் என்னாத்துக்கு? அவர் வீட்டுக்கு முதல் ஆசாமி, கடைசி ஆசாமி எல்லாமே அவர்தான். ஏன் மறைக்கணும்?

'உங்களுக்குத் தொண்டையிலே ட்யூமர் வளர்ந்திருக்குது. X-ray எடுத்து Conform பண்ணிக்கலாம்.'

'Oh!' நாற்காலியிலே சௌகரியமா சாஞ்சுக்கிட்டாரு. 'காப்ரா' ஆவல்லே. நானும் அனுபவமா பார்த்தாச்சு. அந்தக் கழுத்து, மண்டை formation ஆனவங்க அப்பிடித்தான் நெஞ்சுக்கனம் படைச்சவங்களாயிருக்காங்க. ஆனால் அது மாதிரி ஆளுங்க ரொம்ப சொல்பம் தொலையே செய்வாங்க. Good for them. Good for us.

"ராத்ரியே, X-ray படிச்சுட்டேன்.

"Malignant type."

"So?"

"நான் டாக்டர். treatment எடுப்போம். நீங்க தஞ்சாவூருக்குப் போறீங்களா? இல்லே நான் ஸ்பெஷலிஸ்டைத் தருவிக்கட்டுமா?"

"I will let yow know."

"We must act quickly, sir."

"குஞ்சிரிப்பா சிரிச்சுக்கிட்டுப் போயிட்டாரு. அப்பறம் ஆள் வரல்லே. நான் ரெண்டு மூணுதடவை போன் செய்தேன். ஆள் கிடைக்கல்லே.

"போன வெள்ளிக்கிழமை சிவராமன் பகல் பத்து மணிக்கு பாங்கிலிருந்து தபதபன்னு ஓடி வந்தான் முகத்தில் பேயறைஞ்சிருக்குது.

''இதென்ன அமுக்கி வெக்க முடியுமா என்ன ? கேக்கணுமா, ஊரே 'கொல்' ஆயிட்டுது.

''போலிஸ் ஸர்ஜன் வந்து ரெண்டு வயித்தையும் அறுத்தான். மோட்டாக் குதிரையைக் கீழே தள்ளி அடைச்சுடும் அத்தினி தூக்கமாத்திரை நானே அவருக்கு எழுதிக் கொடுத்திருக்கேனே, ஒரு நாளை ஒண்ணுன்னு, இப்படியில்லை''

நான் எழுந்தேன்.

''ஓ, உனக்கு ஒரு லெட்டர் எழுதி வெச்சிருக்கார்''—என்னிடம் ஒரு கவரை எடுத்துக் கொடுத்தார். ''இன்னொண்ணு H.Qக்கு எழுதியிருக்கார். அவருடைய P. F., gratuity F.D., R. D. கணக்கிலே தொகைகளின் பட்டுவாடா பத்தி. கோவில், குளம், உபகாரச்சம்பளம், ஆஸ்பத்திரின்னு தருமத்துக்கு வேறே எழுதி வெச்சிருக்கார். ரெண்டு லெட்டரையும் போலிஸ் திறந்து பார்த்தாச்சு, துப்பு ஏதாச்சும் கிடைக்குமான்னு. ஒழுங்கா சீல் வெச்சுத் தன் கட்டில் பக்கத்தில் வட்ட மேசை மேல் இரண்டும் இருந்தது. தூக்க மாத்திரை சீசாவுடன். சீசா empty.''

திடீரெனச் சில் காற்று அறையுள் வீசிற்று. உடம்பை ஒடுக்கிக் கொண்டேன்.

''பெண்ணை அவள் அறையில் தூங்க வெச்சுட்டுத்தான் தூங்கறதுக்கு முன்னாலே தன் விவகாரங்களை ஒழுங்கா கவனிச்சிருக்கார். Really a cool head, you know. I adrmire him.''

o o o

''அம்பிக்கு ஆசீர்வாதம்.

உன் கணக்கில் ரூ 5000 credit பண்ணியிருக்கிறேன். முத்தையாவுக்குத் தென்னந்தோப்புக் கிரய பாக்கி செலுத்திவிடு.

"Well, I am not sorry. எனக்கு எங்களுக்கு வேறு வழி என்ன இருக்கிறது?

"Good lucK"

o o o

தென்னந் தோப்பில் கட்டிலில் உட்கார்ந்திருக்கிறேன்.

கவலை ஏற்றம் இறைத்துக் கொண்டிருக்கிறது. முத்தையா ஏற்பாடு பண்ணி விட்டுப் போயிருக்கிறான்.

சால் கவிழ்ந்ததும் ஜலம் சுழித்து ஜிலுஜிலு குலு குலு கிலுகிலு கால்வாய்களில் சுருதியிழைக்கின்றது.

நான் போன பிறகு இந்த உலகத்தின் ஏலத்துக்கு உன் நிலையில் உன்னை விட்டுவைப்பதைவிட, நீ என்னோடு வந்துவிடுவது மேல் என்று அவளிடம் சொல்லியிருப்பாரா?

இல்லை அப்பாவின் உடல் நிலையை அவளே தெரிந்து கொண்டு ஏதோ வெறியில் முடிவு பண்ணிவிட்டாளா?

'ஒருவருக்கொருவர் துணைக்குக் கூட வழியில்லாமல் இருவருக்குமே இங்கே என்ன வேலை?'

அத்தனை மாத்திரைகளையும் தானாவே எப்படி விழுங்கியிருக்க முடியும்? சம்மதமில்லாமல்? பலவந்தமாக ஊட்டியிருப்பாரா? இல்லை யோசனை தந்ததே அவளாயிருக்குமா?

இது ஒரு கொலையும், ஒரு தற்கொலையுமா, அல்ல தற்கொலை ஒப்பந்தமா ? இருவருமே சிதையோடு கொண்டு போய்விட்ட ரகஸ்யம்.

இந்தக் குருட்டு யோசனையால். யாருக்கு புண்ணியம் அல்லது விமோசனம்?

—திடீரென்று காற்று விர்ர் ரென்றுசத்தத்துடன் என் மேல் விசை கொண்டது. அந்தச் சிறகடிப்பு என்தோளைப் பிய்த்துக் கொண்டு சென்றது. அகன்று நீண்டு, அடியில் இருளைத் தழுவிய சிறகுகள், லாகவமாய்க் கீழேயிறங்கி மேலெழுந்ததும் பாதாளக் கொலுசு போன்ற கால்களில் ஒரு சாட்டை தொங்குகிறது. பாலாவின் பின்னல் தடு மனுக்கு எட்டடி நீளம்.

நெளிந்தது.

துர்ச்சொப்பனம் கண்டவன்போல் என்னிடமிருந்து வீல் வீல் வீல்—

''பாலா பாலா பாலா''
மோகாம்பரி மலை திக்கு நோக்கிப் பறந்து
சென்றது.

சால் கவிழ்ந்து

ஜலம் அவிழ்ந்தது.

சுழித்து

ஜிலு ஜிலு

குலு குலு

கிலு கிலு

ஸ்ருதி (மீட்டிற்று

நான் ஒரு நாத அதிர்வு—பயங்கர பரவசம்.

நான் ஒரு நாத அதிர்வு

இடி வலையின் அலையில்

கரையில் தூக்கி எறியப்பட்டேன்

அந்தரத்தில் தொங்கித்

தவித்துத் திணறித் திக்கற்றுத்

தெப்பலாடித் தத்தளிக்கிறேன்

என் அதிர்வுக்குச் சொந்த அலையில்
என்னை வாரிக் கவ்வி எடுத்துச் சென்று
மூலத்தின் இருண்ட கர்ப்பத்துள்
சேர்த்து விடு
அங்கு நான் என்னை
இழந்து கொள்கிறேன்

ஆமாம் இதையெல்லாம்
யாரைக் கேட்கிறேன்?

கதை முடிந்தது
கவிதை தன்னை முடித்துக் கொண்டு
கண்ணாடிச் சுவரும் உடைந்தது

★